# ஆடாத ஊஞ்சல்

பி. வி. ஆர்.

கங்கை புத்தக நிலையம்

நெ. 13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை-600 017.

கங்கை முதற் பதிப்பு : மார்ச், 1994

விலை: ரூ. 30-00

18600
3514268

அச்சிட்டோர் :
துர்காதேவி பிரிண்டர்ஸ்,
சைதை, சென்னை-15.

## பதிப்புரை

ஆனந்த விகடனில் வாரம் தோறும் வாசகர் நெஞ்சில் ஆடிக்கொண்டிருந்த "ஆடாத ஊஞ்சல்" இப்பொழுது என்றென்றும் ஆடும் ஊஞ்சலாக புத்தக வடிவில் கங்கை புத்தக நிலையத்தில் வெளி வருகிறது.

திரு. பி. வி. ஆர். அவர்கள். பெண்கள் தங்கள் உள்ளத்தின் அடிமனத்தில் புதைத்து வைத்திருக்கும் மனப் புதையலை, மன உளைச்சலை வெளிக் கொண்டுவந்து காட்டுவதை இந்நாவலில் பார்க்கிறோம்.

பிறந்த வீட்டில் தாங்க முடியாத வேலைப் பளுவை புகுந்த வீட்டில் இறக்கி வைத்து ஹாயாக இளைப்பாறலாம் என்று நினைத்த துளசி, புகுந்த வீட்டிலும் மேலும் தாங்க முடியாத வேலைப் பளுவை சுமக்கிறாள். அதனால் வேதனைப்படும் அவள், விரக்தியின் விளிம்பிற்கே சென்றுவிடுகிறாள்.

அதன் விளைவாக இதிலிருந்து விடுபட முனைகிறாள்.

அவளின் முடிவு ?

22 வயதே ஆன துளசியின் மணவாழ்க்கையை ஒரு கேள்விக் குறியாகவே படைத்திருக்கிறார் ஆசிரியர் திரு. பி. வி. ஆர். அவர்கள்.

அவள் வாழ்க்கை ஆடும் ஊஞ்சலா ? ஆடாத ஊஞ்சலா படித்துப் பாருங்கள்.

**கங்கை புத்தக நிலையத்தார்.**

18600
3514268

# ஆடாத ஊஞ்சல்

## 1

துளசிக்கு இன்னும் ஓர் ஐந்து நிமிடங்களாவது பாய்ந்து வரும் ஆற்று நீரில் அமிழ்ந்து கிடக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அடக்கிக் கொண்டாள். கிருஷ்ணன் கோயிலில் மேளம் ஆரம்பித்து விட்டது. சாத்தப்பனின் அதே பௌளி அதே நாராசத்துடன் அலறியது. உடனேயே புறப்பட்டால்தான் தீபாராதனையைப் பார்த்து விட்டு வீட்டை அடையலாம். அப்புறம் ? அப்புறம் என்ன அப்புறம் ?

அரிசியைக் களைந்து,

பருப்பை அலம்பி,

தேங்காயை உடைத்துப் பூ எடுத்து—

கல்பாத்தி நதியின் படித்துறையில் ஏறி நடந்தாள். குளிக்கும்போது லேசாக இருந்த தூறல் இப்போது மழையாக வளர்ந்து விட்டது. ஈரப் புடவையிலிருந்து இன்னும் அதிகமாக நீர் வழிந்தது.

படிகள் வழுக்கின. இந்தப் பாசி இன்னும் மூன்று, நான்கு மாதங்களுக்கு வழுக்கத்தான் போகிறது. இப்போது

தானே வைகாசியே முடிந்திருக்கிறது? இனிமேல் தினமும் மழை, மழை, மழைதான்.

துளசி மெதுவாகப் படியேறி நடந்தாள். சிறு சிறு கற்கள் குத்தின. வலித்தது. தினமும் வலிக்கிற வலி.

மழை முகத்தில் அறைய நடந்தாள். புடவையின் கனத்தில், மழையின் ஆத்திரத்தில் அவளால் வேகமாக நடக்க முடியவில்லை. மேடு ஏறி இறங்கினாள். மூச்சு இரைத்தது.

நாகசுரமும் மேளமும் பரஸ்பர எதிரிகளாக மாறிக் கோஷமிட்டன. கோயில் நடையிலிருந்து வெண்கல மணிகள் ஆரவாரித்தன.

தீபாராதனை ஆரம்பித்து விட்டது.

அவளுக்கு இன்னும் சற்றே வேகமாக நடக்க வேண்டும் என்ற ஆசை. முயன்றாள். மேடும் பள்ளமும், தெருவில் அலங்கோலமாக அங்கங்கே தலை நீட்டி நின்ற கற்களும் ஆசைக்கு அணைபோட்டன.

கடைசியாக ஒருவிதமாய் பழைய கல்பாத்திக் கிருஷ்ணன் கோயிலை அடைந்தாள்.

சரவிளக்கு, சங்கு விளக்கு ஆராதனைகளெல்லாம் முடிந்து கற்பூர ஆரத்தி நடந்து கொண்டிருந்தது. ஏமாற்றம் தோன்றவில்லை. மங்களம் பாடும்போது கச்சேரிக்கு வருவது மாதிரியா என்ன கோயிலுக்கு வருவது? எப்போது வேண்டுமானாலும் அவள் அவளுடைய கிருஷ்ணனைப் பார்க்க வரலாம். வந்தாள். பார்த்தாள்.

"என்னடீ, இன்னைக்கு இத்தனை தாமசம் நோக்கு?"

—அருகே நின்ற அம்மணி கேட்டாள்.

"கொஞ்சம் தாமசமாச்சு."



—பூவுடன் நின்ற துளசி கூறிவிட்டு மீண்டும் ஒரு முறை கிருஷ்ணனைப் பார்த்தாள்.

தினசரி அவள் வருகிறாள்.

இதே விக்ரகம்.

இதே தீபாராதனை.

இதே செவ்வரளியும் பன்னீர்ப்பூவும். தினமும் அவள் கைகூப்புகிறாள். 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று முணுமுணுக்கிறாள். இரு கன்னங்களையும் தட்டிக் கொள்கிறாள். பூவைக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள்.

ஆனால், என்ன வேண்டிக் கொள்கிறாள்?

இது அவளுக்கே தெரியவில்லை. என்ன வேண்டிக் கொள்ள வேண்டும் என்றும் புரியவில்லை.

கோயிலை விட்டு வெளியே வரும் போது, "டீ, தொளசி! உங்காத்து வாசல்லே ஆட்டோ நிக்கறது" என்றாள் கூடவே வந்த அம்மணி.

துளசி பார்த்தாள்.

பாண்ட் போட்ட ஒருவன் ஒரு கைப்பெட்டியுடன் இறங்கி, மழைக்குத் தப்ப வேண்டிய அவசரத்தில் வீட்டுப் படியேறிக் கொண்டிருந்தான்.

"யார்டீ அவன்?" என்று கேட்டாள் அம்மணி.

"நேக்கு என்னடீ தெரியும்? அப்பாவோடே கட்சிக்காரனா இருக்கும். இன்னிக்கி கோடதியிலே என்ன கேஸோ, ஆர் கண்டா? வாடீ அம்மணி, நீ இப்படி நடந்தா நான் போய்ச் சேர்றத்துக்குள்ளே அஸ்தமிச்சுடும்."

"நீ போய்க்கோடீ, நான் மொள்ள வந்துக்கறேன்" என்றாள் அம்மணி.

துளசி வீட்டை அடைந்தாள்.

ஆட்டோ போயாகி விட்டது.

வந்திருக்கிறவன் யார் என்ற சிந்தனையே அவளுள் ஏற்படவில்லை. ஆயிரம் காரியம் இருக்கிறது செய்ய !

ரேழியின் இடதுபுறத்தில் அப்பாவின் ஆபீஸ் அறை. விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பேச்சுக் குரல் கேட்டது.

ரேழியைத் தாண்டிக் கூடத்துக்குள் பிரவேசித்தபோது, ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த சாரதா, "ஏண்டீ, பொழையை ரெண்டாக்கினியா, இல்லையா ? ஏண்டீ இத்தனை நேரம் ?" என்று கேட்டாள்.

துளசி எந்த நேரத்தில் வீடு திரும்பினாலும் அம்மா தவறாமல் கேட்கிற கேள்வி. மௌனமாக ஊஞ்சலைத் தாண்டினாள்.

"தொளசி. உங்கிட்டே நான் நேத்தைக்கு ராத்திரியே சொன்னேன், இன்னிக்கு நேரத்த கோலேஜுக்குப் போணம்னு... நீ இப்பத்தான் ஆடிப்பாடிண்டு வரே !" —சின்ன அக்கா சீதா, கழுத்து வரைக்குமே நின்ற கூந்தலை விரித்துப் போட்டுக்கொண்டு சீப்பும் கையுமாக மடக்கினாள்.

"ஆத்துலே கிணறு இருக்கு. கொழாய் இருக்கு. இங்க குளிச்சுத் தொலைச்சா என்னவாம் ? பொழையிலே குளிச்சாத்தான் ஆச்சா ?"

—மெர்ஸி கல்லூரியில் பி. எஸ்ஸி., படிக்கிற தங்கை பாரதி, எதையோ எழுதிக் கொண்டே கத்தினாள்.

"நேக்கு முன்னாலே போர்ன்விட்டா கலந்து தா... அப்புறமா உன் பொடவையை மாத்திக்கோ."

—பம்பாயில் இருக்கும் பெரிய அக்கா ஜெயாவின் பதினைந்து வயதுப் பிள்ளை பாபு ஆணையிட்டான்.



தம்பி மணிக்குட்டியும் தங்கை காவேரியும் துளசியை விரட்டவில்லை. அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

துளசி புடவை மாற்ற அறைக்குச் சென்றாள். ஈரத்தைக் களைந்துவிட்டு, உடம்பை காய்ந்த ஒரு ஈரிழைத் தோர்த்த முண்டால் துடைத்தாள். வலது தொடையில் நேற்று ராத்திரி ஏதோ ஒரு பூச்சி கடித்ததில் அந்த இடம் வெப்பேறியிருந்தது. பொன் நிறத் தோலில் ரத்தச் சிவப்பு. ஒரு தடவை பார்த்துக் கொண்டாள். 'மஞ்சளை அரைச்சுப் போட்டுக்கணும்' என்று மனம் முணுமுணுத்தது.

அவசர அவசரமாக எதையும் செய்ய அவளுக்கு எப்போதுமே பிடிக்காது. மெதுவாக உடம்பை மறைக்கத் துணிகளை எடுத்தாள்.

குங்குமம் இட்டுக் கொள்ள நிலைக்கண்ணாடி முன் நின்றபோது தன் உருவம் முழுமையாகத் தெரிந்தது. இருபத்தோரு வயது இளமையுடன் பிரகாசித்தது.

பாட்டி உயிரோடிருந்தபோது அவளைச் சொர்ண விக்ரம் என்பாள். நிறமும், மூக்கும் முழியும் அப்படியிருக்காம். இப்போது பாட்டியின் ஞாபகம் வந்தது. நீண்ட கூந்தல் இன்னும் காயவில்லை. வாரிச் சுருட்டித் துவர்த்த முண்டில் புதைத்தாள். வட்டமான முகத்தில் என்ன குறை இருக்கிறதென்று ஒரு கணம் வழக்கம்போல ஆராய்ந்தாள். மழுமழு கன்னம். சற்றே பெரிய கண்கள். அப்பாவைப் போல வளைந்த மூக்கு. நெருக்கமான பற்களின் சீரான வரிசைகள்.

அவளுடைய பலம் தங்க நிறமும், மிருதுவான தோலும், வலிமையான உடற்கட்டும், இன்னொரு தடவை பார்க்க வேண்டும் என்ற ஆசையை எழுப்பும் முகமும்தான்.

அவள் அறையைவிட்டு வெளியே வந்ததும் சின்ன அக்கா பொருமினாள் :

"ஏண்டி, புடவை உடுத்திக்க இத்தன நேரமா ? எட்டேகால் பஸ்ஸைப் பிடிக்கணும்டி... பிரின்ஸிபால் எங்க எலலாரையும் ஒம்பது மணிக்கு இருக்கணும்னு ஓர்டர் போட்டிருக்கார்" என்றாள் சின்ன அக்கா சீதா.

அவள் எம். ஏ. படித்த உதவிப் பேராசிரியை ! பேசுகிறாள் !

"சித்தி, நேக்கு போர்ன்விட்டா கலக்கப் போறயா, இல்லையா ?"

"டீ தொளசி !"— மீண்டும் அம்மா. அவள் தொடர்ந்து கத்தினாள் :

"நீ என்னைக்கு காபி கலந்து நான் என்னைக்குக் கொட்டிக்கப் போறேன் ? வேகத்திலே கொண்டாடி."

ஊஞ்சல் ஆடியது.

துளசி சமையலறைக்குள் நுழையும் போது தங்கை பாரதியின் அலாரத்தைப் பார்த்தாள். எப்போதும் அதற்குக் கால் மணி நேரம் அவசரம். ஆறு இருபத்தைந்து.

அம்மா— சர்க்கரை இல்லாத காபி. இரண்டு வருடங் களுக்கு முன்னால் டாக்டர் மூர்த்தி, சாரதாவுக்கு டயாபடீஸ் இருக்கிறதென்று சொன்னாலும் சொன்னார், அதிலிருந்து அம்மாவின் குடியிருப்பு ஊஞ்சல்தான். ஒரு கறிகாய் நறுக்கிக் கொடுத்தால்தான் என்ன ? டயாபடீஸ் ஏறி விடுமோ ?

பாபு— போர்ன்விட்டா.

எத்தனை அம்மா அப்பாக்கள் எத்தனை குழந்தை களைப் பெற்றுக் கொண்டு ஒரு ரூம் ஃப்ளாட், இரண்டு ரூம் ஃப்ளாட் என்று பாம்பேயில் குப்பை கொட்டுகிறார் கள் ? ஜெயாவால் முடியவில்லையாம். பாம்பேயைவிடப் பாலக்காடு எந்த விதத்தில் உசத்தி ? ஜெயா என்றைக்குமே சமயம் வரும்போது இன்னொருத்தியின் புடவையை இரவல் வாங்குகிறவள்.



துளசி குளிக்கச் செல்லுவதற்கு முன்பேயே அம்மா, சின்ன அக்கா, பாரதி எல்லோரும் காபி சாப்பிட்டு விட்டார்கள். இப்போது அம்மா கேட்பது இரண்டாவது டோஸ்.

ஊஞ்சல் பலகையில் டபரா தம்ளரை வைத்துவிட்டுப் பாபுவிடம் போர்ன்விட்டாவை நீட்டினாள்.

"சித்தி, ஏன் இது இப்படி மொதக்கறது...? நன்னாவே நீ கரைக்கலை...!" பாலில் முழுதும் கரையாத ஒரு சில தூள்கள் பாபுவின் கண்களை உறுத்தின.

ஊஞ்சலிலிருந்து திரும்பும்போது அப்பா பரசுராமன் வந்தார். அவருடைய ஐம்பத்தெட்டு வயதில் முன் மண்டை இளநீர் வழுக்கையாக இருப்பதில் தப்பு இல்லை. ஆனால், அவர் இவ்வளவு குண்டாக இருக்கக் கூடாது. வர வர அவருடைய கழுத்தும் தெரியவில்லை. அவருக்கே அவருடைய செருப்பும் தென்படவில்லை.

"தொளசி...!"

துளசி நின்றாள்.

"மெட்ராஸ்லேந்து இவன் வந்திருக்கான். பேரு, கீர்த்தி. இவனோட அப்பா வாஞ்சியும் நானும் லோ கோலேஜ்லே ஒண்ணாப் படிச்சோம்."

துளசி மனத்தில் வாங்கிக் கொண்டாள்.

"இவன் இன்னைக்கு நம்மாத்திலே இருக்கான். பல் தேய்க்கணும். காபி குடிக்கணும். குளிக்கணும். எல்லாம் பார்த்துச் செய்கிட்டயா ?"

துளசி தலை ஆட்டினாள்.

அப்பா தொடர்ந்தார் :

"கீர்த்தி, இவ என்னோட பொண். அஞ்சாவது பொண் கெஞ்சினாலும் கிடைக்காதும்பா... இவளுக்குத் தாழ

ரெண்டு பொண்ணும் ஒரு புள்ளையும். மேலே ரெண்டு பொண்ணும் ரெண்டு புள்ளையும். ரெண்டாமந்தவள் இப்ப இல்லை... தொளசி ஒரு நாள் இல்லேன்னா நாறிப் போயிடும். சரி, நீ வா, வீட்டைக் காட்டறேன்... போன மாசம் ஒரு ஜெர்சி வாங்கினேன் பதினஞ்சு லிட்டர் கறக்கறது. நீ பார்க்கணும்."

கீர்த்தியின் அறிமுகம் துளசியின் மனத்தில் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அவன் எதற்கு வந்தால் அவளுக்கென்ன? அலமாரியிலிருந்து ஒரு டவலும் ஒரு புது சோப்பும் எடுத்தாள். டூத் பேஸ்ட் குளியறறையிலேயே இருக்கிறது. பிரஷ் கொண்டு வரவில்லை என்றால் விரலாலேயே 'ஈஷி'த் தேய்த்துக் கொள்ளட்டும்.

"டீ. மணி ஆறேமுக்கால்!"— சின்ன அக்கா சீதா அலறினாள்.

காய்கறி வர்க்கத்தைப் பார்த்த துளசி, 'எளவன் மொளகூட்டலை வைச்சு, தொகையல் அரைக்கிறேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே பூசணிக்காயை எடுத்தாள். அரிவாள்மணை முன் உட்கார்ந்தாள்.

அவள் ஒரு நாள் இல்லை என்றாள் வீடு நாறிப் போய் விடுமாம். மாசா மாசம் மூணு நாள் வீடு நாறித்தான் போகிறது. கொழஞ்ச சாதம், வேகாத பருப்பு...! அஸிஸ்டெண்ட் புரொபசர், மெர்ஸி காலேஜ் பி எஸ்ஸி! இதுகளெல்லாம் சமைத்தால் அப்படித்தான் இருக்கும்.

கறிகாய் நறுக்கிக் கொண்டிருக்கையில் திடீரென்று அண்ணாவின் குரல் கேட்டது அவனும் அவனுடைய மனைவியும் அதே கிராமத்தில் தனியாக இருக்கிறார்கள். அப்பாவின் இரண்டு ஜூனியர்களில் அண்ணா ஸீனியர் ஜூனியர். சின்ன ஜூனியர்— வாசு. புதுக் கல்பாத்தியில் தெரிந்தவர் ஒருவருடைய வீட்டில் ஓர் அறையில் வசிக்கிறான் வாசு. அங்கேயே தான் பணம் கொடுத்து காபியும் சாப்பாடும். துளசி போடுகிற காபி ருசியாக,



மணமாக இருக்கிறதென்று சுதந்திரமாக வீட்டின் சமையலறை வரை வருகிறான். வாசுவுக்கு அப்பா, அம்மா இல்லை என்கிற ஒரே காரணத்தால் அம்மா சாரதாவும் கரிசனம் காட்டுகிறாள்.

"என்ன தொளசி, இன்னைக்கு எளவன் மொள கூட்டலா?"

—அண்ணா ராமநாதன் எவர்சில்வர் காரியரைக் கீழே வைத்தான். துளசி புரிந்து கொண்டாள். அண்ணா வீட்டில் அடுப்பு எரியாது.

"கார்த்தாலே ஒக்காந்தா... மொள கூட்டலுக்குத் தொட்டுக்க என்ன செய்யப்போறே?"

"தொகையல். கடுகுமாங்காய் இருக்கு."

"வெண்டைக்கா பச்சடி நன்னாயிருக்கும்?"

துளசி பதில் சொல்லவில்லை.

தம்பி மணிக்குட்டியும், தங்கை காவேரியும் தூங்கி எழுந்து, பல் தேய்த்துப் பாலும் சாப்பிட்டாகி விட்டது. மெர்ஸி காலேஜ் பாரதி, துளசியைக் கேட்காமலேயே அவளுடைய புடவையைக் கட்டிக்கொண்டு கண்ணாடி முன் நின்று முகத்தை அப்படியும் இப்படியுமாகப் பார்த்துக் கொண்டாகி விட்டது. கல்லூரி உதவிப் பேராசிரியை ஏழேமுக்காலுக்கு உட்கார்ந்து, ஏழு ஐம்பதுக்குத் தட்டு நிறைய மிச்சம் வைத்துவிட்டு எட்டேகால் மணி பஸ்ஸைப் பிடிக்க ஓடியாகி விட்டது. ஜூனியர் வாசு ருசியான காபிக்கு அலைந்து வாங்கிக் கொண்டு போயாகி விட்டது. அண்ணாவின் டிபன் காரியரை நிரப்பியாகி விட்டது.

துளசி, தங்கை காவேரிக்குத் தலை வாரி விட்டாள். அழுத்தி வாரிய போதெல்லாம் காவேரி தன் அக்காவை ஆயிரம் சனியன்களுக்கு இழுத்தாள்.

மணிக்குட்டி பள்ளிக்கூடச் சீருடையில் வந்தான். அவனுக்குத் துளசி வெள்ளித் தட்டில் சாதம் பிசைந்து வைத்தாள்.

மணி பத்து.

அப்பா வந்தார்.

"கீர்த்தி இன்னம் பேப்பர் படிச்சுண்டிருக்கான். அப்புறமா சாப்பிடறேன்னான்" என்றார்.

"அப்போவே தோர்த்தமுண்டும் சோப்பும் வெச்சேன். அவன் இன்னும் குளிச்சுட்டேயில்லை."

"மொள்ள குளிக்கட்டும். நேக்கு சாதம் போடு."

அப்பா சாப்பிடும்போது, 'வேலைக்கார' அம்மு, சாரதாவுக்குத் தன்வந்தரிக் குழம்பைத் தேய்த்துக் கொண் டிருந்தாள். அம்மா குளிக்கப் போகவே இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். அதற்குள் துளசி, ஜயமங்கள ஸ்தோத்திரத்தை ஒரு தடவை சொல்லி, முடிந்தால் சௌந்தரிய லஹரியையும் பாடி விடுவாள்.

அப்பா சாப்பிட்டுவிட்டு நகர்ந்ததும் துளசி பூஜை அறையை நோக்கி நடந்தாள்.

"மிஸ் துளசி !"

அவள் நின்றாள்.

கீர்த்தி !

"தோர்த்த முண்டும் சோப்பும் அப்பவே வெச்சாச்சு" என்றாள் துளசி.

"நான் மெதுவா குளித்து மெதுவா சாப்பிட்டுக் கொள்கிறேன்."

"சரி."



"நீ இப்ப என்ன செய்யப் போகிறாய் மிஸ் துளசி ? நீ சாப்பிடறதானா சாப்பிட்டுக் கொள். எனக்கு பாத்ரூம் எங்கே இருக்குன்னு தெரியும்."

துளசி மௌனமாக நின்றாள்

கீர்த்தி, "நான் யார் என்று உன் அப்பா உனக்கு மட்டும்தான் அறிமுகப்படுத்தினார். உன் அக்கா, தங்கைகளெல்லாம் இன்னிக்கு மாதிரியே என்னிக்கும் பிஸியாவே இருப்பார்களா ? அதான் அவர்களுக்கு என்னை அறிமுகப் படுத்தவில்லையா ?" என்று கேட்டான்.

"அவாளுக்கெல்லாம் கோலேஜ் இருக்கு. நேக்கு கோலேஜ் இல்லை. நான் ஆத்தோட இருக்கேன்."

"நான் யார்னு உனக்குத் தெரியும் மிஸ் துளசி. ஆனா, இப்ப இந்தப் பாலக்காட்டுக்கு எதுக்கு வந்திருக்கேன்னு உனக்குத் தெரியாது இல்லியா ? இல்லே, உன் அப்பா சாப்பிடறபோது சொன்னாரா ?"

"சொல்லலை !"

"எதுக்கு வந்திருக்கேன்னு தெரியுமா ?"

"தெரியாது."

"குளித்து வந்தப்புறம் சொல்றேன் !"

"சரி !"

கீர்த்தி நகர்ந்தான்.

இவன் எதற்கு வந்திருக்கிறான் ?

துளசிக்கு எந்தப் பதிலும் உடனடியாக உதிக்கவில்லை. பூஜை அறைக்குச் சென்றாள். எதற்கு வந்திருந்தால் அவளுக்கு என்ன ?

# 2

பூஜை அறையினுள் பிரவேசித்ததுமே துளசி எல்லாவற்றையும் மறந்து போனாள். அந்த அறை ஒன்றுதான் அவளுக்கு அடைக்கலம்.

சுவரெல்லாம் படங்கள், படங்கள். குருவாயூரப்பன் மட்டுமே சிறிய, பெரிய, மிகப் பெரிய படங்களில் காட்சி தந்தான். ஒரு சாஸ்தா. ரவிவர்மாவின் பரமசிவன் பார்வதி, மகாலட்சுமி, பட்டாபிஷேக ராமர் எல்லோரும் பழைய வினோலியா சோப் காலண்டர்களில் பிரகாசித்தார்கள்.

ஸ்தோத்திரப் பாடல்கள் கிராமபோன்பிளேட்டிலிருந்து ஒலிப்பது போல துளசியின் நாவிலிருந்து உயிரில்லாமல் வந்தன. எல்லா படங்கள் மீதும் கண்கள் சுழன்றனவே தவிர, எதிலும் ஒட்டவில்லை, நிலைக்கவில்லை. லயிக்கவில்லை.

கீர்த்தி சாப்பிட வருவான். அம்மா சுந்தரகாண்டம் முணுமுணுக்க வருவாள். அப்பாவுக்கு டிபன் தயார் செய்ய வேண்டும். மதிய உணவுக்கு மணிக்குட்டி, காவேரி, ஜெயா அக்காவின் பிள்ளை பாபு எல்லோரும் வருவார்கள்.

கிராமபோன் திடீரென்று நின்றது.

துளசி எழுந்தாள்.

நமஸ்கரித்தாள்.

அவள் வெளியே வந்தபோது கீர்த்தி ஹாலில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து பழைய பத்திரிகை ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும் பத்திரிகையை மூடிவிட்டு, "பூஜையா ?" என்றான்.



"கொஞ்சம் சோஸ்திரம் சொல்லுவேன், அம்படத்தான்."

"நீ பி. ஏ-யா, பி.எஸ்ஸி-யா ?"

"ரெண்டுமில்லை... பத்தாம் கிளாஸ் !"

"என்ன, பத்தாம் கிளாஸா ?"

"ஆமாம்..."

"மேலே படிக்கலையா ?"

"இல்லை."

"ஏன் ?"

"வரலை."

"என்ன வரவில்லை ?"

"படிப்பு. ஒம்பதாம் கிளாஸ்லே ஒரு கொல்லம் தோத்தேன்... பத்தாம் கிளாஸ் ஒரு கொல்லம் தோத்தேன். இப்படித் தோத்துண்டே போனா எந்த ஜன்மத்திலே காலேஜ் வாசப்படிக்குப் போறது. டிக்ரி வாங்கறது ? அதான் பத்தாம் கிளாஸ்."

"வீட்டுக் காரியம் அத்தனையையும் இத்தனை விதரணையா செய்யறே ?"

"கோலேஜுக்குப் போனாத்தான் ஆத்துக் காரியம் வெவரமா இருக்கும்னு சொல்றேளா ?"

கீர்த்தி பேசவில்லை. மௌனமாக அவளைப் பார்த்தான். அவள் வேறு எங்கோ பார்த்தபடி நின்றாள். அவள் பேசும் விதமே அவனுக்குப் பிடித்தது. நிறுத்தி, நிதானமாக, எந்த அவசரமும் இல்லாமல் மென்மையான, இதமான குரலில் பேசுகிறாள். உதடுகள் மட்டுமே அசைந்தன. முகம் இம்மியும் நகரவில்லை ; ஆடவில்லை.

"மிஸ் துளசி !"

"உம்..."

"நான் பெண் பார்க்க வந்திருக்கிறேன்."

"சந்தோஷம்."

"அந்தப் பெண்ணை உனக்குத் தெரியும்னு உன் அப்பா சொன்னார்."

'யார் அவள் ?' என்று துளசி கேட்கவில்லை. 'ஏன் கேட்க வேண்டும் ?'

"அப்படியா !" என்றாள்.

"அவ யார்னு நீ கேட்கவில்லை."

"நீங்கதான் சொல்லப் போறேளே !"

"அவள் பெயர் தைலா. அவ உன் கூடப் படிச்சிருக்காளாமே ?"

"ஒரே ஒரு கொல்லம் படிச்சா பத்தாம் கிளாஸில்..."

"எப்படி இருப்பா ?"

"அதை எப்படி நான் சொல்றது ? என் கண்ணுக்கு லட்சணமா இருப்பா."

"நிறம் உன் நிறம் இருக்குமா ?"

"நீங்கதான் பார்க்கப்போறேளே ?"

கீர்த்தி மேற்கொண்டு என்ன கேட்பது என்று யோசித்தான்.

"நீ கடைசியா எப்ப அவளைப் பார்த்தே துளசி ?"

"போன ஆழ்ச்சை இங்கே வந்திருந்தா."

"ஆழ்ச்சைன்னா...?"

"ஞாயித்துகிழமைலேந்து சனிக்கிழமை வரைன்னா அது ஒரு ஆழ்ச்சை."

"ஓ. ஒரு வாரம்னு சொல்றியா...?"

"நீங்க சாப்பிட ஒக்காரிலையா ?"



"நீ எலை போட்டா நான் ரெடி...! ஆமாம், போன வாரம் நீ தைலாவைப் பார்த்தப்போ அவ ஒண்ணும் சொல்லலியா ?"

"இல்லை."

"இங்கேந்து ராமனாதபுரம் எத்தனை மைல் ?"

"கிட்டக்கத்தான்... நடந்தேகூடப் போயிடலாம்."

"என் அக்கா மத்தியானம் கோயமுத்தூர்லேந்து கார்லே வர்றா..."

"சரி. ஒக்காருங்கோ... நேக்கு நெறைய காரியம் இருக்கு."

அவன் உட்கார்ந்தான்.

அவள் பரிமாறலானாள்.

கீர்த்தி, "கல்பாத்தி பெரிய கிராமம். இல்லியா ?" என்றான்.

"ஒரு சின்ன ஊர் மாதிரி. பழைய கல்பாத்தி, புது கல்பாத்தினு ரெண்டு கல்பாத்தி. இங்கே கிருஷ்ணன் கோயில். அங்கே விசுவநாத ஸ்வாமி. கிட்டக்க சாத்தப்புரம்னு இன்னொரு கிராமம் இருக்கு. அங்கே கணபதியான் கோயில். ரொம்ப விசேஷம். இன்னும் கொஞ்சம் மொளகூட்டல் விடட்டுமா ?"

"இப்பத்தான் முதல் தடவையா நான் இதைச் சாப்பிடறேன்."

"பிடிக்கலைன்னா ரசஞ்சாதம் சாப்பிடுங்கோ..."

"நன்னாயிருக்கு ? நான் சாப்பிட்டதும் கல்பாத்தியை ஒரு சுத்து சுத்திப் பார்த்துட்டு வரேன்."

"மழை பேயறது. கொடை எடுத்துண்டு போங்கோ. ஹால்லே மூலையில் இருக்கும்."

அம்மா சாப்பிட உட்கார்ந்தாள். சம்பா கோதுமைச் சாதம். பாதியாக வேக வைத்த பாகற்காய் ஒரு காலத்தில் பாகற்காய் இருக்கும் இடத்தில் அம்மா இருக்கமாட்டாள். இப்போது இருவரும் இலையில் சந்தித்துக் கொண்டார்கள். டயாபடீஸ் புண்ணியம் கட்டிக் கொண்டது.

"ஏண்டீ. அவன் எங்கே சாப்பிட்டதும் சாப்பிடாததுமா கொடையை எடுத்துண்டு போறான் ?"

"ரெண்டு கல்பாத்தியையும் சுத்திப் பார்க்க..." என்றாள் துளசி.

"பாக்கறதுக்கு என்ன இருக்கு...?" என்ற சாரதா மாசம் ரெண்டாயிரம் சம்பாதிக்கறான்னு ஒன் அப்பா சொன்னார்."

"சுக்கோளம் ரொம்ப சுடறதோன்னு பாரும்மா..."

சாரதா தம்ளரைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "பாகமாத்தாண்டி இருக்கு. ஒரு பெரிய கம்பெனியில் பிராஞ்சு மானேஜர். தைலாக்கு ஏத்தவன்" என்றாள்.

யாருக்கு யார் ஏத்தவனாக இருந்தால் அவளுக்கென்ன? அம்மா சாப்பிட்டதும் அவள் சாப்பிட வேண்டும். அம்முவுக்குச் சாதம் எடுத்துக் கொடுக்க வேண்டும். கன்றுக்குட்டிகள் என்ன செய்கின்றன என்று கவனிக்க வேண்டும்.

அன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஒரு கார் வந்து நின்றது.

"மிஸ் துளசி !" என்று அழைத்துக் கொண்டே வந்த கீர்த்தி, அவளைக் கொல்லைத் தாழ்வாரத்தில் சந்தித்தான்.

"அக்கா கார்லே உட்கார்ந்திருக்கா. நான் வரேன்."

துளசி அவனைப் பார்த்தாள். உடனேயே உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். பாண்ட், கோட், டை மற்றும் பூட்ஸுடன் கீர்த்தி நின்றான். தைலாவைப் பார்க்க எதற்கு இத்தனை பெரிய வேஷம் ?



"நான் போய்ட்டு வரேன்" என்றான் அவன் மீண்டும்.

"சரி."

"பெஸ்ட் விஷஸ்னு சொல்லுவேன்னு நினைச்சேன் துளசி."

"நேக்கு அத்தனையெல்லாம் சொல்லத் தெரியாது. ஆனா, நீங்க வாய்விட்டுக் கேக்கறேள். சொல்றேன் : பெஸ்ட் விஷஸ் !"

கீர்த்தி சிரித்துக் கொண்டே காரை நோக்கிச் செல்ல, துளசி புறக்கடைக்கு நடந்தாள்.

தொழுவத்தில் அம்மு நிச்சிந்தையாக உறங்கிக் கொண்டிருந்தாள். மழை இன்னும் பெய்து கொண்டிருக்கவே, அவளுடைய தாழங் குடையை எடுத்துக் கொண்டு தொழுவத்தைத் தாண்டினாள்.

கொல்லைத் தரை, மழையில் சொத சொதவென்றிருந்தது. கொல்லையின் எல்லையில் ஒரு மாமரம். கிளைகளில் ஏழெட்டுக் காகங்கள். சாதாரணமாக ஒரு கிளையில் ஒரு பச்சைக் கிளி மூக்கைத் திட்டியவண்ணம் உட்கார்ந்திருக்கும். இன்று அதைக் காணவில்லை.

கன்றுகள் இன்னும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன.

திடீரென்று அம்மாவின் குரல் கேட்பது போலத் தோன்றியது.

மெதுவாகத் திரும்பினாள்.

அவள் ஹாலை அடைந்ததும் அம்மா கத்தினாள் :

"எங்கேடீ தொலைஞ்சே ? நெவளிச்சு நெவளிச்சு என் தொன்னை கிழிஞ்சாச்சு."

"என்னம்மா வேணம் ?"

"சாயை கொண்டாடி..."

துளசி மௌனமாகச் சென்றாள். பத்தாவது நிமிடம் டீயுடன் வந்தாள்.

அம்மா ருசித்தாள்.

அடுத்த கணமே—

"ஏண்டி பாவி! நான் ஊஞ்சல்லே கெடக்கறதும் ஒனக்குப் பிடிக்கலையா? எந்துக்கு இந்த எழவிலே பஞ்சாரையைக் கொட்டினே?"

ஞாபகப்பிசகாய் டீயில் துளசி சர்க்கரையைப் போட்டு விட்டாள். அவள் தம்ளரை எடுக்கப் போனாள்.

"வேறே கலந்தண்டு வரேன்... இதை நான் குடிச்சுக் கறேன்."

"எருமையாட்டமா நன்னா வளர்ந்திருக்கே... வேகத் திலே கொண்டா... நாக்கு ஒணந்து போறது."

—சொன்ன சாரதா, ஊஞ்சலிலிருந்து தம்ளரைத் தள்ளினாள். டீ வெள்ளமாக நின்று, நிதானமாக முற்றத்தை நோக்கி நகர்ந்தது.

துளசி குனிந்து காலித் தம்ளரை எடுத்துக் கொண்டு, மீண்டும் சமயலறைக்குச் சென்றாள்.

இந்த இயந்திரத்துக்கு ஓய்வு உண்டா? விடுதலை உண்டா? அப்படியானால் எப்போது? அம்மா ஆடாத ஊஞ்சலில் ஆடுகிறாள். அவளுடைய உழைப்பு ஊஞ்சல் என்று தன் ஆட்டத்தை நிறுத்தும்?

அவளுக்கு மட்டும் படிப்பில் நாட்டம் இருந்திருந்தால் காலேஜுக்குப் போயிருப்பாள். அவளுடைய இடத்தில் ஒரு சமையற்காரி இருந்திருப்பாள்.

என்ன செய்ய, படிப்பு வரவில்லை.

அம்மாவும் அப்பாவும் அக்காவும் அண்ணாவும் கடந்த சில ஆண்டுகளாக அவளுடைய பத்தாம் கிளாஸ் தோல்வி



களுக்குப் பிறகு அடிக்கடி உதிர்க்கும் மொழிகள் நினைவுக்கு வந்தன.

'ஏண்டி தொளசி, மணிக்குட்டிக்குப் பல் தேய்ச்சு விடுடீ...'

'ஏண்டீ, எத்தன மணிக்கூரா அவனோடு பல்லைப் பிடுங்கிண்டிருப்பே...? காவேரிக்குப் பின்னி விடேன், அவ ஒன் தங்கைத்தானே...'

'டீ தொளசி. கோலேஜ்லே ஏன் லேட்டுன்னு கேட்டா, அக்கா என் தம்பிக்குப் பல் தேய்ச்சுண்டிருந்தான்னு, தங்கைக்குத் தலை வாரிண்டிருந்தாள்னு சொல்ல முடியாதுடீ. அப்புறம் என் பல்லையும் தேய்ச்சுவிட உன் அக்காவை அனுப்புன்னு புரொபஸர் சொல்லுவா.'

'ஏண்டீ, ஒரு சேனையை நறுக்கித் தொலைக்க இத்தனை நேரமா? சரசரன்னு சேய்டீ...!'

"தொளசி, உன் மன்னி உன்னை உச்சியார்த்த வரச் சொன்னா... சக்கை ஆயணுமாம். சக்கை வரட்டி உண்டாக்கணும்னு சொன்னா."

"பொண்ணே, நான் கோடதிக்குப் போய்ட்டு வரேன். ஆத்தைப் பாத்துக்கோ கிட்டயா?"

துளசி கண்களை மூடிக் கொண்டாள். அலைகள் நாலா புறங்களிலிருந்தும் அவளைத் தாக்குகின்றன.

அவள் ஐந்தாவதாக முளைத்த விதை. ஆனால், மரமாகி விட்டாள். எல்லோரும் கல் எறிகிறார்கள். அவளை விடச் சிறியவர்களுக்கு ஒன்றும் தாமாகச் செய்து கொள்ள முடியாது. பெரியவர்களுக்குச் செய்து கொள்ள நேர மில்லை. துளசி, துளசி... துளசிதான் எல்லாவற்றிற்கும்.

அப்பா சொல்கிறார், அவள் ஒரு நாள் இல்லா விட்டால் வீடு நாறிப் போய்விடும் என்று.

ஆனால், என்றைக்கு அவள் மணம் கமழ வாழப் போகிறாள்?

ஆறு மணிக்கு கீர்த்தி திரும்பினான். அவனை இறக்கி விட்ட அக்காவின் கார் உடனேயே திரும்பி விட்டது

கீர்த்தி ஹாலுக்கு வந்தான். துளசி எதிர்ப்பட்டாள்.

"மிஸ் துளசி, நான் போய்ட்டு வரேன்... என்னை நீ ரொம்ப ரொம்ப ஸ்பெஷலா கவனித்துக் கொண்டே! ரொம்ப தாங்க்ஸ்?"

"என்னைக்கு நிச்சயதாம்பூலம்?"

கீர்த்தி சிரித்தான். அந்தச் சிரிப்பில் அவள் மகிழ்ச்சியைக் காணவில்லை.

"முடிவாகாத கல்யாணத்துக்குப் பாக்கு வெத்தலை மாத்துவது உண்டா துளசி?"

"தைலா லட்சணமா இருப்பாளே... பி. ஏ-யாச்சே... ஏன் பிடிக்கலை?"

"ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்ச மாதிரித்தான்."

"பின்னே என்ன வெஷமம்?"

"வெஷமம்னா... யூ மீன்... யூ மீன்... ப்ராப்ளம்?"

"ஆமாம்."

"தைலா ஒரே பெண்... அப்பா பெரிய பணக்காரர்" எஸ்டேட் எல்லாம் இருக்கு."

"இதெல்லாம் நேக்கும் தெரியும்" என்றாள் துளசி.

"கல்யாணம் ஆனா பெண்தானே புருஷன் வீட்டுக்குப் போகணும்?"

"ஆமாம்."



"ஆனா, கல்யாணம் ஆனதும், நான் இங்கே வந்து விடணுமாம்."

"நீங்க என்ன சொன்னேள்?"

"நான் எப்படி வர முடியும்? முடியாதுன்னேன்."

"லட்சம் லட்சமா சொத்து இருக்கு."

"சொத்து ஒண்ணுதானா உலகத்திலே துளசி? எனக்கும் சில கொள்கைகள் உண்டு. அவர்களுக்கு என்னைப் பிடித்திருந்தாலும் என் இஷ்டத்துக்கு விட்டுக் கொடுக்கவில்லை. ஒரே பெண். மாப்பிள்ளை வீட்டோடு இருக்கணும்னு பிடிவாதமாச் சொல்லிட்டா. நான் புறப்படறேன்."

"விசாரப்படாதீங்கோ... ஒங்களுக்கு இதைவிட நல்ல எடத்திலேந்து நல்ல பொண் கெடைக்க யோகம் இருக்குன்னு நெனைச்சுக்குங்கோ."

"தாங்க்ஸ்!"

"காபி தரட்டுமா?"

"வேண்டாம், நான் புறப்படறேன்."

அரை மணி நேரத்துக்குப் பிறகு அப்பாவின் காரில் கீர்த்தி ரயிலடிக்குச் சென்றான்.

அப்போது அவனைப் பார்க்கவே துளசிக்குப் பரிதாபமாக இருந்தது. 'பாவம்' என்று ஓரிரு தடவை முணுமுணுத்துக் கொண்டாள்.

# 3

இரண்டு நாட்கள் சென்றன. துளசி எனும் இயந்திரம் தன் இயல்பில் இயங்கிக் கொண்டிருந்தது. எல்லோருடைய அதிகாரக் குரல்களும் பழக்கத்தை மறக்காமல் கத்தின. அம்மா ஆயிரம் பாவிக்கு அழைத்தாள். ஜெர்ஸி பசு பதினைந்து லிட்டர் பால் கொடுத்தது. கன்றுகள் துள்ளி ஓடின. மாமரத்தில் காகங்களும், அடிக்கடி தென்படும் பச்சைக் கிளியும் ஓய்வு எடுத்துக் கொண்டன.

கீர்த்தி, ஒரு ரயில் பிரயாணியாக மனத்தைவிட்டே அகன்று போனான்.

நான்காம் நாள்...

காலை பத்தரை மணி. அம்மா சாரதா, டயாபடீஸிலிருந்து விடுதலை பெற, பூஜை அறையில் சுந்தர காண்டம் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கென்றே பிரத்யேகமாக வடிக்கும் சம்பா கோதுமை வெந்திருக்கிறதா என்று அறிய, துளசி இரு பருக்கைகளை எடுத்து அழுத்திப் பார்த்தாள்.

"துளசி !"

திடீரென்று வாசுவின் குரல் கேட்டது. கடந்த இரண்டு நாட்களாக அவன் காபி குடிக்க வரவில்லை. இப்போது அப்பாவுடன் கோர்ட்டுக்குப் போகாமல் இங்கே எதற்கு வந்திருக்கிறான் ?

அவள் மெதுவாகத் திரும்பினாள்.

"நேக்குப் பசிக்கறது. அப்பா என்னை ஒத்தப்பாலத்துக்கு அனுப்பறா."

"ஒக்காருங்கோ."



வாசு பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சாரதா, சுந்தர காண்டத்துக்கு விடுதலை கொடுத்துவிட்டு வந்தாள்.

"என்ன வாசு, என்ன அதிசயமா இருக்கு ? சாப்பிடச் சொன்னா சாப்பிடமாட்டே !"

வாசு விஷயத்தைக் கூறினான்.

"ஒத்தப்பாலத்திலேந்து எப்போ மடங்குவாய் ? என்று கேட்ட சாரதா, "டீ தொளசி, ஏண்டீ நிக்கறாய் ? அவனுக்கு கூட்டான் விடு" என்றாள்.

"இன்னைக்குச் சாயங்காலம் மடங்குவேன்."

"வாசு... நேக்கு கொஞ்சகாலமா ஒண்ணு கேக்கணும்னு இருக்கு."

"கேளுங்கோ மாமி."

"தொளசி, அவன் எலையைப் பாரு. தோரன் போடுடீ."

"வேண்டாம் மாமி. இன்னமே மோருஞ்சாதம் தான்."

"தயிர் விடுடீ... என்ன கேக்கணும்னு நினைச்சேன் தெரியுமா ?"

"சொல்லுங்கோ."

"போன கொல்லம் ஒன் தங்கை அன்னத்துக்குக் கல்யாணமாச்சு."

"ஆமாம்..."

"அவ கல்யாணம் ஆன கையோடே ஒன் கல்யாணமும் நடக்கும்னு நான் நெனைச்சேன்."

வாசு பதில் சொல்லாமல் சிரித்தான்.

"வேகத்திலே கல்யாணம் பண்ணிக்கோடா."

"வேளை வந்தா நடக்கும் மாமி."

"வேளையை நாமதான் வரவழைச்சுக்கணும். ஒன் ஜாதகத்தை எங்கிட்டே தந்து வை."

"நாளைக்குத் தரேன்."

"காலாகாலத்திலே புள்ளைகள் கல்யாணம் பண்ணிக் கொள்ளணும்."

வாசு பதில் சொல்லவில்லை. எழுந்தான்.

"ஆனா, நான் இதைச் சொல்லப்படாது!" என்ற சாரதா, "எங்காத்திலேயே கல்யாணத்துக்கு ரெண்டு பொண்கள் நிக்கறது" என்றாள்.

துளசி உள்ளூர வெலவெலத்துப் போனாள். அம்மா எதற்காக வாசுவின் ஜாதகத்தைக் கேட்கிறாள்? ஒரு நாள் இல்லை என்றால் ஒரு நாள் அவனுக்கும் கல்யாணம் நடந்து தான் தீரவேண்டும். இப்போதுகூட தாராக் காட்டிலிருந்து உதவிப் பேராசிரியராக இருக்கும் ஒருவனுடைய ஜாதகம் சீதாவுக்கு வந்திருக்கிறது. பணிக்கர் நல்ல பொருத்தம் இருக்கிறது என்று சொல்லி விட்டார். ஆனால், சீதா முடியாது என்று கூறியிருக்கிறாள். ஒருவேளை அம்மாவும் அப்பாவும் அவளை வற்புறுத்திச் சம்மதிக்க வைக்கலாம். அப்படி அவள் சம்மதித்து விட்டால்? அதன் பிறகு நங்கி விலகிவிடும். துளசிக்கும் வரன் பார்க்க ஆரம்பிப்பார்கள்.

எப்படிப்பட்ட பிள்ளை வருவான் என்று துளசி கற்பனை செய்து பார்க்கவில்லை. எவன் வேண்டுமானாலும் வரட்டும். அவளுக்கு வேண்டியதெல்லாம் இந்த வீட்டி லிருந்து வெளியேறி, நிம்மதியான வாழ்க்கை வாழவேண்டும் என்பதுதான். பிறருக்காக உழைத்து உழைத்து அவள் என்ன சுகம் கண்டாள்? கல்யாணமான மறுநாளே அவள் புருஷன் வீட்டுக்குச் சென்றுவிட வேண்டும்.

அந்த வாசுவைத் தன் மாப்பிள்ளையாக்கிக் கொள்ள அம்மா உள்ளூர ஆசைப்படுகிறாளா? அப்படி வாசு



மாப்பிள்ளையானால், அவனை வீட்டோடேயே வைத்துக் கொள்ளவும் அம்மா தீர்மானிப்பாள். தைலா வீட்டில் இருக்க முடியாது என்று கீர்த்தி புறக்கணித்தது போல, வாசு நிச்சயம் புறக்கணிக்க மாட்டான். சொல்லப்போனால் இந்த வீட்டில் இருப்பதில்தான் அவனுக்கு விருப்பமே இருக்கும். அம்மாவின் திட்டமே துளசி தொடர்ந்து அதே வீட்டில் இருக்க வேண்டும் என்பது தானோ என்னவோ?

துளசி நடுங்கினாள்.

உடல் வியர்த்தது.

வாசு அவளுடைய கணவன். கல்யாணமான பிறகு அவள் அவனுடன் செல்லுவதில்லை. அவன் அவள் வீட்டுக்கே வந்து விடுகிறான்.

அப்புறம்?

இதே வாழ்க்கை... இதே உழைப்பு... இதே அலுப்பு... சலிப்பு...

குருவாயூரப்பா, அவளுக்கும் வாசுவுக்கும் கல்யாணம் நடக்கக்கூடாது. அம்மாவையும் அப்பாவையும் எதிர்த்துப் பேச அவளுக்குத் தைரியம் பிறக்க வேண்டும்.

அவன் குடும்பத்தினரில் ஒருவனைப் போல வாசு நடந்து கொள்ளுகிறான். அவளுடன் சரளமாக, சகஜமாகச் சிரித்துப் பேசுகிறான்.

அவன் அப்படிப் பேச இனி அவள் இடம் கொடுக்கக் கூடாது.

உறையின் நான்கு மூலைகளிலும் மஞ்சள் தடவி தபாலில் வந்திருந்த ஒரு கடிதத்தைப் பிரித்து தமக்குள் படிக்க ஆரம்பித்தார் பரசுராமன்.

"ஆர் எழுதியிருக்கா? சேஷன் தானே?" என்றாள் சாரதா.

துளசி, அப்பாவுக்குக் கொண்டு வந்த காபியை அவர் முன் வைத்துவிட்டு, சுவரோரமாக நின்று வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அக்கா சீதா படி ஏறி வருவது தெரிந்தது.

பரசுராமன் மனைவிக்குப் பதில் கூறாமல் கடிதத்தைப் படித்து முடித்தார். மேஜை மேல் இருக்கும் காபியையும் மறந்து இரண்டாவது தடவையாகப் படிக்கலானார்.

"ரெண்டாம் பிராவசியம் படிக்கறதுக்கு அப்படி என்ன எழுத்து அது?" என்றாள் சாரதா. வந்திருக்கும் கடிதம் சேஷன் வீட்டுக் கல்யாணக் கடிதம் அல்ல என்ற எண்ணம் முதன் முறையாக எழுந்தது.

ஹாலினுள் பிரவேசித்த சீதா, குடையையும் கைப் பையையும் வைத்துவிட்டு, "தொளசி, காபி தாடீ..." என்றாள்.

துளசி மெல்ல நகர்ந்து உள்ளே சென்றாள். அப்பா கடிதத்தை இரண்டாவது தடவை படிப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ரொம்பவும் முக்கியமான கடித மாக இருக்க வேண்டும். கவரின் மூலைகளின் மஞ்சள் நினைவுக்கு வர, சீதாவின் திருமணம் பற்றித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

மீண்டும் அவள் வந்தபோது, அப்பா இடது கையில் கடிதத்தை வைத்துக் கொண்டே காபியை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் துளசி இதுவரை கண்டிராத ஆச்சரியமும் ஒரு விதக் குழப்பமும் பிரதிபலித்தன.

சாரதா மூன்றாம் முறை கடிதத்தைப் பற்றி விசாரிக்கவில்லை. கணவர் அலட்சியமாக இருந்தால் தன்னாலும் அதே அளவுக்கு அலட்சியமாக இருக்க முடியும் என்று ஊஞ்சலிலிருந்து இறங்கினாள்.



"மெட்ராஸ்லேந்து வாஞ்சி எழுதியிருக்கான்..." என்றார் பரசுராமன்.

யார் வாஞ்சி?

சீதா வாய்விட்டுக் கேட்க, துளசி, வாஞ்சி என்ற பெயருக்கும் தனக்கும் என்ன சம்பந்தம் என்ற எண்ணத்தில் ரேழியை நோக்கி நடந்தாள்.

"இந்தாடீ தொளசி...!"

அப்பாவின் குரல் அவளை நிற்க வைத்தது. ஏற்கனவே சில அடிகள் நகர்ந்து விட்ட சாரதாவும் நின்றாள்.

"என்னப்பா...?"

"கீர்த்தின்னு ஒத்தன் அன்னைக்கு இங்கே வந்தானே தைலாவைப் பொண் பார்க்க... அப்ப இங்கே என்ன நடந்தது?"

"நீங்க என்ன கேக்கறேள் அப்பா?"

"அவன் வண்டிக்குப் பொறப்படறதுக்கு முன்னாலே உங்கிட்டே என்ன பேசினான்...?"

"தைலாவாத்திலே கல்யாணமானா மாப்பிள்ளை ஆத்தோடு வந்துடணும்னு சொன்னாளாம். கீர்த்தி மாட்டேன்னானாம். நான் சொன்னேன், 'விசாரப்படா தீங்கோ, ஒங்களுக்கு இதைவிட நல்ல எடத்திலேந்து நல்ல பொண் கெடைக்க யோகம் இருக்குன்னு நெனச்சுக் குங்கோ'ன்னேன். அம்படத்தான்."

"அம்படத்தானே..."

"ஆமாம்..."

"தொளசி, நீ கீர்த்தி சங்கடப்படப்படாதுன்னு சொல்லி இருக்கே... இப்ப அந்த நல்ல எடம் இந்த ஆம் தான், அந்த நல்ல பொண் நீதான்னு எழுத்து வந்திருக்கு." —சொல்லிவிட்டு, பரசுராமன் திடீரென்று வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தார்.

துளசிக்குத் தலை சுற்றியது. கண்களை மூடிக்கொண்டு சாய்ந்து கொள்ள மேஜைக்கு வந்தாள். கீர்த்தி அவளைக் கேட்கிறானா? அப்படியானால் அவள் இந்த இடத்தை விட்டுப் போய் விடுவாளா? அவள் மெய்மறந்து போனாள்! அவளுடைய செக்குமாட்டு வாழ்க்கைக்கும் விடுதலை! குருவாயூரப்பா! உனக்கு அனந்தகோடி நமஸ்காரம். எப்படியாவது ஒரு நடை வந்து உன்னைத் தரிசனம் செய்கிறேன்.

தலை சுற்றல் நின்றதும் அவள் பூஜை அறைக்கு ஓடினாள்.

அவளுடைய விரைவை பரசுராமன் புரிந்து கொண்டார். மீண்டும் சிரித்தார்.

"ஏன் சிரிச்சுச் சிரிச்சு வயிறு குலுங்கறேள்? தொளசியைக் கேட்டு எழுத்து வந்திருக்கா?" என்றாள் சாரதா.

"ஆமாம்."

"என்ன உத்தரம் எழுதப் போறேள்?"

"வாஞ்சி குடும்பம் நல்ல குடும்பம்... கீர்த்தி நன்னா சம்பாதிக்கிறான்... லட்சணமா இருக்கான்."

"இவளுக்கு மேலே இதோ இவ நிக்கறாளே, ஒறமை இருக்கா ஒங்களுக்கு?" என்ற சாரதா, அருகே உட்கார்ந்திருக்கும் சீதாவைச் சுட்டிக் காட்டினாள்.

அந்தப் பெண்ணை, தாம் மறக்கவில்லை என்று உணர்த்த, "எத்தற வரன் வந்தது! எல்லாத்தையும் சதா தட்டிக் கழிச்சா. அவ கல்யாணம் அவ இஷ்டம் போல நடக்கட்டும். இப்போ ஒரு நல்ல எடம் தானா தொளசிக்கு வர்றது... நேக்குக் கீர்த்தியைப் பிடிச்சருக்கு" என்றார்.

"ஒங்களுக்குப் பிடிச்சா தொளசி கழுத்திலே அவள் தாலியைக் கட்டணுமா? பெரியவள் ஒருத்தி இருபத்தினாலு வயசுலே குதிரை ஆட்டமா நிக்கறா... மூணு வயசு தாழ உள்ளவளுக்கு என்ன அவசரம்?"



"ஒனக்கு எத்தனை வயசிலே கல்யாணமாச்சு? பதினாறு. ஒறமை வைச்சுக்கோ!" என்றார் பரசுராமன்.

"அப்படி சட்டுப்புட்டுன்னு தொளசியோட கல்யாணத்தைக் கழிச்சா இந்த ஆத்தை ஆர் பார்த்துக்குவா?"

பூஜை அறையிலிருந்து வெளியே வந்த துளசி, அம்மாவின் பேச்சைக் கேட்டு ஆச்சரியப்படவில்லை. நடுக்கிட்டாள்.

"இந்த ஆத்தைப் பாத்துக்கறதுக்கு தொளசிதான் இருக்கணம்னா என்னன்னைக்கும் அவள் இப்படியேதான் நிக்கணும். ஒரு நல்ல சமையக்காரியா பாரு. நூறோ நூத்தம்பதோ ஆனாலும் தரக்கேடில்லை."

"தொளசி கல்யாணத்துக்கு ஒண்ணும் இப்ப அவசரமில்லை. சீதாவுக்கு ஆத்யம் கழியட்டும்."

"இப்ப நீ என்னதான் சொல்றேடீ; சாரதா?" என்று கேட்டார் பரசுராமன்.

"இந்தப் பாலக்காட்டுப் பதினெட்டு கிராமமும் சிரிக்கண்டாம்ங்கறேன். மின்னாலே ஜெயாவுக்கு ஆச்சு. அப்றம் சீதாவுக்கு ஆகட்டும். அதுக்கப்புறம்தான் தொளசி..."

"ஒனக்கு இஷ்டமில்லேடீ சாரதா... அது நன்னாத் தெரியறது."

சாரதா பதில் சொல்லவில்லை. பரசுராமன் ஆபீஸ் அறைக்குச் சென்று விட்டார்.

சாரதா ஊஞ்சலில் சாய்ந்து கொண்டாள். சீதா எழுந்து அப்பாவின் ஆபீஸ் அறையை நோக்கி நடந்தாள்.

துளசிக்குத் திடீரென்று எல்லாமே இருண்டு போய் விட்டதாகத் தோன்றியது. கீர்த்தி வீட்டிலிருந்து வந்த கடிதம் அவளுடைய விடுதலைப் பத்திரம். ஆனால், அம்மா அதைக் கிழித்துப் போடத் தலைகீழாக நிற்கிறாள்.

கீர்த்தி அவள் கண்முன் எழவில்லை. அவனுடைய கூர்மையான கண்களும், அரும்பு மீசையும், தூக்கி வாரிய கிராப்பும் நினைவிற்கு வரவில்லை.

ஒரு மனிதன் நின்றான். அவளுக்கு இந்த வீட்டிலிருந்து விடுதலை அளிக்க இரு கைகளையும் நீட்டி அழைக்கிறான். அவளுடைய தாபம் தீர ஒரு வாய்ப்பு பிறந்திருக்கிறது.

அவன் நீட்டிய கரங்களை அம்மா வெட்டி வீழ்த்துகிறாள்.

முடிவு ?

கெஞ்சினாலும் கிடைக்காத ஐந்தாவது பெண் வெறும் பெண்ணாகவே தொடர்கிறாள்.

அன்று இரவு படுக்கையில் படுத்த துளசி சிறிது நேரம் அழுதாள். சிறிது நேரம் அப்பாவிடம் தனது மனத்தைத் திறந்து காட்டினால் என்ன என்று யோசித்தாள். ஏன், சின்ன அக்கா சீதாவின் காலில் விழுந்து, அந்தத் தாராக் காட்டுப் பிள்ளையைப் பண்ணிக் கொள்ளக் கெஞ்சக் கூடாது என்று நினைத்தாள்.

மெட்ராஸை விட்டு மனம் திடீரென்று வாசுவை நோக்கித் திரும்பியது. ஏற்கனவே அம்மா தன் உள்ளத்தை வாய் வார்த்தையால் அப்பாவிடம் சொல்லியாகி விட்டது. கல்யாணம் ஆகி துளசி சென்றுவிட்டால் வீடு என்னவாகிறது என்று வெளிப்படையாகவே கேட்டு விட்டாள். இப்படிப்பட்ட அம்மா இரண்டு தினங்களுக்கு முன்பு வாசுவிடம் ஜாதகத்தை கேட்டு வாங்கிக் கொண்டிருக்கிறாள். ஒரு வேளை அவளை வாசுவுடன் இணைக்கத்தான் உள்ளூரத் திட்டம் வகுக்கிறாளா ?



குருவாயூரப்பா, அம்மாவின் மனத்தில் அப்படி ஒரு எண்ணம் வரக்கூடாதே ! அப்படியே வந்தாலும் அது ஈடேறாமல் போகணுமே !

அம்மாவையும் வாசுவையும் தாண்டி மனம் அப்பாவுக்கு வந்தது. அவருக்கு இதில் இஷ்டம் இருக்கிறது. அம்மாவை மீறி அவர் செயல்பட்டால் அவளுக்கு வழி பிறக்கும். அப்பாவை நினைத்த கணத்திலேயே, சீதா அவருடைய ஆபீஸ் அறைக்குச் சென்றதும் நினைவுக்கு வந்தது.

சீதா அநாவசியமாக அந்த அறைக்குச் செல்ல மாட்டாள். சென்றிருக்கிறாள். கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு வெளியே வரவில்லை. வந்தபோது சீதாவின் முகத்தில் ஒரு தனி உற்சாகம், தோன்றியிருப்பதாகத் துளசிக்குப் பட்டது. ஒருவேளை, கீர்த்தியைத் தான் கல்யாணம் செய்துகொள்ளத் தயார் என்று அவள் அப்பாவிடம் சொல்லி, அதற்கு அவரும் சம்மதித்து லெட்டர் எழுதுவதாகக் கூறிவிட்டாரா ?

அவளுடைய மனம் குழம்பியது. குழப்பத்தை இந்த வீட்டில் யாரும் தீர்க்க மாட்டார்கள். எந்த வழியில் எப்படிச் சென்றால் அவள் ஆசைப்படுவது நிறைவேறும் என்று யோசனை கூற ஒருத்தியே ஒருத்திதான் அவளுக்கு இருக்கிறாள். துளசியைவிட ஐந்து வயது பெரியவளானாலும் முதிர்ச்சி அடைந்த அவள், துளசிக்கு வெறும் சிநேகிதி மட்டுமல்ல ; வழி காட்டும் தெய்வம் மாதிரித்தான் !

அந்த சிநேகிதி டாக்டர் மஞ்சுவை ,மறுநாள் மத்தியானம் பார்த்து விடுவது என்று துளசி முடிவு செய்தாள்.

# 4

சர்ச்சைக்குக் காரணமான பரசுராமன் தம் ஆபீஸ் அறையை நோக்கிச் சென்ற சில விநாடிகளுக்கெல்லாம் சீதாவும் மெல்ல எழுந்து, மெல்ல நடந்து அப்பாவின் அறையினுள் பிரவேசித்தாள்.

பரசுராமன் ஒரு கணம் திடுக்கிட்டார். மறு கணம் ஆச்சரியப்பட்டார். சில வருடங்களுக்கு முன் சீதா அவருடைய அறையில் உட்கார்ந்து மேஜை மீதிருந்த காகிதங்களைக் கலைத்ததற்காகத் தம்மையும் மீறிக் கத்திவிட்டார். அதற்குப் பிறகு சீதா ஒரு தடவை கூட அந்த அறைக்குள் வந்ததில்லை. தம் பெண்ணின் ரோஷத் தையும் வீறாப்பையும் பரசுராமன் அறிவார். இப்போது சீதா வந்திருக்கிறாள் என்றால், நிச்சயமாக முக்கியமான காரணம் இருக்கும் என்று தோன்றியது. அவளாகவே ஆரம்பிக்கட்டும் என்று காத்திருந்தார்.

சீதா அறைக்குள் ஒரு தடவை கண்ணைத் திருப்பிப் பார்த்தாள். ஜூனியர் வாசுவோ அல்லது டைப்பிஸ்டோ இல்லை. மெதுவாக நகர்ந்த அவள், கதவுகளைச் சாத்தினாள். பரசுராமன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். பெண் என்ன ரகசியத்தைக் கொட்ட வந்திருக்கிறாள்?

"அப்பா, ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும்" என்றாள் சீதா.

"பேசேன்...ஆனா, எந்துக்கு கதவைச் சாத்தினாய்?"

"என்னோடு சொந்த விஷயம். இன்னம் அம்மாட்டே கூடச் சொல்லீட்டில்லை."

"ஆரையாவது லவ் பண்றியா?"



திடீரென அப்பா கேட்ட கேள்வியில் சீதா ஆடிப் போனாள். அப்பா எப்படி அவளுடைய மனத்தை போட்டோ பிடித்திருக்கிறார்?

சில விநாடி நேர அதிர்ச்சிக்குப் பிறகு, "ஆமாம்ப்பா" என்றாள்.

"யார்?"

பெயரைச் சொன்னாள்.

"அப்படியா...! இப்ப நான் என்ன செய்யணும்?"

"நீங்க சம்மதிக்கணும். நடத்தி வைக்கணும்."

"மாட்டேன்னா...?"

"ரெண்டாம் பிராவசியம் கேக்கமாட்டேன். ஏன்னா நீங்க ஒரு விஷயத்தைத் தீர்மானிச்சேன்னா அதை மாத்த மாட்டேன்னு நேக்குத் தெரியும்."

"அப்போ என்ன செய்வாய்?"

"என்னை மாதிரி அவனுக்கும் தைரியம் இருந்தா ஒரு கோவில்லே தாலியைக் கட்டச் சொல்லுவேன்."

"அப்ப ஒனக்குத் தைரியம் இருக்கு."

"ஒங்க பொண் இல்லியா?"

"அது சரி. எந்துக்கு இன்னைக்கு இப்ப வந்து இதைச் சொல்றாய்?"

"துளசியைக் கேட்டு மெட்ராஸ்லேந்து லெட்டர் வந்திருக்கு. நான் நிக்கறப்போ அவள் மணையிலே ஒக்காரப் படாதுன்னு அம்மா கத்தறா. நான் என்னன்னைக்குமே கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லைன்னு அம்மா நெனைச்சுண்டிருக்கா. இப்ப நான் என் மனசைத் தொறந்து சொல்லலைன்னா, துளசியின் கல்யாணமும் நின்னுபோயிடலாம் இல்லியா? ஒரு நாள் இல்லாட்டா ஒரு நாள் உங்ககிட்டே சொல்லித்தானே ஆகணும்?"

"சீதா !"

'என்னப்பா ?' என்று அவள் கேட்கவில்லை. அப்பாவின் குரலே மாறிப் போயிருந்தது. வஜ்ரம் ஏறிவிட்ட குரல். மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் கோபமோ ஆத்திரமோ இல்லை. மாறாக ஓர் உறுதி ஒளியிட்டது.

"சீதா... நான் உன் அம்மாவுக்காகவோ, இல்லை, நீ கல்யாணம் ஆகாம நிக்கறாய்ங்கற ஒரு அற்ப காரணத்துக்காகவோ துளசிக்கு வந்திருக்கிற நல்ல எடத்தைத் தூக்கி எறிஞ்சுட மாட்டேன். கீர்த்திக்கு அவளைக் கொடுக்கறதுன்னு நான் லெட்டரைப் படிக்கறப்பவே தீர்மானிச்சாச்சு ; அதனாலே..."

சீதா அவசரப்படவில்லை. அப்பாவின் குணம் அவளுக்குத் தெரியும். இப்போது அவருடைய மனமும் புரிந்தது. காத்திருந்தாள்.

"அதனாலே, 'நான் ரயில்வே கேட்டைத் தொறந்து விட்டாத்தான் ஒன்னோட வண்டி போகும்'னு சொல்றமாதிரி நீ சொல்லண்டாம்."

"நான் அப்படிச் சொல்லலை அப்பா. எந்த வெஷமமும் என்னாலே இருக்கண்டாம்னுதான்..."

"நேக்கு மனசிலாயாச்சு சீதா... இப்ப என்ன வேணம்னு சொல்றாய் ?"

"ஒங்க சம்மதம்."

"இதைவிட இன்னொரு வார்த்தை, நல்ல வார்த்தை ஏாப்படறது நேக்கு."

சீதா விழித்தாள்.

" 'உங்களோடு ஆசீர்வாதம்'னு கேட்டிருந்தேன்னா, நான் என் பொண்ணுக்குப் புத்தியும் விவேகமும் இருக்குன்னு சந்தோஷப்பட்டிருப்பேன்."



சீதா பதில் பேசவில்லை. என்ன பேச ?

"இதப் பாரு, நான் சம்மதிச்சா, ஊர் அறிய நீ தாலி கட்டிப்பாய் ! சம்மதிக்கலைன்னாலும் நீ சும்மா இருக்கமாட்டாய். கோவில்லே கட்டிப்பாய் ! அதனாலே எந்துக்கு ஊர் சிரிக்கறதுக்கு எடம் கொடுக்கணும் ?"

சீதா மௌனம் சாதித்தாள்.

"ஏன் பேசமாட்டேன் என்கிறாய் ? ஒனக்குத்தான் நன்னா பேசத் தெரியுமே ?"

அவள் மெதுவாக நகர்ந்து கதவைத் திறந்து வெளியேறினாள். அப்பாவிடம் தோற்றுவிட்டாலும், தன் காரியத்தில் வெற்றிபெற்ற திருப்தி அவளுக்கு உண்டாயிற்று.

அன்று மஞ்சுவின் தந்தை கேஜி கையில் குடையுடன் வீட்டை வலம் வந்து கொண்டிருந்தபோது, வாரத்துக்குக் குறைந்தது நான்கு தடவையாவது பஸ்ஸில் அல்லது தன் அப்பாவின் காரில் வரும் துளசி, ஆட்டோவில் வந்து இறங்கினாள். துளசி ஏன் ஆட்டோவில் வருகிறாள் என்ற கேள்வி அவருள் எழுந்தபோதிலும், தாற்காலிகமாக அதை மறந்து, நடைபாதையில் தேங்கியிருக்கும் மழைத் தண்ணீரைக் காலால் உதைத்துச் செடிகள் பக்கம் திருப்பிய வண்ணம் இருந்தார்.

ஆட்டோவிலிருந்து இறங்கி முன்னேறி வந்த துளசி, கேட்டைத் திறக்கும் போதே, "என்ன மாமா, மஞ்சு இன்னம் வல்லையா ?" என்று கேட்டாள்.

"வர்ற நேரம்தான்... உள்ளே போய் உட்காரு" என்றார் கேஜி. துளசி படியேறி உள்ளே சென்றாள்.

துளசியைப் பார்க்கும்போதெல்லாம் ஓர் ஆச்சரியமான கேள்வி அவருடைய உள்ளத்தில் எழும். இருபத்தாறு வயது நிரம்பப் போகும் தம் பெண்ணுக்கும், இன்னும் இருபத்தி

ரண்டுக்கு வராத துளசிக்கும் எப்படி இத்தகைய பிணைப்பு ஏற்பட்டிருக்கிறது? இந்த துளசி தம் பெண்ணின் அத்தியந்த சிநேகிதியாக மட்டும் அவருக்குத் தோன்ற வில்லை. மஞ்சு, துளசிக்கு ஒரு லட்சியப் பெண். மஞ்சு மீது அவளுக்கு வெறும் அன்பும் அபிமானமும் மட்டுமல்ல, பெரும் பக்தியே இருக்கிறது என்று எண்ணினார். ஒரு தடவை பேச்சோடு பேச்சாக அவர் தம் பெண்ணிடம் கேட்டபோது; "துளசி அஞ்சு வயசிலிருந்து என்னைச் சுத்திச் சுத்தி வருவா. எனக்கும் அவளைப் பிடிச்சுது. அவ்வளவுதான்" என்றாள் மஞ்சு.

வீட்டுக்குள் பிரவேசித்த துளசி நேரே சமையலறைக்குச் சென்றாள். சமையற்காரி அம்முலு காலை எட்டரை மணிக்கே தன் வேலையை முடித்துவிட்டுப் போய் மீண்டும் நான்கு மணிக்குத்தான் வருவாள். இந்த மஞ்சு ஒரு நாள் கூட சூடாகச் சாப்பிட்டதில்லை.

ஒவ்வொரு பாத்திரமாக துளசி திறந்து பார்த்தாள். சாதம், சாம்பார், ரசம், சேனைக்கிழங்குக் கறி. காஸ் அடுப்பைப் பற்ற வைத்து வாணலியில் சிறிது நல்லெண்ணெயை ஊற்றி அது காய்ந்து வருகையில், கறியை அப்படியே கொட்டிக் கிளறினாள். சாம்பாரையும் ரசத்தையும் சுட வைத்தாள்.

திடீரென்று கார் சத்தம் கேட்டது. மஞ்சு வந்துவிட்டாள்.

எப்படி அவள் தன் பிரச்னையை ஆரம்பித்து விவரமாக எடுத்துக் கூறுவது? ஒரு வேளை மஞ்சு, அவளுக்குப் பிடிக்காத விதமாக ஆலோசனை கூறிவிட்டால்? அம்மா, அப்பா பேச்சைக்கூட அவளால் மீறிவிட முடியும். மஞ்சுவின் பேச்சை எப்படி...?

"என்ன செய்யறே துளசி?"



டாக்டர் மஞ்சு சமையலறையினுள் வந்தாள். அவளுடைய உயரம், மாநிறம், தலைவாரி முடிந்திருக்கும் அழகு, அவளுடைய மெல்லிய கழுத்து செயின் எல்லாமே துளசியைக் கவர்ந்தவை. இதெல்லாம் எத்தனையோ பெண்களிடம் இருந்தால்தான் என்ன, மஞ்சு மஞ்சுதான். தன்னுடைய பொன்னிறத்தைவிட மஞ்சுவின் மாநிறம் ஒசத்திதான். ஏனென்றால் அந்த மாநிறம் மஞ்சுவிடம் இருக்கிறது.

"நீ மின்னாலே ஒக்காரு, சாதம் போடறேன். நீ சாப்பிடறப்ப, நான் இப்ப எதுக்கு வந்தேன்னு சொல்றேன்."

மஞ்சு சாப்பிடத் தொடங்கினாள்.

"இப்ப சொல்லு."

"மதராசியிலேந்து கீர்த்தின்னு ஒத்தன் நாலஞ்சு நாளுக்கு மின்னாலே வந்தான்."

"அதான் அவன் போன மறுநாளே இங்கே வந்து சொன்னாயே?"

"சொன்னேன் இல்லியா? அவனோடு அப்பா என்னோடு அப்பாவுக்கு எழுத்துப் போட்டிருக்கார்."

"அப்படியா?"

"என்னைக் கல்யாணம் கழிச்சுக்க அவன் ஆசைப் படறானாம். என் அப்பாக்கு சம்மதம். அம்மா வேண்டாம்கறா."

"நீ என்ன சொன்னே?"

"என்னை ஆராவது வாயைத் தொறந்து கேட்டாத் தானே 'நான் ரெடி'ன்னு சொல்றதுக்கு? அப்பாவும் அம்மாவும் அவாளுக்குள்ளேயே தர்க்கம் பண்ணிக்கறா."

"உனக்கு மேலே சீதா இருக்கா இல்லியா, அதனால் தான் உன் அம்மா யோசிக்கிறான்னு நான் நெனைக்கிறேன்."

"அது மாத்திரமல்லா மஞ்சு. நான் புக்காம் போய்ட்டா இந்த ஆத்தை ஆரு பாத்துப்பானு அம்மா கேக்கறா !"

"உனக்கு இஷ்டம்னு சொல்றியா துளசி ?"

"என்ன இப்படிக் கேட்டுட்டாய் மஞ்சு...? எப்படாப்பா இந்த செக்கு மாட்டுக்கு விமோசனம் கெடைக்கும்னு நான் தவிச்சுண்டிருக்கேன் !"

"உனக்கு கீர்த்தியைப் பிடிச்சிருக்குன்னு சொல்லு..."

"அவனை விடு. இப்ப அவனை ஆரு நினைச்சா ?"

"என்ன துளசி, நீ என்ன இப்படிப் பேசறே ? ஒருத்தனை மனசுக்குப் பிடிச்சாத்தானே அவனைக் கல்யாணம் பண்ணிக்கலாம்..."

"எல்லாம் கல்யாணம் ஆனப்புறம் பிடிச்சுக்கும் மஞ்சு. நேக்கு இப்ப ஒரே ஒரு வெறிதான். இந்த ஆத்தையும் வேலையையும் விட்டுட்டுப் போணம். போறதுக்கு ஒரு வழி, ஒரே வழி கல்யாணம்தான்."

"நீ பேசறதே புதுசா இருக்கு துளசி !" என்றாள் மஞ்சு.

"ஒனக்கு அப்படித்தான் தோணும் மஞ்சு... இப்ப நேக்கு ஆர் ஆம்படையான்னு முக்கியமில்லை. ஊனமில்லாத ஒருத்தன் கீர்த்தி. நீ என்ன சொல்றாய் ? இப்ப நான் என்ன செய்யணும் ?"

"உன் அம்மா பிடிவாதமா முடியாதுன்னா நீ என்ன செய்வே ?"

"என் அம்மா மனசுக்குள்ளே என்ன கோட்டை கட்றாள்னு நேக்குத் தெரியும்" என்றாள் துளசி.

"என்ன கோட்டை கட்டறா ?"

"வாசு இருக்கான் இல்லியா, வாசு ? அவனுக்கு அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை..."



"அவனுக்குப் பார்க்கணும்னு உன் அம்மா ஆசைப் படறளா துளசி ?"

"நேக்கு என்னவோ அப்படித்தான் தோணறது. ஏன் தெரியுமோ... வாசு மாப்பிள்ளையா வந்தா அவனை ஆத்தோடு வச்சுக்கலாம். நானும் இப்ப இருக்கிற மாதிரியே ஆத்தைப் பாத்துண்டு இருப்பேன். இதுதான் அம்மாவோடு எண்ணம்."

"இதிலே என்ன தப்பு துளசி ?"

திடீரென்று துளசிக்குக் கண்கள், கனத்தன.

"மஞ்சு... என்னாலே முடியலே மஞ்சு... கழுதையைக் கூடக் கட்டிப் போடுவா... ஆனா, நான் கழுதையைவிட மோசம்."

"நீ, பெற்றவர்களுக்கும் கூடப் பிறந்தவர்களுக்கும் உழைச்சு அலுத்துட்டேன்னு சொல்றது எனக்குச் சரியாப் படலை... நீ வந்ததும் எதுக்கு சாம்பாரையும் ரசத்தையும் கூட வைத்தே...? யாராவது சொன்னாளா ?"

"மஞ்சு, நீ வேறே ! அவா வேறே ! நீ எங்கிட்டே எதையும் எதிர்பார்க்கலை மஞ்சு... அவா எல்லாரும்— அப்பாவைச் சொல்லமாட்டேன்— என்னை வேலைக்காரியாத்தான் வெரட்டறா..."

மஞ்சு சாப்பிட்ட பிறகும் எழாமல், உலர்ந்த கையுடன் யோசித்தாள்.

"என் மனசுக்குப் பிடிச்ச வழியா சொல்லு மஞ்சு !"

"உனக்கு பேசத் தைரியம் இருக்கா ?"

"நீ தைரியமூட்டு பேசறேன் !"

"நேரே போ ! 'எனக்குக் கல்யாணம் பண்ணிக்க ஆசை ! எனக்கும் கீர்த்தியைப் பிடிச்சிருக்கு'ன்னு சொல்லு."

"மின்னாலே சொன்னது சரி. ஆனா, கீர்த்தியைப் பிடிச்சிருக்குன்னு எப்படிச் சொல்றது ?"

"அப்ப, 'வாசுவை நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்'னு சொல்லு."

"பண்ணிக்கோன்னு இன்னும் ஆரும் சொல்லலையே மஞ்சு."

"சரி, நீ இப்ப உன் வீட்டுக்குப் போ... நான் சாயங்காலமா வர்றேன். அதுக்குள்ளே யோசிச்சு வைக்கிறேன்."

தான் வந்த காரியம் தன் மனத்துக்குத் திருப்தியாக நிறைவேறவில்லையே என்ற ஏமாற்றத்துடன் துளசி வீடு திரும்பினாள்.

அங்கே அவள் சற்றும் எதிர்பாராத ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது.

## 5

மறு நாள் பிற்பகல் இரண்டு மணிக்கே கோர்ட்டில் வேலை ஒன்றும் இல்லை என்று வீடு திரும்பிய பரசுராமன், உடைகளை மாற்றிவிட்டுக் கூடத்துக்கு வந்தார்.

சாரதா ஊஞ்சலில், மூன்று தலையணைகளில் சாய்ந்தவளாய் பக்த விஜயம் படித்துக் கொண்டிருந்தாள்.

கணவர் வந்து ஒரு நாற்காலியில் அமர்வதை உணர்ந்த அவள், ராமதாஸர் இருந்த சிறைக்குள்ளிருந்து வெளி வராமலே, "இப்பவே சாயை வேணமா, இல்லாட்டா தொளசி வந்துட்டுப் போறுமா ?" என்று கேட்டாள்.



"இப்பவே வேணம்னா நீயா ஓடிப்போய் கொண்டு வரப் போறாய் ? தொளசி வரட்டும். எங்கே அவ போயிருக்கா ?"

"தொளசி எங்கே போவா ? மஞ்சுவாத்துக்கு."

"கார்த்தாலே கோடதிக்குப் போறப்ப வாத்தியாரைப் பாத்தேன். சாயங்காலம் வரச் சொல்லியிருக்கேன்."

"ஓங்கப்பாவோடு திதி அடுத்த மாசம்தானே வர்றது ?" ராமதாஸர் சிறையிலிருந்து வெளிவர, சாரதாவும் வெளியே வந்து புத்தகத்தை மூடினாள்.

"வாத்தியார்னா அவர் தெவசத்துக்கு மாத்ரம்தானா வரணும் ? நல்ல காரியங்களுக்கும் வரலாம் இல்லியா ?"

"எந்துக்கு வரச்சொல்லியிருக்கேள் ? மிந்தா நேத்திக்குத் தானே பகவத் சேவைக்கு வந்துட்டுப் போனார் ?"

"பஞ்சாங்கத்தைப் பாத்து நாள் நிச்சயம் செய்யண்டாமா ?"

"நீங்க என்ன சொல்றேள் ?"

"நாளைக்கு மெட்ராஸுக்கு எழுத்துப் போடப் போறேன். அதுக்குள்ளே ரெண்டு மூணு நல்ல நாளாப் பாத்து வைச்சுப்போம். அவா சௌகரியம் எதுன்னும் தெரிஞ்சுக்கலாம்."

சாரதா ஊஞ்சலில் எழுந்து உட்கார்ந்தாள்.

"நான்தான் நேத்தைக்கே..."

பரசுராமன் இடைமறித்தார்.

"நீ நேத்தைக்கு என்ன சொன்னாய்ங்கறது நேக்கு ஒறமை இருக்கு சாரதா. மூத்தவள் இருக்கறப்போ சின்னவளுக்குக் கல்யாணம் கழிக்கப்படாது. அம்படத் தானே ?"

"பின்னே எந்துக்கு வாத்தியாரை வரச்சொன்னேன் என்கிறேன் ?"

"சீதா கழுத்திலே தாலி ஏறியூட்டா ஒனக்கு தொளசி கல்யாணத்திலே விரோதம் இல்லையே ?"

"விரோதமில்லை. ஆனா சீதா கழுத்திலே ஏதோ தாலி ஏறப் போற மாதிரி பேசறேளே... ஆர் புள்ளை ? அவதான் எந்த வரன் எந்தச் சீமையிலேந்து வந்தாலும் மாட்டேன், மாட்டேன் என்கிறாளே ?"

"அது நீயும் நானும் பார்த்த கேஸ்கள்."

"நீங்க என்ன சொல்றேள் ?"

"அவளே ஒருத்தனைப் பார்த்துண்டாச்சு !"

"என்ன... என்ன... சீதா ஒருத்தனைப் பார்த்துண்டாச்சா ? எங்கிட்டே சொல்லவேயில்லையே! ஆர் அவன்?"

"வாசு !"

"வாசுவா... ஒங்க ஜூனியர் வாசுவா ! இவனா... இவளையா ?" சாரதாவுக்கு மூர்ச்சைதான் வரவில்லை.

"ஏன், இதிலென்ன ஆச்சரியம் சாரதா ?"

"ரெண்டு வர்ஷமா இந்த ஆத்துக்குள்ளே வளைய வளைய வர்றான். இவ அவன் மூஞ்சியைப் பார்த்ததைக் கூட நான் கண்டுட்டில்லை. அவனும் இவகிட்டே ஒரு வார்த்தை என் காது கேக்கப் பேசிட்டில்லை."

"நம்மாத்துக்குள்ளே பாத்துப் பேசினாத்தான் பார்வையும் பேச்சுமா சாரதா ? சீதா தீர்மானமா இருக்கா. நீயும் நானும் தலையாட்டினா நமக்கு நல்லது. இல்லாட்டா நம்ம தலை பதினெட்டு கிராமத்திலேயும் உருளும். ஆனா ஒண்ணு. வாசு நல்ல புள்ளை, நீ என்ன சொல்றாய் ?"

"பூச்சையாட்டமா இருந்துண்டு அவன் இப்படி ஒரு சிரிப்பு சிரிச்சுட்டானே ?"



"ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிட்டா அவன் பூச்சையாட்டமா இருக்க மாட்டான்" என்றார் பரசுராமன்.

"வாசுவைப் பாத்து அம்மா அப்பா இல்லாத அநாதைன்னு நான் சங்கடப்பட்டேன். அப்பப்ப காபி, டிபனெல்லாம் கொடுக்கச் சொன்னேன்."

"இனிமே அவன் அநாதை இல்லை சாரதா. மாமியாரா நீ இருக்காய். மாமனாரா நான் இருக்கேன். தொணைக்கு நம்ப பொண் சீதா இருக்கா."

"நேக்கு கொஞ்சங்கூடப் பிடிக்கலை."

"ஒனக்கும் நேக்கும் பிடிச்சா என்ன, பிடிக்கலைன்னா என்ன, சீதா தீர்மானிச்சாச்சு."

"அவன் தான் பூச்சையாட்டமா கல்லுள்ளிமங்கனா இருந்தான்னா இவ ஏன் எங்கிட்டே சொல்லலை ?"

"சமயம் வரட்டும்னு இருந்திருக்கா !"

"நேத்திக்கு உங்ககிட்ட சொன்னாளே... நான் பெத்த தயாராச்சே ! என்கிட்ட சொல்லலியே ?"

"முடிவு எடுக்கறவன் யார்னு சீதாவுக்குத் தெரியும்" என்றார் பரசுராமன் சிரித்துக் கொண்டே.

சரியாக மூன்றரை மணிக்கு துளசி ஆட்டோவில் திரும்பி வந்தாள். வாசலில் கார் நிற்பதிலிருந்து அப்பா கோர்ட்டிலிருந்து திரும்பி வந்தாகி விட்டது என்று மனம் பறந்தது. அம்மா 'டீ' போட்டுக் கொடுத்தாளோ என்னவோ !

படியேறி வந்த அவள், நேரே அப்பாவின் அறைக்குள் நுழைந்தாள்.

"எப்பப்பா வந்தேள்... சாயை குடிச்சேளா ?"

"நீ வந்தப்றம் போறும்னு இருந்தேன் தொளசி."

"இதா இப்பக் கலந்துண்டு வர்றேன். அப்றம் அடை தட்டித் தரேன்."

துளசி விரைவாக வெளியேறத் திரும்ப, பரசுராமன், "தொளசி !" என்று அழைத்தார்.

"என்னப்பா ?"

"கீர்த்திக்கும் உனக்கும் கல்யாணம் ! இஷ்டம் தானே ?"

ஒரு நிமிடம் துளசிக்கு என்ன சொல்வது என்று புரிய வில்லை. அறையே அவளைச் சுற்றிச் சுற்றி ஆடுவதாகப் பட்டது.

"அப்றம் இன்னொரு நல்ல வர்த்தமானம் !"

அவள் அப்பாவைப் பார்த்தாள். என்ன நல்ல செய்தி?

"சீதா, வாசுவைக் கல்யாணம் கழிச்சுக்கப் போறா !"

"என்னப்பா சொல்றேள் ? சீதா... சீதா... வாசுவை..."

இப்போது வீடே சுற்றியது.

"லவ் மாரேஜ்" என்றார் பரசுராமன்.

"மின்னாலே சாயை கொண்டு வரேம்ப்பா !"

இப்போது அவள் ஓடியபோது பரசுராமன் தடுத்து நிறுத்தவில்லை.

தம் பெண்ணுக்குத் தம்மால் என்றுமே செய்ய முடியாத ஒரு நல்ல காரியத்தைச் செய்து விட்டதான பூரிப்பும் மகிழ்ச்சியும் அவருள் பிரிட்டன.

துளசி தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். வலித்தது. தன்னைச் சுற்றி நடப்பதெல்லாம் உண்மைதான், கனவு அல்ல என்று திருப்தி அடைந்த அவள், அடுப்பில் கல் நன்றாகக் காய்ந்திருக்கிறதா என்று அறிய தண்ணீர் தெளித்தாள். கோபத்துடன் நீர் ஆவியாயிற்று. அடைக்கு அரைத்து வைத்திருந்த மாவைக் கரண்டியால் ஊற்றினாள்.



சீதா ! நல்ல அழுத்தம். வெளியே மூச்சு விடாமல் இத்தனை நாட்களாக அவள் வாசுவைக் காதலிக்கிறாள். வாசு ! குனிந்த தலை நிமிராமல் அவன் சமையலறை வரை வந்து, மிகவும் சுவாதீனமாக அவளிடம் காபியும் டிபனும் கேட்கும் வாசு ! ஒரு தடவைகூட அவனுடைய கண்கள் சீதாவின் கண்களைச் சந்தித்து துளசி பார்த்ததில்லை. எங்கே, எப்போது அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள் ? கல்பாத்தியில் ஒருவர்கூடவா அவர்களை ஒன்றாகப் பார்த்த தில்லை ? சீதா அழுத்தம் நிறைந்தவள் என்று தெரியும். ஆனால் இவ்வளவா ?

திடீரென்று அப்பாவின் குரல் அவளைத் தட்டி எழுப்பியது.

"தொளசி, அடை ஆயாச்சா ?"

"ஆயாச்சப்பா... இதா கொண்டு வரேன்."

"நீ ஒண்ணும் கொண்டு வரண்டாம்... இங்கேயே ஒக்கார்ந்துக்கறேன்."

பரசுராமன் உட்கார்ந்தார்.

"தொட்டுக்கறத்துக்கு என்ன இருக்கு தொளசி ?"

"வெண்ணெய், நெய், வெல்லம்... எது வேணம் ?"

"கார்த்தாலே வெண்டைக்காய் வதக்கிப் பச்சடி வைச்சிருந்தியே, இருக்கா ?"

"இருக்குப்பா."

"அதைத் தனியா சின்ன பிளேட்லே கொண்டா."

துளசி அவர் சொன்னபடி வைத்தாள்.

"தொளசி !"

"என்னப்பா... அடை சரியா இல்லியா ?"

"அடை இருக்கட்டும், தொளசி... இப்ப ஒனக்கு சந்தோஷம்தானே ?"

"ஏம்பபா கேக்கறேள் ?"

"ஒனக்கு கல்யாணமாகிப் போறதில் சந்தோஷம் தானேன்னு கேக்கறேன்."

"நேக்கு என்ன உத்தரம் சொல்றதுன்னு தெரியலை."

"ஒன் அம்மா எரிஞ்சு விழறா."

"எந்துக்குப்பா ?"

"அதுதான் எனக்கு இன்னும் மனசிலாகலை. ஒன் கல்யாணம் பந்தியா, அல்லது வாசு— சீதாவோடு கல்யாணம் பந்தியான்னு தெரியலை."

"இன்னம் கொஞ்சம் பச்சடி விடட்டுமா ?"

"வேண்டாம் தொளசி. தொளசி..." —அவருக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது.

துளசி மௌனமாய் அப்பாவைப் பார்த்தாள். கல்லில் முறுகிக் கொண்டிருக்கும் அடையை மறந்தாள்.

"தொளசி... நீ இந்த ஆத்தை விட்டு இன்னொரு ஆத்துக்குப் போறாய்... அந்த ஆம் கொடுத்து வைச்சிருக்கு... கீர்த்தி நல்ல புள்ளை."

துளசிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரிய வில்லை.

"நீ இங்கேந்து போனா, எல்லாருக்கும் கை ஒடிஞ்சுட்ட தாத் தோணும். ஆனா நேக்கு மனசு ஒடிஞ்ச மாதிரி ஆயிடும் துளசி."

திடீரென்று துளசிக்குக் கண்கள் கனத்தன.

"ஒன்னை மாதிரி ஒரு பொண்ணும் எங்கிட்டே அப்பாங்கற வாத்சல்யத்தோட இல்லே தொளசி."

கண்ணைத் துடைத்துக் கொண்ட துளசி, "நீங்க நெனைக்கறது சரியில்லைப்பா. சீதா தன் வேலையைப்

18600
3514268



பார்க்கறா. பாரதி, கோளேஜ், கோளேஜ்னு போயிடறா. காவேரி கொழந்தை... நான் ஒருத்திதானே வீட்டுக்குள்ளே வளைய வளைய வரேன். ஒங்களுக்கு காபியும் சாயையும் தரேன். சாதமும் டிபனும் போடறேன்..." என்றாள்.

"சரி சரி... எப்படியோ ஆகட்டும். குருவாயூரப்பன், நீயும் நானும் நினைச்சுப் பார்க்காதபோதே ஒனக்கு நல்ல எடமா கொடுத்திருக்கான்."

பரசுராமன் எழுந்தார். மெல்ல நகர்ந்தார். சமைய லறையை விட்டும் வெளியேறும் முன் நின்றார். தாழ்ந்த குரலில்,

"தொளசி, ஒன் அம்மா ஒங்கிட்டே என்ன கத்தினாலும் வாயைத் தொறக்காதே, இட்டயா ?" என்றார்.

"சரிப்பா."

**மா**லை ஐந்தரை மணிக்குத் திண்ணைக்கு வந்த துளசி, தெருவைப் பார்த்த வண்ணம் நின்றாள். அப்பா வின் ஆபீஸ் அறையிலிருந்து பேச்சுக் குரல் கேட்டது. வாசுவின் குரல் கேட்கவே, துளசிக்குத் தனி சுவாரசியம் பிறந்தது.

"நேற்றைக்கு சீதா எங்கிட்டே சொன்னா" என்றார் பரசுராமன்.

"நேக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலை..."

"மின்னே எல்லாம் ஸீனியர் வக்கீல், தன்னோடு ஜூனியருக்கே பொண்ணைக் கொடுத்து, ஜூனியரைப் பெரிசாக்குவான். ஸீனியர் ஜட்ஜாயிட்டா, கேஸெல்லாம் ஜூனியருக்குக் கெடைக்கும். அப்புறம் ஜூனியர் ஸீனியராவான்."

வாசுவின் மௌனத்துக்கு அப்புறம் என்ன வரப் போகிறது என்று துளசி காத்திருந்தாள்.

"ஆனா, நான் அப்படிப்பட்ட ஸீனியர் வக்கீலும் இல்லை, நான் ஜட்ஜூம் ஆகமாட்டேன். நான் என் பொண்ணையும் ஒனக்குக் கொடுக்கலை. நீயே அவளை எடுத்துக்கறாய். அவளே ஒன்னை வாங்கிக்கறாள், அதனாலே!"

மீண்டும் வாசுவின் மௌன ஒலி.

"கல்யாணம் கழிஞ்சா நீ இங்கே வந்து இருந்துக்கலாம்னு என் பொண் எண்ணிண்டிருக்கலாம்... நீயும் நெனைச்சுண்டிருக்கலாம்... அப்படித்தானே?"

"துளசிக்குக் கல்யாணமாகி அவபோயிட்டா, ஆத்தைப் பார்த்துக்கறதுக்கு ஆரும் இல்லைன்னு சீதா சொன்னா. நான் இந்த ஆத்துக்கு வர்றதுதான் நல்லதுன்னா!"

"என் பொண் தொளசி மாதிரி ஒனக்கு வரப் போறவளாலே ஆத்தைப் பார்த்துக்க முடியுமோடா வாசு?"

"அவ அப்படிச் சொன்னா, அம்படத்தான்."

"அதுக்கு நீ என்ன சொன்னே?"

"எனக்கு இஷ்டமில்லே."

"ஒனக்கு இஷ்டமில்லைங்கறதை அவகிட்டே சொன்னாயா?"

"இன்னும் சொல்லிட்டில்லை."

"நான் இப்பவே ஒங்கிட்டே சொல்லிடறேன். நீ என் பொண் கழுத்திலே தாலி கட்ற வரைக்கும்தான் என் ஜூனியர். அப்றம் மாப்பிள்ளையாயிடறே! எனக்கு என் புள்ளை ஜூனியரா இருக்கலாம். ஆனா, மாப்பிள்ளையை ஜூனியரா வைச்சுக்க மாட்டேன். மனசிலாச்சா?" என்றார் பரசுராமன்.

"அப்போ... அப்போ..."



"இன்னைக்கு எங்கிட்டே ஜூனியரா இருந்துண்டு என் பொண்ணை கொக்கி போட்டு மல்லியத்தை இழுக்கற மாதிரி இழுத்துண்டாய்... எங்கிட்டேயே ஜூனியரா இருந்து. இந்த ஆத்துக்குள்ளேயும் நீ சுதந்தரமா வளைய வந்தா என்னோடு சொத்தையும் கொக்கி போட்டு இழுப்பாய்!"

"நான் அத்தனை மோசமானவன்னு நீங்களுமா கருதிட்டேள்?" என்றான் வாசு.

"ஒரு மனுஷ்யன் நல்லவனா, மோசமானவனான்னு எப்பத் தெரியறது வாசு? சமய சந்தர்ப்பங்கள் வர்றப்ப தானே...! இந்தப் பூச்சையும் உறிமேலே ஏறிப் பாலைக் குடிக்குமான்னு நீ சாதுவா, நாலு வார்த்தை நீட்டிப் பேசாம இருந்தே! இப்போ என் பொண்ணையே குடிச்சிருக்காய்... நான் எப்படி ஒன்னை நம்பறது?"

வாசு பதில் சொல்ல சங்கடப்படுவதாகத் துளசி நினைத்தாள். மேலே யார் என்ன பேசப் போகிறார்கள் என்று அவள் காத்துக் கொண்டிருக்கையில், திடீரென கார் வந்து நின்றது.

துளசி பார்த்தாள்.

மஞ்சு!

சொன்னபடி சாயங்காலம் வந்து விட்டாள்.

"வா மஞ்சு!"

மஞ்சு படியேறவும் பரசுராமன் தம் ஆபீஸ் அறையிலிருந்து வெளியேறி வரவும் சரியாக இருந்தது.

"வா மஞ்சு... வா...! தொளசி? எந்துக்கு டாக்டரை வரச் சொன்னாய்? ஆருக்கு என்ன சுக்கேடு" என்றார் பரசுராமன்.

மஞ்சு சிரித்தாள்.

"என்ன மாமா. உங்காத்துக்கு நான் சும்மாக்கூட வரக்கூடாதா ?"

"கேஜி எப்படி இருக்கான். ஒன் சிநேகிதிக்குக் கல்யாணம் சொன்னாளா" என்றார்.

"நிச்சயமாயிடுத்தா" என்றாள் மஞ்சு.

"ரெண்டு பொண்ணோடு கல்யாணத்தையும் ஒரே பந்தல்லே கழிக்கப் போறேன்.

"சீதாவுக்கும் கல்யாணமா ? வெரிகுட்...! வெரிகுட் ! ஆர் மாப்பிள்ளை."

"என் ஆபீஸ் ரூம்லே ஒக்கார்ந்திருக்கான்" என்றார் பரசுராமன்.

"யார்டீ துளசி" என்றாள் மஞ்சு."

"வாசு !"

மஞ்சு வியப்பில் கண்களை அகலத் திறந்தாள். பிறகு, "வா துளசி, ஒரு கப் டீ தா" என்று நகர்ந்தாள்.

சமையலறைக்கு வந்ததும், "துளசி, இப்ப சந்தோஷமாச்சா" என்று கேட்டாள்.

"திம்மதியாயிருக்கேன் மஞ்சு... நீ என்ன ஐடியா கொண்டு வந்தே நேக்கு ஹெல்ப் பண்ண ?"

"உங்க அப்பா பேச்சைக் கேட்டதும் நான் கொண்டு வந்த ஐடியாவை நானே மறந்துட்டேன் !" என்று சொல்லி மஞ்சு சிரித்தாள்.

# 6

துளசி கண் விழித்ததுமே தன் வலது உள்ளங் கையைப் பார்த்துக் கொண்டாள். பிறகு, மெல்ல ஓசை செய்யாமல் கட்டிலை விட்டும் இறங்கினாள். கீர்த்தி தன் இரு கைகளையும் கோத்து மார்பு மேல் படரவிட்டவனாய் லேசான குறட்டை ஒலியில் தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

படுக்கை அறையை விட்டு வெளியே வந்தபோது, தான் சென்னையில் ஒரு மாடி வீட்டில் இருப்பதான எண்ணம் எழாமல், இன்னும் பாலக்காட்டில் பழைய கல்பாத்தியிலேயே இருப்பதான பிரமை சில கணங்களுக்கு உண்டாகியது. பிரமையை உதறிவிட்டு, குதூகலமாக அவள் மாடியைவிட்டு இறங்கி பாத்ரூமுக்கு ஓடினாள்.

கடிகாரம் இன்னும் ஐந்து அடிக்கவில்லை. அன்றுதான் கல்யாணத்திற்குப் பிறகு முதன் முதலாக கீர்த்தி வேலைக்குத் திரும்பப் போகிறான். சரியாக எட்டரை மணிக்கு ஆபீஸ் கார் வரும். அவனுடன் இன்னும் சிலர் அதே காரில் அம்பத்தூர் போவார்களாம். அதே கார் அவர்களை மாலையில் ஆறு மணிக்கு அவரவர் வீடுகளில் கொட்டி விட்டுப் போகும்.

இத்தனை ஆண்டுகளாக கீர்த்தி காலையில் வீட்டுச் சாப்பாட்டைப் பார்த்ததில்லை. ரொட்டியோ அல்லது உப்புமாவோ சாப்பிட்டுவிட்டுப் போவது வழக்கம். முந்தின நாள் இரவு, 'முடிந்தால் உப்புமா செய்துவிடு' என்று கீர்த்தி சொல்லியிருந்தான்.

பல் துலக்கும்போது, துளசி தன்னுள் சிரித்துக் கொண்டாள். எதற்குக் காலையில் டிபன் ? கீர்த்திக்கு அவளுடைய மௌனகூட்டல் அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

சாம்பார், மோர்க்குழம்பு, பிட்லை முதலானவற்றைத்தான் அவன் ரசிக்கிறான். அவனுக்குப் பிடிக்காததை அவள் செய்வானேன் ?

துளசி சமையலறைக்குள் பிரவேசித்தபோது மணி ஐந்து. இதுவரை உணர்ந்திராத மகிழ்ச்சியுடன், மன நிறைவுடன் அவள் தன் வேலையை ஆரம்பித்தாள்.

கீர்த்தி ஆறரை மணிக்கு பேப்பரும் கையுமாக வந்தான்.

"ஒரு நிமிஷம் இருங்கோ. காபி தர்றேன் !"

கீர்த்தி பார்த்தான்.

"என்ன செய்யறே துளசி, குக்கர் வைச்சிருக்கே ?"

"கத்தரிக்காய் சாம்பார், பீன்ஸ் பொடுத்துவல், ரசம், பப்படாம்... போறுமா ?"

"நீ ஏன் சமைக்கணும் துளசி ? வெறும் டிபன் போதும்."

"இன்னமே கார்த்தாலே சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப் போங்கோ. உச்சியார்ந்த டிபன் சாப்பிட்டுக்கலாம்... என்ன டிபன் உண்டாக்கணும் ? பூரியும் மசாலையும் உண்டாக்கட்டுமா ?"

கீர்த்தி வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"எந்துக்கு அப்படிப் பார்க்கறேள் ? கார்த்தாலே வெறும் காபி குடிச்சிட்டு, நல்ல சாப்பாடா ஒரு சாப்பாடு சாப்பிட்டுட்டு ஆபீஸ் போறதுதான் நல்லது. டிபன் தின்னா சோத்தை அடைக்கும். இந்தாங்கோ காபி ?"

"எட்டரை மணிக்கு கார் வரும், துளசி."

"நேத்தைக்கே சொன்னேளே !"

"அதுக்குள்ளே எல்லாம் செய்ய முடியுமா துளசி ?"

"நீங்க காபியைக் குடிச்சுட்டு பேப்பரைப் படியுங்கோ. ஷேவிங் உண்டு இல்லியா... அப்றம் குளிப்பேள் இல்லியா ? அதுக்குப்புறம் டைனிங் டேபிள்ளே ஒக்காருங்கோ. தாலத்திலே என்னல்லாம் விழறதுன்னு அப்றம் தெரியும் !"



"யூ ஆர் ரியலி க்ரேட் !" என்றான் கீர்த்தி.

அவள் பீன்சைக் கறிக்கு நறுக்கலானாள்.

"இந்த மாதிரி காபி குடிச்சு ரொம்ப நாளாச்சு !" என்றான் கீர்த்தி.

துளசி மௌனமாகத் தன் காரியத்தில் முனைந்தாள்.

"துளசி..."

"என்ன வேணும் ? காபிக்கு பஞ்சாரை போறாதா ?"

"இன்னிக்கு சாயங்காலம் நீயும் நானும் என் சிநேகிதன் வீட்டுக்குச் சாப்பிடப் போறோம் !"

"இதை நேத்தைக்கே சொன்னேளே... எனக்கு ஒறமை இருக்கு..."

"அப்புறம்..."

"நீங்க இப்ப அடுக்களையிலேந்து போறேளா ? நான் காரியம் சேயறப்போ குறுக்கே குறுக்கே பேசினா சமையல் சமயத்துக்கு ஆகாது... கார்த்தாலே நீங்க உங்க காரியத்தைப் பாருங்கோ... நான் என் காரியத்தைச் செய்யறேன்..."

கீர்த்தி சிரித்துக் கொண்டே வெளியேறினான். மனைவி அமைவதெல்லாம்... சினிமா பாட்டு என்றால் என்ன ? எவ்வளவு பெரிய உண்மை அதில் இருக்கிறது ?

எட்டரை மணிக்கு துளசி வாசற் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டு உள்ளே வந்தாள்.

இனி மாலை நான்கு மணி வரை ஒரு வேலையும் இல்லை. அவன் சாப்பிட்ட பிறகு, பாத்திரங்களைத் தேய்க்க வேண்டும். அவ்வளவுதான்.

ஒன்பதரை வரை ரேடியோ. பத்தரை வரை பத்திரிகைகள். பதினொன்றுக்குள் சாப்பாடு. அப்புறம்

தூக்கம். தூக்கம். தூக்கம். அவள் தன் ஜன்மத்தில் எங்கே
எப்போது பகலில் தூங்கியிருக்கிறாள் ?

ரேடியோவில் ஒரு வித்துவான் கேதார கௌளையின்
உச்சியைத் தொட்டுவிட்டு, கீழே இறங்கிவரத் தெரியாமல்
தவித்துக் கொண்டிருந்தார். துளசி பாட்டை மறந்து
கடந்த பத்து நாட்களில் நடந்து விட்ட அதிசயங்களை
எண்ணிப் பார்த்தாள்...

அப்பா தம் மன உறுதியைச் சற்றும் தளரவிடாமல்
இரு பெண்களின் திருமணங்களையும் ஒரே நாளில் நாரணி
கல்யாணச் சத்திரத்தில் நடத்தினார். எல்லோருமே ஒரு
முகமாக ஜானவாசம் தேவையில்லாத விழாவாகக் கருத,
அம்மா சாரதா மட்டும் பொருமினாள். மாப்பிள்ளைகளுக்கு
வாங்கிக் கொடுத்த பாண்ட்டும் கோட்டும் ஆனி மாத மழை
யில் வீணானாலும் பரவாயில்லை என்றாள் அவள்.

முகூர்த்தம் முடிந்த உடனேயே சின்ன அக்கா சீதாவும்
வாசுவும் குருவாயூருக்குச் சென்று விட்டார்கள். முதல்
இரவைத் தங்கள் இஷ்டம் போல வைத்துக் கொள்ளப்
போவதாக சீதா மஞ்சுவிடம் சொல்லிக் கொண்டிருந்ததை
தற்செயலாகக் கேட்டுவிட்ட அப்பா கோபப்படவில்லை.
சிரித்துக் கொண்டே சென்றார். சீதாவின் தேனிலவுத்
திட்டம் மிகவும் பெரிதாக இருந்தது. குருவாயூர், சோத்
தாணிக்கரை. அதன் பிறகு ஜயந்தி ஜனதாவில் பாம்பே,
அப்புறம் என்னென்னவோ ஊர்கள்...

துளசி கல்யாணமான மறுநாளே, கீர்த்தியுடன்
கோவைக்குச் சென்றாள். மாமியார் கற்பகம், மாமனார்
வாஞ்சி, வாஞ்சியின் தந்தை சத்தியகீர்த்தி, தாயார்
பார்வதி, அக்காக்கள், தங்கைகள், இரு தம்பிகள் இன்னும்
பல உறவினர்களுடன் ஒரு விசேஷ பஸ்ஸில் கோவை
செல்லும் போது, துளசிக்குத் தன்னுடைய நெடுநாளைய
கனவு பலித்து விட்டதாகத் தோன்றியது. அவள் இனி



பாவக்காட்டில் அந்த வீட்டில் செக்குமாடாக இருக்க
மாட்டாள். யாரும் இனி அவளை ஆயிரம் சனியன்களுக்கு
இழுக்க மாட்டார்கள். அம்மா தொட்டதற்கெல்லாம்,
'ஏண்டி பாவி' என்று கத்துவாள். இனி, அம்மா வேறு ஒரு
'பாவி'யைத் தேடிக்கொள்ளட்டும்.

பஸ் பிரயாணம் அவளுடைய வாழ்க்கையின்
சுகத்துக்கு முதற்கட்டமாகப் பட்டது.

கோயம்புத்தூரில் கிரகப்பிரவேசம். ஆர். எஸ்.புரத்தில்
கீர்த்தியின் அக்கா அகிலாவின் கணவர் டாக்டராக இருந்
தார். துளசியின் தாயாரும் தகப்பனாரும் கிரகப்பிரவே
சத்தை முடித்துவிட்டு காரில் திரும்பினார்கள். அவர்களை
விட்டுப் பிரிந்து போகிறோமே என்ற துக்கம் அவளுள்
எழவில்லை. இனி மறுபடியும் பிறந்த வீடு வரும்போது,
தன்னை யாரும் அந்த வீட்டு வேலைக்காரியாக மதிக்க
மாட்டார்கள் என்ற திருப்திதான் மேலோங்கி எழுந்தது.

கிரகப் பிரவேசம் முடிந்த அன்றே துளசி கீர்த்தியுடன்
சென்னைக்குப் புறப்பட்டாள்.

அவள் வலது காலை வைத்துப் படி ஏறும்போது,
கீர்த்தியின் தூரத்து உறவினர்கள் ஆரத்தி எடுத்து வர
வேற்றார்கள். அதன் பின் வெறும் காபி. உறவினர்கள்
தாங்கள் வந்த காரியம் முடிந்துவிட்டது என்று உணர்த்தி
விட்டுச் சென்ற பிறகு, கீர்த்தி அவளை ஓர் ஓட்டலுக்கு
அழைத்துச் சென்றான்.

"நீ வந்த அன்னிக்கே உனக்கு ஓட்டல் சாப்பாடு
துளசி. இது மெட்ராஸ். ஏதோ நான் சொன்னேன்னு
என் அத்தையின் பெண்ணும் மாட்டுப் பெண்ணும் வந்து
ஆரத்தி எடுத்தார்கள். இல்லாமப் போனா ஓட்டல்காரன்
தான் ஆரத்தி எடுத்திருப்பான்" என்றான் கீர்த்தி.

"ராத்திரிக்கு நான் சமைக்கறேன்... என்னென்ன
சாமான் வேணும்னு பார்க்கறேன்" என்றாள் துளசி.

"இன்னம் இரண்டு நாளுக்கு நீ சமைக்க வேண்டாம் துளசி. வெள்ளிக்கிழமை நான் டியூட்டியில் சேருவேன். அதுவரையில் நானும் நீயும் மெட்ராஸ் பூரா சுத்துவோம். ஒருநாள் மகாபலிபுரம் போவோம்."

"ஒங்க இஷ்டம்..."

"உன் அக்காவும் வாசுவும் ஹனிமூன் போன மாதிரி நீயும் நானும் ஹனிமூன் போக முடியலே. ஆபீஸ்லே இப்ப ரொம்ப வேலை."

"அதனால் என்ன ?"

"நீ ஹனி ! நான் மூன். எப்படி ?" என்றான் கீர்த்தி.

"எனக்கு உங்களை மாதிரிப் பேசத் தெரியாது. மின்னாலே விட்டைச் சரியாக்கணும்... கண்ட எடமெல்லாம் கண்டபடி துணியும் கடலாசும் கெடக்கிறது."

"கடலாசுன்னா ?"

"பேப்பர் !"

கீர்த்தி சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறேள்... எங்க பாஷை !"

"இனிமே நீ எங்க தமிழையும் கத்துக்கணும் துளசி."

"நீங்க சொல்லித்தாருங்கோ..."

வந்த அன்று மாலை மெரீனா, புது வைட் ஹவுஸ், புதன் கிழமை காலையில் மவுண்ட்ரோடிலிருந்து புறப்பட்ட நவீனமான பஸ்ஸில் மகாபலிபுரம்... துளசி சிற்பங்களைப் பார்த்தாள். 'ஆஹா' 'ஹூஹூ' என்று பலர் கலை அழகைப் பாராட்டிக் கொண்டிருக்கையில், அவள் மனமெல்லாம் தன் சுதந்திரத்தில் லயித்துக் கொண்டிருந்தது. கடல் அலைகளின் ஓசை அவளுடைய காதுக்கு நாராசமாக இருந்தது. இந்த அலைகளைப் போலத்தானே அவளும் ஓயாமல் ஒழியாமல் இதுநாள் வரையில் மோதிக் கொண்டிருந்தாள் ?



இப்போது அவளுடைய அலைகள் நின்றுவிட்டன. இனி கீர்த்திக்கு அவள். அவளுக்குக் கீர்த்தி. அவனுக்காகத் தன் மனத் திருப்திக்கு, அவள் என்ன வேண்டுமானாலும் செய்வாள். கணவனுக்குச் செய்வது வெறும் கடமைக்காக அல்ல, அது அன்புக் காணிக்கை. இனிமேல் அவளை யாரும் அதட்ட மாட்டார்கள். விரட்ட மாட்டார்கள். முதுகை ஒடிக்க மாட்டார்கள்.

அர்ஜுனன் தவம் செய்து கொண்டிருக்க, கீர்த்தி மெல்ல அவளுடைய தோளைப் பற்றினான், திடுக்கிட்ட அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

"போவோமா ?"

"நான் ரெடி."

"பிடிச்சிருக்கா ?"

"எது ?"

"இதெல்லாம்."

"நீங்க கூட இருக்கறப்ப பிடிக்காம இருக்குமா ?"

"நன்னாப் பேசறே துளசி."

"சத்தியமா சொல்றேன். எனக்கு எதையும் ரசிக்கத் தெரியலே... நீங்க என் கூட இருக்கேள்... ஒங்க நிழல்லே நான் இருக்கேன்... இதுதான் எனக்கு இப்பப் பிடிச்சிருக்கு."

"நாளைக்கு ஸ்நேக் பார்க் போகலாம்."

"அது எங்கே இருக்கு ?"

"மெட்ராஸ்லேதான். கிண்டியிலே."

"அங்கே என்ன விசேஷம் ?"

"எக்கச்சக்கமா பாம்புகள் இருக்கு. நாகப் பாம்பு, மூர்க்கன், மலைப்பாம்பு எல்லாம் நூற்றுக்கணக்கா இருக்கு..."

"எனக்குப் பார்க்கண்டாம்."

"ஏன் துளசி ?"

"பாம்பைப் பார்க்கறதில் என்ன குஷி இருக்கு ? நான் பாலக்காட்டில் சர்ப்பம் மூர்க்கன்னு எத்தனையோ பார்த்திருக்கேன்."

"நாளைக்கு ஒரு நாள்தான் நான் ஃப்ரீ... வெள்ளிக்கிழமை ஆபீஸ் போகணும்."

"நாளைக்குக் கார்த்தாலே நான் ஆத்திலே சமைக்கப் போறேன். ஓட்டல் சாப்பாடு என் வயத்தை என்னவோ செயறது."

வியாழக்கிழமை.

"என்ன சமைக்கப் போறே துளசி ?"

"சேனை இருக்கு. வாழைக்காய் இருக்கு. சேனை மொளகூட்டல், வாழைக்காய் புளிகுத்தி உப்பேரி."

"வேறே ஏதானும் பண்ணு. சாம்பார் பண்ணி, ஒரு கறி."

"மொளகூட்டல் நன்னாயிருக்குதுன்னு தைலாவைப் பார்க்க வந்தன்னிக்குச் சொன்னேளே."

"இன்னிக்கு சாம்பார் வை."

"ஒங்களுக்கு அது பிடிக்கலைன்னு தெரியறது. உங்காத்தில தினமும் சாம்பார்தானா ?"

"ஏன்... மோர்க்குழம்பு, பொரிச்ச கூட்டு, பிட்லை எல்லாம் உண்டு."

"அப்ப வெண்டைக்காய் சாம்பார் வைக்கிறேன். உங்களுக்கு என்ன பிடிக்கும்னு வெவரமா சொல்லுங்கோ. அதை அனுசரிச்சு செயறேன்."

"எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு."



"அதனால்தானே கல்யாணம் பண்ணிண்டேள். ஆனா, அதுக்கா காலங்கார்த்தாலே கிட்டக்க வரணம்னு இல்லை."

கீர்த்தி சிரித்தான்.

என்னதான் பகலெல்லாம் தூங்கி தன் விடுதலையைக் கொண்டாட வேண்டும் என்று துளசி விரும்பினாலும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. பழக்கம் இல்லாதது ஒன்று எப்படித் திடீரென்று வரும் ? படுக்கையில் புரண்டு புரண்டு படுத்த அவள், வாசலில் ஏதோ சத்தம் கேட்பதை உணர்ந்து எழுந்தாள். நடந்தாள்.

திண்ணையில் ஒரு கடிதம் கிடந்தது. இன்லண்ட் லெட்டர். அம்மா எழுதியிருக்கிறாளோ ? அப்பா எழுதியிருப்பாரோ ?

எடுத்தாள்.

கீர்த்திக்கு.

கோயம்புத்தூரில் இருக்கும் மாமனார் வாஞ்சியின் பெயர் இருந்தது.

என்ன எழுதியிருக்கிறார் ? மாமனாரின் அப்பாவுக்கு எண்பத்துநான்கு வயது கல்யாணத்தின்போது, இரண்டு பேர் அவரைத் தாங்கிக் கொண்டு வந்து உட்கார வைத்தனர். மாமனாரின் அம்மாவுக்கு எண்பது ஆகப் போகிறது. ஆஸ்துமா, பாலக்காட்டு மழையும் சில்லென்ற காற்றும் அவளைப் படாத பாடு படுத்தி விட்டது. டாக்டர் மூர்த்தி இஞ்சக்ஷன் மாத்திரைகளும் கொடுத்தார்.

இப்போது மாமனார் அவளுடைய கணவன் கீர்த்திக்கு என்ன எழுதி இருக்கிறார் ?

இரண்டு கிழங்களில் எந்தக் கிழத்துக்கு என்ன ஆபத்து ?

"குருவாயூரப்பா, அவள் அந்தக் குடும்பத்தில் கால் வைத்த வேளையில் எந்த அசம்பாவிதமும் நடக்காமலிருக்க வேண்டுமே ?"

அவள் பயத்தில் கடிதத்தைப் பிரிக்கவில்லை.

அவள் தலையில் ஒரு குண்டைத் தூக்கிப் போடும் செய்தி அந்தக் கடிதத்தில் இருப்பது அவளுக்கு எப்படித் தெரியும் ?

# 7

துளசிக்கு வீடு பிடித்திருந்தது. அந்தக் காலத்தில் கட்டியது. கம்பி அழிகள் போட்ட திண்ணை. திண்ணையில் சௌகரியமாக உட்கார்ந்து கொள்ள ஒரு சிவப்பு வர்ணத்தில் சிமெண்ட் திண்டு. திண்ணைக்கு இடதுபுறத்தில் ஒரு சிறு அறை. துளசி வந்த பிறகு, ஒரே ஒரு முறை தான் எட்டிப் பார்த்திருக்கிறாள். மூன்று கண்ணாடி பீரோக்கள் நிறைய புத்தகங்கள், ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள்.

கூடம், வீட்டின் அகலத்துக்கு நீண்டிருந்தது. ஊஞ்சல் மாட்ட கொக்கிகள் இருந்தபோதிலும் ஊஞ்சல் இல்லை. கூடத்தைத் தாண்டினால் இடதுபுறம் ஓர் அறை. வலது புறம் சமையலறையும் ஒரு சிறு உக்கிராண அறையும். அதைப் பூஜை அறையாக மாற்றியிருந்தார்கள். மாடியில் ஒரு ஹாலும் ஒரு படுக்கை அறையும்.

துளசிக்கு எல்லாமே திருப்தி அளித்த போதிலும் ஏதோ ஒரு சங்கடம் அவ்வப்போது தலை நீட்டிச் சோர்வடையச் செய்தது.



கீர்த்தியின் தகப்பனார் என்ன எழுதியிருக்கிறார் ? என்ன எழுதியிருக்கக்கூடும் ? பாட்டனார் அல்லது பாட்டியின் உடல்நிலை பற்றித் தான் ஏதோ விபரீதமான தகவலை அவர் அனுப்பியிருக்க வேண்டும்.

துளசி வீட்டினுள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தாள். பாலக்காட்டில் கடிகாரம் அசுர வேகத்தில் ஓடும். புகுந்த வீட்டில் முட்கள் நகரவுமில்லை. இது அவளுக்கு நிம்மதியையே அளித்தது.

கடிகாரத்தைப் பார்த்தாள். ஐந்தேமுக்கால். கீர்த்தி ஆறு மணிக்கு வருவான். காபி சாப்பிட்டுவிட்டுக் குளிப்பான். அவளை அவசரப்படுத்துவான். அன்று இரவு அண்ணாநகரில் இருக்கும் அவனுடைய சிநேகிதன் ரமணியின் வீட்டில் விருந்து.

அண்ணாநகர் எங்கே இருக்கிறது ? அவள் இருப்பது மயிலாப்பூர். ரொம்ப தூரமோ ? இல்லை, வெகு அருகிலா?

கடிதத்தில் கீர்த்தியின் தகப்பனார் என்ன எழுதியிருக்கிறார் ? உடைத்துப் பிரித்துப் படித்தால் என்ன ? கீர்த்திக்குக் கோபம் வராது. 'ஏன் படித்தாய் ?' என்று கேட்க மாட்டான். சிலரைப் பார்த்தாலே அவர்களுக்கு எளிதில் கோபம் வருமா வராதா என்று உணர்ந்து கொள்ளலாம். அவளுடைய கணவன் கீர்த்திக்கு எப்படிக் கோபப்படுவது என்றுகூடத் தெரியாது. இப்படி ஒரு கணவன் கிடைக்க அவள் எவ்வளவு கொடுத்து வைத்திருக்கிறாள் !

கீர்த்தி ஆறு மணிக்கு வந்தபோது திடீரென அவளுக்கு உற்சாகம் பிறந்தது.

"எழுத்து வந்திருக்கு..." என்ற அவள் உடனேயே, "லெட்டர் வந்திருக்கு" என்று கூறினாள்.

""யார்ட்டேந்து ? அப்பாதானே !"

"உங்க அப்பா..."

"என்ன எழுதியிருக்கார்" என்று கீர்த்தி கேட்டான்.

"நான் படிக்கலை,"

"சரி, அப்புறமா பார்த்துக்கலாம்... எனக்கு காபி தந்து விட்டுச் சீக்கிரம் டிரஸ் பண்ணிக் கொள். ரமணி இன்னும் கால் மணி நேரத்தில் வந்துவிடுவான்."

"இப்ப படிக்கலையா ?"

"அப்பா ஒண்ணும் பெரிசா விசேஷமா எதுவும் எழுதியிருக்க மாட்டார். நீ சீக்கிரம் டிரஸ் பண்ணிக் கொண்டு ரெடியா இரு."

"காபி ?"

"நான் கலந்து கொள்றேன்."

இப்படியும்கூடவா துளசியிடம் ஒருவன் சொல்லுவான்? என்ன புதுமையான அனுபவம்.

ரமணி சொன்னபடி வந்தான்.

"துளசி, இவன்தான் ரமணி! நன்னா பாடுவான்! அரட்டை அடிப்பான்" என்றான் கீர்த்தி.

"ஹாபி டு ஸீ யு மிஸஸ் கீர்த்தி! எனக்கும் பூர்வீகம் கேரளாதான். பெருங்குளம்னு ஒரு ஊர் இருக்கு."

"தெரியும்" என்ற துளசி, கீர்த்தியைப் பார்த்து "நான் சின்னப் பொண்ணா இருக்கறப்ப இவா ஊருக்குப் போயிருக்கேன். அங்கே ஒரு பெரிய பணக்காரா ஆத்துக் கொல்லையிலே ஒரு பெரிய ஆனை இருந்தது" என்றாள்.

ரமணி சிரித்தான்.

"கீர்த்தி! உன் ஒய்ஃப் சின்னக் குழந்தை மாதிரி இருக்கிறா" என்றான்.

"துளசி, இவனுடைய மனைவியை நீ பார்க்கப் போறே. உன்னைவிட ஒரு வயசுதான் பெரியவள். ஆனா நூத்துக் கிழவி மாதிரி பேசுவா... டேய், நாங்க ரெடி" என்றான் கீர்த்தி.



இருவரும் வீட்டுக்குத் திரும்பும்போது இரவு மணி பத்து.

புடவையை மாற்றிவிட்டுத் துளசி மாடிக்குச் சென்ற போது, கீர்த்தி படுத்தவாறே புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். அருகே, மெத்தையில் கடிதம் கிடந்தது.

அவன் ஏற்கெனவே படித்தாகி விட்டது என்பதை அறிந்து கொண்ட துளசி, "என்ன எழுதியிருக்கார் ?" என்று கேட்டாள்.

"நீயே படியேன், துளசி.?

"படிக்கலாமா ?"

"நமக்குள்ளே என்ன ரகசியம் ? படி."

அவள் படிக்க கடிதத்தை எடுத்தாள்.

"ஞாயித்துக்கிழமை காலையில் அஞ்சு மணிக்கு ரெயில் வர்றது. நாளைக்கு ஒரு காருக்கு ஏற்பாடு செய்யணும்" என்றான் கீர்த்தி.

"ஆர் வர்றா ?"

"நீ இன்னமும் லெட்டரைப் படிக்கவே ஆரம்பிக்கலையா, துளசி ? யார் வருவா ? அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி எல்லாரும்தான். திங்கட்கிழமை பாபு வர்றான். புதன்கிழமை மைதிலி வர்றா... ஆனா, அவர்களுக்கு கார் ஏற்பாடு செய்ய வேண்டாம்."

பாபு, கீர்த்தியின் தம்பி. மைதிலி, தங்கை. அவன் ஏதோ ஒரு கம்பெனியில் வேலையாக இருக்கிறான். மைதிலி பாங்க் ஒன்றில் வேலை பார்க்கிறாள்.

இவர்களெல்லோரும் இந்த வீட்டிலா இருப்பார்கள் ?

துளசி தன் தலையில் இடி விழுவதை உணர்ந்தாள். மறு கணமே அவர்கள் தாற்காலிகமாக இங்கே இருந்து விட்டுத் தத்தம் இடத்துக்குப் போவார்கள் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு—

"அப்பா அம்மா இங்கே எந்துக்கு வர்றா ?"

"என்ன துளசி, நீ என்ன கேக்கறே ?"

"தெரியலை, கேக்கறேன்."

"என் அம்மாவும் அப்பாவும் இங்கே எதுக்கு வருகிறார்கள்னு நீ கேக்கறதே அபத்தம்னு உனக்குப் படலையா ?"

"அப்பா இங்கே அப்பப்போ வந்து போவார்னு நினைச்சேன். அதான் கேட்டேன்."

"நான் பிறந்த நாளிலிருந்து தாத்தா பாட்டி அப்பா அம்மாவுடன்தான் இருக்கேன் துளசி. அப்படித்தானே இருக்கணும் ?"

"பின்னே எந்துக்கு கோயமுத்தூர்ல இருக்கா இப்ப ?"

"ரொம்ப நாளா அக்கா கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். கல்யாணத்துக்கு வந்த இடத்திலே பக்கத்திலே இருக்கேன்னு அக்காகிட்ட போனா... இப்ப எல்லாரும் திரும்பி வறா."

துளசியின் மார்பு வெடித்துவிடும் போல இருந்தது. இரண்டு கிழங்கள் ! மாமனார், மாமியார், மைத்துனன், நாத்தனார்.

அவனுடைய மௌனம் கீர்த்தியைத் தட்டி எழுப்பியிருக்க வேண்டும்.

"என்ன யோசிக்கிறே துளசி ?"

"ஒண்ணுமில்லை."

"இல்லை, நீ ஏதோ உனக்குள் நினைச்சுண்டிருக்கே.... வா, என்கிட்ட வா."

அவள் அவன் அருகே போகவில்லை. மாறாக மெதுவாக நகர்ந்து சுவரோரமாய் நின்றாள்.

"கல்யாணமாகி இங்கே வந்தப்போ, இந்த வீட்டில் நீயும் நானும் மட்டும்தான் வாழ்க்கை நடத்துவோம்னு நீ நினைச்சுண்டிருந்தாயா ?"



துளசி பதில் சொல்லவில்லை. இப்போது அவளுக்கு ஒன்று நிதர்சனமாகப் புரிந்தது. அவன் தைலாவைக் கல்யாணம் செய்து கொண்டு, அவளுடைய வீட்டில் குடியேறாமல் இருந்ததற்குக் காரணம் அவனுடைய அம்மா, அப்பா, தாத்தா பாட்டிகள்தான். ஆனால், துளசியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பியதற்கு என்ன காரணம் ?

அவளேதான் !

அவளுடைய அழகா ?

இல்லை. நிறமும் உடற்கட்டும் மட்டும் தான் சற்று நன்றாக இருக்கின்றன. முக அழகு என்று வருகிறபோது எத்தனையோ பேர் இருக்கிறார்கள் ! ஏன் ? தைலாவே அழகிதான்.

அவன் அவளை அவளுடைய வீட்டில் பார்த்திருக்கிறான். அவள் அப்பா அவனிடம் அவளைப் பற்றிப் பெருமையாகப் பேசியிருக்கிறார். 'கெஞ்சினாலும் கிடைக்காத ஐந்தாவது பெண் ஒரு நாள் இல்லை என்றால் வீடு நாறிப் போகும்' என்று அவனுக்கு உணர்த்தியிருக்கிறார்.

அதனால்தான், பாலக்காட்டு வீடு எப்படியோ போகட்டும். தன்னுடைய மெட்ராஸ் வீடு புதுசாக மணக்கட்டும் என்று கீர்த்தி அவளைக் கேட்டு வாங்கிக் கொண்டிருக்கிறான் !

திடீரென அவனுடைய குரல் அவளை அவன்பால் திருப்பியது.

"துளசி... ஏன் ஒரு மாதிரியாயிட்டே...? வா... வந்து படுத்துக் கொள். மணி பதினொன்று."

சுவரோரமாய் ஒண்டிக் கொண்டு அவள் என்ன சாதிக்கப் போகிறாள். கட்டிலை நெருங்கினாள். கீர்த்தி

அவளுடைய கரத்தைப் பற்றியபோது அவள் தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சி செய்யவில்லை.

"எல்லாரும் இங்கேயே, இதே ஆத்திலே நெரந்தரமா இருப்பானு சொல்றேளா ?"

"அவா வேற எங்கே போவா துளசி ?"

"ஆமாம். அவாளாலே போக முடியாது... பாட்டி, பாட்டா வேறே இருக்கா..." என்ற அவள், "பாபுவும் இங்கேதான் இருப்பான், இல்லியா ?" என்றாள்.

"எல்லாரும்தான்... மைதிலியும் இருப்பா... நீதான் அவளைப் பார்த்திருக்கிறாயே... என்னைவிட இரண்டு வயசு சின்னவ."

"அவளைப் பார்த்தா பாவமா இருக்கு. ஆனா அவ இங்கே இந்த ஆத்திலேதான் இருக்கான்னு இப்பத்தான் தெரிஞ்சுது."

"அவ கதை ரொம்ப சோகமான கதை துளசி. அந்தக் காலத்திலே போலியோ வாக்சின் கொடுக்கவில்லை. ஆனா அப்பவெல்லாம் வாக்சினே இருந்ததோ இல்லியோ... ஒரு காலை நன்னா பாதிச்சுட்டுது..."

"அவளாலே வீட்டுக் காரியம் ஒண்ணும் செய்ய முடியாது, இல்லியா ?"

"எப்படி முடியும், நீயே சொல்லு ? இத்தனை நாளா ஒரு சமையற்காரி இருந்தா, பாட்டி ரொம்ப ஆசாரம். அவ தொட்டதைத் தொடமாட்டா. அம்மாவுக்கு ரெண்டு வருஷமா லோ பிரஷர். அடிக்கடி மயக்கம் வர்றது. சமையற்காரி, பாம்பேயிலே யாரோ மாசம் ஐநூறு தர்றான்னு போயிட்டா."

—சொன்னவன், அவளை அணைத்துக் கொண்டான். அவளுக்கு அந்த அணைப்பு மாபெரும் இம்சையாக, வேதனையாக இருந்தது.



தெரியாத்தனமாய் பாத்திரத்தில் ஊர்ந்துவிட்ட எறும்பு கூட்டை விட்டுத் தப்ப முயன்று, ஒரேயடியாய்த் தப்பி விட்டது அடுப்பில் விழுந்து.

அணைத்த கையைத் தளரவிட்ட கீர்த்தி, "ஆனா இனிமே இந்த வீட்டில் ஒரு பிரச்னையும் இருக்காது துளசி ! ஏன்னா நீ வந்துட்டே !"

துளசி கண்களை மூடிக் கொண்டாள். பாலக்காடு சொர்க்கமாகத் தோன்றியது. அலுப்புத் தட்டிய போதெல்லாம் உற்சாகம் அளிக்க மஞ்சு இருக்கிறாள். கன்றுக் குட்டிகள் துள்ளி ஓடும்போது அவளுக்குக் களிப்பாக இருந்தது. ஊர்வம்பு பேசும் கோவிந்த அய்யர் ஏதானும் ஒரு ரகசியத்தை அம்பலப்படுத்தி அவளைச் சிரிக்க வைப்பார். கிருஷ்ணன் கோயில் தீபாராதனை தினமும் ஒரு புது அனுபவமாக இருந்தது. அப்பா, 'பொண்ணே' 'பொண்ணே' என்று வாஞ்சையுடன் அவளை அழைத்தபோது அவளுக்கு இதமாக இருந்தது.

அந்தச் சொர்க்கத்தில் அனுபவித்த சில நரக வேதனைகளிலிருந்து விடுதலை பெற்றுவிட்ட அவளுக்கு இந்த நரகத்தில் எங்கே சொர்க்க வாசல் இருக்கிறது ?

ஒரு கிழவன்.

மூச்சு விட முடியாமல் திணறும் ஒரு கிழவி.

வேலையிலிருந்து ஓய்வு பெற்று வீட்டிலேயே சதா முடங்கும் ஒரு மாமனார்.

குறைவான ரத்த அழுத்தத்தில் நிறைவான மயக்கத்தை அள்ளி வீசும் ஒரு மாமியார்.

பரிதாபத்துக்குரிய ஒரு பெண்.

துளசி யாரைக் கல்யாணம் செய்து கொண்டு புது வாழ்வு வாழ இங்கே வந்தாள் ?

கீர்த்தியையா ?

இல்லை.

அவனைத் தவிர மற்றவர்களை எல்லாம் திருப்தி செய்ய !

அவள் ஒரு கைதி.

விடுதலை இல்லை.

சிறை மாற்றம்தான்.

"துளசி !"

"உம்..."

"பயப்படாதே துளசி ! என் அம்மா நல்லவள். அப்பா வாயைத் திறக்க மாட்டார். பாபு தானுண்டு, தன் கம்பெனி உண்டு, தன் கிரிக்கெட் உண்டு என்றிருப்பான். மைதிலி ரொம்ப சாது. நீ பயப்படவே வேண்டாம்."

"நான் அவர்களைக் கண்டு பயப்படவில்லை !"

"பின் ஏன் திடீர்னு சுரத்து இல்லாம போயிட்டே !"

"சிரிப்பு வரலை."

"தூங்கலாம். விளக்கை அணைச்சுடு."

அவள் விளக்கை அணைத்தாள்.

"துளசி...!"

"உம்..."

"தாத்தா பாட்டி அம்மா மூணு பேருமே இட்லியைத் தவிர வேறு எந்த டிபனும் சாப்பிட மாட்டார்கள் !"

"மனசிலாச்சு. மத்த நாளைக்கு அவா வர்றா. நாளைக்கு அரைக்கணும். அம்படத்தானே ?"

"நீ இன்னும் உன் பாஷையை மாத்திக்கலை."



"எந்துக்கு மாத்திக்கணும்னு இப்பத்தான் தோணறது. நான் மண்லே விழுந்தப்போ என்ன பாஷை வந்ததோ அந்த பாஷையே பின்னேயும் மண்லே விழற வரைக்கும் இருக்கட்டும்."

கீர்த்தி பேசவில்லை.

அவன் சற்றைக்கெல்லாம் உறங்கலானான்.

வெளிச்சத்திலேயே இருட்டைக் கண்ட துளசி, இருட்டில் வெளிச்சத்தைத் தேடுவதில் முனைந்து போய் நீண்ட நேரம் படுக்கையில் அசைவற்றுக் கிடந்தாள்.

# 8

இந்த ஒரு மாதம் எப்படி நகர்ந்தது என்று துளசி ஆற அமர உட்கார்ந்து சிந்திக்கவில்லைதான். ஆனால், எண்ணிப் பார்க்கவும் முடியாத ஒரு யுகமே தீர்ந்து விட்டதான மலைப்பு உண்டாயிற்று.

புகுந்த வீட்டில் அதிகாரம் செய்யும் ஓர் அம்மா இல்லை. அவசரப்படுத்தும் ஓர் அக்கா இல்லை ஊசியாய்க் குத்தும் தங்கை இல்லை, மாடுகள் இல்லை, கன்றுகள் இல்லை.

ஆனால் என்ன புண்ணியம் ? வாய்திறக்காத மாமியார், மேல்மூச்சு கீழ்மூச்சு விட முடியாமல் தவிக்கும் ஒரு பாட்டி, எப்போதும் தலையும் கையும் ஆடும் ஒரு தாத்தா, பூனை போல வளைய வளைய வரும் ஒரு மாமனார்— இவர்க ளெல்லோரும் இருக்கிறார்களே ! வீட்டில் ஒருவர்கூட அவளை வாய் வார்த்தையால் ஒரு வேலைகூட வாங்க வில்லை. அவளாகவே எல்லாம் செய்வாள் என்று எதிர் பார்த் தார்கள்.

அங்கே தம்பி மணிக்குட்டிக்கு அவள் பல் தேய்த்து விட்டாள் என்றால் இங்கே கீர்த்தியின் பாட்டியை அவள் குளிப்பாட்டி விட்டாள். கீர்த்தியின் தகப்பனார் எது செய்தாரோ செய்யவில்லையோ, நன்றாக ஒன்றரை மணி நேரம் உட்கார்ந்து பூஜை செய்தார். மாமியார் அவருக்கு மட்டும் சாதம் பரிமாறிவிட்டு, தன் கடமை முடிந்து விட்டதான எண்ணத்துடன் ஒதுங்கிக் கொள்ள, துளசி இரண்டு கிழங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய தாயிற்று.

இது என்ன வாழ்க்கை ?

இந்த வாழ்க்கையை அனுபவிக்கவா அவள் பாலக் காட்டில் பதறினாள் ? மஞ்சுவிடம் யோசனை கேட்க ஓடினாள் ?

அன்று மத்தியானம் இட்லிக்கான அரிசியை அரைத்துக் கொண்டிருக்கையில் மாமியார் கற்பகம் வந்தாள்.

"துளசி !"

அரைத்துக் கொண்டே துளசி ஏறிட்டுப் பார்த்தாள்.

"கீர்த்தியின் அத்தை ஒருத்தி கல்கத்தாவில் இருக்கா இல்லியா ?"

துளசி இதுவரையில் கீர்த்தியின் அத்தையைப் பற்றியோ அல்லது அவள் வாழும் கல்கத்தாவைப் பற்றியோ நினைத்துப் பார்த்தது இல்லை. இப்போது கற்பகம் நினைத்துப் பார்க்கத் தூண்டுகிறாள்.

"அவர் எப்பவோ ஒருக்கா சொன்னார், ஒங்க நாத்தனார் ஒருத்தி யாரோ ஒரு பெங்காலியைக் கல்யாணம் பண்ணிண்டு கல்கத்தாவ்லே இர்க்கார்னு."

"அந்த அத்தை இன்னிக்கு உன்னைப் பார்க்க வராள்" கூட அவளோட ரெண்டு பெண்ணும் வர்றா..."

"அதுக்கு நான் என்ன செயணும் ?"



"கீர்த்தி நாலு மணிக்கு வந்து விடுவதாகச் சொன்னான்."

துளசி மௌனமாக மாவாட்டிக் கொண்டு போனாள். மாமியார் எதற்கோ அஸ்திவாரம் போடுகிறாள். எதற்கு ?

"அத்தை அஞ்சு மணிக்கு வருவா. சாயங்காலம் டிபன் காபி சாப்பிடுவா. ராத்திரி ஆகாரமும் நம்ம வீட்டிலே தான்."

"மனசிலாச்சு."

"இது செய், அது செய்னு நான் உனக்குச் சொல்லித் தர வேண்டியதில்லை துளசி ! ஏன்னா... யார்ட்டேயும் காணாத அனுபவம் உங்கிட்டே இருக்கு. ஒரு கிட்டிய உறவு ரொம்ப காலத்துக்கு அப்புறம் எட்டிப் பார்க்க றான்னா அவளை எப்படி எப்படி உபசாரம் பண்ணணும்னு உனக்குத் தெரியாதா என்ன !"

"தெரியாது மாமி !"

"துளசி, நீ என்ன சொல்றே ?"

"நேக்கு எல்லா வேலையும் தெரியும் மாமி. அதுக்குத் தான் என்னைப் பழக்கி இருக்கா ! இங்கே உபயோகமா இருக்கட்டுமனு அனுப்பிச்சிருக்கா. ஆனா மத்தவாளை 'வா வா'ன்னு வாய் நிறைய அழைக்கறதுக்கோ, உட்கார வைச்சு உபசாரம் பண்றதுக்கோ நேக்குத் தெரியாது. அதை நீங்களே செய்யுங்கோ..."

"என்ன துளசி, உன் மனசு புண்படும்படியா நான் ஏதானும் சொல்லிட்டேனா ? அட ஈசுவரா !" என்றாள் கற்பகம்.

"என் மனசு புண்படறதுக்கு இன்னமே பாக்கி ஒண்ணும் இல்லை. நான் இட்லிக்கு அரைக்கறேன்... நீங்க ரெஸ்ட் எடுத்துக்குங்கோ..."

"எனக்குப் புரியறது துளசி !"

"என்னோடு நெலமை ஆருக்கும் மனசிலாகாது மாமி; குருவாயூரப்பனுக்குக் கூட மனசிலாகாது."

"துளசி கல்யாணத்துக்கு முன்னாலே கீர்த்தி என்ன சொன்னான் தெரியுமா?"

"இப்பத் தெரியண்டாம் மாமி... அவரே ஒருக்கா சொன்னார், நான் ரொம்ப பொறுப்பா எல்லாத்தையும் கவனிச்சுண்டு பார்த்துப் பார்த்துச் செய்யறேனாம்... நான் ஆத்திலே இருந்துட்டா ஆரும் எதைப் பத்தியும் விசாரப் படண்டாமாம்... இதை தானே நீங்க சொல்லவரேள்!"

கற்பகம் பதில் பேசவில்லை. மௌனமாகத் தலையாட்டினாள்.

அன்று அத்தையும் அவளுடைய பெண்களும் வந்த போது, கற்பகம் வரவேற்று உபசரித்த பின், கேசரியும் வடையும் வந்து விழுந்தன.

"ஸ்வீட் ரொம்பப் பிரமாதமா இருக்கே கப்பு!" என்றாள் அத்தை பாகீரதி.

"ஏம்மா நீ இந்த மாதிரி வடை கல்கத்தாவிலே பண்றதில்லை" என்று கேட்டாள் இரண்டாவது பெண் அஞ்சனா.

மூத்த பெண் நந்தினி எந்த விமரிசனமும் செய்யாமல் நாலாவது வடையை விண்டு கண்ணை உறுத்தின மிளகாயை ஆள்காட்டி விரலால் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"துளசி," என்றாள் கற்பகம்.

மாமனார் வாஞ்சி ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து புன்னகை பூக்க, கீர்த்தி அத்தைக்கு அருகே உட்கார்ந்திருந்தான்.

துளசி தட்டு நிறைய வடையும் சட்னியுமாக வந்தாள். அவளுடைய சாதாரண நூல் புடவையையும் வியர்வையில் கசிந்த ரவிக்கையையும் கண்டு கீர்த்தி மனம் கனித்தான்.



"கேசரியும் வடையும் யார் பண்ணினான்னு நினைச்சே பாகி, இவதான்! என் மாட்டுப்பெண் துளசிதான்."

திடீரென்று நந்தினி, துளசியை ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு, கீர்த்தி பக்கமாகத் திரும்பி, "கங்க்ராஜுலேஷன்ஸ்!" என்றாள்.

"எதுக்கு நந்து, கீர்த்தியை கங்க்ராஜுலேட் பண்றே" என்று அவளுடைய அம்மா கேட்டாள்.

"நீயும் மாமாவும் என்னை கீர்த்திக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க எப்படித் துடிச்சேள்! நானும் அவனும் மட்டும் சம்மதிச்சிருந்தா இந்த வீட்டின் கதி என்னவாகி இருக்கும்...? இது மாதிரி கேசரியும் வடையும் கிடைச்சிருக்குமோ? கீர்த்திக்குத் துளசி மாதிரி ஒரு பெண் கிடைக்கறதுன்னா அவன் எவ்வளவு லக்கியா இருக்கணும்!"

"இப்பப் புரியறதா நந்து... நான் ஏன் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னேன்?" என்றான் கீர்த்தி.

வாய் நிறைய கேசரியை அடைத்துக் கொண்டே அஞ்சனா சிரித்தாள். சிரித்த சிரிப்பில் உதட்டோரமாக இருந்த கேசரி, பொடியாய் உதிர்ந்து விழுந்தது.

"தின்னுட்டுச் சிரியேன்" என்றாள் அவளுடைய அம்மா.

துளசி காபி எடுத்து வர உள்ளே போனாள்.

கீர்த்தி அதிஷ்டக்காரன்! அவனுடைய அத்தையின் பெண்ணே— அவனை மணம் செய்து கொள்ளக்கூடிய நிலையில் இருந்த பெண்ணே— கூறி விட்டாள்.

ஆனால், துளசி? அவளை, யாரால் எதற்கு 'கங்க்ராஜுலேட்' செய்ய முடியும்?

காபியுடன் மீண்டும் அவள் ஹாலை நெருங்கும்போது அஞ்சனாவின் குரல் மட்டுமே கேட்டது :

"ஏன் கீர்த்தி, உன் ஒய்ஃப்தான் எல்லா வேலையையும் செய்யணுமா, என் அம்மா சொல்றா, அவதான் இந்த வீட்டைப் பார்த்துக்கறான்னு. இதுக்கா அவளைக் கல்யாணம் பண்ணிண்டே !"

"பேசாம இரு அஞ்சு !"

துளசி மௌனமாக காபியை வைத்துவிட்டுத் திரும்பினாள்.

"துளசி !"

ஒரு கணம் திரும்பிப் பார்த்தாள் அத்தை.

"என்ன மாமி."

"நான் மாமி இல்லைம்மா... அத்தை ! கீர்த்திக்கு அத்தைன்னா உனக்கும் அத்தை தானே !"

"சரி அத்தை ! என்ன வேணும் மாமி... இன்னும் வடையோ கேசரியோ கொண்டு வரட்டுமா ?"

"கொஞ்சம் எங்களோட ஒக்காரு... உங்கிட்டே நாங்க யாரும் இன்னும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை."

"உள்ளே நெறைய காரியம் இருக்கு மாமி... அத்தை அரிசியைக் களையணும். பருப்பு வேகப் போடணும். புளியை உருட்டி வள்ளத்தில் போட்டிருக்கேன் அதைக் கரைக்கணும். ராத்திரி உங்களுக்கெல்லாம் சாப்பிடண்டாமா. நீங்க அவரோட பேசிண்டிருங்கோ."

—துளசி நகர்ந்தாள்.

"நான் ஹெல்ப் பண்றேன் துளசி !" —அஞ்சனா எழுந்தாள்.

"வேண்டாம் அஞ்சனா... நான் பாத்துக்கறேன் !"



"பரவாயில்லை !"

"வேண்டாம். இன்னைக்கு ஒரு நாள் தானே உன்னாலே நேக்கு ஹெல்ப் செய்ய முடியும், நீங்க பேசிண்டிருங்கோ."

"துளசி !"

—இப்போது கீர்த்தி.

"ஒன்பது மணிக்குள்ளே எல்லாவற்றையும் முடித்து ரெடியாயிரு. நீ, நான், அத்தை, நந்தினி, அஞ்சனா எல்லாரும் சினிமாவுக்குப் போறோம். என்ன !"

"நான் வல்லை. நீங்க போயட்டு வாங்கோ !"

"ஏன் துளசி ?"

"நேக்கு சினிமான்னா அம்படத்தான். அத்தறையா பிடிக்காது "

துளசி சமையலறையை நோக்கி நடந்தாள்.

அவளுடைய வாழ்க்கையே ஒரு சினிமா. சினிமாவுக்குள் இன்னொரு சினிமா எதற்கு ?

கறிக்காக கோஸ் நறுக்கிக் கொண்டிருக்கையில் கீர்த்தி எதிரே வந்து உட்கார்ந்தான்.

"துளசி !"

"உம்..."

"கோபமா ?"

"இல்லியே !"

"பின் ஏன் சினிமாவுக்கு வரல்லைன்னு சொன்னே ?"

"கார்த்தாலே அஞ்சு மணிக்கு எழுந்தாத்தானே" நீங்க சாப்பிட்டு ஆபீஸுக்கு எட்டரை மணிக்குப் போக சாத்தியமாகும் ? பாபுவும் உங்க கூட உட்கார்றான். அப்றம் பூஜை ரூமை மொழுகணும். மைதிலிக்குச் சாதம்

போடணும். சினிமா முடிஞ்சு வர்றப்ப ராத்திரி ஒரு மணி ஆகும்."

"அதான் வரலைன்னு சொன்னியா? அப்ப சரி. நான் என்னவோன்னு நினைத்துக் கொண்டேன்!"

'என்ன?' என்று துளசி கேட்கவில்லை. தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாள்?

அன்று இரவு அவர்கள் எல்லோரும் சினிமாவுக்குப் புறப்பட்டுப் போன பிறகு, தாத்தாவுக்கும் பாட்டிக்கும் படுக்கையை விரித்துப் போட்ட பின், துளசி மாடி ஏறப் போனாள்.

"துளசி!"

—மைதிலியின் குரல்.

"என்ன மைதிலி?"

"நீ முன்னாலே நட..."

துளசி மாடி ஏறினாள்.

மைதிலி ஒவ்வொரு படியாக மெல்ல மெல்ல ஏறிப் பின் தொடர்ந்தாள்.

படுக்கை அறை.

"உட்காரு, துளசி!"

சொன்ன மைதிலி, தானும் உட்கார்ந்தாள்.

"நீ என்னவோ சொல்ல வந்திருக்காய் அல்லவா?"

"ஆமாம். ஆனா, எப்படி ஆரம்பிக்கறதுன்னு புரியலை."

"எதைப் பத்தி?" என்று துளசி கேட்டாள்.

"உன்னைப் பத்தி."

துளசிக்குச் சிரிக்க வேண்டும் போல இருந்தது. ஆனால், சிரிக்கத் தெரியவில்லை.



"என்னைப் பத்தியா? என்னைப் பத்திப் பேச என்ன இருக்கு? நான் எல்லாம் சரியாத்தானே சேதுண்டு வரேன்!"

"ரொம்ப ஸாரி துளசி... என்னாலே ஒரு உதவியும் செய்ய முடியவில்லை. கடவுள் எனக்கு காலைக் கொடுத்து விட்டு முக லட்சணத்தை மாத்தியிருக்கலாம்!"

துளசி பதில் சொல்லவில்லை.

"நான் இப்ப என்ன பயப்படறேன் தெரியுமா துளசி?"

"நேக்குத் தெரியாது."

"கீர்த்திக்குக் கல்யாணம் ஆறதுக்கு முன்னாலே தாத்தாவும் பாட்டியும் கோயமுத்தூர்லே இருந்தா. அம்மாவுக்கு லோ பிரஷர். அவளாலே ஒரு காரியமும் செய்ய முடியாது. ஹார்ட் ட்ரபிள் கூட இருக்குன்னு சொல்றா. நீ இந்த வீட்டுக்கு வர்ற வரைக்கும் ஒரு சமையற்காரி பார்ட் டைமா வேலை செய்துண்டிருந்தா. யாருக்குமே திருப்தி இல்லை."

"இப்ப எப்படி மைதிலி? நான்தான் முழு நேரத்துக்கும் இருக்கேனே?"

"கீர்த்தி ரொம்ப ஆசைப்பட்டான்."

"அவர் ஆசைதான் நிறைவேறியாச்சே?"

"நீ என்ன ஆசைப்பட்டேன்னு எனக்குத் தெரியாது துளசி! அதைக் கேக்கறதும் நாகரிகம் இல்லே... ஆனா, நீ என்ன ஆசைப்பட்டிருந்தாலும் அது நிறைவேறலைன்னு எனக்குப் புரியறது!"

"நான் தூங்கட்டுமா மைதிலி? கார்த்தாலே நேர்த்த எழுந்திருக்கணும்."

"பெண்கள், ஆண்களுக்குச் சமம்னு சொல்ல முடியறதே தவிர, நடைமுறையில் அது சாத்தியமில்லை பார்த்தாயா?"

துளசி கண்களை மூடிக்கொண்டாள். மைதிலிக்குப் பாவம், ஒரு கால் ஊனம். ஊருக்கும் உலகத்துக்கும் தெரிந்த ஊனம். ஆனால் துளசிக்கு ?

மனம் மெல்ல மெல்ல ஊனமாகிக் கொண்டு வருகிறது.

இப்போதே குணப்படுத்திக் கொள்ள வேண்டும். எந்த டாக்டர் அவளுடைய ஊனம் வளராமல் இருக்க வைத்தியம் பார்ப்பார் ?

திடீரென்று கீழே வாசலில் 'டெலிகிராம்' என்ற குரல் கேட்டது. மைதிலியின் பூட்ஸ் கால் மெல்ல நடக்கும் ஒலி கேட்டது.

யாரோ தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

யார் யாருக்கு என்ன தந்தி கொடுத்திருந்தால் அவளுக்கு என்ன ? இதுவரையில் மாமனார் வாஞ்சிக்கு ஏழெட்டுத் தந்திகள் வந்துவிட்டன. அவர் ஒரு சட்டப் புத்தக நிறுவனத்துக்கு சென்னைப் பிரதிநிதியாக இருக்கிறார். அந்த நிறுவனம் டில்லியிலிருந்து தந்தி கொடுத்திருக்கும்.

துளசி உறங்கலானாள். மறு நாள் ஓர் அதிர்ச்சி அவளைத் தாக்கப் போகிறது என்பதை அவள் கனவிலும் எண்ணிப் பார்க்கவில்லை.

# 9

ஏதோ இனம் தெரியாத பயம் அவளைக் கிள்ளிவிட, துளசி திடீரெனக் கண் விழித்தாள். அருகே கீர்த்தி மெலிதான குறட்டையில் உறங்கிக் கொண்டிருந்தான். தான் தினந்தோறும் எழுந்திருக்கும் நேரம் இன்னும் உதிக்கவில்லை என்பதை உணர்ந்த அவள், தன்னை எது அப்படி எழுப்பி விட்டிருக்கிறது என்று யோசனை செய்தாள்.



ஒன்றும் புலப்படவில்லை. ஆனால், கிள்ளி எழுப்பிய பயம் இன்னும் அடங்கவில்லை. மெல்ல எழுந்து, கீர்த்தியின் தலைமாட்டு டீப்பாய் மேலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். மூன்றே முக்கால்.

இன்னும் ஒன்றேகால் மணி நேரம் இருக்கிறது அவளுடைய இயக்கம் துவங்க. அது வரையில் என்ன செய்வது ? துளசி கட்டிலுக்குத் திரும்பி வந்து உட்கார்ந்தாள். அலாரத்தின் உயிர் இரவு வேளை நிசப்தத்தில் பயங்கரமாக ஒலித்தது. இப்போது கீர்த்தியின் குறட்டை ஒலியும் காதை அறைவதாகப் பட்டது.

என்ன செய்ய ?

இனிமேல் தூக்கம் வராது.

நேரத்துக்கு முன்பாகவே, தொழிலை ஆரம்பித்தால் என்ன ? ஒரு மணி நேரம் முன்னதாகவே தொடங்கினால், ஒரு மணி நேரம் வேலையெல்லாம் முன்னதாகவே முடியும் என்ற நிர்ணயம் இல்லைதான். ஆனால், கிடைக்கப்போகிற ஓய்வு நேரத்தை எதிர்பார்த்து எப்போது செயல்பட்டிருக்கிறாள் ?

அப்படியும் இப்படியுமாக உட்கார்ந்து எழுந்து அறைக்குள்ளேயே நடந்து பொழுதைப் போக்கின அவள், அலுத்துப் போய் அறையை விட்டு வெளியேறிக் கீழே வந்தாள்.

ஹாலில் ஒரு பட்டாளம் உறங்கிக் கொண்டிருந்தது. பாகீரதி அத்தையும் அவளுடைய இரு பெண்களும் ஒரு பக்கம். கற்பகம், ஹாலின் இன்னொரு பக்கத்தில், தாத்தாவும் பாட்டியும் நட்ட நடுவே மூனகலும் இருமலுமாய் முடங்கிக் கிடந்தார்கள்.

துளசி கூடத்தைத் தாண்டி தாழ்வாரத்துக்கு வந்தாள். காலடிச் சப்தம் கேட்டது. பார்த்தாள், வாஞ்சி ! மாமனார் ஏன் இப்போதே எழுந்து விட்டார் ?

"துளசி !'

"என்ன மாமா ?"

"ஃப்ரிஜ்லே பால் இருக்கு இல்லியா ?"

"நேத்து எக்ஸ்ட்ரா பால் வாங்கித்தே ! நறைய இருக்கு "

"சீக்கிரம் காபி போடு."

"சரி மாமா !"

துளசிக்கு எரிச்சலைவிட ஆச்சரியம் தான் ஏற்பட்டது. மாமனார் இதுநாள் வரையில் அவளிடம் நேரடியாக எதையும் சொன்னதில்லை. இன்று, 'சீக்கிரம் காபி போடு' என்கிறார். ஏன் ? அவருடைய தங்கையும் பெண்களும் எட்டு மணிக்குத்தானே மகாபலிபுரம் போகப் போகிறார்கள் ? ஏன் இந்த அவசரம் ?

சரியாக நாலரை மணிக்குக் கீர்த்தி வந்தான். பல்லையும் தேய்க்காமல் அவன் அந்த வேளையில் சமையலறைக்குள் பிரவேசித்தது துளசியைக் கலங்க வைத்தது. என்னவோ நடந்திருக்கிறது. என்ன ? அவள் சிந்தனை ஓடிக் கொண்டிருக்கையிலேயே, கீர்த்தி—

"துளசி, ஐ'ம் வெரி ஸாரி !" என்றான்.

"எதுக்கு ? நான் உங்க கூட சினிமாவுக்கு வராததற்கா ? நான்தானே வரலேன்னேன்..."

"உன் அப்பா...உன் அப்பா போயிட்டார் துளசி..."

செய்தி அலைகள் மெல்ல மெல்ல வந்து துளசியைத் தாக்கின. 'அப்பா போயிட்டார்.' அப்பா போயிட்டார்.'

திடீரென பால் பொங்கி எழும் ஓசை கேட்டது. துளசி காஸ் அடுப்பை அணைத்தாள். 'அப்பா போயிட்டார்.'

"எப்போ ?"



"நேத்து சாயங்காலம். ஆறரை மணிக்கு."

"அதான் ராத்திரி கம்பி வந்ததா ?"

"தந்தியைச் சொல்றியா, துளசி ?"

"ஆமாம் "

"பல் தேய்ச்சுட்டு வாங்கோ... காபி தரேன்."

"துளசி !"

"என்ன செயறது... பொறந்தவா போய்த்தானே ஆகணும் ? நான் பொறந்ததிலேந்து என்னை ஒங்களுக்குக் கொடுக்கற வரைக்கும் நான் தைரியமா சாய்ஞ்சுக்க அவர் ஒரு தூணா இருந்தார். இப்ப அதுக்கு ஆவ்வசியம் இல்லைன்னு தூண் விழுந்துடுத்து "

"இப்ப ஆறரை மணி பிளேன்லே நாம ரெண்டு பேரும் போறோம். பத்து மணிக்குள்ளே பாலக்காட்டில் இருக்கலாம்."

"போய் என்ன காரியம் ?"

"உன் அப்பாவின்..."

"சவத்தைப் பாக்கலாம்னு சொல்ல வரேளா ? எங்க ஊரிலே பொணம் விழுந்தாப் போறும், கை கால் விரல்களைக் கட்டறதுக்கு மின்னாலே கோவில் கதவுகளைச் சாத்திடுவா... இன்னக்கி சஞ்சயணம் நடக்கும்."

"நீ என்ன சொல்றே ? துளசி ?"

"நான் பாலக்காட்டுக்கு ஒரு காரியமுமில்லாமப் போறதானாக்கூட அப்பாவைப் பார்க்கத்தான் போவேன். இப்பத்தான் அப்பாவே இல்லியே ! நீங்க போய் பல் தேயுங்கோ..."

"துளசி... துளசி !"

"நான் ஒன்னு அழலைன்னு ஒங்களுக்கு அதிசயமா இருக்கா...? போன கொல்லம் அப்பாவுக்கு மைல்டா ஒரு அட்டாக் வந்தது. ஆனா, அப்பா அதைக் கூட்டாக்கலை. டாக்டரை அலட்சியப்படுத்தினார். இப்ப போய்ட்டார்... ஹார்ட் அட்டாக்தானே ?"

"டைய்ட் ஆஃப் ஹார்ட் ஃபெய்லியர்னுதான் தந்தியில் இருக்கு."

"நீங்க ஆபீஸுக்குப் போங்கோ... ரெண்டு மூணு நாள் கழிஞ்சு என்னை வண்டியிலே ஏத்தி விடுங்கோ போறும்."

"நான் உங்க வீட்டு மாப்பிள்ளை, துளசி... நானும் வரல்லேன்னா என்னைப்பத்தி உங்க அம்மா என்ன நினைப்பா ?"

"எங்க அம்மா நினைக்கறதுக்காக நீங்க வரண்டாம். என் அப்பா மேலே ஒங்களுக்குள்ள மரியாதைக்காக வர்ற தானா வந்தாப் போறும். ஆனா, அதுவும் பத்துக்கு வரலாம்."

"அப்படியா சொல்றே..."

"பின்னே எப்படிச் சொல்லணும்ங்கறேள் ! ஊருக்குப் போனாத்தான் அப்பாவை நெனைச்சு நெனைச்சு நான் எனக்குள்ளே அழ முடியுமா... இங்கேயே நான் என் வேலையையும் சேதுண்டு வேண்டந்தோளம் அழுதுக் கிறேன். நீங்க இப்ப பல்லைத் தேய்க்கப் போங்கோ..."

கீர்த்திக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. மெதுவாக நகர்ந்து வெளியேறினான். என்ன பெண் இவள்? யதார்த்தமாகப் பேசும் யதார்த்த வாதியா, அல்லது பழுத்த பழமான ஞானியா ?

துளசி காபி தயார் செய்தாள். அரிசியை உலையில் வைத்தாள். தேங்காயை உடைத்துப் பூ எடுத்தாள். புளியைக் கரைத்தாள். கிழங்களுக்கு இட்லி வார்த்தாள்.



ஆனால், உள்ளூரக் கசிந்து கொண்டிருந்தாள். அப்பாவின் மரணம் பொய் என்ற பிரமை வந்து போய்க் கொண்டேயிருந்தது. அப்பா எப்படிச் சாக முடியும் ? அவர் அவளுடைய அப்பாவாயிற்றே ! நிமிடத்துக்கு ஒரு தடவை, 'பொண்ணே,' 'பொண்ணே' என்று முகமெல்லாம் புன்னகை மலர அழைப்பாரே ! 'ஒரு வாய் காபி தர்றயா பொண்ணே, என்று அவர் கேட்டுக் கொண்டு வரும்போது, அவருடைய பாசம் அவளை மெய்சிலிர்க்க வைக்குமே ! வீடே ஒன்றாக நின்று அவளை இடித்துப் புடைத்தபோது, அவர் ஒருவர் தானே அவளுடைய மனத்துக்கு இதமாக இருந்தார் விடுதலை பெற்று வெளியேறிவிட வேண்டும் என்று அவள் துடித்துக் கொண்டிருந்ததை அவர் ஒருவர்தானே மனமார உணர்ந்து கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தார் !

அப்பா போய்விட்டார்.

என்னதான் கணவனிடம் தத்துவம் பேசியபோதிலும், அப்பா இவ்வளவு சீக்கிரமாகப் போயிருக்கக் கூடாது என்று துளசிக்குத் தோன்றியது. டாக்டர் நெய், எண்ணெய் கூடாது என்றார். நெய்யப்பமும் அடையுமாகச் சளைக்காமல் சாப்பிட்டார். எதை டாக்டர் கூடாது என்றாரோ அதையே பிடிவாதமாகச் செய்தார். அவருடைய திடீர் மரணத்துக்கு ஒரு வேளை அவளும் காரணமோ ? அவள் தானே அவருடைய வாய்க்கு ருசியாகச் சமைத்துப் பரிமாறியவள் ! ஒரு தடவைகூட துளசி அப்பாவை எச்சரிக்கவில்லையே ! எப்படி எச்சரிப்பாள் ? அப்பா குழந்தை மாதிரி ஆசைப்படுகிறார். அன்பும் பாசமும் குழையக் கேட்கிறார். அவளால் எப்படி மறுக்க முடியும் ? டாக்டருடைய உத்தரவுகளை எப்படி நினைவூட்ட முடியும் ?

இயந்திரம் ஓடிக்கொண்டே போயிற்று. பாபு, மைதிலி, அத்தை பாகீரதி, பெண்கள் நந்தினி, அஞ்சனா எல்லோரும் கடமைக்காகத் துக்கம் விசாரித்து விட்டுப் போனார்கள்.

மூன்றாம் நாள் அவளை மங்களூர் மெயிலில் ஏற்றி விட்ட கீர்த்தி, அம்மா அப்பாவுடன் பத்தாம் நாள் வருவதாகச் சொன்னான்.

துளசி ரயிலில் உட்கார்ந்து, அசை போட்டுக் கொண்டே பாலக்காட்டை அடைந்தாள்.

வீட்டில் அடுப்பு எரியவில்லை. கிட்டிய உறவுக்காரர் வீட்டிலிருந்து வேளா வேளைக்கு காபியும் டிபனும் சாப்பாடும் வந்து சேர்ந்தன. துக்கம் இருக்கும் போதுதான் வயிறும் இரையும் போல இருக்கிறது. எல்லோரும் நன்றாகச் சாப்பிட்டார்கள். பெரிய அக்கா ஜெயாவிலிருந்து கடைசிக் குழந்தை மணிக்குட்டி வரை எல்லோரும் அப்பாவைப் பற்றிப் பேசிப் பேசியே தங்களைக் கவனித்துக் கொண்டார்கள்.

இரு பசுமாடுகளும் பால் கொடுத்தன. அம்மு தான் செய்ய வேண்டிய வேலைகளில் முனைந்தாள். வாசு வரும் போதெல்லாம் கூடவே சின்ன அக்கா சீதா வந்து விட்டு, அங்கிருந்து காலேஜ் சென்றாள். அப்பாவின் மரணத்தை முன்னிட்டுப் பரீட்சைகளை ஒத்திப் போட மாட்டார்கள் என்று பாரதி படித்துக் கொண்டிருந்தாள்.

அம்மா ஊஞ்சலிலேயே முடங்கிக் கிடந்தாள். இன்னும் ஒரு வருடத்துக்கு வெளியே போக முடியாது. இந்தப் பத்து நாட்களுக்குள் அவளைப் பார்க்க வராதவர்கள் இன்னும் ஓர் ஆண்டுக்குப் பார்க்கவும் வரமாட்டார்கள்.

நாட்கள் நகர்ந்தன.

வீட்டில் எல்லாம் இருந்தும் உயிர் என்று ஒன்று இல்லை என்பதைத் துளசி கண்டுகொண்டாள். அப்பா உயிரோடு இருக்கும்போது, அவர் வீட்டில் இல்லாத போதுகூட இருப்பதான குதூகலம் அவளுக்கு ஏற்படும்.



இன்னோர் அனுபவமும் அவளுக்கு அவளுடைய வாழ்வில் உண்டாயிற்று. அவள் ஒரு வேலையும் செய்யவில்லை. செய்யவும் சொல்லவில்லை. சமையல் அறை எங்கே இருக்கிறது என்று அவளே தேடும் அளவுக்கு அவளுக்கு ஓய்வு கிடைத்தது.

இது அவள் மீது சுமத்தப்பட்ட ஓய்வுதான் என்றாலும், அப்பாவை ஒரு சில கணங்கள் மறந்து, சிந்தித்தபோது துளசிக்கு ஓய்வால் இவ்வளவு சுகமா என்ற வியப்புத் தட்டியது. எதிர்பார்த்த ஓய்வு புகுந்த வீட்டில் கிடைக்கவில்லை. ஆனால், தற்காலிகமாக ஏற்பட்ட எதிர்பாராத ஓய்வு அவளைக் கனவுகள் காண வைத்தன.

துளசி, கீர்த்தியுடன் சென்னை திரும்ப வேண்டிய நாளும் பிறந்தது.

பதின்மூன்று நாட்களுக்குள்ளேயே எதிர்காலத் திட்டங்கள் தலைதூக்கின.

பெரிய அக்கா ஜெயாவின் பிள்ளை அந்த ஆண்டு படிப்பு முடியும் வரை பாலக்காட்டில் தொடர்ந்து இருப்பான். அதன் பிறகு அவனும், அம்மா சாரதா, குழந்தைகள் காவேரி, மணிக்குட்டி எல்லோரும் பம்பாயில் குடியேறுவார்கள். வீடு காலியானதும், அண்ணா சின்ன வீட்டிலிருந்து பெரிய வீட்டுக்கு வருவான். பாரதி பரீட்சை முடிந்ததும் அம்மாவுடன் போய்விடுவாள். சீதாவுக்கு கொச்சியில் வேறு ஒரு தனியார் கல்லூரியில் வேலை கிடைக்க இருக்கிறது. பாலக்காட்டு செஷன்ஸ் கோர்ட்டிலும் முன்சிப் கோர்ட்டிலும் வாதாடுவதை விட, ஹைகோர்ட்டில் பிரவேசிப்பது எதிர்காலத்துக்குச் சிறந்தது என்று வாசு முடிவு எடுத்து, அங்கே ஒரு ஸீனியரைப் பிடித்திருக்கிறான்.

எல்லோருக்கும் ஒரு மாற்றம். ஆனால், துளசி மட்டும் மாறமாட்டாள்.

அவள் எந்த ஊருக்குப் போனால் என்ன. அந்த ஊரில் அவள் இருக்கும் வீட்டில் ஒரு சமையலறை இருக்கும். எல்லோரும் அவள் கையை எதிர்பார்த்து நிற்பார்கள்.

"போயிட்டு வரேன் அம்மா! ஒடம்பைப் பார்த்துக்கோ."

"இன்னமே இந்த ஒடம்பு எப்படிப் போனா என்னடீ தொளசி. போகப் படாதவர் போய்ட்டார்" என்ற சாரதா. அழ ஆரம்பித்தாள்.

"அழாதேம்மா."

"நீன்னா அவருக்கு உசிரு. நீ அவரைத் தெனமும் நெனைக்கணும்... போட்டோ எடுத்துண்டிருக்கறியா?"

"அப்பாவை நெனைச்சுக்க போட்டோ ஆவ்வசியம் இல்லை."

"ஆம்ச்சைக்கு ஒரு எழுத்துப் போடு, கிட்டியா?"

"சரி."

"நீ இந்தாத்திலே இருக்கற வரைக்கும் ஆருக்கும் ஒண்ணும் அறியண்டாம்... நீ போனப்பறம்தான் இதுகளுக்கெல்லாம் ஒன் அருமை தெரிஞ்சுதடீ, தொளசி!"

துளசி பதில் சொல்லவில்லை. என்ன சொல்ல? புகுந்த வீட்டிலும் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் இப்படித்தான் அவளைப் புகழப் போகிறார்கள்?

இயந்திரம் நன்றாக வேலை செய்தால் அதை உருவாக்கியவனுக்குப் பெருமை! அவள் நன்றாக வேலை செய்து எல்லோரையும் திருப்திப்படுத்தினால் அவளுக்கு என்ன பெருமை?

திடீரென ஓர் எண்ணம் அவளுள் பிறந்து அவளை ஒரு தனி உலகத்துக்கு இழுத்துக் கொண்டு போயிற்று.

அவ்வளவு பெரிய வீட்டில் அவள் மட்டுமே இருக்கிறாள். அவளுக்குச் செய்து போட அம்மு என்கிற ஒரு



வேலைக்காரியும் ஒரு சமையற்காரியும் மட்டுமே இருக்கிறார்கள்.

அம்மா இருக்கும் ஊஞ்சலில் சதா துளசியே இருக்கிறாள். ஊஞ்சலில் உட்கார்ந்து படிக்கிறாள். அதிலேயே தட்டு வைத்துச் சாப்பிடுகிறாள். அதிலேயே தூங்கவும் தூங்குகிறாள்.

அவளைப் பொருத்த வரையில் காலம் நின்று விடுகிறது. ஊஞ்சல் ஆடுவதில்லை. ஆடாத ஊஞ்சலில் அவள் அசையாமல் தன்னைத்தானே ரசித்துக் கொண்டு, காலத்தோடு காலமாய் உறைந்து போய் விடுகிறாள்.

இப்படி ஒரு வாழ்க்கை மட்டும் அமைந்து விட்டால்... எப்படி அமையும்?

அமைய முடியும்!

சென்னையில் ஒரு வீடு இருக்கிறது. அங்கே ஒரு கணவன் இருக்கிறான். அவனுக்குப் பெற்றோர், பெற்றோரின் பெற்றோர், பெற்றோர் பெற்றவை எல்லாம் இருக்கிறார்களே! அவளை எதிர்பார்த்து நிற்கிறார்களே!

அவள் இரண்டாம் தடவையாகக் கீர்த்தியுடன் செக்கடிக்குப் பிரயாணமானாள்.

# 10

கடிகாரம் நகர்ந்தது. நாட்கள் நகர்ந்தன. அமாவாசையும் பௌர்ணமியும் ஒன்றை ஒன்று துரத்தி நகர்ந்தன.

ஆனால், துளசி நகரவில்லை. காலம் ஒரு சுமையாக அவளை அழுத்தி உட்கார்த்தியது. இருளுக்கும் பகலுக்கும்

வேற்றுமை உண்டு என்று அவள் அறிந்தாலும் உணர வில்லை. கடந்த கால வாழ்க்கையைச் சிற்சில சமயங்களில் எண்ணிப் பார்த்தபோது, நிகழ்காலம் முகத்தில் அறைந்தது. எதிர்காலம் கண்ணை மறைத்தது. கண் இதழ்களுக்குள்ளும் வெளிச்சம் தெரியவில்லை.

என்ன செய்ய ?

என்ன செய்ய முடியும் ?

கீர்த்தியும் மற்றவர்களும் நன்றாக ருசித்துச் சாப்பிட் டார்கள் தூங்கினார்கள். வேளாவேளைக்கு அவர் களுடைய தேவைகள் பூர்த்தியாயின. கீர்த்தியின் தங்கை மைதிலி, நேரம் கிடைத்த போதெல்லாம் துளசியுடன் பேச வந்தாள். துளசி ஏதோ ஓர் உலகில் இருக்க, மைதிலி தன்னுடைய உலகின் அதிசயங்களை அளந்தாள். மைத்துனன் பாபு கிரிக்கெட் ஆடினான். ஆபீஸுக்குப் போனான். மாமியாரின் உடம்பு இந்த ஆறு மாதத்தில் அமோகமாகத் தேறியிருப்பதாக மாமனார் நாத்தனாரிடம் சொல்லி மகிழ்ந்து பெருமைப் பட்டுக் கொண்டார்.

தானாக துளசி யாரிடமும் பேசவில்லை. யாருடன் என்ன பேச என்ன இருக்கிறது ? அவளுக்குக் கீர்த்தியை நன்றாகப் புரிந்து விட்டது. பாலக்காட்டில் அவளைப் பார்த்திருக்கிறான். அங்கே அவள் வாழ்ந்த பம்பர வாழ்க்கையை நேரில் கண்டிருக்கிறான். அவள் தன் வீட்டுக்கு உபயோகமாக இருப்பாள் என்று கணக்குப் போட்டிருக்கிறான். பணக்கார வக்கிலின் பெண் மாதச் சம்பளத்துக்கு வர மாட்டாள் என்று தெரியும். தாலி என்கிற அபூர்வப் பரிசையும், மனைவி என்ற பதவியையும், குழந்தைகள் என்கிற நிரந்தர போனஸையும் அளிக்க முன் வந்திருக்கிறான். அவள் தான் இருக்கும் பாத்திரத்தின் வெப்பத்திலிருந்து தப்ப நல்லதோர் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது என்று எண்ணினாள். மகிழ்ந் தாள். கீர்த்தி அவளுடைய கண்ணில் படவில்லை. அவன்



அளிக்கப் போகிற புதிய உலகத்தின் தன்மைதான் மனமெல்லாம் வியாபித்துப் பரபரக்கச் செய்தது ! இந்தப் பரபரப்பு அடங்கும்போது அவள் எங்கே இருந்தாள் ? இன்னொரு பாத்திரத்தில், அதுவும் இன்னும் அதிகமாகச் சூடேறிய பாத்திரத்தில்.

அவள் அன்று குருவாயூரப்பனை வேண்டிக் கொண் டாள், தன் வலி மாற வேண்டும் என்று குருவாயூரப்பனும் மாற்றினான். வலி ஒரு காலிலிருந்து இன்னொரு காலுக்கு.

மொத்தத்தில் துளசி அன்றும் இன்றும் என்றும் மாற வில்லை. இனிமேல் எப்படி மாறும் ? மாற முடியும் ? இப்போது ஒரு நாள், ஏன், ஒரு மணி நேரம்கூட அவளுக்குச் சொந்தமில்லை. புகுந்திருக்கும் வீட்டில் உள்ள அனைவ ருக்கும் சொந்தம் !

காலமும் நேரமும் அவளை அழுத்துகின்றன. அவள் எப்போதுதான் காலத்தையும் நேரத்தையும் அழுத்தித் தனதாக்கிக் கொள்ளுவாள் ?

ஒரு நாள்— ஒரு இரவு. படுக்கை அறைக்கு அவள் உடம்பெல்லாம் வலிக்க வந்தாள்.

“துளசி ! மணி பத்தரை” என்றான் கீர்த்தி.

அவள் பதில் பேசாமல் கட்டிலில் விழுந்தாள்.

“துளசி !”

“என்ன சொல்லணுமோ அதை வேகத்திலே சொல்லுங்கோ. தூக்கம் வர்றது.”

“உடம்பு சரியில்லையா துளசி ?”

“இந்த மெஷின் ரிப்பேரே ஆகாது !”

“நீ என்ன சொல்றே, துளசி ?”

அவள் திரும்பிப் படுத்துக் கொண்டாள். கீர்த்தியின் கை அவளுடைய தோளில் படுவதை உணர்ந்து கொண்டே அவள் தூங்கலானாள்.

அடுத்த நாள், அதற்கும் அடுத்த நாள். கீர்த்தியின் கேள்வி? அவளுடைய பதில். தொடர்ந்து தூக்கம். அவள் ஒரு கட்டை. மரக்கட்டை. அதுவும் கடைந்தெடுத்த கட்டை. எல்லோரும் கட்டையைத்தான் பார்த்தார்கள். கீர்த்தி, கட்டையைச் சுகிக்கவும் அனுபவிக்கவும் தான் எண்ணினான். அவள் ஏன் பகலில் உள்ளது போல இரவிலும் வெறும் கட்டையாகவே இருக்கக் கூடாது?

அன்று ஞாயிற்றுக்கிழமை. வழக்கமாக மாமியாரும், பாட்டி பாட்டாவும் மட்டுமே காலையில் இட்லி சாப்பிடுவார்கள். ஆனால் மைதிலி, பாபு, கீர்த்தி, மாமனார் வாஞ்சி எல்லோருமே ஞாயிற்றுக்கிழமைகளில் இட்லிக்குப் பறப்பார்கள். துளசி இட்லி வார்த்தால் அது புளிக்காதாம். மல்லிகைப் பூ மாதிரி இருக்குமாம். ஆனால், இட்லி தயாரிக்கிறவள் புளித்துக் கொண்டிருக்கிறாள், வாடிக் கொண்டு வருகிறாள் என்று யார் நினைத்துப் பார்க்கிறார்கள்?

மைதிலியும் பாபுவும் சாப்பிடும்போது ஒரு ஆட்டோ வந்தது.

"அம்மா, அமிர்தா வர்றா..."

"அமிர்தா இங்கே எங்கே வர்றா?"

மைதிலி உற்சாகமாகக் கத்த, பாபு ஒரு கேள்வியை உதிர்த்து அடங்கினான். அப்போதுதான் கீர்த்தி கை கழுவி விட்டு மேஜைக்கு வந்தான்.

ஒரு பெண்— இருபத்தெட்டு வயது— நிச்சயமாக முப்பது இல்லை— இருக்கும்; உடம்பெல்லாம் சுறுசுறுப்பாக, முகமெல்லாம் ஒளி உமிழும் சிரிப்பாகக் கைப் பையை வீசிக் கொண்டே படி ஏறி, முன்னேறி வருவதைக் கண்ட துளசி, ஒரு கணம் திகைத்துப் போய் நின்றாள். யார் இவள்? மறுகணம் இட்லியைப் பரிமாறினாள்.



"மன்னி, அமிர்தாவுக்கும் ஒரு தட்டு வை" என்றாள் மைதிலி.

"ஹாய் கீர்த்தி...! கங்க்ராட்ஸ்... எங்கே உன் ஒய்ஃப்? ஹாய் மைதி... என்ன பாபு, எவ்வளவு டக் போட்டே இந்த இயர் லீக் மாட்ச்லே... அத்தை எங்கே? கீர்த்தி, என்ன அப்படிப் பார்க்கறே...? வேர் இஸ் யுவர் ஒல்ட்மேன்?"

"யார்டீ... ஓ, அமிர்தாவா?" —கீர்த்தியின் தாயார் கற்பகம் மெல்ல வந்தாள்.

"ஹலோ, அத்தே! எப்படி இருக்கே...? லோ பிபி, ஹை பிபியா ஏறிட்டுதா இல்லியா...? ஓ, கீர்த்தி! ஷி இஸ் யுவர் பெட்டர் ஹாஃப்!"

ஒரு சில நிமிடங்களில் அந்த அறையே கலகலத்தது. முதன்முதலாக வீட்டில் சிரிப்பொலியைக் கேட்பது போலப் பட்டது துளசிக்கு. கல்கத்தா அஞ்சனாவும் நந்தினியும் சிரித்தபோது மகிழ்ச்சி ஊட்டவில்லை. ஆனால் இவள், இந்த அமிர்தா வந்த உடனேயே பிரகாசித்து விட்டாள். என்ன சக்தி இருக்கிறது இவளிடம்?

"அமிர்தா, மீட் மை டியர், வெரி டியர் மன்னி... பாபு, மன்னிக்கு என்னடா இங்கிலீஷ்...?"

"எம் எ என் என் ஐ... மன்னி!" என்றான் பாபு.

"அமிர்தா... என் ஒய்ஃப். துளசி... துளசி, இவ அமிர்தா..."

"உன்னைச் சந்திக்கறதுலே ரொம்ப சந்தோஷம், துளசி இந்தா..."

சொன்னவள் கைப் பைக்குள்ளிருந்து ஒரு சிறு பொட்டலத்தை எடுத்தாள். பிரித்தாள்.

"என்ன அமிர்தா, வாட்ச்சா...?" என்றாள் மைதிலி.

"பேசாம இரு. இப்ப என்ன கரெக்ட் டைம்? ஒன்பது அடிக்க பத்து நிமிஷம்... துளசி, இந்தா இது என் பரிசு! உன் கல்யாணப் பரிசு. ரொம்ப லேட்தான்! எவ்வளவு லேட்? ஏழு மாசம்... ஆனா, என்ன செய்யறது... இப்பதான் மெட்ராசுக்கு வர முடிஞ்சது."

—அமிர்தா பொரிந்து தள்ளினாள்.

துளசி தயங்கினாள்.

"என்ன வாட்ச்? ஃபாரினா?" —மைதிலி.

"ஸியுஸன்! லேடீஸ் எலெக்ட்ரானிக். கிழமை, தேதி, அலாரம் எல்லாம் இருக்கும்."

"ரொம்ப காஸ்ட்லி!"

"நோ மைதி... நோ! இதுக்கு நான் எண்ணூறு ரூபாதான் கொடுத்தேன். என் ஃப்ரெண்ட் ஹாங்காங் போயிருந்தா. என்ன துளசி, கையைக்கூட நீட்ட மாட்டாயா? கீர்த்தி, உன் ஒய்ஃப் ரொம்ப பயப்படற மாதிரி இருக்கு நீ சொல்லு?"

"அவ உன்னை மாதிரி இல்லை அமிர்தா! அதிகம் பேசமாட்டா" என்றான் கீர்த்தி.

"அப்ப காரியத்திலே கெட்டிக்காரியா? இந்தா துளசி! என்னோட நல்வாழ்த்துக்களுடன் இதை உனக்குக் கொடுக்கிறேன்!"

கீர்த்தி, "வாங்கிக்கோ" என்றான்.

மெல்ல கை நீட்டிய துளசி, அமிர்தாவைப் பார்த்தாள். கண்களில் வீசும் ஒளி அசாதாரணமாய்ப் பட்டது.

"தாங்க்ஸ்!"

"நீ என்னையே பார்க்கறே துளசி! வாட்சை இன்னும் பார்க்கலே?"



"அப்றமா பாத்துக்கறேன்... நீங்க ஒக்காருங்கோ... இட்லி கொண்டு வரேன்" என்றாள் துளசி.

"பாலக்காடா?"

"ஆமாம்" என்றான் கீர்த்தி.

"அதான் மொழுமொழுன்னு துடைச்சு விட்டா மாதிரி இருக்கா... தெனமும் ரெண்டு வேளை குளிப்பாளே?"

"எப்படிக் கண்டுபிடிச்சே அமிர்தா?" என்று கேட்டாள் மைதிலி.

"கான்பூர்லே என் ஃப்ளாட்டுக்கு எதிர் ஃப்ளாட்லே பாலக்காட்டு மனுஷா இருக்கா. குளிர் காலத்திலேகூட ரெண்டு வேளை குளியல்."

சொல்லிவிட்டுச் சிரித்த அமிர்தா, "வீட்டு வேலை எல்லாம் நன்னா செய்றா இல்லியா?" என்றாள்.

"உனக்கு எப்படித் தெரியும்?" என்றான் பாபு.

"பாலக்காட்டுப் பொண்ணாச்சே! அலுத்துக்காம செய்வா."

"எல்லா ஊர்ப் பெண்களும்தான் செய்யறா" என்றாள், இதுவரையில் மௌனமாக இருந்த கற்பகம்.

"இல்லேன்னு சொல்லலே, அத்தே... ஆனா, பாலக்காடு கொஞ்சம் விசேஷம்! அவா பேசற தமிழ் நமக்குப் புதுசா இருக்கும். அவ்வளவுதான்!"

"ஏன் புதுசு? சிலப்போ புரியாத புதிராவும் இருக்கு!"

"எல்லா பாலக்காட்டுக்காரர்களும் முன்னொரு காலத்திலே தஞ்சாவூர்லேந்து போனவர்கள்தானாம். என் ஃப்ரண்ட் ஒருத்தன் சொன்னான்" என்றான் பாபு.

துளசி ஆவி பறக்கும் இட்டிலியுடன் வந்தாள்.

கலகலப்பும் கும்மாளமும் தொடர்ந்தன. இட்லிப் பாத்திரம் காலியாகியது.

ஒரு சிநேகிதி வீட்டில் சாப்பாடு என்று சொல்லிக் கொண்டு அமிர்தா பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டுப் போனாள்.

அமிர்தா சென்ற பிறகு யாருமே அவளைப் பற்றிப் பேசாதது துளசிக்கு ஆச்சரியமாக இருந்தது. அமிர்தா கான்பூரில் ஒரு தேசிய பாங்கில் ஆபீசராக வேலை பார்க்கிறாள். அவள், மாமியார் கற்பகத்தின் ஒன்றுவிட்ட அண்ணனுடைய பெண் என்று மட்டுமே தெரிய வந்தது. பாபுவும் மைதிலியும் சரிக்குச் சமமான குதூகலத்துடன் அமிர்தாவுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால், கீர்த்தி அவளை விட்டுச் சற்று ஒதுங்கி நிற்பதாகத் துளசிக்குப் பட்டது. இது ஏன் என்று அவளுக்குப் புரிய வில்லை. ஒருவேளை அமிர்தாவைக் கீர்த்திக்கும் பார்த்திருந் தார்களோ? அப்பா வழியில் நந்தினி இருந்தது போல அம்மா வழியில் இந்த அமிர்தா இருந்தாளோ? நந்தினியை மறுத்தது போல கீர்த்தி, அமிர்தாவையும் ஏற்க மறுத்தானா? அல்லது அமிர்தா கீர்த்தியை விரும்ப வில்லையா? அப்படித் தான் இருக்க வேண்டும். இல்லாமற் போனால் நந்தினியிடம் சரளமாகப் பேசிய கீர்த்தி, அமிர்தாவை விட்டு ஒதுங்கி நிற்பானேன்?

திடீரென்று யார் எப்படிப் போனால் தனக்கு என்ன என்று துளசி நினைத்து வேலையில் மூழ்கினாள். ஆனால், அவளால் அமிர்தாவின் அழகையும் சிரிப்பையும் மறக்க முடியவில்லை. எல்லோரையும் எளிதில் ஈர்க்கும் குணமும் நயமும் அவளிடம் இயற்கையாக அமைந்திருக்கிறது என்று துளசி நினைத்தாள். அன்று இரவு பத்தரை மணிக்குப் படுக்கை அறைக்குச் சென்றதுமே கீர்த்தி, "துளசி!" என்று அழைத்தான். குரலே ஒரு மாதிரியாக இருந்தது. என்ன



காரணம்? அறைக்குள் பிரவேசித்ததுமே அவள் தூங்கப் பறக்கிறாளே, அதுதானா?

"என்ன?"

"அந்த அமிர்தா தந்த ரிஸ்ட்வாட்ச் எங்கே?"

"தாழத்தே அலமாரியிலே வைச்சிருக்கேன்."

"கட்டிக்கப் போறியா?"

"நான் ஆத்துக்குள்ளே தானே நாள் முழுக்கச் சுற்றிச் சுற்றி வரேன். எங்கே வாட்ச் கட்டிக்கிறது?"

"உங்கிட்டேதான் உன்னோடு ரிஸ்ட் வாட்ச் இருக்கே. வெளியே போறப்ப அதைக் கட்டிக்கோ..."

"எத்தறை பிராவிசியம் நான் வெளியே போயிருக்கேன் இத்தற மாசத்திலே? மூணு தரக்கா பீச்சுக்குப் போனோம். ஒருக்கா அண்ணா நகர் போனோம். பின்னே ஒருக்கா..."

"துளசி, கொஞ்சம் இரு. நான் என்ன சொல்ல வந்தேன்னா..."

"மனசிலாச்சு... அமிர்தா பிரஸன்ட்டா தந்த வாட்ச்சைக் கட்டிக்கண்டாம்ங்கறேள்."

"ஆமாம். ஏன் தெரியுமா?"

"நீங்க அவள்ட்டே சரியா எல்லார்ட்டேயும் பேசற மாதிரி பேசலை, இல்லையா?"

"அது ஏன் தெரியுமா?"

"ஆர் சொன்னா தெரியறத்துக்கு..."

"அவ புருஷனை விட்டுட்டுத் தனியா இருக்கறவள்."

ஒரு கணம்— ஒரே கணம்— துளசி அயர்ந்து போனாள்.

"அமிர்தாவுக்குக் கல்யாணம் கழிஞ்சிருக்கா இல்லை யான்னு கூட எனக்குத் தெரியாது. இப்ப நீங்க சொன்னப் புறம்..."

"யாராவது ஒரு பெண் புருஷனைத் தூக்கி எறிஞ்சிட்டுத் தனியா வாழ்வாளா துளசி?"

"டைவோர்ஸ் ஆயிடுத்தா ?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. அவனும் பெரிய ஆபீஸர். இவளும் பாங்க் ஆபீஸர். அவன் வீடு அவளுக்குப் பிடிக்கலையாம். அவனோட மனுஷா அவளுக்குக் கசக்கறதாம். தனியா வர்றதானா வாங்கோ; இல்லாட்டா நான் போறேன்னா."

"சேய்ஞ்சு காட்டியூட்டா இல்லியா ? அவ கழுத்திலே ஒரு நூலாட்டமா செயின் தான் இருக்கு."

"சரி சரி, அவ பேச்சு போறும். இன்னும் கொஞ்ச காலத்துக்குத் துள்ளிக் குதிச்சுண்டு வரமாட்டா... துளசி, நீ அவளைப்பத்தி நினைக்காதே. நீ சூரியன்னா அவள் பாட்டரி, உயிர் போற நிலையில் காட்டற டார்ச் லைட். தூங்கு."

சொல்லிவிட்டு கீர்த்தி தூங்கலானான்.

எப்போதும் தூக்கக் கண்களுடன் அறைக்குள் பிரவேசிக்கும் துளசி, அன்று தூங்கவில்லை.

பாட்டரி உயிர் போகும் நிலையில் காட்டும் டார்ச் லைட் திடீரெனப் பிரகாசமாக எரிவதான பிரமை அவளுள் எழுந்தது.

ஒரு கல்யாணமான பெண் கணவனிடமிருந்து இவ்வளவு எளிதாக விடுதலை பெற முடியுமா ? ஒரு பெண்ணுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறதா ?

திடீரென துளசி கண்முன் ஓர் ஒற்றையடிப் பாதை தெரிந்தது. ஒரு டார்ச் விளக்கின் வெளிச்சம் பாதையில் படர்ந்தது.



துளசி நடந்தாள். பாதையை விட்டும் விலகி வரப்பில் விழாமலிருக்க யாரோ அவளுடைய கையைப் பிடித்து முன் நடப்பதாகப் பட்டது.

துளசி பார்த்தாள்.

அமிர்தாவின் உருவம் தெரிந்தது. அவளுடைய சிரிப்பொலி கேட்டது.

துளசிக்கு ஏதோ புரிய ஆரம்பித்தது.

18600
3514868

## 11

அமிர்தாவை எல்லோருமே மறந்து விட்டார்கள். துளசியின் மனத்தில் மட்டும் அவள் அடிக்கடி தலை நீட்டினாள். அவளைப் பற்றி நினைவு எழும்போதெல்லாம் எந்த இடையூறுமில்லாமல் வெட்ட வெளி வானத்தில் இஷ்டம் போலப் பறக்கும் பறவைதான் அவளுடைய கண் முன் தோன்றியது.

ஒரு நாள் மாமியார், பாட்டி பாட்டனாருக்கான பிரத்யேக உணவான இட்லிக்குத் துளசி மாவு அரைக்கவில்லை. முந்தின நாள் எஞ்சிப் போன மாவில் இட்லி வார்க்க மாமியார் முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

ஒரு பாங்கில் பணி புரியும் மைதிலி காலையில் சாப்பிட்டதும், டிபன் பாக்ஸில் மதிய உணவுக்காக ஏதேனும் கொண்டு போவாள். எலுமிச்சம்பழ சாதம், தேங்காய் சாதம், இட்லி என்று ஏதாவது இருக்கும். ஒரு நாள் அவளுடைய டிபன் பாத்திரம் காலியாக இருந்தது. துளசியிடம் எந்தக் கேள்வியையும் கேட்காத அவள் தானே சாம்பார் சாதம் பிசைந்து எடுத்துக் கொண்டு போனாள்.

பாபு ஸ்கூட்டரில் ஆபீஸ் செல்கிறவன். சரியாக ஒன்பது மணிக்கு மேஜைக்கு வருவான். துளசி பரிமாறுவாள். ஒரு நாள் துளசி வரவில்லை. வரப்போவதற்கான அறிகுறிகளும் தோன்றவில்லை. அவனே பரிமாறிக் கொண்டான்.

ஆரம்பத்தில் ஒருவரும் எதையும் தவறாகப் புரிந்து கொண்டு துளசியைக் கடிந்து கொள்ளவில்லை. ஆனால், நாள் செல்லச் செல்ல மைதிலி, பாபு மற்றும் வாஞ்சி நிலைமையை உணர ஆரம்பித்தார்கள்.

துளசி என்றும் போலத் தன் வேலைகளைச் செய்கிறாள். முழுக்க முழுக்க கீர்த்தியைக் கவனித்துக் கொள்கிறாள். ஆனால், மற்றவர்கள் விஷயம் என்று வரும்போது ஒதுங்கிக் கொள்கிறாள். ஏன்? கேள்வியை ஒவ்வொருவரும் தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார்களேயன்றி மற்றவர்களுடன் கலந்து விமரிசிக்கவில்லை. இதை ஒரு பொருட்டாக எண்ணி கீர்த்தியிடம் குறையாகச் சொல்லவுமில்லை.

ஆனால், கீர்த்தி புரிந்து கொண்டான். மெல்ல மெல்ல துளசி மாறிக் கொண்டு வருகிறாள். ஏன்? அவளிடம் கண்ட உற்சாகமும் துடிதுடிப்பும் இப்போது இல்லை. இரவு படுக்கை அறையில்கூட அவள் முன்போல ஓர் ஆர்வத்துடன் நெருங்குவதில்லை. சொல்லப் போனால் அறைக்குள் ஒரு கொட்டாவியுடன் பிரவேசித்து, படுக்கிறாள். தூங்க ஆரம்பிக்கிறாள். ஏன்?

ஞாயிற்றுக்கிழமைகளில் கற்பகம், மைதிலி, பாபு, கீர்த்தி மற்றும் துளசி எல்லோரும் ஒன்றாகச் சாப்பிடுவார்கள். மற்ற நாட்களில் இரவுச் சாப்பாடும் இதே போல. சாப்பாடு முடிந்ததும் துளசி பாத்திரங்களைச் சமையலறையில் ஒழித்து வைத்துவிட்டு, சாப்பிட்ட தட்டுக்களைத் தேய்த்துக் கழுவி மேஜையையும் ஈரத் துணியால் துடைப்பாள்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை.



எல்லோரும் ரசம் சாதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், துளசி மோரை அடைந்து அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டாள். இதை யாரும் அப்போது கவனிக்கவில்லை. ஆனால், துளசி எழுந்து கையலம்பப் போனவள் அரை மணி நேரத்துக்குத் திரும்பவில்லை. மைதிலியும் பாபுவுமாகப் பாத்திரங்களை ஒழித்து வைத்து, மேஜையையும் துடைத்த பின் மெதுவாகத் துளசி பாத்ரூமிலிருந்து வெளியே வந்தாள்.

பாவம், துளசிக்கு ஏதோ வயிற்றுக் கோளாறு என்று கற்பகம் நினைத்தாள்.

இந்தக் கோளாறு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்ற நாட்களில் இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகும் தொடர்ந்தது.

சில வாரங்களிலேயே கோளாறு வயிற்றில் இல்லை என்பதை கீர்த்தி புரிந்து கொண்டான். இதை இப்படியே வளர விடக்கூடாது என்று எண்ணிய அவன் துளசிக்கு என்னதான் குறை இருக்கிறது என்று அறிய விரும்பினான் நிவர்த்தி செய்யவும் நினைத்தான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை.

பிற்பகல்.

துளசி ஒரு பத்திரிகையுடன் மாடிக்கு வந்தாள்.

"துளசி!"

"உம்."

"நீயும் நானும் சரளமாப் பேசி ரொம்பக் காலம் ஆன மாதிரி இருக்கு."

"பேசறத்துக்கு என்ன இருக்கு?"

"என்ன, இப்படிச் சொல்லிட்டே தொளசி?"

"மின்னே ஒங்காத்திலே ஒரு சமையற்காரி இருந்தா, இல்லியா?"

"ஆமாம்."

"பாம்பேய்லே யாரோ மாசம் ஐநூறு கொடுக்கறான்னு இந்த ஆத்தை விட்டுட்டுப் போனா? இல்லியா?"

"ஆமாம்... அதுக்கென்ன இப்போ?"

"அவ போனப்புறம் தானே கல்யாணம் கழிஞ்சுது?"

"நீ எங்கேயிருந்து எங்கே போறே?"

"பாலக்காட்டிலிருந்து மதராசிக்குப் போறேன்."

"துளசி!"

"பாம்பேக்குப் போனவள் மாசச் சம்பளம் வாங்கற சமையக்காரி... வித்தியாசம் அம்படத்தான்."

"உன்னை யாரும் இங்கே சமையக்காரியா நினைக்கவில்லை. நினைக்கவும் மாட்டா."

"நெனைக்காதச்சையே இப்படி? நெனைச்சா எப்படியோ?"

"துளசி! உனக்கு இங்கே என்ன குறை?"

"நேக்கு நான்தான் கொறை. நான் அஞ்சாம் பொண்ணாகப் பொறந்ததுதான் கொறை. என்னோடு மண்டை நல்ல சக்கை மரத்திலே உண்டாக்கினது. இல்லாட்டா நானும் என் அக்கா, தங்கை மாதிரி படிச்சிருப்பேனே... அதான் கொறை."

"துளசி!"— கீர்த்தி மெதுவாக அவளை நெருங்கி, அவளுடைய கைகளைப் பற்றினான். அவள் கையிலிருந்த பத்திரிகை கீழே விழுந்தது.

"நீங்க என்னைச் சமாதானப்படுத்தப் பார்க்காதேயுங்கோ... படி இருக்குன்னு காலை வைச்சுக் குண்டுலே விழுந்தவளாக்கும் நான். ஆரோடு சமாதானமும் இப்ப நேக்கு ஆவச்யம் இல்லை."



"நீயே பேசிண்டு போனா எப்படி துளசி! உன் மனசிலே இருக்கறதைச் சொன்னால் என்னாலே எப்படி நிவர்த்தி செய்ய முடியும்னாவது நான் யோசிக்கலாம்."

"நீங்க எதுவும் ஆலோசிக்கண்டாம். நன்னா ஆலோசிச்சுத்தானே, 'ஒங்க பொண் துளசியை நேக்குத் தரேளா'ன்னு எழுத்துப் போட்டுக் கேட்டேள்! ஒங்க மனசிலே எதை வைச்சுண்டு அப்படிக் கேட்டேள்னு நேக்கு இங்கே வந்தப்புறம்தானே மனசிலாச்சு!"

கீர்த்திக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. துளசியின் அலுப்பு புரிந்தது. அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது? கடந்த சில வாரங்களாக அவன் அவளை எங்கேயும் அழைத்துச் சென்றதில்லை. சிறிது நேரம் வெளியே இருந்தால் துளசிக்கு ஓரளவு மனச்சமாதானம் கிடைக்கலாம்.

"துளசி!"

"உம்." கீழே விழுந்திருந்த பத்திரிகையைத் துளசி அப்போதே எடுத்து விட்டாள். அவளுடைய கண்கள் அதில் நிலைத்திருந்தன.

"சாயங்காலம் பீச்சுக்குப் போவோம்."

"எந்துக்கு?"

"ஒரு ரெண்டு மணி நேரம் பீச்சுக் காத்திலே சுகமா அலைகளைப் பார்த்துண்டு இருப்போம்."

"அதுக்கப்புறம்?"

கீர்த்தி பதில் சொல்லவில்லை.

"அப்றம் இந்தாத்து அலைகளுக்குத்தானே மடங்கணும். பீச்சுக் காத்து ஒங்களுக்கு வேணம்னா சொகமாயிருக்கும்."

"இன்னிக்குப் போகலைன்னா, பத்து நாளுக்குப் போக முடியாது துளசி... நான் ஆபீஸ் காரியமா நாளைக்குக் கார்த்தாலே பிளேன்லே டெல்லி போறேன்."

"நீங்க போங்கோ. பத்து நாளைக்கு அரைநாழி அரிசி கொறைச்சு வடிச்சாப் போறும்."

திடீரென்று ஓர் எண்ணம் கீர்த்திக்கு உண்டாயிற்று.

"துளசி! நீயும் ஏன் என்கூட டெல்லிக்கு வரக்கூடாது? அம்மாவுக்குத் தெரிஞ்ச ஒருத்தி இருக்கா... விசேஷ காரியங்களுக்கெல்லாம் வர்றவ. அவளை ஏற்பாடு பண்ணிடலாம். வீட்டுக் காரியங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்."

துளசி சிரித்தாள்.

சிரிப்பில் வெறுப்பு பூத்தது.

"பாம்பே போனவள் எடத்திலே நான். என் எடத்திலே வேறே ஒரு சமையற்காரி. பின்னையும் நான்... நீங்களே ஒங்க வாயாலே சொல்லாம சொல்லியூட்டேள், நான் வீட்டுக் காரியமெல்லாம் செய்யற சம்பளம் இல்லாத வேலைக்காரின்னு."

"ஒனக்கு கற்பனை நன்னா ஓடறது துளசி... சரி, அது போகட்டும். நீ பழைய துளசியா ஆகணும்னா நான் என்ன செய்யணும்?"

"நான் எப்ப பழைய துளசியா இருந்தேன்? எந்நைக்கும் என் தலை எழுத்து ஒரே எழுத்துத்தான்."

"துளசி! உன் பாஷையிலே பேசறதானா, நேக்கு நந்நா மனசிலாச்சு. இந்த வீட்டுச் சுமையை நீ எதிர் பார்க்கவில்லை. கல்யாணமாகி வந்ததும் இத்தனை பெரிய வீட்டில் நானும் நீயும் மாத்திரம்தான் இருப்போம்னு ரொம்ப சந்தோஷமா திருப்தியாயிருந்தே... ஆனா, என் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, பாபு, மைதிலி எல்லோரும் படை வர்ற மாதிரி வந்துட்டான்னு நீ நிலை குலைஞ்சு போயிட்டே!"

—அவன் பேசிக் கொண்டிருந்த போதே, துளசி அவன் அறியாமல் அறையை விட்டும் வெளியேறிப் போனாள்.



இதை அவன் உணர்ந்த போது, அவளை மீண்டும் அழைக்க அவன் விரும்பவில்லை.

அவளைச் சமாதானப்படுத்துவது அப்படி ஒன்றும் எளிதல்ல என்ற உண்மை மட்டும் அவனுள் மேலோங்கி இருந்தது.

அன்று இரவு கீர்த்தி துளசியிடம் இருநூறு ரூபாய் கொடுத்தான்.

"எந்துக்கு எனக்குப் பணம்?" என்றாள் அவள்.

"நான் நாளைக்குப் போனால் அடுத்த ஞாயிற்றுக் கிழமை ராத்திரிதான் திரும்பி வருவேன். சாமான்களும் காய்கறிகளும் வாங்கணுமே!"

"எங்கிட்டே தருவானேன்?"

"என்னைப் பொறுத்த வரையில் நீதான் யசமானி. பொறுப்போடு எல்லாம் செய்கிறவள்."

துளசி மௌனமாகப் பணத்தை வாங்கிக் கொண்டாள்.

கீர்த்தி டில்லியிலிருந்து சென்னைக்கு வந்தபோது இரவு மணி பதினொன்றரை. விமானம் தாமதமாக வருகிறது போலும் என்று எண்ணிய கற்பகம், ஹாலில் விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டுப் படுத்திருந்தாள். கார் வந்து நின்ற சப்தம் கேட்டதும், எழுந்து விளக்கைப் போட்டாள்.

தனக்காகத் துளசி வாசலில் காத்திருப்பாள் என்று கீர்த்தி எதிர்பார்க்கவில்லை யென்றாலும் லேசான நப்பாசை அடிக்கடி தோன்றிக் கொண்டேயிருந்தது.

"பிளேன் லேட்டும்மா."

"நினைச்சேன்."

"எல்லாரும் தூங்கியாச்சா?"

"கடிகாரத்தைப் பார்..."

"துளசியுமா ?"

"அவ எட்டரைக்கே போயிட்டா."

"அதுக்குள்ளே தூக்கமா ?" என்று கேட்டான் கீர்த்தி.

"அவ தூங்கப் போயிட்டான்னு நான் சொல்லலை யேடா கீர்த்தி. எட்டரைக்கே போயிட்டான்னு தானே சொன்னேன் ?"

"சரி, நான் கை கால் அலம்பிவிட்டுச் சாப்பிடறேன்."

"டேபிள்லே இருக்கு."

"சரி."

கீர்த்தி உட்கார்ந்தான்.

மேஜை மேல் ஒரு பெரிய பாத்திரம். இன்னொரு சின்ன பாத்திரம். ஒரு ஜாடி, ஒரு தட்டு, ஒரு தம்ளரில் தண்ணீர்.

பெரிய பாத்திரத்தைத் திறந்தான். அடியில் சாதம் ஒற்றுமையில்லாத கூட்டம் போல ஒன்றுக்கொன்று ஒட்டாமல் அவவாகக் கிடந்தது. சிறிய பாத்திரத்தில் என்ன இருக்கிறது ? பார்த்தான். மோர்.

"அம்மா !"

"என்னடா கீர்த்தி ?"

"நல்ல பசியோடே வந்திருக்கேன். வெறும் மோர் சாதம்தானா ?"

"ஏண்டா ஏன் ? நீ மட்டும் என்ன ஒசத்தி ? உன் அப்பாவே எட்டு நாளா இதைத்தான் சாப்பிடறார்."

"என்னம்மா சொல்றே ?"

"நீ போன திங்கட்கிழமை போனே. அன்னிலிருந்து இன்னிவரை கார்த்தாலேயும் ராத்திரியும் மோர் சாதம் தான். இன்னிக் கார்த்தாலே வரை எலுமிச்சங்கா ஊறுகா இருந்தது. இப்ப உனக்கு ஜாடியிலே கொஞ்சம் விழுது ஒட்டிண்டிருக்கு.



"இது என்னம்மா கூத்து ?"

"நீதானே வீட்டுக்கு வேண்டிய கறிகாயெல்லாம் வாங்கிண்டு வர்றவன் ? நீ இல்லே — கறிகாயும் இல்லே !"

"ஏன் வாங்கலை ?"

"டேய், இனிமே நான் பேசலே. நீ வந்ததும் வராததுமா உன் பெண்டாட்டியைப் பத்திக் கோள் சொல்றேன்னு அப்புறம் நீ நினைச்சுக்குவே... சாப்பிடு."

"எதை ? இதையா ?"

"பாபு சாப்பிட்டான் ; மைதிலி சாப்பிட்டா ; உங்க அப்பா சாப்பிட்டா... உனக்கு மட்டும் என்ன ?"

"அவள் ?"

"அவள்தானே சமைச்சா ? அவளும் சாப்பிட்டா."

"நீ, பாட்டி, தாத்தா ?"

"நல்ல வேளையா அவர்களும் நானும்' பொழைச்சுக் கொண்டோம். புளிச்ச இட்லியும் புளிக்காத இட்லியுமா மாறி மாறித் தின்றோம். நாள் விட்டு நாள் அரைச்சா."

கீர்த்தி எழுந்தான்.

"ஏண்டா சாப்பிடலே ?"

"வேண்டியிருக்கலே."

"துளசிட்டே எதுவும் கேட்காதே. என்ன இருந்தாலும் அவ சாது" என்றாள் கற்பகம்.

மாடி அறைக்குள் பிரவேசித்தபோது துளசி படுத் திருந்தாள்.

இரண்டு மூன்று முறை அவளைக் கீர்த்தி கூப்பிட்டான்.

கடைசி அழைப்புக்கு ஒரு முனகல் மட்டும் பதிலாக வந்தது. அதன் பிறகு கீர்த்தி முயற்சியைத் தொடர வில்லை.

மறுநாள்.

தான் கொடுத்த இருநூறு ரூபாயில் அன்றுதான் முதன் முதலாகக் காய்கறி வாங்கப்பட்டிருப்பதைக் கீர்த்தி அறிந்து கொண்டான். துளசி, வண்டிக்காரனிடம் பிளாஸ்டிக் கூடை வழிய காய்கறிகள் வாங்கி வருவதைக் கண்டபோது, அவனுக்கு ஆச்சரியத்தைவிட ஆத்திரம்தான் அதிகம் உண்டாகியது.

இது பற்றி அன்றிரவு அவளிடம் திட்டவட்டமாக விசாரிக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

ஆனால் அன்று இரவு, துளசி தன் திட்டவட்டமான தீர்மானத்தை அவன் முன் கொட்டினாள்.

# 12

துளசி நிறுத்தி நிதானமாக கூறிய வார்த்தைகள் கீர்த்தியின் மனத்தில் நன்றாகவே பதிந்தாலும், அவனால் தன் காதுகளை நம்ப முடியவில்லை. படுத்திருந்தவன் எழுந்து உட்கார்ந்தான். துளசி, கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்து தன் கைரேகையை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் எந்தவிதமான சலனமுமில்லாததைக் கண்ட கீர்த்திக்குக் கோபம் வரவில்லை. மாறாக, கனிவுதான் உண்டாயிற்று.

மென்மையான குரலில் அவன், "துளசி, நீ இப்ப என்ன சொன்னே" என்று கேட்டான்.

"என்னாலே ஆகலே, நான் பாலக்காட்டுக்கு மடங்கிப் போறேன்'னேன்."

கீர்த்தி மீண்டும் மௌனமானான். அவனுடைய மனைவி என்ன சொல்கிறாள்? சொந்தப் பிரக்ஞையுடன்



பேசுகிறாளா அல்லது அவளுள் ஏதோ ஒன்று புகுந்து இப்படிப் பேச வைக்கிறதா?

"துளசி!"

"உம்..."

"நீ எனக்கு என்ன சொந்தம்? நான் உனக்கு என்ன சொந்தம்? இது உனக்கு நன்னாத் தெரியும். தெரிஞ்சிருந்தும் உன்னை மீறிப் பேசறியே?"

"என்னை மீறிப் பேசலே. ஒரு ஆழ்ச்சையா இருபத்து நாலு மணிக்கூறும் நன்னா ஆலோசிச்சு ஆலோசிச்சுத்தான் சொல்றேன். என்னாலே ஆகலை. நான் பாலக்காட்டுக்கு மடங்கிப் போறேன். ஏழே நாப்பதுக்கு தீ வண்டி பொறப்படறதில்லையா? நாளைக்கு நான் அதிலே போறேன்."

கீர்த்தி அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். முகத்தில் அலுப்போ சலிப்போ தெரியவில்லை. வேதனையோ விசனமோ பிரதிபலிக்கவில்லை. உட்கார்ந்திருக்கும் நிலையில் அவளை பார்த்தபோது ஒரு புத்தருடைய சிலை தான் கண்முன் நின்றது. துளசி விருதுவாக, ஒரு பொழுது போக்குக்காக, ஏன், தற்செயலாகத் தோன்றிய ஓர் எண்ணத்தின் பிரதிபலிப்பாகப் பேசவில்லை. தீர்மானமாக ஒரு முடிவை, வாழ்க்கையின் திருப்பத்தைத் தன் இதமான குரலில், பாலக்காட்டுத் தமிழில் பறைசாற்றுகிறாள். மறுநாள் ரயில் புறப்படும் நேரத்தையும் குறிப்பிடுகிறாள்.

திடீரென்று ஓர் எண்ணம் அவனுள் உதித்தது. அவள் கூறிய வார்த்தைகளின் அர்த்தம் முழுமையாக அவனுக்குப் புரிந்திருந்த போதிலும், புரியாதது போலக் காட்டிக் கொண்டான்.

"நாளைக்குப் போனா என்னிக்குத் திரும்பி வருவே?"

"மடங்கி வர்றதுன்னா நாளைக்குப் போகண்ட ஆவசயம் இல்லையே!"

"அப்போ ?"

"நேக்குப் போறும்."

"உனக்கு என்ன போதும் துளசி ?"

"இங்கே இருந்தது !"

"இங்கே என்னோடு இருக்கத்தானே நீ என்னைக் கல்யாணம் பண்ணிண்டே ?"

"நான் கல்யாணம் கழிச்சுண்டதுக்கு மின்னால்த்த காரணம், பொறந்தாத்துச் சொமையிலேந்து தப்பிச்சுக்கணும்னு. ரெண்டாமத்துக் காரணம், இங்கே பொறந்தாத்துச் சொமை இருக்காதுன்னு நெனைச்சது. நீங்க எந்துக்கு என்னைக் கல்யாணம் கழிச்சேள் ? ஒங்காத்துச் சொமையை என் மண்டை மேலே ஏத்தி வைக்கலாம்னு தானே ?"

கீர்த்தியால் உடனடியாகப் பேச முடியவில்லை என்ன பேசுவான் ? என்ன பேச முடியும் ? கல்யாணமான ஏழெட்டு மாதங்களுக்குள் ஒரு பெண் அலுப்பின் எல்லையைத் தாண்டி நிற்கிறாள். இளமையின் ஆசைகளையும் தாபங்களையும் ஒதுக்கி வைத்து விட்டுப் பேசுகிறாள்.

திடீரென்று துளசியின் குரல் கேட்டது :

"நான் தூங்கறேன். நாளைக்கு என்னோடு அவசான சமையல். என்ன சமைக்கணும் ?"

"துளசி !"

"உம்."

"நீ பேசின வார்த்தைகள், நீ எடுத்திருக்கிற முடிவு இதெல்லாம் உன்னை எங்கே கொண்டு போய் விடும்னு நீ யோசிச்சுப் பார்த்தாயா துளசி ? என்னென்ன விபரீதங்கள் உண்டாகும்னு நீ ஒரு நிமிஷம் சிந்திச்சுப் பாரு."



"என்னோடு தீர்மானம் என்னைப் பாலக்காட்டில் கொண்டு போய் விடும்."

"நீ ஒரு ஊரைத்தான் சொல்றே ? உன் வாழ்க்கையை நினைச்சுப் பாரு."

"எல்லாம் ஆலோசிச்சாச்சு..."

"நீ என்னோடு சேர்ந்து இருந்தால்தான் உனக்கு அழகு"

"நேக்கு அந்த அழகு இதுவரைக்கும் கெடைக்கலை. இன்னமேயும் கெடைக்காது."

"நீ எப்படிச் சொல்றே ?"

"ஏழெட்டு மாச அனுபவம் போறாதா ?"

"நான் தனிக்குடித்தனம் வைக்கிறேன்னு வைச்சுக்கோ, அப்ப ?"

"இந்த சோத்தியம் இப்ப எதுக்கு ?"

"சோத்தியம்னா ?"

"கொஸ்டியன், கேள்வி."

"இல்லே, அப்படி நான் உன்னோடு தனிக்குடித்தனம் போனா நீ உன் முடிவை மாத்திப்பியா ?"

துளசி லேசாகச் சிரித்தாள்.

"நானாவது பாலக்காடுங்கற ஒரு ஊருக்குப் போறேன். நீங்கள் போகாத ஒரு ஊருக்கு என்னைக் கூப்பிடறேள் !"

"சரி, அப்படியே நீ போனாலும் அங்கே என்ன செய்வே ?"

"என்ன செய்வேன் ? தூங்குவேன். எழுந்திருப்பேன். சாப்பிடுவேன். தூங்குவேன்... இதென்ன சோத்தியம் ?"

"எப்படிச் சாப்பிடுவாய் ?"

"நீங்கள் என்ன கேக்கறேள்னு நேக்கு மனசிலாகலை."

"சாப்பிடுவேன்னு சொன்னியே, அது எப்படின்னு கேக்கறேன். உன் அம்மா ஜெயாகிட்டே இருக்க பாம்பே போயாச்சு. அவளோடே மணிக்குட்டியும் காவேரியும் போயாச்சு. உன் அக்கா சீதா எர்ணாகுளத்தில். உன் தங்கை பாரதி மாத்திரம் பரீட்சை முடியறவரைக்கும் அண்ணா ராமநாதனோடு இருக்கா ! நீ எங்கே இருப்பே, சாப்பாட்டுக்கு என்ன செய்வே ?"

"ஹங்... இப்படி வெவரமாக் கேட்டாத்தானே நேக்கு மனசிலாகும் ! சாப்பாட்டைப் பத்திக் கேட்டேள். நீங்கள் என் ஆம்படையான். என் கழுத்திலே தாலி கட்டியிருக்கேள். மாசா மாசம் நீங்க பணம் அனுப்பிச்சுத் தரமாட்டேளா ?"

"வெறும் சாப்பாடு மாத்திரம் போதுமா துளசி ! வாழ்க்கைன்னா அதில் எத்தனையோ ஆயிரம் இருக்கு."

"இதோ பாருங்கோ ! நேக்கு என்னோடு வாழ்க்கையிலே இத்ற நாள் ஒண்ணே ஒண்ணுதான் இருந்திருக்கு. மத்தவாளுக்கு ஒழைச்சுப் போடறது. நீங்க சொல்ற ஆயிரத்திலே ஒண்ணையும் நான் கண்டதில்லை. காணணும்கற ஆசையும் இப்ப இல்லை. நீங்கள் மாசத்துக்கு ஏதாவது அனுப்பிச்சுத் தாருங்கோ... என் இஷ்டம் போல உப்புப் புளியை வாங்கிண்டு, இஷ்டம் போலத் தூங்கிண்டு போறென்."

"உனக்கு வயசு இருபத்திரண்டு துளசி !"

"பொறந்த நாள்ளேந்து பாத்தா ஒங்க கணக்கு சரி. நான் வாழ்ந்த நாள்ளேந்து பாத்தா என் வயசு எழுபது."

"நீ ரொம்ப வெறுப்போடு பேசறே துளசி..."

"நேக்கு ஆர்பேர்லேயும் சத்தியமா, குருவாயூரப்பன் சத்தியமா வெறுப்போ கோபமோ இல்லை. இப்படி வாழற வாழ்க்கை நேக்கு மதியாச்சு. நான் போறேன் !"



"நீ கல்யாணம் ஆகி வந்தப்ப, இந்த வீட்லே நீயும் நானும் மட்டும்தான் இருப்போம்னு நீ நினைச்சே, இல்லியா ?"

"எந்துக்குப் பொய் சொல்லணும் ? அப்படித்தான் நெனைச்சேன்."

"நீயும் நானும் மாத்திரம்தான்னு நிலைமை இருந்திருந்தா, நீ இப்ப ஊருக்குத் திரும்ப எண்ணியிருக்க மாட்டே, இல்லியா ?"

"நான் ஒங்களுக்கு என்னன்னிக்கும் கடமைப்பட்டவ. ஒங்களுக்குன்னு நான் என்ன வேணம்னாலும் செய்யத் தயார். ஒங்க சொகம் என் சொகம். ஒங்க துக்கம் என் துக்கம்."

"ஆனா, நீ இப்ப என்னைவிட்டுப் போறேன்னு சொல்றியே ?"

"நான் ஒங்களை இங்கே தனியா நிறுத்தி வைக்கலை. நீங்க இந்த வீட்டோடு வீடா ஒட்டி ஒறைஞ்சு போயிருக்கேள். ஒங்களாலே ஒங்க அப்பா, அம்மா, பாட்டா பாட்டி, அப்றம் வர்றவா போறவா இவாளையெல்லாம் ஒதறி எறிஞ்சுட்டு வரக் கழியாது. இது நேக்கு நன்னாத் தெரியும். அதனாலே இப்பப் போறது ஒங்களை விட்டுட்டுன்னு நாலு பேருக்குத் தோணினாலும், வாஸ்தவத்தில் நான் போறது இந்த வீட்டை விட்டுத்தான்."

"துளசி, நீ போறது தப்பு. நீ நாளையிலேந்து ஒரு காரியமும் செய்ய வேண்டாம். ஒரு நல்ல சமையற்காரியா போடறேன். மாசம் முன்னூறோ நானூறோ ஆனாலும் பாதகமில்லை. நீ இந்த எண்ணத்தை மறந்துவிடு."

கீர்த்தி கெகிழ்ந்தான்.

"ஹேய், நீங்கள் சொல்றது எதுவும் நடக்காது. ஒங்க அம்மா, அப்பா, பாட்டா, பாட்டி எல்லாரும் சமையக்காரி வேண்டாம்பா. நான் ஒருத்தி இருக்கேனேம்பா !"

திடீரென்று கீர்த்தி எதையோ நினைத்துக் கொண்டவனைப் போல, "நான் இந்த ஒரு வாரம் ஊரில் இல்லாதப்போ நீ வெறும் சாதம் மாத்திரம்தான் வடிச்சியாம்" என்றான்.

"ஆமாம்."

"காய்கறி, பழம் எல்லாம் வாங்க நான் உங்கிட்டே பணம் தந்திருந்தேனே ?"

"அதைக் கீழே அலமாரியிலே வைச்சிருக்கேன். கார்த்தாலே தரேன்."

கீர்த்திக்கு அழ வேண்டும்போல இருந்தது. அடக்கிக் கொண்டான்.

"துளசி, எல்லாரும் ஒரு வாரத்துக்கு வெறும் மோர் சாதம் சாப்பிட்டிருக்கா."

"நானும் அதைத்தான் சாப்பிட்டேன். நேக்குன்னு நான் எதுவும் தனியா சமைச்சுக்கலை."

"இன்னிக்கு நிறைய காய்கறி வாங்கினே ! ஏன் ?"

"நீங்க மடங்கி வந்துட்டேள்."

"அப்ப இதுக்கு என்ன அர்த்தம் துளசி ?"

"நான் ஒருத்தி ஒழைச்சாத்தானே எல்லாரும் நாக்கைச் சப்புக் கொட்டிண்டு சாப்பிடறா ?"

"அதனாலே ?"

"இந்தச் சம்பளம் வாங்காத சமையக்காரி இல்லேன்னா என்ன நடக்கும்னு தெரிஞ்சுக்கண்டமா ?"

கீர்த்திக்குக் கோபம் வரவில்லை. யார் மீது கோபிப்பது? துளசி மீதா ? பாவம், அவள் ஓய்ந்து போயிருக்கிறாள். அதே சமயம் மன முதிர்ச்சி இல்லாமல் பேசுகிறாள்.

"அது போகட்டும் துளசி. அடுத்த வாரம் நான் லீவ் போடறேன். உன்னை அழைச்சுண்டு போறேன். பத்துப் பதினஞ்சு நாள் எங்கேயானும் போய் இருப்போம்."



துளசி சிரித்தாள்.

"எங்க ஊர்லே மூர்த்தின்னு ஒரு டாக்டர் இருக்கார். ஒடம்பிலே என்னாவது சுகக்கேடு வந்தா ரெண்டு மருந்து குடுப்பா. ஒரு மருந்து அப்பப்ப வர்ற பனியையோ வலியையோ அப்பப்பக் கொறைக்கறதுக்கு. இன்னொரு மருந்து வியாதியைக் குணமாக்கறதுக்கு."

"நீ என்ன சொல்ல வர்றே துளசி ?"

"உங்க மருந்து இப்ப இருக்கற வலியைக் கொறைக்கும். ஒங்களோடே பத்துப் பதினஞ்சு திவசம் வெளியூர்லே இருந்தாலும் அப்றம் மாடு இந்த ஆத்துக்குத்தானே மடங்கணும் ? என்னோடு மருந்து என்னோடு வியாதியைத் தீர்க்கும் நான் தூங்கறேன்... ஹங்... நேக்கு நீங்க மாசா மாசம் எத்தறை அனுப்புவேள் ?"

"அனுப்பணுமா ?"

"உசிர் போற வரைக்கும் கஞ்சியோ கூழோ வேணமே. அவியலும் பால் பாயசமும் வேண்டாம். ஒரு வேளைச் சாப்பாடாவது வேண்டாமா ?"

"நான் அனுப்பலைன்னா என்ன செய்வே துளசி ? சும்மா ஒரு கேள்விக்காகக் கேக்கறேன் !"

"ஒண்ணும் செயமாட்டேன். சும்மா இருப்பேன்... பசியைச் சகிச்சுக்குவேன். வயத்தை வள்ளம் குடிச்சு நிறைச்சுப்பேன். ஆனா, சத்தியமா கூடப்பொறந்த அண்ணா ஆத்திலேகூடப் போய் நிக்கமாட்டேன்."

கீர்த்தி மௌனமானான்.

என்ன பெண் இவள் ? சாதுவாகத் தோற்றம் அளிக்கும் இவளுள் இவ்வளவு வைராக்கியமா ?

அவளுக்கு ஓய்வு தேவை. தனக்கு நிரந்தரமான ஓய்வும் விடுதலையும்தான் வேண்டும் என்று துளசி நினைக்கிறாள். ஆனால், காலப்போக்கில் அவளே தன்

எண்ணம் தவறு என்பதை உணர்வாள். சில வாரங்களில், சில மாதங்களில் அவளுடைய தனிமையே அவளுக்குப் பெரும் சுமையாகத் தோன்றிவிடும். அப்புறம் துளசி எங்கே போவாள்? போக முடியும்? அவனிடம்தானே திரும்பவேண்டும்?

"மாசம் முன்னூறு போறுமா?"

"போறும். ஆனா, அதை விடாம அனுப்புங்கோ, கிட்டேனா!"

கீர்த்திக்கு முதன் முதலாக எரிச்சல் பிறந்தது.

"நான் திடீர்னு செத்துப் போயிட்டா என்ன செய்வே துளசி?"

"அதைப் பத்தி இப்ப ஆலோசிப்பானேன்... இருக்கறதும் சாகறதும் நம்ம கையிலேயா இருக்கு? பகவான் கையிலே தானே!"

"சரி, அப்ப நான் சாகிறவரைக்கும் அனுப்பறேன்."

"அது போறும். இப்ப நான் தூங்கப் போறேன்."

"இப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்கிற உனக்கு எப்படித் தூக்கம் வரும் துளசி?"

"இந்தத் தீர்மானத்தை நான் ஆலோசிச்சு ஆலோசிச்சுத் தானே சேதிருக்கேன். என் மனசிலே ஒரு வெஷமும் இல்லை. வெஷமம்னா என்னன்னு மனசிலாச்சா ப்ரோப்ளம்."

"என் மனசு முழுக்க ஒரே ப்ராப்ளம் துளசி! எனக்குத் தூக்கம் வராது. வரவே வராது" என்றான் கீர்த்தி.

ஒரு குழந்தை கொட்டாவி விடுவது போல துளசி கொட்டாவி விட்டாள். அடுத்த நிமிடமே அவளுடைய தூக்கத்தின் லேசான மூச்சு ஒலிகள், அவளுடைய நிம்மதியின் எதிரொலியாகக் கோஷித்தன.



மறு நாள் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் மங்களூர் மெயிலில் துளசி பிரயாணமானாள்.

விடுமுறைக்கு வீடு திரும்பும் மாணவியைப் போல, பெற்ற குழந்தையுடன் புருஷன் வீடு செல்லும் மனைவியைப் போல, அவள் குதூகலமாய் இருந்தாள். அவளை ரயிலில் ஏற்றி விடச் சென்ற கீர்த்தி, எதையோ பறி கொடுத்தவனைப் போலக் கண்ணில் கட்டும் நீரை உள்ளிழுத்துக் கொண்டு, இலை உதிர்ந்த மரமாய், ரயில் நகரும் வரை கால்வலியையும் உணராமல் நின்றான்.

ஒரு மனைவி ஒரு கணவனை உதறிவிட்டுப் போவதாக அவனுக்குப் படவில்லை. அவனுடைய உள்ளத்தோடு உள்ளமாய், உயிரோடு உயிராய் இணைந்து விட்ட ஓர் உயிர் பிரிந்து விரைவதான எண்ணமே அவனுள் உண்டாயிற்று.

## 13

அன்று பூராவும் துளசி, அம்மணி, அம்மு, எல்லோருமாகச் சேர்ந்து பாலக்காடு வீட்டைச் சுத்தம் செய்தார்கள். மாலை நேரத்துக்குள் வீடு பழைய வீடாக மாறியது.

ஆனால், அப்பா இல்லை.

அம்மா, பாரதி, காவேரி, மணிக்குட்டி இல்லை.

சீதா இல்லை.

வாசு இல்லை.

தொழுவத்தில் மாடுகள் இல்லை.

பூஜை அறை இருந்தது.

அங்கே சுவாமி படங்கள் இருந்தன. சாளக்கிராமம் இருந்தது. பக்த விஜயமும் துதிப்பாடல் புத்தகமும் சுந்தர காண்டமும் இருந்தன.

அம்மு வீட்டைப் பார்த்துக் கொள்ள இருக்கிறாள். அண்ணா இப்போது தன் வீட்டில் இருந்து கொண்டே வக்கில் தொழிலை நடத்துகிறான். அவனுடைய மனைவியால் இவ்வளவு பெரிய வீட்டைப் பராமரிக்க முடியாதாம்.

அம்மணி தினந்தோறும் சமைக்க வருவதாக ஒப்புத்துக் கொண்டாள்.

துளசிக்கு இனிமேல் அவள் வீட்டின் சமையலறையின் முகவரி கூடத் தெரியாது.

அன்று இரவு, அவள் வந்திருப்பதை அறிந்த அண்ணா ராமனாதன் வந்தான்.

"என்ன அண்ணா, மன்னி வரலையா ?" என்றாள் துளசி.

"மன்னிக்கு உன் பேர்லே தேகஷ்கஷியம், நீ அங்கே வராமல் இங்கே ஆருமில்லாத ஆத்திலே எறங்கினதுக்கு."

"அப்றமா வரேன் அண்ணா."

அங்கே உன்னை சரியா வைச்சுக்கலையா ?"

"வைச்சுண்டாளே !"

"பின்னே எந்துக்கு வந்தாய் ? உங்களுக்குள்ளே என்ன சண்டை, என்ன பூசல் ?"

"பூசலும் இல்லை, சண்டையும் இல்லை அண்ணா. நேக்குப் பிடிக்கலை, வந்தூட்டேன்."

"நேக்கு மனசிலாகலை தொளசி."

"நோக்கு மனசிலாகண்டாம் அண்ணா."

"எங்கே இருக்கப் போகிறாய் ?"

"இங்கே, இந்த ஆத்திலே !"

"தனியாவா ?"

"ஆமாம்."



"வேண்டாம் தொளசி. என்னோடு ஆத்திலே வந்து இரு."

"எந்துக்கு ? ஒனக்கும் ஒன் பொண்டாட்டிக்கும் ஆழ்ச்சைக்கு ஆழ்ச்சை தத்தமங்கலத்திலேந்து வந்து போற அவ அம்மா அப்பாக்கும் சமைச்சுப் போடறத்துக்கு என்னை வரச்சொல்றயா அண்ணா ? இன்னமே நான் ஆருக்கும் சமைச்சுப் போடமாட்டேன். நீ ஒன் காரியத்தைப் பார்த்துண்டு பெக்கோ "

ராமனாதன் மேலே பேசவில்லை. திடீரென்று துளசிக்கு மூளை பாதிப்பு ஏற்பட்டு விட்டது என்று எண்ணினான்.

"நான் சொல்றதைக் கேளு துளசி ! நம்ப அப்பா உசிரோடு இருந்தா, நீ இப்படி ஒன் ஆம்படையான்ட்டேந்து ஓடி வந்திருப்பியா ?"

"ஆர் சொன்னா நான் ஓடி வந்திருக்கேன்னு ? மாமனார் மாமியாருக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணிட்டுத் தான் வந்திருக்கேன்."

"அப்ப நீ மடங்கி மெட்ராஸ் போற வரைக்கும் என்னோட இரு. ஊர் சிரிக்கண்டாம் "

"நீ வாயை மூடிண்டு போனாலே போறும். ஊர் சிரிக்காது. நேக்கு தூக்கம் வர்றது."

ராமனாதன் வெளியேறினான். அவனுடைய தங்கை துளசியா இப்படிப் பேசுகிறாள் ? ஜெயாவோ, சீதாவோ, பாரதியோ இப்படிப் பேசியிருந்தால் அவன் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டான். உரத்துப் பேசத் தெரியாத துளசி எப்போதும் எல்லோருக்கும் உபசாரம் செய்யும் துளசி, யாரிடமும் எப்போதும் கோபத்தையே காட்டறியாத துளசி அவனைத் தூக்கி எறிந்து பேசுகிறாள் என்றால் இதற்கு முக்கியமான காரணம் இருக்க வேண்டும். தப்பு யார் மீது, துளசியிடமா, கீர்த்தியிடமா, அல்லது கீர்த்தியின் பெற்றோரிடமா ?

ராமனாதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

ஒரு காலை சுவரில் பதித்து இன்னொரு காலால் கண் கொட்டாமல் நின்ற துளசி, தன்னுள் வார்த்தைகளைத் தேடுவதாகப் பட்டது சிநேகிதி, டாக்டர் மஞ்சுவுக்கு. நான் அளவுக்கு மீறிப் பேசிவிட்டதாக மஞ்சுவுக்குத் தோன்ற வில்லை. உண்மையான நட்பு என்றால் இனிப்போடு நிறுத்திக் கொள்ளக் கூடாது; சிற்சில சமயங்களில் கசப்பையும் காட்ட வேண்டும்.

திடீரென்று துளசி மெதுவாக, தனக்கே உரித்தான மென்மையான குரலில், "மஞ்சு, ஒனக்கு என்னோட அவஸ்தை தெரியாது. அதான் நான் சேதது தப்புன்னு சொல்றாய்!" என்றாள்.

"என்ன அவஸ்தை உனக்கு, என்ன கஷ்டம் உனக்கு?"

"அது ஒரு புராணம்."

"புராணம்னா என்ன புராணம், சீதை அவஸ்தைப்பட்ட மாதிரி நீயும் பட்டயா, இல்லே, திரௌபதி பட்டமாதிரி அவஸ்தைப்பட்டயா? நீ செய்தது தப்பு. பெரிய தப்பு. ஒரு வாரமோ, பத்து நாளோ இருந்துட்டு மெட்ராஸுக்குப் போ. உனக்கு இனிமே கீர்த்திதான் துணை."

துளசி முதன் முதலாகச் சிரித்தாள்.

"ஏண்டீ சிரிக்கிறே துளசி?"

"என் பாட்டீம்மா ஒரு வசனம் சொல்லுவா. அது ஒறமை வந்தது."

"என்ன சொல்லுவா?"

"பத்தெண்ணம் பெத்தவளுக்குத் தலைச்சன்காரி புத்தி சொன்னாளாம். மஞ்சு, என்னைவிட நீ பெரியவள்னாலும் இந்த விஷயத்தில் ஒனக்கு அட்வைஸ் பண்ண வயசு போறாது."

"ஏன்... ஏண்டீ?"



"நீ படிச்சிருக்கலாம். நூறு பேருக்கு ஊசி குத்தியிருக்க லாம். ஆயிரம் பேர் நாடியைப் பிடிச்சுப் பாத்திருக்கலாம். ஆனா... ஆனா..."

"ஆனா, என்னடீ ஆனா?"

"நீ ஒரு ஆம்படையான் கையைத் தொட்டு நாடி பார்த்திட்டில்லை. ஒரு மாமியார் மாமனார் மச்சுனன் நாத்தனார்னு ஒரு பட்டாளத்தைப் பாத்திட்டில்லை."

"அப்ப எதுக்கு என்கிட்டே அட்வைஸ் கேட்க வந்தே?"

இப்போது துளசி கலகலவென்று சிரித்தாள்.

"நான் எங்கேடீ மஞ்சு ஒங்கிட்டே அட்வைஸுக்கு வந்தேன்? நேக்கு நீ அடிநாள்ளே ந்து சிநேகிதி... நேத்தைக்கு மதிராசியிலேந்து வந்தேன். ஒன்னைப் பார்க்கணும்னு தோணித்து, வந்தேன்."

"அவ்வளவுதானா!"

"ஆமாம்."

"அப்ப சரி. சாப்பிடலாம், வா."

"நான் சாப்பிட்டாச்சு. நீ ஒக்காரு. நான் பரிமார்றேன்."

"தேவை இல்லை."

"எந்துக்கு மஞ்சு எம்பேர்லே தேகஷியப்படறாய்? நான் என்ன தப்பு சேதேன்?"

"பசுமாட்டைக் கொன்னுட்டு செருப்புத் தானம் பண்ற மாதிரி இருக்கு!"

"நேக்கு மனசிலாகலை."

"உன் புருஷனை மனசு கலங்கவிட்டுட்டு நீ தனியா சுகமா இருக்கணும்னு வந்துட்டு இப்ப எனக்கு உபசாரம் பண்றியா?"

"அது வேறே, இது வேறே..."

"துளசி !"

"என்ன ?"

"நீ என் சிநேகிதி, என்னைப் பார்க்க வந்திருக்கே... ஆனா அட்வைஸுக்கு வரலே... இருந்தாலும் என் மனசிலே பட்டத்தைச் சொல்லப் போறேன்."

"சாப்பிட்டுண்டே சொல்லு."

"எனக்கு சாப்பாடு முக்கியமில்லை. நீதான் முக்கியம்."

"அப்ப சரி சொல்லு."

"எனக்கு வயசு இருபத்தாறு. கல்யாணம் ஆகவில்லை. ஒரு புருஷனோடு வாழ்ந்தாத்தான் கல்யாணமான ஒருத்திக்கு அட்வைஸ் பண்ண யோக்யதை உண்டுன்னு நீ நினைக்கறே, அது தப்பு..."

"ஏன் நிறுத்தறே, சொல்லு... என்னோடு ரெண்டு காதையும் நன்னா தொறந்து வெச்சுண்டிருக்கேன்."

"ஒனக்கு ஆயிரம் காது இருந்து, அந்த ஆயிரம் திறந்து வெச்சிருந்தாக்கூடப் புண்ணியமில்லை துளசி ! நீ, உனக்கு இருக்கிற மனசில் ஒரு சின்ன இடத்தைத் திறந்து வெச்சுண்டிருந்தாக் கூடப் போதும்."

"சரி, சொல்லு..."

"கல்யாணமோ, இல்லே, அதுக்கு அப்புறம் ஏற்படற தாம்பத்தியமோ சாதாரண சமாசாரம் இல்லை. ஒருத்தனும் ஒருத்தியும் சேர்ந்து வாழறான்னா அது பரஸ்பர சௌகரியத்துக்காக இல்லை. ஒருத்தரோட ஒடம்பை இன்னொருவர் அனுபவிக்கலாம்ங்கற காரணத்துக்காக இல்லை... செக்ஸ், தாம்பத்தியத்தில் ஒரு சின்ன அத்தியாயம்... இயற்கையோட விளையாட்டு தான் அது... ஆனா, ரெண்டு பேரோட மனசுகள் இணைஞ்சு போறதே அதுதான் தாம்பத்தியம்... அதிலே நீ வேறு, நான் வேறுங்கற வித்தியாசம் இல்லை... அவனுக்கு அடிபட்டா இவ அழணும். இவ நல்ல கனவு கண்டா அவன் முழிச்சுண்டு



சந்தோஷப்படணும்... இந்த தாம்பத்தியம் ஒரு வரப்பிரசாதம். அதை நீ பெட்ஷீட்டை உதர்ற மாதிரி உதறிப் போட்டுவிட்டு, இங்கே வந்து நிக்கறே...!"

மஞ்சு பேசப் பேச துளசி தன்னுள் சிரித்துக் கொண்டாள். அவளுக்கு என்ன தெரியும், அவள் சென்னையில் வாழ்ந்த வாழ்க்கை ! கீர்த்தியுடனா அவள் வாழ்ந்தாள், மஞ்சு சொல்லும் தாம்பத்தியத்தை உணர்ந்து அனுபவிக்க ! அவளுக்குத் தினந்தோறும் உடம்பெல்லாம், மனமெல்லாம் வலித்தது. கீர்த்தி ஒரு தடவையாவது அழுதிருப்பானா ? மஞ்சு அவளுடைய சிநேகிதி. பேசுகிறாள். பேசட்டும்.

"துளசி !"

"உம்."

"என்னடீ ? நான் சொல்லிண்டே போறேன். நீ உனக்குள்ளே சிரிச்சுக்கிறே !"

"நீ பாவம் ! சாப்பிடாம, ஒன் தொண்டைத் தண்ணி வத்த உபதேசம் பண்றே. எங்க ஊர் ராமா சாஸ்திரிகள் புரட்டாசி சனிக்கிழமை ராத்திரிகளிலே கதை பண்ற மாதிரி இருக்கு."

"ஓ, அப்படியா !"

"அப்படியேதான் ! ஆனா, ஒரு வித்தியாசம் !"

"என்னடீ அது ?"

"புரட்டாசி மாசத்திலே சிலப்போ மழை கொட்டும். கதை நடக்கறப்ப மழையும் இருக்கும். எல்லா தவளைகளும் கோஷ்டி கானம் செய்யும்."

"ஒகே. துளசி ! இனிமே நான் இது பத்தி உங்கிட்டே பேசமாட்டேன். கடவுள் கொடுத்திருக்கிற வாழ்க்கையை எந்தத் திசையிலே எப்படித் திருப்பிண்டு போகணும்னு நீ ஆசைப்படறியோ அப்படிப் போ ?"

"ஆ, இது விவேகமான அட்வைஸ்... ஒக்காரு. சாதம் போடறேன்" என்றாள் துளசி.

மஞ்சுவின் கண்கள் கனத்தன.

"துளசி, நீ எப்படி இருந்தே! எப்படி மாறிட்டே?" என்றாள் அவள்.

"இன்னமே மாறமாட்டேன் மஞ்சு!" என்றாள் துளசி.

நாட்கள் விரைவாக ஓடுவது போலப் பட்டது துளசிக்கு.

காலை ஐந்து மணிக்கே எழுந்து பழக்கப் பட்டவள், மெல்ல மெல்ல ஏழு மணி வரை தூங்கக் கற்றுக் கொண்டாள். அம்மணி தினந்தோறும் காபியுடன் இட்லி, சேவை என்று ஏதாவது கொண்டு வருவாள். நன்றாகச் சாப்பிட்டு விட்டு, தமிழ் மற்றும் மலையாள தினசரிகள், வார இதழ்கள் என்று பத்தரை வரை ஊஞ்சலில் பதிந்து போவாள். கல்பாத்தி நதியில் அதிகமாகத் தண்ணீர் ஓடாததால் வீட்டிலேயே குளியல். அதன்பின் பூஜை அறை.

பதினொன்றரைக்குச் சாப்பிட உட்கார்ந்தால் பன்னிரண்டுக்கு முன் எழுந்திருக்கமாட்டாள். அம்மணி சொல்லும் ஊர்க் கதைகள் ஊறுகாய் போல ருசித்தன. சரியாகப் பன்னிரண்டரைக்குக் குடையுடன் பஸ்ஸில் ஏறினால் மஞ்சு வீட்டிலிருந்து திரும்பும்போது மணி நாலரை ஆகிவிடும். அப்புறம் டிபன். அடை, தோசை, அரிசி உப்புமா என்று ஏதேனும் ஒன்று.

மாலை வேளையில் ஆளோடியில் நின்று நின்று, யார் யார் வீட்டிற்கு யார் யார் வந்து போகிறார்கள் என்ற வேடிக்கை பார்வை. திடீரென்று சாத்தப்பனின் நாகசுரம். இறங்கி நடப்பாள். தீபாராதனை. அப்புறம் என்ன? வீடு, பத்திரிகை, ஒரு மோர் சாதம், ஊஞ்சலில் படுக்கை.



அம்மணி கீழே தூங்க, வேலைக்காரி அம்மு தாழ்வாரத்தில் உறங்க, இரவு ஓடிவிடும்.

ஆடாத ஊஞ்சலில் கனவுகள் ஓடாத தூக்கம். நிம்மதியான தூக்கம்.

வாரங்கள் ஓடின.

ஒரு நாள் கீர்த்தியிடமிருந்து முன்னூறு ரூபாய்க்கு டிமாண்ட் டிராஃப்டும் கடிதமும் வந்தன. துளசி கடிதத்தைப் படித்தாள்.

'...நீ விரும்பிய ஓய்வை நன்றாக அனுபவித்துக் கொண்டிருக்கிறாய் என்று நம்புகிறேன். மறுபடியும் இங்கு எப்போது வர நினைக்கிறாய் என்று தெரிந்தால், நான் உடனே வந்து அழைத்துப் போகிறேன்.

என்றும் உன் பிரியமுள்ள,
கீர்த்தி.

பி. கு: பாட்டி இறந்து போய்விட்டாள். இன்று சுபசுவீகாரம் நடந்து முடிந்தது.

—கீ.'

கடிதத்தை மடித்து உறைக்குள்ளேயே போட்ட துளசி முன்னூறு ரூபாய்க்கான டி. டி-யைப் பார்த்தாள். 'நாளைக்கு பாங்கில் கட்ட வேண்டும்.'

அடுத்த மாதம் கடைசி வெள்ளிக்கிழமை. வாசலில் ஆள் அரவம் கேட்கவே, எழுந்தாள் துளசி.

டாக்டர் மஞ்சுவின் தந்தை கேஜி, ரேழியில் காலணிகளை வைத்துவிட்டு நகர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார்.

துளசி வியப்பில் ஒரு கணம் தன்னை இழந்தாள். கேஜி அநாவசியமாக யார் வீட்டுக்கும் போகாதவர். அவருடைய

உலகம் தம் வீட்டு நந்தவனத்திலும் புத்தகங்களிலும் பழைய கிராமபோன் சங்கீதத்திலும் தான் சுற்றும். அவர் எதற்கு இப்போது வருகிறார்?

"குட்மார்னிங் துளசி!"

"வாங்கோ மாமா... மஞ்சு வரலையா?"

"மஞ்சு எப்படி வருவாள்? அதுவும் காலை வேளையிலே! இன்னிக்குக் கொல்லங்கோடு போயிருக்கா..."

"எப்படி வந்தேள்?"

"நடந்து..."

"நடந்தா?"

"ஆமாம்... குறுக்கு வழியா வந்தா உன் வீட்டுக்கு ரெண்டு மைல்தானே...? நான் டெல்லியிலே இருக்கறப்போ செக்ரடேரியட்டிலிருந்து லோடி காலனி வரைக்கும் தினமும் நடப்பேன்."

"இப்ப மின்னாலே ஒக்காருங்கோ... காபி கொண்டு வரச் சொல்றேன்... அம்மணி...டீ அம்மணீ ஈ...! காபி கொண்டாடீ."

"காபி மெல்ல வரட்டும். நீ இப்ப என்ன செய்யறே துளசி?"

"என்ன மாமா கேக்கறேள்?"

"இல்லே, வீட்லே உட்கார்ந்து என்ன செய்யறேன்னு கேட்டேன்."

"என்ன செய்யறேன்னு கேட்டா என்ன உத்தரம் சொல்றது. டிபன் திங்கறேன். பேப்பர் படிக்கறேன். திவசம் ஒங்காத்துக்கு வரேன்!"

"மஞ்சு சொன்னா! நீ மெட்ராஸ்லேந்து ஒரே அடியாய் வந்து விட்டாய்னு!"

"ஆமாம்"



"அது உன் இஷ்டம். நான் இப்ப எதுக்கு வந்தேன்னா?"

"அதைச் சொல்லாம ஊரைச் சுத்தி வளைக்கிறேள்."

"சொல்றேன்... சொல்றேன்... என் பெண் மஞ்சு இப்ப தினமும் காலங்கார்த்தாலே இந்த ஊர் அந்த ஊர்னு ஆயிரம் ஊருக்குத் தனியாப் போறா."

"தெரியுமே!"

"ஒரு பணக்காரன் வீடு ஏறி இறங்கினா பத்து ஏழைகளோட, குடிசைகளுக்கும் போறா!"

"அதுவும் தெரியும் மாமா!"

"அவளுக்கு ஒரு ஹெல்ப் வேணும்."

"ஹெல்புன்னா! எப்படி ஹெல்ப்?"

"உன்னை மாதிரி ஒருத்தி அவகூடப் போனா அவளுக்குப் பலவிதத்தில் சௌகரியமா இருக்கும்."

துளசி ஒரு கணம் யோசித்தாள். இம்மாதிரி ஒரு உதவி தேவை என்று இதுவரை ஒரு தடவைகூட மஞ்சு தன்னிடம் கேட்டதில்லை. ஆனால், அவள் சார்பாக கேஜி மாமா கேட்கிறார்.

"நீ என்ன சொல்றே துளசி?"

"நான் வெறும் பத்தாம் கிளாஸ்தானே மாமா?"

"படிப்புக்கும் இந்த வேலைக்கும் சம்பந்தம் இல்லை துளசி. ஒருத்தி மஞ்சுகூட தினசரி போய் வந்தாலே போறும். அவள் என்ன செய்கிறாள்னு உனக்கும் தெரியும். நீயும் சும்மா வீட்லே உட்காராம, காரிலே தினமும் நாலு இடம் பார்க்கலாம். திரும்பி வந்து மஞ்சுவோட சாப்பிடலாம். சாயங்காலம் அவ கிளினிக்குப் போய்விடுவா. நீ இங்கே வந்துக்கலாம்!"

துளசி யோசித்தாள். அவளுக்கு அவளுடைய ஊஞ்சல் அலுத்துப் போகவில்லை என்றாலும், மாற்றம் மேலும்

சுகத்தை அளிக்கக்கூடும் என்று தோன்றியது. எதற்கும் மஞ்சுவைக் கலந்து முடிவு எடுக்கலாமே!"

"நான் இன்னிக்கு ஒங்காத்துக்கு வருவேன் இல்லியா! அப்போ மஞ்சுவோடே இதைப் பத்தும் பேசறேன்!"

பதில் பேசாமல் கேஜி புறப்பட்டார்.

அன்று குடையுடன் அவள் புறப்படவும் கீர்த்தியின் மாதாந்தரக் கடிதம் வரவும் சரியாக இருந்தது. வழக்கம் போல முன்னூறு ரூபாய். ஒரு சிறு கடிதம். எப்போதும் போல கீர்த்தி அவளுடைய வருகையை எதிர்பார்த்திருந்தான்.

கடிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டு, டி.டி-யை மட்டும் உறைக்குள் போட்டு, கைப்பையில் வைத்துக் கொண்ட துளசி, பஸ்ஸைப் பிடிக்க விரைந்தாள்.

அப்போது, தான் விரைவது கேவலம் ஒரு பஸ்ஸைப் பிடிக்க அல்ல, வாழ்க்கையில் புதிதாக அமையப் போகும் ஒரு பாதையைத்தான் என்பதைத் துளசி உணரவில்லை.

# 14

துளசி மஞ்சுவின் வீட்டுக்குச் செல்ல பஸ்ஸைப் பிடிக்க விரைந்தாளே தவிர, அந்த இரண்டாம் நம்பர் பஸ்ஸைப் பிடிக்கவில்லை. குடையுடன் நின்றவளுக்குத் திடீரென்று தலை சுற்றியது. கண்கள் செருகின. குடையும் கைப் பையும் நழுவி விழுந்தன.

என்ன நடக்கிறது?

அவள் நிற்கிறாள்.



கிருஷ்ணன் கோயில் துவஜஸ்தம்பம் அவளைச் சுற்றிச் சுற்றி ஓடுகிறது!

துளசி கண்களை இறுக மூட முயன்றாள். முடியவில்லை. தன்னுடைய நிலைமை என்ன என்பதையும் அவளால் உணர்ந்து புரிந்து கொள்ள முடியவில்லை. பஸ் வந்து போயிற்று. ஆட்கள் இறங்கி, ஆட்கள் ஏறினார்கள். யாரோ தெரிந்த ஒருத்தி, "துளசி, நீ ஏறலையாடி?" என்று கேட்டது ஏதோ தொலை தூரத்திலிருந்து வரும் ஒலியாகக் கேட்டது.

திடீரென வந்த தலை சுற்றல் மெல்ல மெல்லக் குறைவதாகப் பட்டது. ஏற்கெனவே ஒரு திண்ணைச் சுவரில் சாய்ந்திருந்த அவள், மெல்ல நகர்ந்தாள். மெல்லக் குனிந்து குடையையும் கைப் பையையும் எடுத்துக் கொண்டாள். மெல்ல நடந்தாள். கால்கள் பின்னின. அடிவயிற்றில் ஒரு பூகம்பம் பிறந்துவிட்ட மாதிரி வலி. ஊற்று நீர் பீரிட்டு மேல் நோக்கி வருவதான பிரமை.

தனக்கு ஏதோ பெரிசாக வந்துவிட்டது என்ற பயம் ஒரு பக்கம் அழுத்த, எப்படியாவது வீட்டை அடைந்து முற்றத்தினருகே உட்கார்ந்துவிட வேண்டும் என்ற பிடிவாதம் அவளைச் சற்றே விரைய வைத்து.

படி ஏறுகையில் அம்மணி, "என்னடீ தொளசி... என்னாச்சு?" என்று கேட்டாள்.

துளசி அவளைத் தாண்டி ரேழியைக் கடந்து முன் தாழ்வாரத்தை அடைந்தாள். முற்றம் அவள் கண்ணுக்கு ஒரு பெரிய அடிதட்டிய குளம் போலப் பட்டது. முற்றத்தின் விளிம்பில் இருந்த சிறு பெஞ்சியைக் கைத்தாங்கலா, வைத்துக் கொண்டு, இன்னொரு கையால் தலையை அழுத்திக் கொண்டாள்.

வாய் கசந்தது.

வயிறு குமட்டியது.

தலை சுற்றலும் ஒரு மாதிரியாக நின்றது.

"அம்மணி... வேகத்திலே வள்ளம் தாடீ !"

"இதோ பாரு, வள்ளமும் கையுமாத்தான் நிக்கறேன்."

அள்ளி அள்ளி வாயில் விட்டுக் கொப்புளித்தாள்.

"என்னவோ சேயறதடீ."

"அப்படித் தாண்டீ தொளசி, சேயும்... கொஞ்சம் இரு. ஒன் வாய் நெறைய பஞ்சாரை போடறேன்."

"நீ... நீ... என்னடீ சொல்றே ?"

"நீ கீர்த்தியை விட்டுட்டு வந்துட்டாய்... ஆனா, ஒனக்கு அவன் தந்ததை ஒன்னோடேயே கொண்டு வந்திருக்காய்."

"அம்மணி... அம்மணி ! என்ன உளர்றாய் ?"

"நான் ஒண்ணும் உளறலை. நீ மதிராசியிலேந்து வந்து சரியா நாப்பத்து நாலு நாளாறது. மின்னால்ந்த முன்னூறு ரூபாய், நீ வந்த பதினேழாம் நாளே வந்தது. ரெண்டாம்ந்தது இன்னக்கி."

"இருடீ... இருடீ..."

துளசி உட்கார்ந்த நிலையிலேயே நாட்களை எண்ணினாள்.

"எந்துக்கடீ மண்டையை ஒடைச்சுக்கிறாய் தொளசி ? நீ பாலக்காட்டுக்கு வந்தப்றம் ஒருக்காகூடச் குளிச்சுட்டில்லை. அங்கே என்னக்கிக் குளிச்சாய் ? ஒறமை இருக்கா ?"

அம்மணி இப்போது கை கொட்டிச் சிரித்தாள்.

"ஐயோ, குருவாயூரப்பா !"

"ஐயோ குருவாயூரப்பன்'னு சொல்லாதேடீ தொளசி ! குஞ்சு குருவாயூரப்பன்னு சொல்லு."

துளசி எழுந்து நின்றாள்.

தலை சுற்றல் இல்லை.



வலி இல்லை.

குமட்டல் இல்லை.

அவளைப் பொறுத்தவரையில் கீர்த்தியின் பிரதிநிதியும் இல்லை, குஞ்சு குருவாயூரப்பனும் இல்லை.

"நேக்கு சில சமயம் நாள் தள்ளிப் போறதுண்டுடீ, அம்மணி..."

"கல்யாணத்துக்கு மின்னாலே ஒனக்கு இந்த ப்ரோப்ளம் உண்டுன்னு நேக்குத் தெரியும்டீ ! நீயே சொல்லியிருக்காய். ஒருக்கா நாப்பது நாள். இன்னொருக்கா பதினெட்டு நாள்... ஆனா, இப்ப நீ கல்யாணம் ஆனவள், ஒறமை வைச்சுக்கோ !"

"ஒரு க்ளாஸ் மோரு தாடீ... குடிச்சுட்டு மஞ்சுவாத்துக்குப் போறேன்."

"நல்ல சம்பாரமாக் கொண்டு வரேன் இரு. மஞ்சுட்டேயும் கேளு அவ டாக்டராச்சே !"

"பிராணனை வாங்காதேடீ அம்மணி !" என்றாள் துளசி. அவள் மனத்தில் சந்தேகம் இல்லை என்றாலும் பயம் உலுப்பத் தொடங்கியது.

ஏன் தலை சுற்றியது ?

முந்தின நாள் மாலை வேர்க்கடலை தின்றாள் கொஞ்சம் தானே தின்றாள் ? மத்தியானம் அம்மணி சேஷுவின் வீட்டிலிருந்து இரண்டு ரூபாய்க்கு பஜ்ஜியும் போண்டாவும் வாங்கி வந்திருந்தாள். பெரும் பகுதியை அம்மணி தானே முழுங்கினாள் ? இன்று காலையில் காபி குடித்தாள், தேங்காயை அரைச்சு வறுத்துப் போட்ட நேந்திரங்காய் எரிசேரியை எப்போதும் சாப்பிடுவது போலச் சாப்பிட்டாள். அவளுடைய வயிற்றுக் குமட்டலுக்கு இந்த ஆகாரங்கள் தான் காரணமோ ?

அப்படித்தான் இருக்க வேண்டும். குருவாயூரப்பா, மறுபடியும் சுமையைத் தலைமேல் ஏற்றி வைக்காதே!

டாக்டர் மஞ்சுவின் தகப்பனார், கேஜி எனும் கே. கோபாலன் அறுபது வயதில் ஐம்பது வயதுக்காரராக ஓடி ஆடினார். சதைப்பற்று இல்லாத உடல் ஒரு வஜ்ரக் கட்டை. மஞ்சுவுக்கு மூன்று வயது நடக்கையில் அவளைப் பெற்றவள் அகாலமாகப் போனாள். அவளுடன் சில ஆண்டுகளே கேஜி வாழ்ந்திருந்த போதிலும், அந்த வாழ்க்கை, தொண்டையில் இறங்கிய பிறகும் நாவில் இனிப்புத் தவழ்ந்து ருசிப்பது போல மனத்தில் மணத்தது. இந்த இனிப்பான மணத்தைக் கசப்பாக்கி நாறப்படுத்தக் கூடாது என்ற ஒரே எண்ணத்தில், கேஜி இரண்டாவது மணமேடையை மறந்தார். மஞ்சு, பாலக்காட்டில் கல்பாத்தி கிராமத்தில் வளர, அவர் டில்லி செக்ரடேரியட்டுடன் தொடர்ந்து வாழ்ந்தார். சர்க்கார் ஐம்பத்தெட்டு வயது வரை நாற்காலியைத் தேய்க்க அனுமதி அளித்திருந்தாலும், பெண் மஞ்சுவை உத்தேசித்து இரண்டு ஆண்டு முன்னதாகவே பாலக்காட்டுக்கு வந்து ராபின்சன் தெருவில் மனைவிக்குச் சீதனமாக வந்த வீட்டில் குடியேறினார்.

இந்த நான்கு ஆண்டுகளில் பாலக்காட்டுப் பதினெட்டு கிராமங்களிலும் சரி, சுற்றுப்புற ஊர்களிலும் சரி, கேஜியைத் தெரியாதவர்கள் இல்லை. இவ்வளவுக்கும் அவர் தாமாக யார் வீட்டுக்கும் போனதில்லை. அவரை நாடி எல்லோரும் வந்தார்கள். அவருடைய சாரீரத்தை அனுபவிக்க, அவருடைய யோசனைகளைக் கேட்க, முன் பின் தெரியாதவர்கள்கூட தெரிந்தவர்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டு பார்க்க வந்தார்கள்.

கேஜிக்கு நூற்றுக்கணக்கான பஜனைப் பாடல்கள் அத்துபடி. எந்தக் கிராமத்தில் என்ன பஜனை நடக்கட்டுமே அங்கே அவர் இருப்பார்! அவர் ஏதேனும் ஒரு கிராமத்தில் தோன்றினார் என்றால் அங்கே பஜனை நடக்கப்போகிறது என்று அர்த்தம். இது தவிர, சாஸ்தா பக்தி வேறு. நூரணி ஒரு பெரிய கிராமம். மார்கழியில் கோலாகலத்துடன் சாஸ்தாவுக்கு ப்ரீதி நடக்கும்.



வீட்டுக்கு வெளியே ஒரு சங்கீத சபாவின் உபதலைவர் என்றால், வீட்டில் தொண்டர். சமையற்காரி வராத நாட்களில் மஞ்சுவுக்குச் சமையற்காரர் வீட்டைச் சுற்றி ஒரு நந்தவனம். பூஜைக்குத் தேவையான அர்ச்சனைப் பூக்கள் மலரும்போது அவரும் மனம் மலருவார். பூச்செடிகளுக்கு அவர் தோட்டக்காரர்.

தேனீகூட ஓய்வெடுத்துக் கொள்ளும். அதைப் பாராமலே சுறுசுறுப்பாயிருக்கும் கேஜி, அதைப் பார்த்தும் புத்தி வராமல் இயங்கிக் கொண்டே இருந்தார்.

அன்று பிற்பகல் வாசல் வெராந்தாவில் உட்கார்ந்து புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கையில் இரும்பு கேட்டைத் திறக்கும் சத்தம் கேட்டது. பார்த்தார்.

துளசி!

கேஜி தம்முள் சிரித்துக் கொண்டார். முந்தின நாள் அவர் துளசியைச் சந்தித்துப் பேசியது பயன் அளிக்கப் போகிறது என்று எண்ணினார்.

துளசி எப்போதுமே எந்த அவசரமுமில்லாமல், நிதான நடையில் வருகிறவள். அன்று நடையில் நிதானம் இல்லை. ஒரு தள்ளாட்டம் இருப்பதாகப் பட்டது கேஜிக்கு.

"என்ன துளசி, ஒரு மாதிரியா இருக்கே! உடம்புக்கு ஒண்ணுமில்லையே?" என்றார் அவர்.

"மஞ்சு இருக்காளா மாமா!"

"உள்ளே ஏதோ எழுதிண்டிருக்கா. நான் கேட்டதுக்கு ஒரு பதிலும் இல்லியா?"

"ஒண்ணுமில்லே மாமா!" என்று சொல்லிவிட்டு, துளசி உள்ளே சென்றாள்.

பத்தாவது நிமிடம் மஞ்சு வெராந்தாவுக்கு வந்தாள்.

"என்ன மஞ்சு ?"

"ஒரு குட் நியூஸ் !"

"என்ன ?"

"துளசி மெட்ராஸ் திரும்புவாள் !"

"என்ன... என்ன சொல்றே ! துளசியே இதைச் சொன்னாளா ?"

"அவ சொல்லலே... அவ அழறா..."

"விவரமாச் சொல்லு மஞ்சு... இப்ப அவ எங்கே ?"

"இப்ப என் பெட் ரூம்லே என் கட்டில்லே என் மெத்தையிலே படுத்துண்டிருக்கா."

கேஜி புரிந்து கொண்டார்.

கலகலவென்று சிரித்தார்.

"மஞ்சு, மனுஷன் என்னதான் ஒரு முடிவு எடுத்தாலும் 'மடையா, நான் ஒருத்தன் எல்லாத்தையும் பார்த்துண்டிருக்கேண்டா'ன்னு தெய்வம் சொல்லாமச் சொல்றது பார்த்தாயா ! துளசி என்ன பிடிவாதமா வந்தா... யார் உபதேசமும் அவசியம் இல்லைன்னா, ஆனா பாரு, இயற்கை ஒரு முடிவை எடுத்து அவ மடியிலே போட்டுடுத்து !"

"இப்ப வயத்திலேதாம்ப்பா இருக்கு. மடியில் விழ எட்டு மாசம் ஆகும் !"

"யாரையாவது அனுப்பிச்சு ஐஸ்கிரீம் வாங்கிண்டு வரச் சொல்லு. துளசிக்கு ஐஸ்கிரீம்னா உசிர் !"

"சரிப்பா."

"என்னடீ மஞ்சு, நீங்க ரெண்டுபேரும் கை கொட்டிச் சிரிச்சுப் பேசற மாதிரி இருக்கு?" என்று கேட்டுக் கொண்டே துளசி வந்தாள்.



"உன்னைப் பேசாமல் படுத்துண்டிருன்னு சொன்னேன் இல்லியா !" என்றாள் மஞ்சு.

"அவ கேட்டைத் திறந்துண்டு அடிமேல் அடி வைச்சு நடந்து வந்தப்பவே எனக்கு என்னவோ தோணித்து... ஆனா, விஷயம் இதுதான்னு நினைக்கலை. நீ டாக்டர், உடனே புரிஞ்சுடுத்து."

"வெறும் ஸிம்ப்டத்தை வைச்சுண்டு மஞ்சு என்னைப் பயமுறுத்தறா."

"என் பொண் ஒரு டாக்டர் துளசி ! ஹாப்பியா இரு."

"இவ நாடி பாக்கற டாக்டர். ஸ்பெஷலிஸ்ட் இல்லை. நேக்கு ஒண்ணும் இல்லைன்னுதான் தோணறது" என்றாள் துளசி.

"வேணும்னா சாயங்காலம் டாக்டர் கோஷிட்டே போவோம். என்னென்ன டெஸ்ட் பண்ணணுமோ அதை எல்லாம் பண்ணிடுவோம் ! என்ன அப்பா சொல்றேள் ?"

"அதைச் செய் ! நாளைக்கு ரிப்போர்ட் வந்ததும் இவளே கீர்த்திக்கு லெட்டர் போடுவா, பாரு !"

"மாட்டேன், நான் எந்துக்கு எழுத்துப் போடணும் ? நேக்கு ஒண்ணுமில்லை !"

"சந்தோஷமா இருக்கணும் துளசி ! நீ தாயார்ங்கற ஸ்தானம்- இல்லை, அது ஒரு பதவி- எல்லார்க்கும் எளிசாக் கிடைச்சுடறதா ? மஞ்சு, நாளைக்குத் துளசி நம்ப வீட்டில் சாப்பிடறா... பருப்பும் பாயசமுமா !"

"நேக்கு எல்லாம் வெஷமாயிருக்குடீ மஞ்சு ! நீங்க ரெண்டு பேரும் சிரிச்சுச்சாடறேள் ! குருவாயூரப்பா, கோஷி டாக்டர் நல்லபடியா சொல்லணுமே !"

அன்று மாலை டாக்டர் மஞ்சு துளசியைத் தன்னுடைய காரில் அழைத்துப் போனாள். அவள் சிரிக்கச் சிரிக்க, துளசிக்கு அழுகைதான் வந்தது. துளசியின் வயிற்றுச்

சுமை வாழ்க்கைப் பிரச்சனையைத் தீர்க்கப் போகிறது. ஒரு குழந்தை என்று வந்து விட்டால், எந்தப் பெண் அதைக் கொடுத்தவனை உதறி எறிவாள்!

"சும்மா சும்மா தோக்குள்ளேயே சிரிச்சுக்காதே மஞ்சு!"

"ஏண்டீ துளசி, சிணுங்கறே? இப்ப என்ன ஆயிடுத்து! யாருக்கும் நடக்காததா உனக்கு நடந்திருக்கு?"

மறு நாள் காலையில்தான் பரீட்சையின் முடிவு தெரியும் என்று டாக்டர் கோஷி கூறவே, மஞ்சு துளசியைக் கல்பாத்தியில் இறக்கிவிட்டுத் திரும்பினாள்.

துளசியின் வருகைக்காகவே காத்திருந்த அம்மணி, "டாக்டர் என்னடீ சொன்னா?" என்று கேட்டாள்.

"மஞ்சுவைப் போச்சொல்லடீ! நான் ஒண்ணு சொல்றேன்; அவ ஒண்ணு பேசறா."

"ஒன்னைவிட மஞ்சுவுக்குத் தெரியும், அவ டாக்டர்."

துளசி பதில் சொல்லாமல் ஊஞ்சலில் உட்கார்ந்தாள்.

அறிகுறிகள் பயமுறுத்தின. டாக்டர் மஞ்சு தீர்மான மாக இருக்கிறாள்! கேஜி குதிக்கிறார். அம்மணி டான்ஸ் ஆடுகிறாள்!

ஆனால் அவன்?

மறுபடியும் மெட்ராஸா?

மாமியார் மாமனாரா?

நாத்தனார் மைத்துனனா?

வயிற்றில் மட்டுமா சுமை இருக்கும்?

கீழே வைத்துவிட்டு வந்த சுமையும் அல்லவா மீண்டும் தலையில் ஏறும்!

சென்னையிலிருந்து வந்த பின், முதன் முதலாகத் துளசி தூங்கவில்லை.



டாக்டர் கோஷியும் அவளுடைய ஆஸ்பத்திரியும் துளசியைச் சுற்றிச் சுற்றி வந்தன.

பெறாத குழந்தை அழுதது.

அழுகையில் துளசி மனம் விம்மவில்லை. பயந்தாள். அடிக்கடி அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். ஏதோ ஒன்று விரலில் நெருடுவதாக உணர்ந்தாள்.

பயம் விடியவில்லை.

ஆனால், பொழுது விடிந்தது!

அவசர அவசரமாகத் துளசி, டாக்டர் கோஷியின் மருத்துவமனையை அடைந்த போது காலை மணி ஏழேமுக்கால்

மஞ்சுவின் காரைப் பார்த்தாள். பிறகு விசாரித்தாள். பாதி விசாரணையின் போதே டாக்டர் கோஷி கையில் ஒரு காகிதத்துடன் முகம் மலர தன் அறையிலிருந்தும் வெளி வந்து கொண்டிருந்தாள். பின்னால் ஒரு நர்ஸ். நர்ஸைத் தொடர்ந்து மஞ்சு.

துளசியால் டாக்டர் கோஷியின் முகமலர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இடி விழுந்த வலியில் துவண்டு போய்ச் சுவரில் சாய்ந்து கொண்டாள்.

'குருவாயூரப்பா, நீயுமா என்னைக் கை விட்டு விட்டாய்?'

# 15

டாக்டர் கோஷியைப் போல ஒரு சிறந்த, அதே சமயம் நல்ல குணம் படைத்த மருத்துவ ஞானியைப் பார்க்க முடியாது என்று அவளைத் தெரியாதவர்களும்

சந்திக்காதவர்களும் கூடச் சொல்லுவார்கள். பூர்வாங்க சோதனையின் போதே டாக்டர் கோஷிக்குத் துளசியின் கோளாறு என்ன என்று தெரிந்துவிட்டாலும், மஞ்சுவின் வேண்டுகோளின் பேரில் செய்ய வேண்டிய சோதனைகளைச் செய்தாள். மஞ்சு எப்படித் தவறு செய்திருக்க முடியும் என்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

"உன் பேஷண்ட்டுக்கு ஒரு ப்ராப்ளம். சின்ன ப்ராப்ளம். ஒன் ஸ்மால் க்ரோத்... இப்படியே விட்டு வைச்சா சதை இன்னும் வளரும்... சிக்கல்கள் ஏற்படும்...

"ஈஸ் ஸர்ஜரி கால்ட் ஃபார் டாக்டர்?" என்று கேட்டாள் மஞ்சு. அவள் திடீரென்று சோர்வடைந்து விட்டாள்.

"நோ, நோ... நோ ஸர்ஜரி அட்டால்..." என்ற டாக்டர் கோஷி, தொடர்ந்து இஞ்சக்ஷன்களினாலும் மாத்திரைகளினாலும் துளசியின் கோளாறை அகற்றி விடலாம் என்று தனக்கே உரித்தான புன்சிரிப்புடன் கூறினாள்.

"ஸாரி டாக்டர்... நான் ஏமாந்துட்டேன்..."

"டோண்ட் வொரி மஞ்சு. நீ இப்பத்தானே தொழில்லே இறங்கியிருக்கே... நமக்கெல்லாம் நாள் ஆக ஆகத்தான் அனுபவம் வரும்..."

மஞ்சு பதில் பேசவில்லை. தன்னுடைய ஏமாற்றம் தான் செய்த தப்புக் கணக்கால் அல்ல என்று உணர்த்த வேண்டும் என்று ஒரு கணம் மனம் எண்ணியது. மறு கணமே எண்ணத்தைக் கைவிட்டாள். துளசியின் கதையை இவளிடம் சொல்லுவானேன்?

உயிரில்லாத சிரிப்புடன் பெரிய டாக்டரிடம் விடை பெற்றுக் கொண்டு மஞ்சு வந்தாள்.

இன்னும் சுவரிலேயே சாய்ந்திருந்த துளசிக்கு ஒன்றும் புரியவில்லை. டாக்டர் கோஷியின் முக மலர்ச்சி சிரிப்பும்



ஏற்படுத்திய பயம் இன்னும் அவளைக் கவ்விக் கொண்டிருந்தது. டாக்டர் கோஷியிடம் விடை பெற்றுக் கொள்ளும் போதுதான் முதன் முதலாக மஞ்சுவின் முகத்தையும் புன்சிரிப்பையும் அவள் கண்டாள். என்ன செய்ய?

திடீரென்று மஞ்சுவின் குரல் கேட்டது.

"வா துளசி, போலாம்."

மௌனமாகப் பின் தொடர்ந்த துளசி காரில் ஏறினதும், "மஞ்சு, டாக்டர் கோஷி என்ன சொன்னா?" என்று கேட்டாள்.

"சுரைக்காய்க்கு உப்பு இல்லைன்னா... துளசி, நான் உன்னைக் கல்பாத்தியில் இறக்கி விட்டுவிட்டுப் போறேன். அது வரையில் நீ உன் வாயைத் திறக்காதே..."

"ஏன்... ஏன் மஞ்சு? நேக்கு என்ன இருக்குன்னு நீ சொல்லப்படாதா?"

"உனக்கு ஒரு சுக்கும் இல்லை. நீ என்னத்தையோ வேளை கெட்ட வேளையில் தின்னிருக்கே. தலை சுத்தியிருக்கு... பித்த வாந்தி! சீ...இப்படியா இது முடியணும்?"

துளசி இருந்த இடம் ஓடுகிற காராகப் போய்விட்டது. இல்லாமற்போனால் அவள் ஒரு நாட்டியமே ஆடி, மஞ்சுவைச் சுற்றிச் சுற்றி வந்திருப்பாள்!

"அப்பாடி... பொழைச்சுண்டேன்... குருவாயூரப்பன் என்னைக் கை விடலை!"

"நீ சந்தோஷப்படு... எனக்கு... எனக்கு..."

"ஆங்காரம் வர்றதா...? நேத்திக்கு நீயும் ஒன் அப்பாவும் எப்படிச் சாடினேள்...! என்னை அழ வைச்சேள். இப்ப நான் சாடறேன்..."

மஞ்சு மௌனமானாள்.

துளசி தொடர்ந்தாள்:

"மஞ்சு, ஒனக்கு இப்ப ஏன் மனசு கலங்கறதுன்னு நோக்குத் தெரியும். இட்டியா? என் வயத்திலே ஒரு கொழந்தை ஜனிச்சுட்டா, நான் ரெண்டாம் பேருக்குத் தெரியாம வந்த மாதிரியே மடங்கிப் போயிடுவேன்னு நீ நினைச்சாய்! இல்லையா மஞ்சு?"

சில நிமிடங்கள் மௌனமாக இருந்த மஞ்சு, "ஆனா நீ, நான் தரப் போற மருந்தைச் சாப்பிடணும். வாரத்துக்கு ஒரு இஞ்சக்ஷன்னு பத்து இஞ்சக்ஷன் போட்டுக்கணும்..." என்று சொல்லிவிட்டு அவளுடைய உபாதையை விளக்கினான்.

"பத்தெண்ணம் என்னா, நூறு எண்ணம் வேணாக்கூடி ஊசியாலே குத்து குத்துன்னு குத்து... அதா கிருஷ்ணன் கோவில் வந்தாச்சு, நீ ஆத்துக்குள்ளே வரலைன்னா இங்கேயே எறக்கிவிடு. கிருஷ்ணனைத் தொழுதுட்டுப் போறேன்!"

மஞ்சு காரை நிறுத்த, துளசி இறங்கினாள். "நாளைலேந்து நானும் நீ போற எடத்துக்கெல்லாம் வரப் போறேன். இட்டியா? கேஜி மாமா மிந்தா நேத்திக்கு வந்து நான் சும்மா இருக்கப்படாதுன்னார். நாளைக்குப் பார்க்க றோம்" என்றாள்.

துளசி மெல்ல நடந்து கிருஷ்ணன் கோயிலை அடையும் வரை மஞ்சு காத்திருந்தான். என்ன பெண் இவள்? தானே வாங்கிக் கொண்டு வந்த விடுதலை தன் வாழ்க்கையின் சிறைவாசம் என்பதை அவள் உணரவில்லையே! எப்படி உணர வைப்பது?

ஒரு வேளை, வெறும் மனித ராசிகளால் செய்ய முடியாததைக் காலம் செய்து காட்டுமோ? பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

**கா**லம் நகர்ந்தது. நாட்கள் ஓடின. வாரங்கள் தோன்றி மறைந்தன...



ஒரு நாள் காலையில் கேஜி ரோஜா செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருக்கையில் துளசி கைப் பையை ஆட்டியவளாய் வந்தாள்.

"குட் மார்னிங், கேஜி மாமா!"

"வா, துளசி! மஞ்சு ரெடியாயிட்டா."

"அரை மணிக்கூர் தாமசமாயிடுத்து."

"எண்ணெய் தேய்ச்சுக் குளிச்சே இல்லியா?"

"அதான் தாமசம்... இந்நைக்கு நான் ஒரு ரோஜா பறிச்சுக்கப் போறேன், கிட்டேளா?"

—சொல்லிக் கொண்டே துளசி உள்ளே செல்ல, கேஜி தம்முள் சிரித்துக் கொண்டார்.

அன்று மஞ்சு பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

"ஏம்பா எங்கிட்டே ஒரு வார்த்தை கூடச் சொல்லலே? துளசி தன்பாட்டுக்கு இருக்கட்டுமே!"

"உனக்குத் தெரியாது, மஞ்சு! துளசி வீட்லே சும்மா இருக்கா."

"அதனாலே?"

"எதுவும் எப்பவும் சும்மா இருக்கப்படாது. இரும்பு சும்மா கிடந்தா துருப் பிடிக்கும். உடம்பு சும்மாவே இருந்தா மனசிலே துரு ஏறும். துளசி உன் சிநேகிதி. உன்னோடேயே இருந்து நாலு இடம் பார்த்தா, மனசிலே ஒரு பாதிப்பு ஏற்படும். யார் கண்டா, மனசை அவள் மாத்திண்டாலும் ஆச்சரியமில்லை.

"இருக்கலாம். ஆனா, துளசி அலுத்துப் போய் வந்திருக்கா."

"தெரியும் மஞ்சு, எல்லாம் தெரியும். ஆனா, நீ மத்தவா மாதிரி இதைச் செய், அதைச் செய்னு அதிகாரம் பண்ணமாட்டே... மனசுக்குள்ளே கலகம் எப்ப வர்றது

தெரியுமா ? பிறத்தியார் சுமையை ஒரு மண்டை மேலே ஏத்தற போதுதான். அது ஒரு சின்ன நெல்லிக்காயானாக் கூட பெரிய பாரமாத் தெரியறது. ஆனா இதே துளசி, நீ சொல்லாமயே கேட்காமயே பாறாங்கல்லையும் உனக்காகச் சுமப்பாள்."

"உங்க ட்ரீட்மென்ட் புரியறது. ஆனாலும் எனக்கென்னவோ அவளைக் கொஞ்ச நாள் அவள் வழியிலேயே விடறது நல்லதுன்னு படறது."

"ட்ரை பண்ணேன்" என்றார் கேஜி.

இப்போது கேஜி தமக்குள் மகிழ்ந்து கொண்டார். இந்த இரண்டு மாதங்கள் எப்படி ஓடி விட்டன ? துளசிக்கு நாடி பார்க்கத் தெரிகிறது. காயங்களைக் கழுவி மருந்து போட்டு, கட்டிவிடக் கற்றுக் கொண்டு விட்டாள். மஞ்சு கார் ஓட்டக் கூடக் கற்றுக் கொடுத்து வருகிறாள்.

ஆனால், கேஜியின் எண்ணம் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் எதையுமே காணோமே ! துளசி தன் உறவினர் யாரைப் பற்றியும் பேசுவது இல்லை. முக்கியமாக கீர்த்தியைப் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை.

அவர் வகுத்துவிட்ட பாதை நினைத்த திசையில் அமையவில்லையோ ?

இன்னொரு நாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை.

காலை ஐந்து மணிக்கு ஊஞ்சலிலிருந்து எழுந்த துளசி. பல் தேய்த்துவிட்டு சமையலறைக்கு வந்தாள்.

"டீ, அம்மணி... மஞ்சு அஞ்சே முக்காலுக்கு ஹாரன் அடிப்படீ... வேகத்திலே காபி கலடீ."

"காபி ரெடி. குடிச்சுட்டுக் குளி. டிரஸ் பண்ணிண்டு ஹால்லே ஒக்காரு. உப்மா கிளறப் போறேன்."— சொன்னவள், டபரா தம்ளரைத் துளசியிடம் கொடுத்துவிட்டுப் வாணலியை காஸ் அடுப்பில் வைத்து எண்ணெயையும் ஊற்றினாள்.



காபியைக் குடித்துக் கொண்டே துளசி, "அம்மணி, நான் மத்த நாளைக்கு செவ்வாய்க்கிழமை உச்சியார்ந்த தான் மடங்குவேன், கிட்டியா ?" என்றாள்.

"இதை எத்தற தரக்கா சொல்லுவாய் தொளசி ? ஒன் பொட்டியைப் பாரு. ரெண்டு பொடவை, ரெண்டு சோளி, ரெண்டு பாடி, ரெண்டு பாவாடை எல்லாம் நீ சொன்னபடி வைச்சிருக்கேன்... அப்றம் சோப்பு, சீப்பு, டூத் பிரஷ்."

"போறும்டீ !" என்ற துளசி, "தோர்த்த முண்டு வைச்சிருக்கியா ?" என்றாள்.

"ஓ, மறந்துட்டேன்... இரு, இப்ப வைக்கிறேன்."

"மின்னாலே அதைச் செய். நான் குளிச்சு டிரஸ் பண்ணிண்டு வர்றேன்."

சரியாக ஐந்தேமுக்காலுக்கு கார் வந்தது. வழி அனுப்பிய அம்மணி, கார் கிருஷ்ணன் கோயில் மதில் முனையில் திரும்பும் வரை காத்திருந்துவிட்டுச் சமையலறைக்குத் திரும்பினாள்.

திடீரென்று வாசலில் ஒரு ஆட்டோ ரிக்ஷாவின் சத்தம் கேட்கவே, அம்மணி கூடத்துக்கு வந்தாள். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. துளசி இன்னும் பத்து நிமிடம் தாமதமாகப் புறப்பட்டுப் போயிருக்கக் கூடாதா ? அல்லது இந்த ஆட்டோ பத்து நிமிடங்கள் முன்பாக வந்திருக்கக் கூடாதா ?

ஆட்டோவிலிருந்து பெட்டியுடன் இறங்கிய கீர்த்தி, படி ஏறி வந்தான்.

"துளசி... துளசி !"

அம்மணி, கீர்த்தியைக் கூடத்தில் சந்தித்தாள்.

"துளசி எங்கே... தூங்கறாளா? அப்படியானால் எழுப்ப வேண்டாம். நான் இன்னும் பல் தேய்க்கவில்லை. காபி குடிச்சு பேப்பர் படிக்கறதுக்குள் எழுந்து விடுவாள், இல்லியா?"

ஓரிரு கணங்கள் மௌனமாக இருந்த அம்மணி, "என் பேரு அம்மணி. நான் அவ சிநேகிதி. அதோடு ஆத்துக் காரியங்களையும் பாத்துக்கறேன்... ஒக்காருங்கோ."

"துளசி எப்படி இருக்கா? அவகிட்டேந்து எனக்கு ஒரு லெட்டர்கூட வரலே."

"நீங்க வர்றத்துக்குப் பத்து நிமிஷம் மின்னாலேதான் தொளசி மஞ்சுவோட போனா...!"

"யார், டாக்டர் மஞ்சுவா?"

"ஆமாம்."

"துளசிக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லையே?" என்றான் கீர்த்தி.

"இல்லை."

"அப்ப எதுக்கு டாக்டர் வந்து அழைச்சுண்டு போகணும்?"

அம்மணி சுருக்கமாக விஷயத்தைச் சொன்னாள்.

"அப்போ, துளசி செவ்வாய்க்கிழமை மத்தியானம்தான் திரும்பி வருவாளா?.

"ஆமாம். பல் தேயுங்கோ. காபி கொண்டு வரேன்."

"வேண்டாம், மிஸ் அம்மணி. நான் புறப்படறேன். நான் இன்னிக்கே மெட்ராஸ் திரும்பியாகணும்... கோயமுத்தூர்லே என் ஸிஸ்டர் இருக்கா. அவளைப் பார்த்துவிட்டு அப்படியே போயிடறேன்."

"வந்ததும் வராததுமா நீங்க புறப்பட்டுப் போனா எப்படி? ராத்திரி முழுக்க வண்டியிலே வந்திருக்கேள். காபி குடிச்சு, குளிச்சு, சாப்பிட்டு ரெஸ்ட் எடுத்துக்குங்கோ... நான் இப்பவே ராமனாதனைக் கூட்டிண்டு வரேன்."



"அவசியம் இல்லை. தயவு பண்ணி ஒரு பேப்பரும் பேனாவும் கொடு."

"தரேன். இதோ தரேன்... ராமனாதன் ரொம்பக் கிட்டக்கத்தான் இருக்கார். இந்தாத்து மாப்பிள்ளை வந்திருக்கறதைச் சொல்லலைன்னா என்னைத் திட்டுவார்."

"பேப்பர் அண்ட் பென் ப்ளீஸ்!" என்ற கீர்த்தி, "நான் என் மனைவியைப் பார்க்கத்தான் வந்தேன்; மச்சுனனை அல்ல" என்று தொடர்ந்தான்.

தன்னிடம் கீர்த்தி ஒரு கடிதத்தையும் மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களையும் கொடுத்துவிட்டு வெளியேறுவதைப் பார்த்துக் கொண்டு சிலைபோல நின்றாள் அம்மணி. அவளுக்கு அழுகை வந்தது. ஆனால், அவள் யாருக்காக அழவேண்டும்? உயிர் சிநேகிதி துளசிக்காகவா அல்லது அவளைப் பார்க்க ஏங்கியவனாய் வந்து, ஏமாற்றத்துடன் திரும்பும் அவளுடைய கணவனுக்காகவா? பதில் தெரியாமலேயே அம்மணி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

திங்கட்கிழமை அன்று துளசியின் பெயருக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. இரண்டும் முப்பத்தைந்து பைசா இன்லண்ட். யாரிடமிருந்து என்று அறிய அம்மணிக்கு ஆர்வமாக இருந்தது. உடைத்துப் படித்தாலும் துளசி கோபிக்கமாட்டாள். இருந்தாலும் படிப்பது தவறு என்று தோன்றியது. இரு கடிதங்களையும் ஊஞ்சலில் தலையணைக்கடியில் வைத்துவிட்டு வாசலை நோக்கி நடந்தாள்.

ஒரு கணம் 'திக்'கென்றது.

எரிமலை ஒன்று நடந்து வருவதாகப் பட்டது அம்மணிக்கு. முதலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டாலும் அவளை

எரிக்கவோ, கரிக்கவோ ராமனாதன் யார் என்ற கேள்வி அம்மணியை நிதானப்படுத்தியது.

"வாங்கோ" என்றாள்.

"எங்காத்துக்குள்ளே வர்ற என்னையே வாங்கோன்னு அழைக்கறியா?" என்றான் ராமனாதன்.

அம்மணி கூறினாள்.

"நாளைக்கு வந்து பார்த்துக்கறேன். வண்டியோடு வண்டியா கட்டிப் போட்டு மெட்ராஸ்லே கொண்டு போய்த் தள்றேன். அவ ஆம்படையான் வந்துட்டுக் கால் மண்ணைக் கூட உதறாம மடங்கிப் போனானாமே?"

"நான் எத்தறையோ சொல்லிப் பார்த்தேன். அவர் கேக்கலை."

"ஒனக்கு மூளை இல்லை. கீர்த்தி வந்ததும் நீ என் கிட்டே சொல்ல வரண்டாமா?"

"நான் என் பெண்டாட்டியைத்தான் பார்க்க வந்தேன், மச்சுனனைப் பார்க்கறத்துக்கு இல்லை'ன்னார் அவர்."

"ஊர் சிரிக்கிறது. நீ வேறே துளசிக்குத் தூபம் போடறாய் இல்லியா?"

—சொல்லிவிட்டு ராமநாதன் திரும்பி நடந்தான்.

அம்மணிக்குக் கண்கள் கனத்தன. அவள் தூபம் போடுகிறாளா? இந்த அபாண்டம் அடுக்குமா? ஆனால், ராமநாதனை எதிர்க்க முடியாதே! ஏழை, பணக்காரனை எதிர்க்க முடியும்தான். ஆனால், அதன்பின் வாழமுடியாதே!

அம்மணி அன்று பூரா எதுவும் சாப்பிடவில்லை.

18600
3514268

# 16

டாக்டர் மஞ்சு, துளசியை வீட்டு வாசலில் இறக்கி விட்டுச் சென்றாள். இந்த இரண்டு நாள் பயணத்தை நினைத்துக் கொண்டே ஹாலை அடைந்த துளசி, "அம்மணி!" என்று அழைத்தாள்.

"இதா வரண்டீ துளசி" என்ற அம்மணி, "கொஞ்சம் இரு. தோசையைத் திருப்பிப் போட்டுட்டு வரேன்" என்று தொடர்ந்தாள்.

இரண்டு மணி நேரம் தொடர்ந்து காரில் உட்கார்ந்ததில் துளசிக்கு தொடைகளும் கால்களும் வலித்தன. முதுகில் எங்கேயோ திடீரென்று பிடித்துக் கொண்டது. முற்றத்தினருகே இருந்த வாளியிலிருந்து தண்ணீரை அள்ளி அள்ளி முகத்தில் அறைந்துவிட்டு, கைகால்களையும் கழுவிய அவள், புடவைத் தலைப்பாலேயே முகத்தைத் துடைத்துக் கொண்டு, ஊஞ்சலில் சாய்ந்தாள். சுகமாக இருந்தது.

கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் மஞ்சுவுடன் சென்ற வடக்காஞ்சேரி, திருசூல், இரிஞ்சாலக்குடா எனும் ஊர்களெல்லாம் கண் முன் சுழன்றன. எத்தனை ஏழை வீடுகளுக்கு மஞ்சு சென்றிருக்கிறாள். சின்னஞ்சிறு குழந்தைகளுக்குப் பற்பல நோய்கள் வராமலிருக்கத் தடுப்பு ஊசி போட்டிருக்கிறாள்! கைப் பணத்தைச் செலவு செய்து கொண்டு இப்படி நூற்றுக் கணக்கான ஏழைக் குடும்பங்களுக்கு மஞ்சு வைத்திய உதவி செய்கிறாளே, ஏன்? பணக்காரனிடமிருந்து முப்பது, ஐம்பது என்று வாங்குவதன் நோக்கமே, ஏழைகளுக்கு

உதவி செய்யத்தானோ? துளசிக்கு மஞ்சுவின் சேவை புரிந்தாலும், நோட்டம் திட்டவட்டமாகப் புரியவில்லை. வெளியே பேசும்போது, மஞ்சுவிடமிருந்து இரக்கம் ததும்பும் வார்த்தைகள் வருவதில்லை. சொல்லப் போனால், பெரிய பணக்காரர்களிடம் அவசியமில்லாமல் குழைந்து பேசுகிறாள். ஏழைகளிடம் கடிந்து கொள்கிறாள். ஆனால், செயல்கள் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றன. ஏன்?

திடீரென்று அம்மணி ஊஞ்சல் அருகே வந்தாள்.

"டிபன் ரெடி, துளசி."

"நீ திந்நையா?"

"இல்லை அப்றமா."

"என்ன அப்றமா? ரெண்டு பேருமா ஒக்கார்வோம்."

துளசி எழுந்து ஊஞ்சலில் உட்கார்ந்தாள்.

"துளசி!"

"என்ன?"

"இந்த ரெண்டு நாள்லே என்னெல்லாமோ நடந்திருக்கு?"

"என்ன நடந்திருக்கு? ஊர்லே ஆருக்கு என்ன கொழந்தை பொறந்திருக்கு? ஆராவது போயிட்டாளா?"

"மின்னாலே ஒன் ஆம்படையான் வந்தார். நீ அந்தண்டை போனதும் அவர் இந்தண்டை வந்தார்."

"உம்... அப்றம்?"

"வந்தவர் ஒரு வாய் காபி கூடக் குடிக்காம மடங்கிப் போனார்."

"வேறே என்ன நடந்தது. சொல்லுடீ!"

"ரெண்டு எழுத்து வந்தது. ராமனாதன் வந்து வாய் வலிக்க நெவளிச்சார்" என்ற அம்மணி, ராமநாதன் சத்தம் போட்டுப் பேசிய வார்த்தைகளை எல்லாம் ஒன்று விடாமல் கூறினாள்.



"அண்ணாங்கற ஸ்தானம் இப்பத்தான் அவனுக்குத் தெரிஞ்சிருக்கோ? என் ஆம்படையானுக்கு அவனைப் பார்க்கப் பிடிக்காட்டா, இங்கே வந்து நெவளிப்பானேன்!" என்று துளசி கூறினாள்.

"ஒன்னை மதராசியிலே கொண்டு போய் விடுவாராம்."

"கொரைக்கறது கடிக்காது. மின்னாலே அவன் தன் பொண்டாட்டிக்கு ஆம்படையானா இருக்கட்டும். டீ அம்மணி, அம்மா அவன்கிட்டே எத்றை கெஞ்சினா தெரியுமா, 'இந்தாத்திலேயே பொண்டாட்டியோடே இருடா'ன்னு! ஆனா, மன்னி அவன்கிட்டே முடியாதுன்னு சொன்னா! அப்பாவையும் மதிக்காம தனியாப் போனான். இவன் ஆரு சொந்தம் கொண்டாடிண்டு வந்து அதிகாரம் பண்ண?"

"ரெண்டு எழுத்து வந்திருக்கு."

"ஆர்ட்டேயிருந்து."

"நான் சரியாப் பார்க்கலை, தலைகாணிக்கு அடியிலே வைச்சிருக்கேன். ஒன் ஆம்படையானோடு எழுத்தும் பணமும இருக்கு."

துளசி தலையணையைத் தூக்கிப் பார்த்தாள். இரு கடிதங்களையும் எடுத்தாள். படித்தாள்.

முதலில் படித்தது மாமியாரின் கடிதம். துளசியின் சௌக்கியத்தை விசாரித்த அவள், கீர்த்தி அவளை அழைத்து வர பாலக்காட்டுக்குப் புறப்படப்போவதாகவும், அவனுடன் சென்னை வரும்படிக்கும் எழுதியிருந்தாள். துளசி இல்லாத வீடு களையிழந்து நிற்கிறது என்றும் எழுதியிருந்தாள்.

"அம்மணி, இந்த எழுத்து எந்நைக்கு வந்ததுடீ?"

"நேத்தைக்கு."

"சனிக்கிழமை வரண்ட லெட்டர் லேட்டா வந்திருக்கு."— சொன்னவள், இரண்டாவது கடிதத்தைப் பிரித்தாள்.

பாம்பேயிலிருந்து அம்மா.

ராமனாதனும் கீர்த்தியின் தாயாரும் கடிதங்கள் போட்டிருக்கிறார்களாம். துளசியை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லையாம். கீர்த்தியைப்போல ஒருவன் கணவனாக வாய்க்கப் பூர்வ ஜன்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டுமாம்.

"வாடீ, தோசை திங்கலாம் அம்மணி !"

"ஆர் எழுதியிருக்கா துளசி ?"

"ஒந்து, அம்மா... இந்தொந்து, மாமியார்."

"என்ன எழுதியிருக்கா ?"

"விசேஷமா ஒண்ணுமில்லைடீ, ரெண்டு பேரும் ஒரே பாட்டை அவாவாளுக்குப் பிடிச்ச ராகத்திலே பாடியிருக்கா ! நேக்கு மெட்ராஸ்தான் சொர்க்கமாம்."

சொன்ன துளசி, மெதுவாக நடந்தாள்.

"ஒன் ஆம்படையானோடு எழுத்தையும் படிச்சுடுடீ."

"அப்றம் பார்த்துக்கறேன்டீ"

டிபனுக்குப் பிறகு ஊஞ்சலில் படுத்த துளசிக்கு முதுகு வலித்தது. உடம்பை அசதி வாட்டியது. தூக்கம் வந்தது. ஆனால், மாலை நான்கரை மணிக்குத் தூங்குவது தப்பு. ராத்திரி வேறு தூக்கம் வராமற் போய்விடும்.

அம்மணி தன் வீட்டுக்குப் போயிருக்கிறாள். இனிமேல் ஆறு மணிக்குத்தான் வருவாள். அம்மு, பசுக்கள் இல்லாத தொழுவத்தில் ஆசை தீர ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாள். ஒரு விதத்தில் அம்முவும் அவளும் ஒன்றுதான். அம்முவுக்கு உற்றார் உறவினர் என்று சொல்லும்படியாக



யாரும் இல்லை. வயிற்றைக் கழுவ வேலை செய்கிறாள். துளசிக்கு கணவன், அம்மா, அண்ணா என்று எல்லோரும் இருக்கிறார்கள். ஆனால், அவளுக்கு யாரும் வேண்டாம்.

திடீரென்று வாசலில் குரல் கேட்டது. ராமனாதனும் மன்னி ராதையும் வருகிறார்கள்.

இந்த மூன்று மாதங்களில் துளசி, ராதையை இரண்டே இரண்டு தடவை தான் பார்த்திருக்கிறாள். அதுவும் கோயில் வாசலில். இப்போது எதற்கு வருகிறாள் ?

"என்ன தொளசி, என்ன, அம்மா மாதிரி ஆட்டுக் கட்டில்லே படுத்துண்டிருக்காய்...? ஒடம்புக்கு ஒண்ணும் இல்லியா ?"— ராதை அவசியம் நேரிடும்போது கலகலப்பாகப் பேசுவாள்.

துளசி ஊஞ்சலில் எழுந்து உட்கார்ந்தாள்.

"ஒடம்பு நந்நாத்தான் இருக்கு மன்னி... அது சரி, நீ எங்கே இங்கே வந்தாய் ?"

"ஒன் அண்ணா, 'கூட வா'ன்னார்... வந்தேன்" என்றாள் ராதை.

ராமனாதன் ஓரிரு நிமிடங்கள், கூடத்துச் சுவர்ப் படங்களையெல்லாம் பார்த்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

துளசிக்கு அவனிடம் அவன் அவள் இல்லாதபோது அம்மணியிடம் கத்திவிட்டுப் போனதைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால், எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். அண்ணா தான் வந்த காரியத்தை முதலில் கூறட்டுமே !

ராமனாதன் வார்த்தைகளை உருவாக்கித் தன்னுள் ஒத்திகை பார்ப்பவனைப் போல உதடுகளை அசைத்து விட்டு மெதுவாக ஆரம்பித்தான் :

"ஞாயித்துக்கிழமை கீர்த்தி வந்தான்."

"அம்மணி சொன்னா."

"என்னைக் கூடிப் பார்க்காமப் போனான்."

"அம்மணி சொன்னா."

"இப்ப ஒனக்கு அம்மணிதான் செக்ரடரி அல்லவா!" என்ற ராமனாதன், "இந்நைக்குக் காலங்கார்த்தாலே மெட்ராஸ்லேந்து போன் வந்தது" என்று நிறுத்தினான்.

"அதனால்தான் கார்த்தாலேந்து காத்திருந்தோம். மஞ்சு ஒன்னை இறக்கி விட்டுட்டுப் போனதைக் கண்டேன். அப்றம்தான் நானும் உன் அண்ணாவும் பொறப்பட்டோம்" என்றாள் ராதை.

"அவர் உங்கிட்டே போன்லே சொன்னதை இப்ப எங்கிட்டே சொல்ல வந்திருக்காய், இல்லியா அண்ணா!"

"கீர்த்தி போன்லே பேசலே... அவனோட அப்பா பேசினார்."

"அப்படியா!"

"என்ன அப்படியான்னு லட்சியமில்லாமல் இருக்காய் துளசி?" என்று கேட்டான்.

"என்ன செயணும்னு சொல்றாய் அண்ணா?"

"மெட்ராஸுக்குப் போ!"

துளசி லேசாகச் சிரித்தாள். சிரிப்பொலியில் கேலி பிரதிபலிப்பதாகப் பட்டது ராமனாதனுக்கு.

"ஏன் அண்ணா, நீ என்னைப் பிடிச்சு இழுத்து மெட்ராஸ்லே கொண்டு போய் தள்ளுவாய்னு சொன்னயாமே...?"

"வாங்கோ நாம் போகலாம்" என்றாள் ராதை.

"மன்னி சொல்றதைக் கேளு அண்ணா!"

"துளசி, ஊர் சிரிக்கிறது" என்றான் ராமனாதன்.

"என் காதிலே விழலை."



"ஒலகத்திலே ஒருத்தன் தன் பொண்டாட்டியைத் தள்ளி வைச்சான்னு உண்டு. இது ஆம்படையானைத் தள்ளி வைச்ச கதை!" என்றாள் ராதை.

"ஆமாம் மன்னி... நீ சொல்றது சரித்தான். நீ கல்யாணம் கழிஞ்ச கையோடே ஆம்படையானைக் கைக்குள்ளே போட்டுண்டு இந்த ஆத்து அடுக்களையை எட்டிக் கூடப் பார்க்காமப் போனாய்... அந்நைக்கு அப்பா குறுக்கே வந்திருந்தா நீ என்ன செஇருப்பாய்? ஆம்படையானும் வேண்டாம் ஒந்நும் வேண்டாம்னு தத்த மங்கலத்துக்கு மடங்கிப் போயிருப்பாய்... நீ எந்துக்கு என் காரியத்திலே தலையிடறாய்?"

"பேசாம இரு, ராதை!" என்று மனைவியிடம் கூறி விட்டு, "கீர்த்தியின் அப்பா கோபமாப் பேசலை துளசி. உனக்கு என்ன குறையும் இல்லாம இருக்கலாம்னு சொன்னார். கீர்த்தி ரொம்ப மனசு ஒடைஞ்சு போயிருக்கானாம்! அவன் சரியா சாப்பிடறதில்லையாம், தூங்கறதில்லையாம்... வீடே உசிர் இல்லாம இருக்காம்."

"அண்ணா, உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்... நான் ஏதோ பெரிய கொறை இருக்குன்னு மதிராசியிலிருந்து வரலை நேக்கு அங்கே ஒரு கொறையும் ஆரும் வைக்கலை... சொல்லப்போனா மாமியார், மாமனார், மச்சுனன், நாத்தனார் எல்லோருமே எங்கிட்டே ஆசையாத்தான் இருந்தா."

"கீர்த்தி?"

"அவர் ஒரு கொழந்தை மாதிரி அண்ணா! அதட்டிப் பேசக்கூடத் தெரியாது."

"இத்தறையெல்லாம் நீயே சொல்றாய் தொளசி. ஆனா அங்கேந்து மடங்கி வந்திருக்காய்!"

"போற எடம் சொர்க்கமா இருக்கும்னு விசாரிச்சுப் போனேன். ஆனா, அது இதைவிடப் பெரிய நரகமாத் தெரிஞ்சுது..." என்றாள் துளசி.

"இப்பத் தனியா இங்கே இருக்கிறது சொர்க்கம் மாதிரி இருக்கா ?"

"அது எப்படி இருந்தா இப்ப என்ன...? நான் என் இஷ்டம்போல இருந்துக்கறேன்... அம்மாவும் உபதேசம் பண்ணி எழுதியிருக்கா... ஒழைச்சுப் போடற கழுதையா நீங்கனெல்லாம் ஆக்கினேள். இப்ப கழுதை, குதிரை ஆகலைன்னாலும் கஷ்டப்படாம இருக்கு."

"நான் இன்னிக்கு ராத்திரி கீர்த்தியின் அப்பாகிட்டே பேசப்போறேன்" என்றான் ராமனாதன்.

"பேசு. எங்கிட்டே சொல்லுவானேன் ?"

"நீ அப்ப என்னதான் தீர்மானிச்சிருக்காய்..."

"நேக்கு இந்த பாலக்காடே போறும் !"

"ரெண்டு மாசம் கழிஞ்சுப் போகட்டுமே !" என்றாள் ராதை.

"வேண்டாம். அப்பாவோட ஆட்ட தெவசம் வர்றது அதுவரையில் வேணம்னா இருக்கட்டும். என்ன சொல்றாய் துளசி ?"

"என் பிரோகிராமை நானே போட்டுக்கறேன் அண்ணா."

ராமனாதனுக்குக் கோபம் வர வேண்டும். மாறாக அழுகை வந்தது. எந்த சமயத்திலும் துளசி உரத்துக்கூடப் பேசமாட்டாள். அம்மா என்ன திட்டினாலும் சிரித்துக் கொண்டே போவாள். அப்படிப்பட்டவள் ஏன் இப்படி மாறிவிட்டாள் !

"நம்ம அப்பா உசிரோடு இருந்திருந்தா நீ இப்படி இருப்பியா ?" என்றான் அவன்.

"நம்ப அப்பா உசிரோடே இருந்திருந்தா அவருக்கு என்னோடு மனசு நன்னா மனசிலாயிருக்கும். நான் சேதது தப்பு இல்லைன்னு ஜட்ஜ்மென்ட் கொடுத்திருப்பார்.



நீங்கள் ஆரும் என்னக்கி என்னை இந்த ஆத்துப்பொண்ணா மதிச்சிருக்கேள் ? இப்ப ஒங்களுக்கு ஏதோ என்னாலே குடும்ப மானம் போனதா நெனைச்சுண்டு பேச வரேள்."

ராமனாதன் மௌனமாக ராதையைப் பார்க்க, அவள் நகர, ராமனாதன் அவளைப் பின்தொடர்ந்து வெளி யேறினான்.

அவன் போன சற்றைக்கெல்லாம் கேஜி ஒரு ஆட்டோவில் வந்திறங்கினார். என்றுமில்லாத அவசரம் அவருடைய நடையில் தெரிந்தது.

என்ன நிகழ்ந்திருக்கிறது ? எப்போதும் நடந்து வருகிறவர் ஏன் இன்று ஆட்டோவில் வருகிறார் ?

துளசி காத்திருந்தாள். கேஜியின் திடீர் வருகையில் அவள் கீர்த்தியின் கடிதத்தையே மறந்து போனாள்.

# 17

படி ஏறி வந்த கேஜியை ஹாலில் வரவேற்ற துளசி, "என்ன மாமா, எந்நைக்கும் இல்லாத அதிசயமா ஆட்டோவில் வந்தேள் ?" என்று கேட்டாள்.

"எனக்கு நிற்க நேரமில்லை துளசி ! நான் இப்பவே பாலக்காடு ஜங்ஷனுக்குப் போகணும். ஆட்டோவை வெயிட் பண்ணச் சொல்லியிருக்கிறேன். நீ சிக்கிரம் புறப்பட்டு வீட்டுக்கு வா... மஞ்சு காத்துக் கொண்டிருக் கிறாள்."

"என்ன நடந்திருக்கு மாமா ?"

"நீ முதல்லே புறப்படு. மணி ஆறு அடிக்கப் போகிறது. ராத்திரிக்கு நீ நம்ப வீட்லேயே சாப்பிடலாம். உன்

அம்மணிட்டே சொல்லிவிடு."— சொன்னவர் திரும்பி நடக்கலானார்.

வாசல் வரை அவரைப் பின் தொடர்ந்த துளசி, "ஒரு புதிரைப் போட்டுட்டுப் போறேள் மாமா! என்னை எந்துக்கு உங்க ஆத்துக்கு வரச் சொல்றேள்?"

"மஞ்சு சொல்லுவா" என்ற கேஜி, ஆட்டோவில் ஏறிக் கொண்டார்.

ஆட்டோ மறைவதற்குள் அம்மணி வந்தாள்.

"அம்மணி, நீ ஒனக்கு வேண்டத்தைச் சமைச்சுக்கோடீ. நான் மஞ்சுவாத்துக்குப் போறேன்."

"சரி..."

"ராத்திரி வந்தூடுவேன் கிட்டயா?"

"சரி."

அந்த செவ்வாய்க்கிழமையன்று பிற்பகலில் துளசியை அவள் வீட்டு வாசலில் இறங்கிவிட்டுச் சென்ற டாக்டர் மஞ்சு, துளசியின் மாற்றத்தை நினைத்துப் பார்த்தாள். அவளுக்குத் துளசியைச் சின்னஞ்சிறு சிறுமியாகத் தெரியும். அந்தக் காலத்திலேயே அவளுக்கும் படிப்பில் நாட்டம் இல்லை. வீட்டினுள் வளைய வளைய வந்து கொண்டிருப்பாள். யாரிடமும் அதிகம் பேசும் பழக்கம் இல்லையென்றாலும் தனக்குப் பிடித்தவர்களிடம் வாய் ஓயாது பேசுவாள். வீட்டில் என்ன நடந்தாலும் அதை மஞ்சுவிடம் ஒப்பிப்பாள். அம்மா அனாவசியமாகத் திட்டுவதைச் சொல்லி அழுவாள். நாள் செல்லச் செல்ல வயது ஏற ஏற, துளசியின் உடல்தான் வளர்ந்ததே தவிர, அவளுடைய மனம் முதிரவில்லை என்று மஞ்சு நினைத்தாள். கள்ளங்கபடு தெரியாத ஒரு பெண் எப்படித்தான் வாழப் போகிறாளோ என்ற கேள்வி அடிக்கடி அவளுள் எழும்.



துளசிக்குப் பதின்மூன்று வயது நடக்கையில் பதினேழு வயது மஞ்சு படிப்பை உத்தேசித்து சென்னை சென்றாள். விடுமுறைகளின் போது தந்தையுடன் இருக்க டில்லிக்குச் செல்லுவது ஒரு பழக்கமாகி விட்டதால் இருபத்து மூன்றாவது வயதில் டாக்டராகப் பாலக்காடு திரும்பும் வரை இருவருக்கும் சொல்லும்படியான அளவுக்குத் தொடர்பு இருக்கவில்லை. ஆனால், துளசியை மீண்டும் சந்தித்தபோது, மஞ்சு வியப்பும் திகைப்பும் அடைந்தாள்! உடலெல்லாம் இளமை பூரிக்க, ஓர் அழகான பசுவின் சாத்வீகம் கண்களில் ஒளிவீச, துளசி ஒரு பெரிய குடும்பத்தையே பராமரித்துக் கொண்டிருந்தாள். அதிகாலையில் எழுந்த துளசி, இரவு பத்து மணி வரை பம்பரமாகச் சுற்றுவது மஞ்சுவுக்கு மலைப்பாக இருந்தது.

இப்பேர்ப்பட்ட துளசி இன்று எப்படி இருக்கிறாள்? நினைத்துப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை மஞ்சுவுக்கு.

திடீரென்று துளசியின் குரல் கேட்டது. மஞ்சு நிமிர்ந்து பார்த்தாள். துளசியின் வெகுளிப் பார்வையும் கண்களின் சிரிப்பும் மஞ்சுவுக்கு வேதனையைத்தான் அள்ளிக் கொட்டின.

"என்ன மஞ்சு, வரச் சொன்னாயாமே?"

"ஆமாம் துளசி! மொதல்லே என்ன சாப்பிடறே? அதைச் சொல்லு."

"இப்ப எதுவும் வேண்டாம். கேஜி மாமா ஏன் இந்நைக்கு ஆட்டோவிலே பறக்கிறார்?"

"அதை அப்புறமா சொல்றேன். இப்ப உங்கிட்டே எனக்குப் பேசணும்."

"ஞாயித்துக்கிழமையிலேந்து இந்நைக்கு உச்சியார்ந்த வரை நீயும் நானும் ஒண்ணாத்தானே இருந்தோம். அப்ப பேசாதது என்ன புதுசா இருக்கு மஞ்சு?"

"நீயும் நானும் இல்லாதப்போ என்னென்னவெல்லாமோ நடந்திருக்கு."

"அவர் மெட்ராஸ்லேந்து வந்துட்டுப் போனது நோக்கும் தெரியுமா? முன்னூறு ருபாயும் எழுத்தும் வைச்சுட்டுப் போனார். இன்னம் நான் படிச்சுக் கூடப் பார்க்கலை."

"மிஸ்டர் கீர்த்தி வந்துட்டுப் போன விஷயத்தை அப்பா கிட்டே மைதிலி சொன்னாளாம்."

"மைதிலி வந்திருக்காளா? எங்கே இருக்கா?"

"மைதிலி சொன்னாள்னு தானே சொன்னேன்... வந்து சொன்னாள்னு சொல்லலியே... போன்லே பேசியிருக்கா..."

"தேக்கு மூளை போறாது மஞ்சு," என்று கூறிய துளசி, சிரித்தாள்.

"எனக்கும் அப்படித்தான் படறது!"

"நீ என்ன சொன்னாய்?"

"மிஸ்டர் கீர்த்தி உன்னை அழைச்சுப் போக வந்திருக்கார். உன் மாமியார் லெட்டர் எழுதியிருக்கா."

"எப்படித் தெரியும்? மைதிலி இதையும் சொல்லியிருபபா, இல்லையா? மாமனாரும் அண்ணா ராமனாதன் கிட்டே பேசியிருக்கார். அண்ணா வந்து உபதேசம் பண்ணிட்டுப் போறான்."

"யார் உபதேசமும் உன் காதிலே ஏறாதே!"

"சரி சரி! மஞ்சு, எந்துக்கு என்னை வேகத்திலே வரச் சொன்னாய்?"

"சரியா ஏழரை மணிக்கு மைதிலி மறுபடியும் போன்லே பேசப் போறா!"

"யார்ட்டே?"

"இப்ப உங்கிட்டே தான்?"

"என்ன பேசப் போறா?"



"எனக்கு என்ன தெரியும்?"

"அவர் வந்தார். ஆம்படையான்... கூட்டிண்டு போக ஆசை இருக்கும், வந்தார். எந்துக்கு மாமியார் என்னை கொடிமரத்து உச்சியிலே ஏத்தி ஒக்கார்த்தி 'வா வா'ன்னு எழுதணும்? எந்துக்கு மாமனார் என் அண்ணா கிட்டே போன்லே பேசணும்? இப்ப எந்துக்கு மைதிலி பேசணும்ங்கறா?"

"இது புரியலையா துளசி?"

"மனசிலாறது மஞ்சு. ஆனா, நான்தான் இன்னமே திரும்பி வரமாட்டேன்னு கதையை முடிச்சுண்டு என் பண்டம் பாத்திரத்தையெல்லாம் எடுத்துண்டு வந்தாச்சே! பின்னேயும் நான் மதிராசிக்குப் போய் அவாத்து அடுக்களையைத் தலைமேலே வைச்சுப்பேன்னு நினைக்கிறாளா எல்லாரும்?"

"துளசி..."

"என்ன மஞ்சு?"

"நான் கேக்கறதுக்கெல்லாம் பதில் சொல்லணும். உண்மையான பதிலா சொல்லணும்!"

"நேக்கு பொய் சொல்லத் தெரியாது..."

"கொஞ்சம் பொய்யும் சாதுரியமும் சாமர்த்தியமும் உனக்கு இருந்தா இந்த ப்ராப்ளமே வந்திருக்காது."

"சாதுரியமும் சாமர்த்தியமும் நெறைய இருக்கு மஞ்சு! சரி நீ கேளு."

"உன் புருஷன் வீட்லே யாராவது பொல்லாதவரா இருக்காரா...?"

"ஆரும் இல்லை."

"உன் புருஷனோ, இல்லை மாமியார் மாமனாரோ உன்னைக் கொடுமைப்படுத்தி யிருக்கிறார்களா...?"

"சொப்பனத்திலே கூட இல்லை மஞ்சு. எல்லாரும் நல்லவா... ரொம்ப நல்லவா..."

"நல்லவர்களை மனசு கலங்க வைச்சுட்டு நீ வரலாமா துளசி..."

துளசி ஒரு நிமிஷம் மௌனமானாள். சென்னையி லிருந்து வந்த மறுநாள் மஞ்சு புத்திமதி சொன்னாள். அதன் பிறகு வாயைத் திறக்கவில்லை. இப்போது மீண்டும் ஆரம்பிக்கிறாள். எடுத்த எடுப்பிலேயே ஒரு முடிவான பதிலைச் சொல்லி விட வேண்டும்.

"மஞ்சு! தயவு பண்ணி நீயும் நானும் இதைப் பத்தி இனிமே பேசவேண்டாம். நான் ஆத்துக்குப் போறேன்..."

மைதிலி போன் பண்ணுவாளே!"

"நான் என்ன பேசறது அவகிட்டே? நேக்குப் பேச இஷ்டம் இல்லைன்னு சொல்லிடு..."

"அதை நீயே சொல்லேன்."

"மைதிலி நல்ல பொண் மஞ்சு... ஒரு கால் விளங்காதவள்... அவளை நினைச்சாலே நேக்கு அழுகை வர்றது. உன் வயசு... கல்யாணம் ஆயிட்டில்லை! கால் இப்படி இருந்தா எத்தறைப் பேர் கழிச்சுக்க ரெடியா இருப்பா?"

மஞ்சு குழம்பினாள். துளசியின் குரலில் வந்த வார்த்தைகள் இதயத்திலிருந்து வரும் ஒலி வடிவங்கள் என்பதை அவள் உணர்ந்தாள்.

"அப்ப நீ என்னதான் செய்யப்போறே துளசி?

"இப்ப மாசாமாசம் மூன்னூறு ரூபாய் வர்றது. சாப்பாட்டுக் கஷ்டம் இல்லை. தினமும் உன் கூட பாதி நாள் வர்றேன்..."

"அது இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான்..."

"ஏன் மஞ்சு... ஏன், நான் வர்றது பிடிக்கலையா?"



"அதை அப்புறமாச் சொல்றேன். ஆனா ஒண்ணு இப்பவே சொல்லிடறேன் துளசி! உன் முடிவு சரியில்லை."

துளசி சிரித்தாள்.

"நேக்குச் சரின்னு பட்டிருக்கு! இப்ப நான் ஒண்ணு கேக்கறேன். உத்தரம் சொல்றியா?"

"கேளு..."

"நீ என்னோட நெலைமையிலே இருந்திருந்தா என்ன சேதிருப்பாய்?"

"நீ நீயாகத்தான் இருக்க முடியும். நான் நானாகத் தான் இருக்க முடியும்."

"என் சோத்ரியத்துக்கு இது உத்தரம் அல்லா."

"சரி துளசி, சொல்றேன்."

மஞ்சு துளசியைப் பார்க்காமல் ஜன்னல் படியில் இருந்த ஒரு சிலையைப் பார்த்தவளாய்ப் பேசினாள்:

"நான் யோசித்து ஒரு முடிவு எடுத்து ஒருத்தரைக் கல்யாணம் செய்து கொண்டால், அதற்குப் பிறகு என் முடிவு தப்பான முடிவுன்னு நெனைச்சு அவனை விட்டு விட்டு வரமாட்டேன். தாம்பத்தியம்னு வந்து விட்டால் அதில் எத்தனை ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் இரண்டு பேரும் விட்டுக் கொடுத்து வாழப் பழகணும்..."

"நீ சாதாரணமா ஒன் அபிப்பிராயத்தைச் சொன்னாய் மஞ்சு. நான் அதைக் கேக்கலை. நீ கீர்த்தியைக் கல்யாணம் பண்ணிட்டிருந்தா அவரை விட்டு வராம அங்கேயே இருந்திருப்பாயா?"

மஞ்சு சிரித்தாள்.

"உன் கேள்வி அபத்தமாப் பட்டாலும் பதில் சொல்றேன் துளசி! நான் கீர்த்தியை விரும்பி அவர் கட்டற தாலிக்குக் கழுத்தைக் காட்டியிருந்தேன்னா சாகிற வரைக்கும் அவரோடேதான் இருந்திருப்பேன். என்ன

பிரச்னை எப்ப முளைச்சாலும் அதைப் பரஸ்ப்ரம் பேசித் தீர்த்துக் கொண்டிப்பேன்... உன்னை மாதிரி பயந்து ஓடி வந்திருக்க மாட்டேன்."

"நான் ஒண்ணும் பயந்துண்டு வரலை."

"சரி, வெறுப்பிலே வந்தே. அலுப்பிலே வந்தே... மனசிலேதான் வெறுப்பும் அலுப்பும் முளைக்கிறது. அதே மனசு அதுகளுக்கு இடம் கொடுக்காமலிருக்க முடியும்?"

"எல்லோரும் ஒரு கட்சி... நான் மட்டும் தனிக் கட்சி இல்லையா?"

"நீயே யோசிச்சுப் பாரு துளசி..."

துளசி யோசித்துப் பார்க்கவில்லை. என்ன யோசிக்க! இப்போதுள்ள வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்கிறதோ இல்லையோ, நிம்மதி இருக்கிறது. ஒருவிதத் திருப்தி இருக்கிறது. அவள் கீர்த்தியைக் கல்யாணம் செய்து கொண்டதில் தவறு இல்லை. ஆனால், அதற்கு முன் புகுந்த வீட்டு பாரம் என்ன என்பதை அறிந்து கொள்ளாததுதான் தவறு. நிவர்த்தி செய்ய முடியாத தவறு தான். அதிலிருந்து விடுபெற அவள் தன்னுடைய வழியைக் கடைப்பிடித்தாள். ஆனால் அந்த வழியை யாரும் ஆமோதிக்கவில்லை. இதற்கு அவள் என்ன செய்வாள்?

திடீரென்று டெலிபோன் அலறியது.

"துளசி, மைதிலிதான்."

"நீயே பேசு மஞ்சு."

மணி அடித்துக் கொண்டிருந்தது.

டெலிபோனை எடுத்த மஞ்சு, "யெஸ், டாக்டர் மஞ்சு ஸ்பீக்கிங்" என்றாள். பிறகு, "அப்படியா, இன்னும் பதினஞ்சு நிமிஷத்தில் அங்கே இருக்கேன்" என்றாள்.

"யார் மஞ்சு?"



"துளசி! நீ அப்பா வர்ற வரைக்கும் இங்கேயே இரு! சேகரிபுரத்தில் ஒரு எமர்ஜன்ஸி கேஸ்."

மஞ்சு போன பிறகு துளசி கடிகாரத்தையே பார்த்த வளாய் உட்கார்ந்திருந்தாள்.

ஏழு ஐந்து.

ஏழு பத்து.

ஏழேகால்.

எட்டு... எட்டரை.

மைதிலியின் டெலிபோன் வரவில்லை.

ஒரு ஆட்டோ வந்தது.

கேஜி இறங்கினார்.

அவரைத் தொடர்ந்து நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் இறங்கினார்.

ஆட்டோ போய்விட்டது.

"ப்யூட்டிஃபுல் ஹவுஸ்!" என்றார் உடன் வந்தவர்.

"பட் ஓல்ட் ஹவுஸ், மேஜர்!"

"ஓல்ட் இஸ் கோல்ட். யூ ஆர் ஓல்ட். ஐ'ம் ஓல்ட்..." என்ற அவர், ஹாலின் எல்லையில் சுவரோரமாய் நின்று கொண்டிருக்கும் துளசியைக் கவனிக்கவில்லை.

"துளசி! மஞ்சு எங்கே?"

"சேகரிபுரம் போயிருக்கா. அர்ஜண்ட் கேஸாம். போன் வந்தது."

"அப்படியா... மேஜர்! ப்ளீஸ் ஸிட்டௌன்... இவள் பேரு துளசி. மஞ்சுவுக்குப் பெரிய ஃப்ரெண்ட். இவ அப்பா இந்த ஊரிலே அட்வகேட்டா இருந்தார். துளசி! இவர் ஆரு தெரியுமா? மேஜர் திலக். இவரை மீட் பண்ணத்தான் நான் ஜங்ஷனுக்குப் போனேன். ட்ரெயின் மூணு மணி

நேரம் வேட்டுன்னா... அதுவரையில் சும்மா இருப்பானேன்னு மலம்புழை காலனியில் கொஞ்ச நேரம் கச்சேரி கேட்கப் போனேன். மேஜர்! என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"நதிங்... இப்ப ஒம்பது அடிக்கப் போறது. நான் நாளைக்குக் கார்த்தாலே வர்றேன்!" —மேஜர் எழுந்தார். கேஜியும் உடன் எழுந்தார்.

"ஆட்டோவிலேதானே போகப் போகிறீர்கள் மேஜர்?"

"ஆமாம்..."

"அப்ப போற வழியில் இவளை இறக்கி விடுங்கள்... துளசி! நீ சுண்ணாம்புக்காரன் முனையிலே இறங்கிக்கோ."

"இல்லை மாமா... நான் ரெண்டாம் நம்பர் பஸ்ஸிலே போய்க்கிறேன். ஒம்பதேகாலுக்கு ஒண்ணு வரும்."

மேஜர் பதில் சொல்லாமல் வெளியேற, வாசல் வரை வழி அனுப்ப கேஜி செல்ல, துளசி கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

மேஜரின் முன் வழுக்கையும், காதோரத்து நரையும், கூர்மையான பார்வையும், சற்றே கூன் போட்ட நடையும் துளசியின் மனத்தில் பதிந்தன.

யார் இவர்?

மறுநாள் தெரிந்தபோது திடுக்கிட்டாள்.

# 18

துளசி மஞ்சுவின் வீட்டை அடையும்போது ஏழேமுக்கால் மணி ஆகிவிட்டது. அன்று இருவரும் எந்தெந்த இடங்களுக்குச் செல்லப் போகிறார்கள்? முந்தின இரவு மஞ்சு ஓர் அவசர கேஸைக் கவனிக்க சேகரிபுரம் சென்றாளே, அந்த கேஸ் என்னவாயிற்று? துளசி சிந்தித்தவளாய் மஞ்சுவின் வீட்டை அடைந்தாள்.



அந்த வேளையில், கேஜி வழக்கமாக திண்ணையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து, மூக்கில் இறங்கி நிற்கும் கண்ணாடியையும் பொருட்படுத்தாமல் தினசரியில் மூழ்குவார். அன்று திண்ணை வெறிச்சோடியது. சாதாரணமாக மஞ்சுவின் கார் தெரு வாசலில் ஏழு மணிக்கே தயாராக நிற்கும். அன்று அது இன்னும் ஷெட்டிலேயே இருந்தது.

துளசி ஹாலில் பிரவேசித்தவள், கைப்பையை ஒரு டீபாயின் மேல் போட்டுவிட்டுச் சமையலறையை அடைந்தாள்.

அங்கே அவள் கண்ட காட்சி புதுமை இல்லையென்றாலும் சிரிப்பை வரவழைத்தது. கேஜி தலையில் ஒரு துண்டைச் சுற்றிக் கட்டியவராய் வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்தார். மஞ்சு காஸ் அடுப்பிலிருந்து ஒரு பாத்திரத்தை இறக்கிவிட்டு இன்னொன்றை ஏற்றி வைத்தாள்.

"இதென்ன கூத்து மாமா?" என்றாள் துளசி சிரித்துக் கொண்டே.

"துளசி! நீ இன்னிக்கு நம்ப வீட்லே சாப்பிடப் போகிறாய்!" என்றார் கேஜி.

"நான் சாப்பிடறது இருக்கட்டும்; மஞ்சு, இந்னைக்கு நம்பள் எங்கேயும் போலையா?"

"இல்லை" என்ற மஞ்சு, "துளசி! உனக்கு என்ன பாயசம் பிடிக்கும்?" என்று கேட்டாள்.

"நேக்கு எல்லா பாயசமும் இஷ்டம். பாலடைப் பிரதமன், பால் பாயசம், சதசதயம்... எல்லாம் பிடிக்கும். என்ன இந்னைக்கு சத்தி?"

"உனக்குத்தான் ஒரு விருந்து வைக்கிறோம்னு நினைத்துக் கொண்டேன் !" என்ற கேஜி எழுந்தார்.

"வெங்காயத்தை இத்ற பெரிசாவா நறக்குவா ? பொடிப் பொடியா நறக்கணும் ! நான் இதைச் சரியாக் கறேன்," என்ற துளசி உட்கார்ந்தாள். பிறகு, "நேக்கு எந்துக்கு விருந்து ?" என்றாள்.

"முதல்லே நீங்க ரெண்டு பேரும் சமையலை முடியுங்கள்" அப்பும் சொல்றேன். மஞ்சு ! எனக்கு ரெண்டாம் டோஸ் காபி தர்றியா ?"

"இப்ப துளசிக்குக் கலக்கறப்போ உங்களுக்கு செகண்ட் டோஸ் வரும் அப்பா. நீங்க உங்க பேப்பரைப் படியுங்கோ !"

கேஜி வெளியேறினார்.

ஒரு மணி நேரத்தில் சமையல் முடிந்தது.

மஞ்சுவும் துளசியும் ஹாலுக்கு வந்தார்கள். சமைய லறையில் மஞ்சு கலகலப்பாகப் பேசாதது துளசியின் மனத்தைச் சங்கடப்படுத்தியது. அவளுக்கு ஒன்றும் புரிய வில்லை. முந்தின இரவு அவள் வீடு திரும்பிய பிறகு சென்னையிலிருந்து மைதிலி டெலிபோனில் பேசி இருப்பாளோ ? அதன் காரணமாகத்தான் மஞ்சு இப்போது அவளிடமிருந்து சற்றே விலகி நிற்பது போலக் காணப்படு கிறாளோ ? அப்படி இருந்தால் இன்று ஏன் அவளுக்கு விருந்து வைப்பதாகச் சொல்ல வேண்டும் ? இன்று துளசிக் காகப் பாயசம் வைக்கிறவள் எப்படி அவள்பால் எரிச்சலோ ஆத்திரமோ கொள்ள முடியும் ?

"துளசி ! உட்கார்."

"என்ன மாமா ?"

"மஞ்சு ! நீயும் உட்கார்."

"மாமா ! என்ன வர்த்தமானம் ? எந்நைக்கும் இல்லாத அதிசயமா இருக்கு ?"



"நான் சொல்லப் போறதை நன்னா கவனமாக் கேளு துளசி."

"நான் என் காதை நன்னா தொறந்து வைச்சுக்கறேன்."

ஓரிரு நிமிடங்கள் ஹால் நிசப்தத்தில் உறைந்தது. துளசிக்கு வேடிக்கையாகப் பட்டது. முந்தின நாள் மஞ்சு உபதேசம் செய்தாள். இன்று அவளுடைய அப்பாவா ! என்ன சொல்லப் போகிறார் ? ராமர் இருக்கிற ஊர் பேர் தான் அயோத்தின்னு கிளாஸ் நடத்தப் போகிறார். இவரோடு ராகம் எப்படி இருக்கிறது என்றுதான் தெரியட்டுமே !

"என்னப்பா என்ன ஆச்சு உங்களுக்கு ? நாக்கை யாராவது கட்டிப் போட்டு விட்டார்களா ?" என்று கேட்டாள் மஞ்சு.

"எங்கே, எதிலிருந்து, எப்படி ஆரம்பிக்கிறதுன்னு குழப்பமா இருக்கு மஞ்சு !"

"ஆரம்பத்திலேந்து ஆரம்பியுங்கோ... ராத்திரி விடிய விடிய நாம பேசினதெல்லாம் பொழுது விடிஞ்சதும் மறந்து விட்டதா அப்பா ?"

கேஜி உடனேயே பேச ஆரம்பிக்கவில்லை. கண்களை மூடிக் கொண்டார். சிதறி வரும் வார்த்தைகளை ஒழுங்கு படுத்திக் கோர்வையாகக் கொண்டு வர முயலுவதாகப் பட்டது.

துளசி காத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. பாவம், கேஜி மாமா... அவளுக்காகச் சிரமப்படுகிறார்.

திடீரென கேஜியின் குரல் கேட்டது. மென்மையான இதமான தொனிநாதமாக இசைத்தது. ஆனால் இசை துளசிக்குப் பிடிக்கவில்லை.

"நீ மெட்ராஸ்லேந்து எல்லாத்தையும் உதறி எறிந்து வந்த நாள்லேந்து நானும் உன் சிநேகிதி மஞ்சுவும் உன்

பிரச்சனையை எப்படித் தீர்த்து வைக்கிறதுன்னு மண்டையை உடைச்சுண்டிருந்தோம்" என்றார்.

"நடுவிலே திடீர்னு பிரச்னை தானாத் தீர்ந்துவிட்டதுன்னுகூட நான் சந்தோஷப்பட்டேன் துளசி ! ஆனா, டாக்டர் கோஷி என் சந்தோஷத்தை வாரி வெயிலில் போட்டுட்டா !" என்றாள் மஞ்சு.

"நடந்து போனதை நினைச்சுப் புலம்பறதில் அர்த்தமுமில்லை, விவேகமும் இல்லை மஞ்சு ! இனிமே என்ன செய்யணும்னுதான் யோசிக்கணும்."

"நாம மட்டும் யோசித்து என்ன புண்ணியம் அப்பா ! துளசியும் சம்மதிக்கணுமே !"

"உன் வயசு இருபத்திரண்டு. பச்சை மண்ணிலே வளர்ற பச்சைக் கொடி. உன் எதிர்காலம் அஞ்சு வருஷத்துக்கு அப்புறம், பத்து வருஷத்துக்கு அப்புறம், ஏன், இருபது, முப்பது, நாப்பது வருஷத்துக்கு அப்புறம் எப்படி இருக்கும் ? நான் யோசிச்சுப் பார்க்கறப்போ என் கண் கலங்கறது துளசி !"

துளசி மௌனமானாள். திடீரென அவள் முன் அவளே முப்பது வயதுக்காரியாக, நாப்பது வயதுக்காரியாக, ஐம்பது, அறுபது வயதுக்காரியாக நின்றாள். அவள் கண்ட காட்சி வேதனையைத் தூண்டவில்லை. மாறாக சிரிப்புத்தான் தோன்றியது.

"அப்பா ! நீங்க ரொம்ப ஸெண்டிமெண்டலாப் பேசறேள். யதார்த்தமாப் பேசுங்கள்... கீர்த்தி என்ன குத்தம் செய்தான்னு உங்க மனசிலே படறது ?"

"இவ அங்கே நிம்மதியா, சந்தோஷமா, திருப்தியா கட்டினவனோட குடும்பம் நடத்தலாம்னு போயிருக்கா... அங்கே ஒரு பட்டாளமும் கூடவே இருக்கும்னு எதிர் பார்க்கலை. சின்ன வயசிலேந்து பெத்தவாளுக்கும் கூடப் பொறந்தவாளுக்கும் உழைச்ச உழைப்பிலேந்து விடுதலை



கிடைச்சணும்கற வெறியிலே, யாரா இருந்தாலும் பரவாயில்லைன்னு ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டாள்... இல்லியா ?"

"எங்களுக்குத் தெரிஞ்சதைச் சொல்லாம, தெரியாத புது விஷயம் ஏதானும் இருந்தாச் சொல்லுங்கள் அப்பா !" என்றாள் மஞ்சு.

"இந்த கீர்த்தி இவளோட அவஸ்தையைப் புரிஞ்சுக்கலை. இவள் சுமந்த பாரத்தைத் தெரிஞ்சுக்கலை. ஏன் துளசி ! அங்கே எல்லார் வீட்லேயும் இருக்கிற மாதிரி மாவு அரைக்கிற கிரைண்டர், காஸ் அடுப்பு, மிக்ஸி, ஃப்ரிஜ் எல்லாம் இருக்கு இல்லியா ?"

துளசி சிரித்தாள்.

"நான்தான் மெஷின் ! ஃப்ரிஜ் படாதாம் ! காஸ் உண்டு."

"பார்த்தாயா மஞ்சு ? ஈஸியா வேலையை முடிக்க இந்தக் காலத்தில எத்தனையோ கிச்சன் எக்விப்மெண்ட் இருக்கு. ஆனா, கீர்த்தி எதையும் வாங்கி வைக்கவில்லை. இவளுக்கு அலுப்புத் தட்டும்படியா நடந்துண்டிருக்கான்."

"அங்கே ஆருக்கும் மெஷின்லே அரிசி அரைச்சா பிடிக்காது. கல்லொரல்லேதான் அரைக்கணும்."

"ஒரு பெண் எத்தனை நாள்தான் பொறுமையா இருப்பா ! அதுவும் துளசிக்குப் பிறந்த வீட்லேயே ஏற்கனவே அலுப்பு" என்ற கேஜி, "துளசி ! நீ நிச்சயமா இனிமே மெட்ராஸுக்குப் போகமாட்டாய் இல்லியா ?"

"எத்தற தரக்கா சொல்றது ?"

"இன்னமே கேக்க மாட்டேன். அது சரி... மஞ்சு, மேஜர் எப்ப வரான் தெரியுமில்லியா ?"

"ஒரு மணிக்கு."

"துளசி! இந்த மேஜர் திலக் யார் தெரியுமா?"

"ஆருக்குத் தெரியும்?"

"இவன் ஆர்மியிலே டாக்டர். இவனோடு அப்பாவும் நானும் முப்பது வருஷம் செக்ரடேரியட்டில் ஒன்னா வேலை செய்தோம்."

"அதுக்கென்ன இப்ப?"

"எனக்கும் இவனோட அப்பாவுக்கும் ஒரு ஒத்துமை உண்டு."

"அது என்ன அப்பா?"

"திலக் பிறந்த கையோட அவனுடைய அம்மா போனாள். நீ பிறந்த கையோட உன் அம்மா போனாள். ரெண்டுபேரும் ரெண்டாம் கல்யாணம் செய்ஞ்சுக்கலை."

"நிறைய பணம் இருக்கு இல்லியா?" என்றாள் மஞ்சு.

"கொஞ்சமா நஞ்சமா டெல்லியிலே ஒரு வீடு, ஷில்லாங்கிலே ஒரு சின்ன எஸ்டேட், பங்களா... பரம்பரைப் பணக்காரன்... ஒண்டிக்கட்டை... கூட உட்கார்ந்து சாப்பிட ஒரு சித்தப்பா பெரியப்பாவோ, அதுதான் வேண்டாம், ஒரு அக்கா தங்கையோ இருந்திருக்கக் கூடாதா? பெரிய பணக்கார அநாதை!"

"பாவம்" என்றாள் துளசி.

ஓரிரு கணங்கள் மௌனம் சாதித்த கேஜி, "இந்த திலக் எனக்கு ரெண்டு மாசம் முன்னாலே ஒரு லெட்டர் போட்டிருந்தான். மஞ்சு! அந்த லெட்டர் எங்கே?"

"எனக்கு என்ன தெரியும்? உங்க மேஜைக்குள்ளேதான் இருக்கும். பிக்கு பிடுங்கல் இல்லாத இடம்."

"கையைத் துடைக்க ஒருத்தி, காலைத் துடைக்க ஒருத்தி, அப்புறம் சமையற்காரி, டிரைவர்," என்று கேஜி இழுத்தார்.

"இதெல்லாம் இப்ப எந்துக்குச் சொல்றயள்?"



"அவன் லெட்டர் போட்டான்னு சொன்னேன் இல்லியா, துளசி?"

"அதான் சொன்னேளே!"

"அவனுக்கு ஒரு நல்ல பெண்ணா, அதுவும் இந்த ஊர்ப் பெண்ணா, நான் பார்த்து நிச்சயம் செய்யணுமாம். அவன் வீட்லே அவன் பெண்டாட்டி இருபத்திநாலு மணி நேரமும் காலை ஆட்டிண்டு இருக்கலாம். சாப்பிடறதும் தூங்கறதும் தான் வேலை."

"நீங்க என்ன சொன்னேள்?" என்று கேட்டாள் மஞ்சு.

"நான் பதில் போட்டேன். இப்ப அவனே நேரில் வந்து விட்டான்."

"ஆனா, அவர் அவசரப்படறதில் அர்த்தம் இல்லை அப்பா! ஒருத்திக்கு தன் புருஷன் கிட்டேயிருந்து விடுதலை கிடைக்க ஒரு வருஷமாவது ஆகும்."

"நீங்க என்ன..." —துளசி.

கேஜி இடைமறித்தார்.

"துளசி, நீ வாழணும். ஏற்கனவே நீ அமைச்சுண்ட வாழ்க்கை உனக்கு நரகவேதனையா இருந்தது. அதை நீ மறக்கணும். நீ ஒரு புருஷனை உதறிட்டு வந்ததிலேந்து அவனோடு வாழ உனக்குப் பிடிக்கலைங்கறது எல்லாருக்கும் ரொம்பத் தெளிவாப் புரிஞ்சுடுத்து. நாம ரொம்ப முன்னேறியிருக்கோம். முப்பது வருஷம் முன்னாலே நினைச்சுப் பார்க்காததெல்லாம் இப்பத்திய சமூகத்தில் நியாயமா சட்ட ரீதியா நடக்கிறது. மனச்சேர்க்கை இல்லாம இப்ப தம்பதிகள் வாழ்ந்து தங்கள் தாம்பத்தியத்தை நரகமாக்கிக் கொள்றதில்லை. நீ சின்னப் பொண்ணு, அழகு குலையாம இருக்கே! உன் மனசு விரும்பற வாழ்க்கையை நான் ஏற்பாடு பண்ணித்தரேன். நீ கிர்த்தின்ன ஒரு ஸ்லேட் பலகையில்தான் எழுதியிருக்கே. அழிக்கறதுக்கு ரப்பர்கூட வேண்டாம். ஈரம் போறும்.

திலக் நல்லவன். கொஞ்சம் வயசு அதிகம்தான்... ஆனா, அதுக்கு அது பணம் இருக்கு. செல்வாக்கு இருக்கு... பதவி இருக்கு... நல்ல தொழில் இருக்கு... உன் உடம்பில் ஈ உட்கார விடமாட்டான்! நீ லேசாக தலை ஆட்டு போறும்! எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன் எனக்கு நீயும் வேணும்; திலக்கும் வேணும்."

கேஜி கூறக் கூற துளசிக்குத் தலை சுற்றிக் கொண்டே வந்தது. கண்கள் செருகின. உடல் பதறியது.

"மாமா?" என்று அலறினாள்.

"ஏன் கத்தறே துளசி? அப்பா என்ன சொல்லிட்டார் இப்போ? ஒரு ஆண் பிள்ளை ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்க சமூகம் அனுமதி கொடுக்கற மாதிரி, ஒரு பெண்ணும்..."

"மஞ்சு!"

"ஏன் அலர்றே? நீ பேருக்குத்தானே ஒரு தாலியைக் கழுத்திலே தொங்கவிட்டுண்டிருக்கே! புடவையை அடிக்கடி மாத்திக் கட்டிக்கறோம். ஏன்? தாலியை ஒரே ஒரு தடவை மாத்தி..."

துளசி அழ ஆரம்பித்தாள். கேஜியும், மஞ்சுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

# 19

மஞ்சு மெதுவாக, தாழ்ந்த குரலில் பேசலானாள்:

"துளசி! நீ வயது வந்த பெண். சின்னக் குழந்தை அழற மாதிரி அழப்படாது. இப்ப யார் உன்னை என்ன சொல்லிவிட்டார்கள்?"

"அதானே!" என்றார் கேஜி.



துளசி புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு, இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். அன்பும் கனிவும் பிரதிபலிக்கும் முகங்கள்தான் தெரிந்தன. இருவரும் ஒரு மாபெரும் திட்டத்தை அவளுக்காகத் தயார் செய்து அவள் முன் விரிக்கிறார்கள். ஏன் அவளுக்கு ஒரு திருப்தியான பதில் கிடைக்கவில்லை.

மஞ்சு மீண்டும் ஆரம்பித்தாள்.

"நீ புகுந்த வீட்லேந்து, அவா விரட்டாம, நீயாகவே ஓடி வந்தவ. கீர்த்திங்கற உன் புருஷனோடு சேர்ந்து வாழப் பிடிக்காம, அவன் மாசா மாசம் ஜீவனாம்சமா அனுப்பற பணத்திலே நிம்மதியா நாளை ஓட்டலாம்ங்கற எண்ணத்திலே நீ பறந்து வந்தவ... இப்ப நாங்க என்ன சொல்றோம்! நீ செழிப்பா வாழணும்னு ஆசைப் படறோம்..."—

மஞ்சு முடிக்க, கேஜி தொடர்ந்தார்:

"இதிலே எங்களுக்கு எந்தவிதமான சுயநலமும் இல்லை துளசி! நீ அட்வகேட் பரசுராமனுடைய பொண்... நான் அவர் மேலே பெரிய மதிப்பு வைச்சவன். நீ மஞ்சுவோடே உயிருக்குயிரான சிநேகிதி... உன் அண்ணாவும் அக்காவும் அம்மாவும் திரும்பத் திரும்ப ஒரே பாட்டைத்தான் பாடுவா..."

"மஞ்சு! அந்தப் பாட்டு உனக்கு ஏற்கெனவே புளிச்சுப் போன பாட்டு. ஆனா இப்ப நாங்க பாடற பாட்டு, உன் எதிர்காலப் பசுமையை நினைச்சுப் பாடற பாட்டு..." என்றாள்.

"திலக் நல்ல பிள்ளை... அவன், உனக்குச் சட்ட ரீதியா விடுதலை கிடைக்கற வரைக்கும் காத்திருக்கத் தயார்னு பாலக்காடு ஜங்ஷன்லேந்து வர்றப்பவே சொல்லிட்டான்!"

துளசி திடீரென்று, "ஐயோ குருவாயூரப்பா!" என்று கத்தினாள்.

அவளுடைய குரலின் பயங்கரமான எதிரொலியில் மஞ்சுவும் கேஜியும் ஒருவரை ஒருவர் பார்த்தவர்களாய் நின்றனர்.

"நான் என் ஆம்படையானை விட்டுட்டு வந்தவதான். இருக்கப் பிடிக்கலைன்னு மடங்கினவதான்... ஆனா, நான் எந்நைக்குமே வேறு ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிண்டு, அவனோடு சுகமா இருக்கணும்னு என்னோடு குருவாயூரப்பன் மேல் ஆணையா மனசாலே விசாரிச்சுட்டில்லை... ஆர் சொன்னா உங்களுக்கு, நான் இன்னொரு தாலி கட்டிப்பேன்னு? உங்கரெண்டு பேருக்கும் என்ன யோக்கியத்தை இருக்கு, நேக்கு இப்படி அட்வைஸ் பண்றதுக்கு?"

"நாங்க ரெண்டு பேரும் யோசனைதான் சொன்னோம்" என்றார் கேஜி.

"ஆரு கேட்டா ஒங்க ஒஜனையை? ஊர் ஊரா அலைஞ்சு, கோவில் கோவிலா திரிஞ்சு பஜனைப் பாட்டுப் பாடறேளே, உங்க பாட்டை அங்கே வைச்சுக்குங்கோ... டீ, மஞ்சு! நீ பெரிய எம். பி. பி. எஸ்—ஸா இருக்கலாம்டீ! ஒனக்கு இதோ என் கழுத்திலே தொங்கற மாங்கல்யத்தைப் பத்தி என்னடீ தெரியும்... மின்னாலே நீ சாவித்திரி கதையும் அனுசூயா கதையும் படிடீ... நளாயினியைப் பத்தித் தெரியுமோடி உனக்கு...?"

"ரொம்ப ஓடாதே துளசி... நீ இப்ப சொன்ன மூணு பேரும் ஆம்படையானை விட்டுட்டு வந்தவா இல்லை!" என்றார் கேஜி.

"அது நேக்கும் தெரியும் மாமா. எந்தப் பொண்ணும் ஆம்படையானை விட்டுட்டு அனாவசியமா வரமாட்டா. நான் வந்துட்டேன்னா அதுக்கு என் ஆம்படையான் காரணமில்லை, நான் தான்... என்னாலே கழியலை. குனிஞ்சு நிமிர்ந்து என்னோடு ஒடம்பு ஒடிஞ்சுது... மனசு



வெந்தது... என் ஆம்படையான் ரெண்டாம் கல்யாணம் கழிச்சுக்கட்டும்... ஆனா, நான்... நான், இதா இந்தத் தாலியோடே, நெத்திக் குங்குமத்தோடே நாளைக் கழிச்சுக் கூட்டிக்கறேன்... நான் போறேன்... இன்னமே இந்தாத்து வாசப்படியைச் சவுட்ட மாட்டேன்..."

சொன்ன துளசி, இருவருடைய முகங்களையும் ஏறிட்டும் பாராமல், டீப்பாயின் மேலே இருந்த கைப் பையை ஞாபகமாய் எடுத்துக்கொண்டு நகர்ந்தாள்.

மஞ்சு தன் தகப்பனாரைப் பார்த்துப் புன்முறுவலிக்க, கேஜி லேசாகச் சிரித்தார். மெதுவாகத் திரும்பிப் பார்த்தார். துளசி திண்ணையில் தன் செருப்பைத் தேடிக் கொண்டிருந்தாள்.

"துளசி...!" —மஞ்சு.

துளசி பதில் குரல் கொடுக்கவில்லை.

மஞ்சு விரைந்து சென்று துளசியை அடைந்து அவளுடைய கையைப் பற்றினாள்.

"துளசி!"

"......"

"என்னை மன்னிச்சுடு துளசி! ஐ'ம் ரியலி வெரி ஸாரி, துளசி!"

"நந்நா தேய்ஞ்ச செருப்பாலே அடி. அப்றம் ஸாரின்னு சொல்லு..."

"ஒரு மாங்கல்யம் எவ்வளவு பவித்திரமானதுன்னு நீ எனக்குப் புரிய வைச்சுட்டே... இதெல்லாம் காலேஜ்லே சொல்லித் தர பாடம் இல்லே... காலம் காலமா, பரம்பரை பரம்பரையா நம்ப தேசத்தோடு பண்பாடா வர்ற தர்மம்னு நீ சொல்லாம சொல்லிட்டே... வா... உள்ளே வா... நீ ஒருத்திதான் என் உயிர் சிநேகிதி... வா..."

"வா, துளசி... தப்பு எல்லாம் என் மேலேதான்... இன்னமே உன் சொந்த வாழ்க்கையைப் பத்தி நாங்க உன்கிட்டே பேசமாட்டோம்... இது உன்னோடு குருவாயூரப்பன் மேலே ஆணை..."

செருப்பைத் தேடி மாட்டிக் கொண்டவள், கால்களை உதறினாள்.

"என் மனசு ரொம்ப கஷ்டப்பட்டுது கிட்டயா!" என்றாள் அவள்.

"இனிமே எங்களாலே வேதனை ஏற்படாது!" என்றாள் மஞ்சு. பிறகு தொடர்ந்து, "சரி வா ரெண்டு பேரும் லைம் ஜூஸ் குடிப்போம்!" என்றாள்.

"நான் என்ன தப்பு பண்ணினேன்?" என்றார் கேஜி.

"நீங்க குடிக்கண்டாம்... தொண்டை கட்டிக்கும்... அப்றம் ஆர் ஒங்க ப்ஜனைப் பாட்டைக் கேப்பா?" என்றாள் துளசி.

கேஜியும் மஞ்சுவும் சிரிக்க, துளசியும் கூடச் சிரித்தாள்.

மேஜர் திலக் சரியாக ஒரு மணிக்குச் சொன்னபடி வந்தான். அவன் ஆட்டோவிலிருந்து இறங்குவதைக் கண்டதுமே துளசி சமையலறைக்கு ஓடி அங்கே பதுங்கிக் கொண்டாள்.

"டீ, துளசி... என்னடீ இங்கே மூலையில் ரெண்டு காலையும் கட்டி உட்கார்ந்திருக்கே?"

"நேக்கு அந்த மேஜர் மூஞ்சியைப் பார்க்கண்டாம்."

"நாம நாலு பேரும் ஒண்ணா சாப்பிடப் போறோம."

"நான் இங்கேயே சாப்பிட்டுக்கறேன்."



"அசடு மாதிரி பேசாதே... நான் தான் மேஜர்கிட்டே உட்கார்ந்துக்கப் போறேன். டைனிங் டேபிள்லே மாத்திரம் அல்லடீ... என்னன்னிக்கும்டீ."

"மஞ்சு... மஞ்சு! நீ என்ன சொல்றாய்?"

"அப்பாவும் நானும் கொஞ்ச நேரம் தனியாப் பேசிண்டிருந்தோம் இல்லியா?"

"ஆமாம்."

"மேஜர் ரெண்டு மாசம் முன்னாலே ஒரு லெட்டர் போட்டார்னு அப்பா சொன்னார் இல்லியா?"

"மேலே சொல்லுடீ..."

"என்னை மனசிலே வைச்சுண்டுதான் அந்த லெட்டரை திலக் எழுதினாராம்."

"அப்ப எந்துக்கு கார்த்தாலே நீங்க ரெண்டு பேருமே என்னைக் கழுதையாக்கினேள்?"

"மேஜர் திலக்கோடு அப்பாவும் என் அப்பாவும் நீயும் நானும் மாதிரி. அப்பா முன்னாலே என்னைக் கேட்டார். டெல்லிக்கும் ஷில்லாங்குக்கும் போக முடியாதுன்னேன்... திலக் ஏமாந்து திரும்பிப் போக வேண்டாம்னு தோணித்து... அதனாலே..."

மஞ்சு பேசவே கஷ்டப்பட்டாள். வார்த்தைகளின் அபஸ்வரம் அவளுடைய பொய்யில் எதிரொலித்தது. அவளும் கேஜியுமாகச் சேர்ந்து நடத்தியது ஒரு நாடகம். துளசியின் உண்மை மனநிலை என்ன என்று அறிய, இருவரும் திட்டமிட்டுச் செய்த ஓர் இதமான சூழ்ச்சி என்று ஒப்புக் கொள்ள அவள் முன்வரவில்லை. பொய்யைச் சொல்லிச் சமாளித்துக் கொள்ள முயன்றாள்.

"சரி, நீயும் உன் அப்பாவும் என்ன பேசிண்டேள்?"

"நான் மேஜரோட டில்லி போக வேண்டாம், டில்லி, பாலக்காட்டுக்கு வர ஏற்பாடு செய்றேன்னு அப்பா

சொன்னார். அப்படியானால் எனக்கு ஆட்சேபணை இல்லைன்னு சொன்னேன்."

"மஞ்சு... மஞ்சு... நோச்குக் கல்யாணமா ?"

"ஏன்... ஏன்... நானும் ஒரு பெண்தானே ?"

"அதுக்கில்லை மஞ்சு..."

"திலக்கும் ஒரு டாக்டர்... நானும் ஒரு டாக்டர். அவருக்கு என்னைப் பிடிச்சிருக்கு. நாளாவட்டத்திலே எனக்கும் பிடிக்க ஆரம்பிக்கும்."

துளசியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

"சரி, எழுந்து வா ! சாப்பிடலாம் !" என்றாள் மஞ்சு.

துளசி மெதுவாக எழுந்தாள்.

மஞ்சுவுக்குக் கல்யாணம் !

ஒரு இருபத்தாறு வயதுக்காரி நாப்பது வயதுக்காரன் ஒருவனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள் !

உலகத்திலே அதிசயங்கள் நடக்கறது நிற்கவே நிற்காதா?

டாக்டர் மஞ்சுளா !

டாக்டர் திலக் !

டாக்டர் மஞ்சுளா திலக் !

தூக்கத்தில் நடக்கிறவளைப் போல துளசி நடந்தாள்.

அவளுடைய மனத்தில் வேதனையும் முளைக்கவில்லை; மகிழ்ச்சியும் மலரவில்லை.

திலக்கின் பணத்தில் கேஜியும் மஞ்சுவும் மயங்கி விட்டார்களோ என்ற கேள்வி மட்டும் லேசாக எழுந்தது.

மேஜர் திலக்கை அன்று மாலை ரயிலடியில் கேஜியும் மஞ்சுவும் வழியனுப்பி விட்டுத் திரும்புகையில், "ஏம்பா, நாம துளசி வீட்டுக்குப் போகக் கூடாது ?" என்று மஞ்சு கேட்டாள்.



"போனாப் போச்சு... புது பிரிட்ஜ் வழியாப் போ !" என்ற கேஜி, "நீ என்ன நினைக்கிறே மஞ்சு ?" என்று கேட்டார்.

"எதைப் பத்தி ?"

"துளசியைப் பத்தி !"

"நல்ல பொண்... இன்னும் மென்டலா முதிரவில்லை. நாம சமாதானப்படுத்தியதும் பழைய துளசியா மாறிட்டா. வெகுளி !"

"நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்... அவ மனசு நல்ல முதிர்ந்த மனசுதான்... மூளையும் முதிர்ந்த மூளைதான். ஆனா, பொதுவாகவே ஒரு அதீத வெறுப்பு அவளைப் பாதித்திருக்கு. இன்னிக்குக் கார்த்தாலே அவ பேசினதையெல்லாம் தான் கேட்டாயே !" என்றார் கேஜி. பிறகு, "உன் மேலே ரொம்ப அன்பு வைச்சிருக்கா, அதான் பழையபடி மாறினா !" என்றார்.

"ஒன்று மட்டும் ரொம்பத் தெளிவா புரிஞ்சிருக்கு" என்றாள் மஞ்சு, காரை ஸ்டார்ட் செய்துகொண்டே.

"பார்த்துப் போ... ஆள்கள் குறுக்கும் நெடுக்குமாப் போகிறார்கள்... என்ன தெளிவாப் புரிஞ்சிருக்கு மஞ்சு ?"

"ஒரு நாள் இல்லாட்டா ஒரு நாள் துளசி கீர்த்தியிடமே போய்ச் சேருவாள்."

"எல்லா நதிகளும் சமுத்திரத்தைப் போய்ச் சேருவதில்லை மஞ்சு."

"இருக்கலாம்... ஆனா துளசி அந்த மாதிரி நதி அல்ல. அவளுக்கு கீர்த்தி மேலே வெறுப்பு இல்லை. ஏன், சொல்லப் போனா புருஷன்கிற மதிப்பும் அபிமானமும், ஏன் பக்தியும் கூட இருக்கு."

"அப்ப ஏன் அவனுக்கு அவள் ஒரு லெட்டர் போடற தில்லை? அவன் வந்து போன பிறகு வருத்தப்படவில்லை?"

"எரிமலை இன்னும் குமுறிண்டிருக்கு. அடங்கக் கொஞ்ச காலமாகும். நளாயினி, சாவித்திரின்னு புராணங்களை மேற்கோள் காட்டறாள்."

கேஜி சிரித்தார்.

"துளசிக்குத் தன்னுடைய கடமை என்னன்னு தெரியும்... தாற்காலிகமா அதை உதறிட்டு வந்திருக்கா. ஆனா, இது தாற்காலிகமான உதறல்ங்கறதை அவள் உணரவில்லை."

"எப்படி உணர வைக்கிறது?" என்றாள் மஞ்சு.

"உன்னாலேயும் என்னாலேயும் ஏன், மூன்றாம் பேரா லேயும் உணர வைக்க முடியாது. அவளாகக் கொண்டு வந்த பிரச்சனையை அவளேதான் ஒரு நாள் தன் வழியில் உணர்ந்து தீர்த்துக் கொள்ளணும்."

கேஜி முதலில் இறங்கிப் படி ஏறினார்.

திண்ணையை அடைந்த பிறகுதான் வீடு பூட்டியிருப்பது தெரிந்தது.

துளசி எங்கே?

யாரைக் கேட்பது?

கேஜி திரும்பி வந்து காரில் ஏறிக்கொண்டர். அவருள் ஒரு பயம் பிறந்தது.

# 20

அன்று கேஜியின் வீட்டிலிருந்து துளசி வழக்கமான ஆரவாரத்துடன் திரும்பவில்லை. காலையில் மஞ்சுவும் கேஜியுமாகச் சேர்ந்து அவளைப் பகடைக்காயாக வைத்து விளையாடினார்கள். அவள் தன் வாழ்க்கையிலேயே அன்று அலறியது போல என்றுமே அலறியதில்லை. அதன் பிறகு இருவரும் அவளுடைய காலைப் பிடிக்காத குறையாக மன்னிப்புக் கேட்டார்கள். இப்போது, தன் வீட்டுக்குத் திரும்புகையில் நினைத்துப் பார்த்த அவள், எல்லாம் ஒரு நாடகம் என்று எண்ணினாள். தன்னுடைய அந்தரங்கமான எண்ணங்கள் என்னென்ன என்று அளந்து பார்க்க கேஜியும் மஞ்சுவும் இப்படி ஒரு சூழ்ச்சி செய்துவிட்டதாக அவளுக்குத் தோன்றியது. இதன் காரணமாகத் துளசிக்கு இருவர் மீதும் எரிச்சலோ, கோபமோ உண்டாகவில்லை. மாறாக, அவள்பால் இருவரும் எடுத்துக் கொண்டிருக்கும் அக்கறை யும், அந்த அக்கறைக்குக் காரணமான அன்பும்தான் புரிந்தது. ஆனால், மஞ்சு தானே மேஜர் திலக் எனும் ஒரு நாற்பது வயது வழுக்கையைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னபோது, அதை அவளால் நம்ப முடியவில்லை. ஏழை எளியவர்களுக்கு உதவி புரிவதிலும் சேவை புரிவதிலும் சதா ஈடுபட்டிருக்கும் மஞ்சு, எப்படி ஒருவனுக்கு மனைவியாக அமையமுடியும்— அதுவும் ஆர்மியில் டாக்டராக இருப்பவனுக்கு? இந்த மேஜர் சாப்பிடுகிறபோது துளசியுடன் அதிகம் பேசவில்லை. முழுக்க முழுக்க கேஜி மாமாவும் மஞ்சுவும்தான் பேசினார் கள். ஏதோ ஓரிரு தடவை போனால் போகிறது என்ற ரீதியில் சிரித்தான். துளசிக்கு அவனுடைய சிரிப்பு மாய்மாலச் சிரிப்பாகப் பட்டது. கல்யாணமான பிறகு

மஞ்சு பழைய மஞ்சுவாகத் தொடர்ந்து காணப்படுவாளா? அவளுடைய வாழ்க்கைமுறை நிச்சயமாக மாறிவிடும். இப்போது தினசரி பல ஊர்களுக்குச் சென்று பல ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வைத்திய உதவி அளிக்கிறாள், பிறருக்கு சேவை செய்வதில்தான் மனத்துக்குத் திருப்தியும் நிம்மதியும் நிறைவும் கிடைக்கின்றன என்று கூறுகிறாள். துளசி பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தாலும் அவளுக்கு ராபின் ஹூட் கதை தெரியும். பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஏழைகளுக்கு உதவி செய்தவன். காயங்குளம் கொச்சுண்ணியும் கேரளாவின் ராபின் ஹூட்டாகத் திகழ்ந்தவன். மஞ்சு, டாக்டர் தொழிலில் யாரையும் கொள்ளையடிக்கவில்லை என்றாலும், பணக்காரர்களிடம் வசூலித்த பணத்தில் பெரும் பகுதியை ஏழைகளுக்காகச் செலவு செய்கிறாள். இத்தகைய லட்சியம் நிறைந்த மஞ்சுவால் எப்படி ஒருவனுடைய மனைவியாக வாழ்க்கை நடத்த முடியும்? அவள் மனம் குழம்பினாள்.

மஞ்சுவின் கல்யாணச் செய்தி அதிர்ச்சியை முதலில் அள்ளிக் கொட்டினாலும், மெல்ல மெல்ல அது துளசியின் சிந்தனையைத்தான் தூண்டி இழுத்தது. அவளுடைய மனத்தில் மஞ்சு ஒரு முத்திரையாகப் பதிந்து போயிருந்தாள். பச்சை குத்தியிருந்தது போல அழிய முடியாத முத்திரை அது. அந்தப் பிரகாசமான முத்திரை திடீரென பொலிவு இழந்து விட்டதாகப்பட்டது.

இரண்டாம் நம்பர் பஸ் வர ,அவள் ஏறிக் கொண்டாள். டிக்கெட் வாங்கி, உட்கார்ந்தாள். ஒரு பயம் மிகவும் லேசாக உதித்து வெகு அவசரமாய் வளர்ந்தது. முழு நேர ஓய்வும் நிம்மதியான, சலனமில்லாத நீரோட்ட வாழ்வும் வேண்டும் என்று சென்னையிலிருந்து திரும்பி வந்த அவள், கடந்த சில மாதங்களாக, சிரமமில்லாத ஆனால் அதே சமயத்தில் சுவாரசியம் நிறைந்த வாழ்க்கை வாழ்கிறாள். அடுப்பு அடியில் வெந்து



வெதும்பிப் போனவள், இப்போது வெளியில் வாடினாலும் வெயிலின் குளிர்ச்சியை அனுபவிக்கிறாள். பல இடங்கள், பல கிராமங்கள், பற்பல விதமான ஆண்கள்! பெண்கள்! குழந்தைகள்! ஒரு சிறு பெண்ணின் அல்லது பையனுடைய காயத்தைக் கழுவி, மருந்து தடவிக் கட்டிவிடும்போது, ஏதோ செய்யவே முடியாத ஒன்றைச் செய்துவிட்டதான பெருமையும் பூரிப்பும் அவளுக்கு உண்டாகிறது. நூற்று நாலு டிகிரி ஜுரத்தில், நாளெல்லாம் அனல் புழுவாகக் கிடந்த நோயாளி மீண்டும் பழைய நிலைமைக்குக் வந்தபோது, அந்த நிலைமைக்குக் காரணம் மஞ்சு என்ற டாக்டர் மட்டும்தான் என்ற எண்ணம் ஏற்பட வில்லை; தன் உடலால் மணலை உதிர்த்துக் கொடுத்த அணிலும் பாலம் கட்டுவதில் பங்கு பெற்றதாக ராமனே ஏற்றுக் கொள்ளவில்லையா? துளசி தன்னை ஒரு அணிலாக பாவித்துக் கொண்டாள். மஞ்சுவின் வெற்றிகளில் கடுகளவேனும் பங்கு இருக்கிறது என்று எண்ணி மகிழ்ந்து கொண்டாள்.

இப்போது ஓடிக் கொண்டிருக்கும் பஸ்ஸில் அவளுடைய மகிழ்ச்சி குலைந்து போவதாக மனம் பயந்தது.

மேஜர் திலக் வந்தால் மஞ்சு அவளைத் தன்னுடன் வரும்படி அழைக்கமாட்டாள். இருவருமே டாக்டர்கள். அதுவும் திலக் பணக்காரன். பெரிய கிளினிக் கட்டத் திட்டம் போடுவான். ஆர்மியின் அதிகாரத் தோரணை தான் நிலவும். அங்கே துளசிக்கு இடம் இருக்காது.

பஸ் புது கல்பாத்தியிலிருந்து பழைய கல்பாத்திக்கு வந்தது. கிருஷ்ணன் கோயில் கொடிமரம் கண்ணில் பட, துளசி இருக்கையை விட்டு எழுந்தாள். பஸ் நின்றதும் மெள்ள இறங்கினாள். கோயில் முன் நின்றாள். மத்தியானம் மூன்றரை மணிக்குக் கோயில் கதவு நன்றாக அடைத்துச் சாத்தப்பட்டிருந்தது. ஆனால், அவளுடைய மூடிய கண் இதழ்களுள் கிருஷ்ணன் தோன்றினான்.

'கிருஷ்ணா ! குருவாயூரப்பா ! மஞ்சு ஆரைக் கல்யாணம் கழிச்சுண்டாலும், அவ எங்கே இருந்தாலும் நன்னா இருக்கனும்.'—வாயால் முணுமுணுத்த துளசி, வலது கையால் கன்னங்களையும் கண்களையும் தொட்டுத் தொழுதுவிட்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

வீட்டு வாசலில் அம்மணி !

துளசியைக் கண்டதும் அம்மணி வீட்டினுள் திரும்பிப் பார்த்துக் குரல் கொடுப்பது தெரிந்தது.

யாரோ வந்திருக்கிறார்கள் ?

யார் ?

கீர்த்தியாக இருக்குமோ ?

இப்பொதுதானே கீர்த்தி வந்துட்டுப் போனார். அவர் எழுதிக் கொடுத்துப்போன கடிதத்தைக்கூட அவள் இன்னும் படிக்கவில்லை ! அவராக இருக்காது.

பம்பாயிலிருந்து அம்மாவோ ?

அம்மாவாக இருந்தால் அவள் திரும்பிப் போகும் வரை துளசிக்கு ஊஞ்சல் கிடைக்காது. எதற்கு அம்மா இப்போதே வரவேண்டும் ? அப்பாவின் முதல் சிரார்த்தத் துக்கு இன்னும் நிறைய நாட்கள் இருக்கின்றனவே ?

துளசி படியில் காலை வைக்க, அம்மணி, "துளசி, ஆர் வந்திருக்கான்னு சொல்லு !" என்றாள்.

"ஆர்டீ ?"

"சொல்லமாட்டேன்."

திண்ணையில் ஏறின துளசி, ரேழியை அடைந்தபோது ஊஞ்சலுக்கு அருகே ஒரு நாற்காலியில் மைதிலி உட்கார்ந் திருப்பதைக் கண்டாள். திடுக்கிட்டாள். திகைத்தாள். அதே சமயம் மகிழ்ச்சியில் சிரித்தாள். புகுந்த வீட்டில்



துளசியின் மனத்தை வெகுவாக ஈர்த்த ஓர் உயிர், தெய்வத்தின் சோதனையால் ஒரு கால் விளங்காமற் போனால்தான் என்ன ? மைதிலியின் மனம் ஒரு பாற்கடல் ; அதுவும் ஆலகாலத்தை வெளியே எடுத்த பின் எல்லோரும் கண்ட பாற்கடல்.

மைதிலி துளசியைக் கண்டதும் எழுந்திருக்க முயன்றாள்.

துளசி, "ஒக்காரு மைதிலி. நீ எப்ப வந்தாய் ? டீ, அம்மணி, மைதிலிக்கு காபி பலகாரமெல்லாம் தந்தாயாடீ ?" என்றாள்.

"சாயை மாத்திறம் போறும்னாள்."

"அவ அப்படிச் சொன்னாள்னு நீ சும்மாயிருந்தியா ? போய் மின்னாலே அடை தட்டு. அடை மாவு இருக்கு இல்லியா ? மைதிலி ! நீ எப்ப வந்தாய் ? மதராசியிலே எல்லாரும் சௌக்கியமா ? அம்மாவோடே பிரஷர் எப்படி இருக்கு ? பாட்டீம்மா போனப்புறம் பாட்டாப்பா ! எப்படி இருக்கார் ?"

மைதிலி ஆச்சரியத்தில் உறைந்து போனாள். இப்படி ஒரு வரவேற்பை அவள் எதிர்பார்க்கவில்லை.

"எல்லாரும் சௌக்கியம் துளசி. நீ எப்படி இருக்கே ?"

"சுகமா இருக்கேன்..." என்றாள்.

"நேத்து ராத்திரி ஏழு மணியிலேந்து ட்ரை பண்ணினேன், ட்ரை பண்ணினேன் அப்படி ட்ரை பண்ணினேன். லைன் ஆவுட் ஆஃப் ஆர்டர்னு டெலிபோன் டிபார்ட்மெண்ட்ல கடைசியிலே சொன்னா" என்ற மைதிலி, "நான் இன்னிக்கு இங்கே வரப்போறேன்னு முன்கூட்டிச் சொல்லத்தான் போன் பண்ணினேன்" என்று முடித்தாள்.

"உச்சியார்ந்த மஞ்சுவாத்துக்கு போன் பண்ணினாயே... அப்பவே அவள்கிட்டே சொல்லியிருக்கலாமே ? அது சரி, எந்த வண்டியிலே வந்தாய் ?"

"சொல்லியிருக்கலாம்... ஏனோ தோணவில்லை. பிளேன்லே கோயமுத்தூர் வந்தேன். அங்கே அக்கா வீட்லே சாப்பிட்டுவிட்டு டாக்ஸியிலே இங்கே வந்தேன். இந்த ஊர்லே எங் பாங்க் பிராஞ்சு இருக்கு. மானேஜர் இல்லை. டிரெயினிங்குக்கு டெல்லி போயிட்டார். அக்கௌண்டண்டும் இல்லை. கல்யாணம்னு லீவிலே போயிட்டார். அப்புறம் அவருக்கு வேறே ஊருக்கு டிரான்ஸ்பர்."

"நேக்கு ரொம்ப சந்தோஷம் மைதிலி. இப்ப பிரமோஷனா ?"

"ஆமாம். இப்ப வேண்டாம்னா இன்னும் ரெண்டு வருஷத்துக்குக் கிடைக்காது. 'பாலக்காடுதானே, ரொம்ப தூரத்தில் இல்லையே, ஒன்று இரண்டு நாளுக்கு துளசியோடே இருந்து கொள்ளலாம், போ'ன்னு எல்லாரும் சொன்னா... அவசர அவசரமா புறப்பட்டு வந்தேன் !"

"ஒண்ணு ரெண்டு நாள் என்ன, நீ பாலக்காட்லேந்து இன்னொரு ஊருக்கு மாறிப் போற வரைக்கும் இந்தாத்தி லேயே இரு. எல்லா சௌகரியமும் உண்டு. அம்மணி என்னோடு பெரிய சிநேகிதி. நன்னா சமைப்பாள். நான் நன்னா சாப்பிடறேன். நீயும் நன்னா சாப்பிட்டுக் குஷியா இரு" என்றாள் துளசி.

மைதிலி பதில் சொல்லவில்லை. துளசி ஒரு விசித்திரப் பிறவியாகத் தோன்றினாள். வலி தெரியாமல் ஊசி குத்தும் டாக்டரைப் போல, இவள் யாரிடமும் சண்டை சச்சரவு போடாமல், பிறர் வலி உணராதபடி புருஷன் வீட்டை விட்டே வந்திருக்கிறாள். நியாயமாக எல்லோ ருக்குமே துளசி மீது வெறுப்பு, எரிச்சல், ஆத்திரம் எல்லாம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், யாருக்குமே, ஏன் கீர்த்திக்குக்கூட ஏற்படவில்லை. தெய்வத்தால் எப்படி இப்படி ஒரு ஜீவனை உருவாக்க முடிந்தது ?



"என்ன ஆலோசிக்கிறாய் மைதிலி ? நீ இந்தாத்திலேயே தான் இருக்கப் போகிறாய் !"

"இப்ப மணி நாலு துளசி ! பாங்க்லே தலையைக் காட்டிட்டு வரலாம்னு பார்க்கிறேன்."

"என்ன அட்ரஸ் ?"

"சுல்தான் பஸார்லே இருக்கு."

"ஒனக்கு வழி தெரியாது மைதிலி. நான் ஒரு ஆட்டோவிலே கூட்டிண்டு போறேன்."

"நீ எதுக்குச் சிரமப்படணும் துளசி ! நான் போய்க் கொள்கிறேன்..."

"இதா அடை வந்தாச்சு. அம்மணி, தொட்டுக்க வெண்ணெய், வெல்லம் எல்லாம் கொண்டு வாடீ. இன்னி லேந்து நீதான் இவளைப் பார்த்துக்கணும் கிட்டயா ?"

"வெண்ணெய், பஞ்சாரை எல்லாம் வைச்சிருக்கேன் துளசி."

"சில சமயத்திலே என் அம்மணி புத்தியோட காரியம் செய்வா... அம்மணி ! ராத்திரிக்கு ஸ்பெஷலா சமைக்கணும்டீ."

"இன்னிக்கு எதுவும் வேண்டாம் துளசி... நீ அடை திங்கலியா ?"

"மஞ்சுவாத்திலே உச்சிக்கு ஒரு மணிக்குத்தான் சாப்பிட்டேன். வயறு இன்னும் கனமா இருக்கு. வேகத்திலே அடையைத் தின்னு... அம்மணி ! ஒரு ஆட்டோ கொண்டு வா... நான் மைதிலியோட போய்ட்டு வரேன். நீ உன் ஆத்துக்குப் போனா, இந்த ஆத்தைப் பூட்டித் தாக்கோலை வைச்சுக்கோ."

"அம்மா உனக்குன்னு பத்து கடலை உருண்டை கொடுத்து அனுப்பிச்சிருக்கா துளசி... ஒரு தடவை

மயிலாப்பூர் கடையிலே வேர்க்கடலை உருண்டை வாங்கி வந்தப்போ, நீ விரும்பிச் சாப்பிட்டாயாம்..."

"இதைக்கூடி அம்மா ஒறமை வைச்சுண்டிருக்காளா? இப்ப நேரமில்லை. அப்றமா தின்னுக்கறேன்" என்றாள் துளசி. மாமியார் கடிந்து பேசியவள் அல்ல. ஆனால் சரளமாகவும் துளசியுடன் பேசியதில்லை. அப்படிப் பட்டவள் துளசிக்கு எது பிடிக்கும் என்று நினைவுகூர்ந்து அனுப்பியிருக்கிறாள். பாவம்! அவளுடைய லோபிரஷர் வியாதிகுணமாக வேண்டும்.

மறுநாள் துளசி மைதிலியிடம் விடை பெற்றுக் கொண்டு மஞ்சுவின் வீட்டுக்குச் சென்றாள்.

அவளைக் கண்டதுமே கேஜி, "துளசி! நானும் மஞ்சுவும் நேத்து உங்க வீட்டுக்கு வந்திருந்தோம்" என்றார்.

"எத்தற மணிக்கு?"

"திலக்கை வழியனுப்பிவிட்டுத் திரும்பறப்ப உன்னை எட்டிப் பார்க்கலாம்னு வந்தோம். வீடு பூட்டியிருந்தது."

"மிந்தா நேத்திக்கு மைதிலிட்டேந்து போன் வரும்னு காத்துண்டிருந்தோம் இல்லியா?"

"ஆமாம், அதுக்கென்ன?"

"என்னை மடங்கிவரச் சொல்லத்தான் அவ போன்லே பேசப் போறாள்னு நான் கூடப் பயந்து போனேன் இல்லியா?"

"மேலே சொல்லு துளசி!"

"என்னை மடங்கி வரச் சொல்றதுக்கு அவ போன் பண்ணலை."

"பின்னே?"

"அவ இங்கே வந்திருக்கா!"

"அடப் பாவமே!"



"பிளேன்லே வந்திருக்கா மாமா! பிளேன்லே கோயமுத்தூர் வந்து டாக்ஸியிலே இங்கே வந்திருக்கா."

துளசி விவரங்களைக் கூறினாள்.

"கூடப் புருஷன் இல்லைன்னாலும் நாத்தனார் இருக்கா."— கேஜி சிரித்தார்.

"ஒங்க மேஜர் என்ன சொல்லிட்டுப் போனார் மாமா?"

"எல்லாம் ஸெட்டில்ட்... ஸிம்பிள் மாரேஜ்— அதுவும் குருவாயூரில்..."

"எந்நைக்கு மாமா? கல்யாணத்துக்கு நான் உண்டோ இல்லியா?"

"நம்ப நாலு பேர்தான் துளசி!" என்று கூறிக் கொண்டே மஞ்சு வந்தாள். பிறகு தொடர்ந்து, "அப்பா, நான் திலக்கைக் கல்யாணம் பண்ணிக்கறது, துளசிக்குப் பிடிக்கலை..." என்றாள்.

"உனக்கு எப்படித் தெரியும் மஞ்சு? துளசியின் மனசில் எப்ப என்ன இருக்கும்னு அந்த ஈசுவரனுக்குக்கூடத் தெரியாது... துளசி, திலக்கும் இந்த ஊர்ல ப்ராக்டீஸ் பண்ணத் தயார்னு சொல்லிட்டான்..." என்றார் கேஜி.

"அப்றம் தெனம் தெனம் மஞ்சு, கார்லே இப்ப ஊர் ஊராப் போய் வைத்தியம் செயற மாதிரி செயமாட்டா!"

"யார் சொன்னா? திலக் ஒரு சர்ஜன். அவர் அவருடைய வேலையைப் பார்த்துப்பார். நான் எப்பவும் போல இருப்பேன்" என்றாள் மஞ்சு.

அடுத்த மாதம் மஞ்சுவின் திருமணம் குருவாயூரில் நடந்தது.

# 21

திருமணம் ஆன மறுநாளே மஞ்சு தேன் நிலவுக்குச் சென்றான். ஆர்மி மேஜருக்கு உள்நாட்டில் பார்த்திராத இடம் இருக்கவில்லை. புது மனைவியுடன் இன்பமாக இருக்க ஐரோப்பிய நாடுகளைவிடச் சிறந்த இடங்கள் இருக்க முடியாது என்று அவன் கருத, மஞ்சுவும் ஒத்துப் பாடினாள்.

மஞ்சு திரும்பி வர இன்னும் சில மாதங்களாகும் என்று உணர்ந்த துளசிக்கு, என்ன செய்வது என்று குழப்பமாக இருந்தது. சென்னையிலிருந்து திரும்பிய சில வாரங்களிலேயே அவளுடைய தினசரி வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. சாப்பிட்டுத் தூங்கி, தூங்கி சாப்பிட்டுக் கொண்டே வாழ்நாள் முழுதும் கணவனுடைய மாதாந்தர முன்னூறு ரூபாயில் கழித்து விடலாம் என்று கனவு கண்டவளை மஞ்சு தட்டி எழுப்பியிருந்தாள். அவளுடன் தினசரி காலையில் ஏழரை மணிக்கு அந்த ஊர், இந்த ஊர் என்று பற்பல ஊர்களுக்குச் சென்று நானாவித மான இடங்களையும் முகங்களையும் பார்த்த துளசி, தானும் மஞ்சுவைப் போலவே உபயோகமாக ஒரு சேவை புரிந்து வருவதாக எண்ணிக் கொண்டாள்.

இப்போது மீண்டும் நேரம் சுமையாயிற்று. உத்தியோக மாற்றலுடன் சென்னையிலிருந்து வந்த மைதிலி, துளசியின் வற்புறுத்தலுக்கு இசையாமல், பணிபுரியும் மகளிர் விடுதிக்குக் குடியேறினாள். அம்மணியும் திடீரென்று அண்ணனுக்கு உதவி தேவை என்று கூறி, வெளியூர் சென்று விட்டாள்.



மொத்தத்தில், முதன் முறையாகத் துளசி தனிமையின் பயங்கரத்தை மெல்ல மெல்ல உணரலானாள். அண்ணன் வீட்டில் அவள் போய்த் தங்கலாம். ஆனால், துளசிக்குப் பிடிக்கவில்லை. யார் வீட்டிலும் யார் தயவிலும் இருக்கக் கூடாது என்ற உறுதியுடன்தானே அவள் கட்டின கணவனையும் உதறிவிட்டு வந்திருக்கிறாள்! இப்போது ஏன் இன்னோர் உறவின் நிழலில் தங்க வேண்டும்?

துளசிக்கு ஒரு வீட்டில் தனியாக இருக்க பயம் ஏற்பட வில்லைதான். ஆனால், தனிமையே கொடுமையாகப் படலாயிற்று. புத்தகங்களில் மூழ்க முயன்றாள். கண்கள் செருகின. பூஜை அறையில், புதுப் புது ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடலானாள். ஆனால் மனம் நிலைக்காமல் அலைந்தது. இதுவரையில் அவள் மற்றவர்களுக்குச் சமைத்துப் போட்டிருக்கிறாள். அவளுடைய 'கை' மணத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை இப்போது அவளுக்குச் சமைக்கவே பிடிக்கவில்லை. அலுப்பும் வெறுப்பும் தாக்கின. இருந்தாலும் என்ன செய்ய? சமைத்தாள். சாப்பிட்டாள். மரத்துப் போன நாக்கில் உயிரோட்டம் இல்லை. ருசியும் இல்லை.

முன்னொரு காலத்தில் அம்மா ஆனந்தமாக உட்கார்ந்து ஆடும் ஊஞ்சலில் தானும் உட்கார்ந்து ஆடமாட்டோமா என்று துளசி ஏங்கியிருந்தாள். அந்த ஏக்கம் தணிய வாய்ப்புக் கிடைத்தது.

ஆரம்பத்தில் அந்த ஊஞ்சல்தான் உலகம் என்ற மமதையும் அவளுள் ஏறியிருந்தது.

ஆனால், இப்போது அந்த ஊஞ்சலே பயங்கரமாகத் தோன்றியது. நிசப்தமான இரவு வேளைகளில் ஊஞ்சல் சற்றே நகர்ந்தாலும், அதைத் தாங்கி நின்ற இரும்புச் சங்கிலிகள் லேசாக முணுமுணுத்தன. ஆனால், துளசிக்கு நாராசமான பயங்கர ஒலிகளாகக் கேட்டன.

என்ன செய்ய?

என்ன செய்ய?

திடீரென்று ஒரு நாள் கேஜி வந்தார். மஞ்சுவின்
திருமணம் முடிந்த சில தினங்களில் ஒரு முக்கியமான
வேலையை முன்விட்டு அவர் டில்லி சென்றிருந்தார். ஒரு
மாதமாக ஊரில் இல்லை. அவரைப் பார்த்ததுமே
துளசிக்குப் புதுத் தெம்பு வந்தது.

"வாங்கோ மாமா... வாங்கோ...! எப்ப வந்தேள் ?
நேக்கு ஒரு எழுத்து போட்டிருக்கப்படாதா ? நான் உங்காத்
துக்குப் போய் எல்லாம் செய்ஞ்சு வைச்சிருப்பேனே !"

"எப்படி இருக்கே துளசி ? நான் நேத்துக் கார்த்தாலே
மெட்ராஸ் வந்தேன். அதிசயமா ஜி டி. கரெக்ட்
டயத்துக்கு வந்தது ! அப்றம் வெஸ்ட் கோஸ்ட்லே
ஏறினேன். ராத்திரி வந்தேன். நீ எப்படி இருக்கே ?
சௌக்கியமா ?"

"ஏதோ இருக்கேன் மாமா... இன்னும் நிந்துண்டே
இருக்கேனே, ஒக்காருங்கோ, சாயை கலந்துண்டு வரேன்."

—சொன்ன துளசி, துள்ளிக்கொண்டு ஓடினாள்.

கேஜிக்கு அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவள் டீயுடன் திரும்பியபோது, "துளசி, உன் முகம்
சரியாயில்லை" என்றார். தம்ளரையும் அவளிடமிருந்து
வாங்கிக் கொண்டார்.

"எண்ணெய் தேய்ச்சுக் குளிச்சு அஞ்சாறு நாளாறது.
அதான் மூஞ்சி சரியாயில்லை."

"உஹூம்... உனக்கு நான் சொல்றது புரியலை"
என்றார் கேஜி, ஒரு வாய் குடித்துவிட்டு.

"நீங்க என்ன சொல்றேள் ?"

"அம்மணி எங்கே ?"

"திருப்பூர்லே அவளோட அண்ணா வேலையாயிருக்கார்
இல்லியா ?"



"அது எனக்கு எப்படித் தெரியும் துளசி ? டீ நன்னா
யிருக்கு."

"அவன் தன் பெண்டாட்டியை டெலிவரிக்கு இங்கே
அனுப்பப் போறதில்லையாம். அவளுக்கு ஹெல்ப்பா
இருக்க அம்மணியை அனுப்பணும்னானாம்."

"ஓ, அப்படியா ?"

"மாமா ! இன்னொரு வர்த்தமானம் !"

"என்ன ?"

"இன்னமே அம்மணியும் இங்கே வரமாட்டாள் ;
அவளுக்குக் கல்யாணமாகப் போறது."

"அப்புறம் ?"

"இப்ப நானும் அம்முவும் மாத்திரம்தான். கொஞ்ச
நாளா அம்முவுக்குச் சரியா கண் தெரியலை."

"இப்ப உனக்கு ரொம்ப போர் அடிக்குமே ?"

"அதை ஒண்ணும் கேக்காதீங்கோ. ஏண்டா இந்த
ஒலகத்திலே ஜனிச்சோம்னு ஆயிடுத்து."

"ஏன் துளசி ?"

"நிறைய வேலை செய்யறப்ப நடுவிலே கொஞ்சம்
சும்மா இருந்தா சுகமா இருக்கு... ஆனா, நான் பூரா சும்மா
இருக்கறது இருக்கே அது ரொம்பக் கஷ்டம். ஆத்திலே
அம்மணி இல்லை. நீங்க நேக்கு நல்ல ரொடீன் உண்டாக்கித்
தந்தேள். தெனமும் மஞ்சுவோடே போனேன் ? இப்ப
ஒண்ணும் இல்லை. நேக்கு சன்னம் பிடிச்சுடும் போல
இருக்கு."

"கவலைப்படாதே துளசி ! உனக்கு இப்ப பைத்தியம்
பிடிக்காது. மஞ்சு ஒருத்திதான் உலகத்திலே இருக்காளா ?
நீயே வேறே ஏதாவது ரொடீனை ஏற்படுத்திக்கோயேன்."

"என்ன ரொடீன் மாமா நான் உண்டாக்க முடியும் ?"
நான் பத்தாம் கிளாஸ்லே, ரெண்டு பிராவசியம் தோத்தவள்.

ரெண்டு வார்த்தை இங்கிலீஷ் எழுத வரலை. மஞ்சு கூட இருந்தா அது ஒரு தினுசு. அவ பொட்டியைத் தூக்கிண்டு அவ பின்னாலே நடக்கலாம். நான் அவளோடு சிநேகிதி. பேசறத்துக்கும் சௌகரியமாயிருந்தது."

"அதை மறந்துவிடு துளசி. உன் நாத்தனார்— அவ பேர் என்ன ? ஹங்... மைதிலி— அவ மெட்ராஸ் திரும்பிப் போயாச்சா ?"

"ஆர் சொன்னா ! பாங்க்லே ஆபீஸரா இருக்கா."

"உன்கூடதானே இருக்கா ?"

"உஹூம்... லேடீஸ் ஹாஸ்டல்லே இருக்கா. மாமா, மஞ்சுவைப் பத்தி நான் இன்னும் ஒண்ணுமே விசாரிக்கலை. எப்படி இருக்கா ?"

"போற ஊர்லேந்தெல்லாம் போட்டோ கார்டு அனுப்பறா."

"எனக்கு என்னவோ மஞ்சுவை நினைச்சா கண்லே வள்ளம் வர்றது."

"ஏன் ? ஏன் கண்ணீர் வரணும் ?"

"மஞ்சு எத்தற அழகு ! எத்தற லட்சணம் ! ஒங்க மாப்பிள்ளைக்கு வயசும் ஜாஸ்தி. கஷ்ண்டியும் இருக்கு."

"மண்டையிலே வழுக்கை விழுந்தா என்ன துளசி ? பகவான் ஒவ்வொருத்திருக்கும் ஒவ்வொருத்தனை ஏற்பாடு பண்ணி வைச்சிருக்கான். மனசு பிடிக்கறதும், ஒருத்தருக் கொருத்தர் பிடிச்சுப் போறதும்தான் மனுஷா கையிலே இருக்கு. மஞ்சுவுக்குத் திலக்கைப் பிடிச்சிடுத்து. இனிமே அவ பாடு. இப்ப நானும் உன்னை மாதிரி தனிக்கட்டை !"

"உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கு. பஜனை இருக்கு. பேப்பரும் புஸ்தகமும் இருக்கு."

"துளசி !"



"என்ன மாமா! திடீர்னு ஏதானும் நினைச்சுண்டேளா?"

"கரெக்ட். சரியாப் புரிஞ்சுண்டிருக்கே. பூவல்லிமனை தெரியுமில்லியா ?"

"கேட்டிருக்கேன்."

"அந்த ஊர்க்காரர்களெல்லாம் சேர்ந்து ஒரு பெரிய ஆசிரமம் கட்டியிருக்கா... எங்கே தெரியுமோ ? மௌர்னி காலேஜ்லேந்து ஐயப்பங்காவ போற வழியிலே, அஞ்சு ஏக்கர் நிலத்திலே கட்டியிருக்கா, வர்ற ஞாயித்துக்கிழமை கவர்னர் வந்து திறக்கிறார்."

"உதுக்கென்ன மாமா ?"

"ஆசிரமம் தனி ரகம். வயசாகித் துணை இல்லாமக் கஷ்டப்படறவாளுக்கும் இடம் உண்டு" அனாதைக் குழந்தைகளுக்கும் இடம் உண்டு.

"நான் ரெண்டிலும் சேராதவள் மாமா."

"உன்னை ஆசிரமத்தில் போய்த் தங்கச் சொல்லுவேனா துளசி ! அதுவும் கோட்டை மாதிரி ஒரு வீடு இருக்கறப்ப ?"

"நீங்க என்ன சொல்ல வரேள் மாமா ?"

"உனக்கு போர் அடிக்காம இருக்க ஒரு வழி சொல்ல வரேன்.

"என்ன செய்யணும் ?" என்று கேட்டாள் துளசி.

"ஆசிரமத்திற்கு ஒரு சம்பளக்காரியா போக வேண்டாம். வாலண்டியராப் போகலாம்."

"அங்கே என்ன செயண்டியிருக்கும் ?"

"விசேஷமா ஒண்ணுமில்லை துளசி. கார்த்தாலே ஏழு ஏழரைக்குப் போ ! யார் யாருக்கு என்னென்ன உதவி தேவையோ அதை ஆசிரமம் நடத்தறவா சொல்லுவா !

நீ போனதும் டீ தருவா. உனக்கு வேணும்னா அங்கேயே சாப்பிட்டுக்கவும் சாப்பிட்டுக்கலாம். வாலண்டியர்னா ஒரு சௌகரியம். இஷ்டம் போல போகலாம், வரலாம்."

"வேண்டாம் மாமா !"

"ஏன் ? துளசி, உனக்கு ஒண்ணு தெரியுமா ?"

"என்ன மாமா ?"

"நீ உனக்கே ஒரு காரியத்தைச் செய்து கொள்றப்போ வெறுப்பும் எரிச்சலும் வர்றது. மத்தவா செய்து தரக் கூடாதன்னு மனசு ஆத்திரப்படறது. ஆனா, பிறத்தியாருக்கு வலியப் போய் உதவி செய்யறப்ப அதே மனசுக்கு சந்தோஷமும் திருப்தியும் உண்டாறது."

"என் பாட்டிம்மா சொல்லுவா, 'தனக்குன்னா பஞ்சு இடிக்கமாட்டா. மத்தவாளுக்குன்னா இரும்பு இடிப்பா'ன்னு..."

"அதேதான் ! உனக்கு இப்ப பஞ்சு இடிக்கிறது வெறுப்பா இருந்தா, ஏன் ஆசிரமத்திலே இரும்பு இடிக்கப் படாது ?"

"என்னாலே கழியாது மாமா !"

"சரி உன் இஷ்டம்."

"மஞ்சு மடங்கி வரட்டும். அதுக்கு அப்றம் அவளோடே திவசமும் போய்க்கிறேன்."

"என் மாப்பிளை பேசினதைப் பார்த்தா, நீ நினைக்கிற படி நடக்கும்னு தோணலை."

"என்ன மாமா சொல்றேள் ?"

"திலக் ஏதோ ஒரு திட்டம் வைச்சிருக்கான். சரி நான் வரேன். அடடே மறந்து போயிட்டேனே ! துளசி இந்தா."

"என்ன மாமா கவர் ?"



"சரியாயிருக்கான்னு ஒரு தடவை பார்த்துடு. எல்லாம் பத்து ரூபா நோட்டாக் கொடுத்தான்."

"ஆர் கொடுத்தா ?"— கேட்ட துளசி; உடனேயே புரிந்து கொண்டாள். மௌனமாய் கேஜியைப் பார்த்தாள்.

"கார்த்தாலே ஜி. டி. ஆறு அம்பதுக்கு சென்ட்ரல் வந்தது. அப்புறம் வெஸ்ட் கோஸ்ட் பதினொரு மணிக்குத் தான். யார் ஸ்டேஷன்லே நாலு மணி நேரம் உட்காருவா ! அதுவுமில்லாம மனசு கேக்கலை. உன் நினைவு வந்தது. கீர்த்தி சௌக்கியமா இருக்கிற மாதிரி வெளியே காட்டின்டான். ஆனா, ஒரு ஊமைக் காயம் ஏற்பட்டு, அதன் வலியில் கஷ்டப்படறவனா என் கண்ணுக்குத் தெரிஞ்சுது."

"முப்பது நோட்டு இருக்கு, மாமா !"

"அவன் கடைசியா வந்தப்ப, அம்மணி கையிலே பணத்தோட ஒரு லெட்டரும் கொடுத்தானாம். அந்த லெட்டருக்கு இன்னும் பதில் வரலைன்னு சொன்னான்."

"அதுக்கப்புறம் மாசா மாசம் வந்துண்டுதானே இருக்கு !"

"லெட்டர் ?"

"எழுத்து எதுவும் இல்லை."

"நீ அந்தக் கடிதத்துக்கு ரிப்ளை போட்டிருக்கலாமே, துளசி?" என்றார்.

"மாமா, நான் அந்த எழுத்தைப் பார்த்தேன். அதோடு அம்மா, மாமியார் ரெண்டு பேர் எழுதின லெட்டரும் இருந்தது. அதையெல்லாம் படிச்சேன்..."

"ஆம்படையான் லெட்டரைத் தூக்கி எறிஞ்சுட்டு, பணத்தை மாத்திரம் இப்ப எண்ணின மாதிரி எண்ணி வைச்சுண்டாயாக்கும் !"

"நேக்கு என்னவோ அந்நைக்கு எழுத்தைப் படிக்கத் தோணலை...அப்றம் மறந்துட்டேன்."

"தேடி எடு. படி. பதில் போடறதானாப் போடு. உலகத்திலே ஒரு பெண்தான் தன் புருஷனுக்காக ஏங்கி நிப்பாள்னு நினைக்காதே... ஒரு புருஷனும் தன் மனைவிக்காக ஏங்கி நிப்பான்னுங்கறதையும் புரிஞ்சுக்கோ துளசி! தாம்பத்தியம்ன்னா ஒரு வழிப் போக்குவரத்து இல்லை... நான் வரேன்."

கேஜியின் வார்த்தைகள் துளசியைப் பாதிக்கவில்லை என்றாலும் மனம் தடுமாறியது. கடிதத்துக்குப் பதில் போடாதது குற்றமாக இல்லாமலிருக்கலாம். ஆனால், கடிதத்தையே படிக்காமலிருப்பது?

அது தப்பு.

எழுதியவனை உதாசீனப்படுத்துவது போல!

எழுதினவன் தொட்டுத் தாலி கட்டியவன்.

அவனுடைய பணத்தை எதிர்பார்த்து வாங்கிக் கொள்ள உரிமை கொண்டாடுகிறாளே, அதற்காகவாவது கடிதத்தைப் படித்திருக்க வேண்டாமா?

துளசி தேடினாள். ஊஞ்சலில், மெத்தைக்கும் போர்வைக்கும் நடுவே தலையணையின் விளிம்பில் கடிதம் இருந்தது.

படித்தாள்.

அதன் பிறகு நீண்ட நேரம் ஆடாத ஊஞ்சலில் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

18600
3514268

# 22

துளசிக்குக் கடந்த எட்டு மாதங்களாகப் பொழுது போவதே தெரியவில்லை. முன்னொரு காலத்தில் காலை ஐந்து மணிக்கே எழுந்து வீட்டு வேலைகளை ஆரம்பிப்பாள். அந்தப் பழக்கம் மீண்டும் பிறந்தது. ஆறு மணிக்குள் குளித்து ஏதேனும் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டுவிட்டு சைக்கிளில் மெர்ஸி ஹோமை நோக்கிப் புறப்படுவாள். மஞ்சுவுடன் இருந்த நாட்களில் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டது இப்போது அவளுக்குச் சௌகரியமாக இருந்தது.

அன்று மூத்தாள்தரை வழியாகச் சென்று கொண்டிருக்கையில், அவள் நடந்த நாட்களை நினைத்துப் பார்த்தாள். கல்யாணமானதும் மஞ்சு-திலக்குடன் சென்றவள் மூன்று மாதங்களுக்குத் திரும்பவில்லை. உயிருக்குயிரான சிநேகிதி அம்மணி, அண்ணாவுக்கு உதவியாகச் சென்று அங்கேயே—திருப்பூரிலேயே—ஒரு கணவனையும் தேடிக் கொண்டாள்.

ஓரிரு வாரங்கள் தன்னந்தனியாக வீட்டில் பொழுதைப் போக்கிய துளசி, மெல்லமெல்ல தனிமையின் கொடுமையை உணர ஆரம்பித்தாள். கடிகாரத்தின் முட்கள் நின்று விட்டதான எண்ணம் தோன்றியது. பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் தெரியாமல், பகலே இருளாக மாறி வதைத்தது. அம்மு எனும் வேலைக்காரியாவது அவளுடன் இருந்திருக்கலாம். திடீரென்று ஒரு நாள் அம்மு மயங்கி விழ, அவளை ஆஸ்பத்திரியில் சேர்க்க, அவள் மீண்டும் வீட்டுக்கே திரும்பவில்லை.

துளசிக்கு எல்லாம் கசந்தது. எந்தத் தனிமையை, தன்னிச்சையான வாழ்க்கையை விரும்பி வந்தாளோ அந்த

வாழ்க்கை இவ்வளவு சீக்கிரம் பெரும் சுமையாக மாறி விடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. எத்தனைக்கு எத்தனை அவள் ஒரு பம்பரமாகச் சுழன்றாளோ, ஒரு செக்கு மாடாக இயங்கினாளோ அத்தனைக்கும் அவள் ஆடாத ஊஞ்சலில் நகராத சிலையாகிப் போனாள். கிருஷ்ணன் கோயில் மணிகள் தட்டி எழுப்பவில்லை. பஜனைப் பாட்டு புது எண்ணங்களைச் சுரக்கவில்லை. ருசித்துச் சாப்பிட்டுப் பழகிய அவளுக்குப் பசி இல்லை. தூக்கம் இல்லை. சிற்சில சமயங்களில் தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் யானையின் நினைவு வரும். அவளுக்கும் அந்த யானைக்கும் வித்தியாசமே இல்லையோ ?

ஒரு இரவு கேஜி வந்தார்.

"என்ன துளசி, என்ன பண்றே ?"

"நீங்கதான் பாக்கறேளே... நானுண்டு என் ஊஞ்சலுண்டுன்னு ஒக்காரந்திருக்கேன். ஒக்காந்து ஒக்காந்து ஊஞ்சப் பலகை தேஞ்சு தேஞ்சு குழி விழுந்துடப் போறது."

"ஒரு வேலையும் இல்லை அல்லவா ?"

"மஞ்சு இல்லை... அம்மணி இல்லை... வேலையும் செயத் தோணறதில்லை."

"பூவல்விமனைக்காரர்கள் நடத்தற மெர்ஸி ஹோம் இருக்கு" என்று கேஜி கூறினார்.

"நீங்கள் அன்னைக்கே சொன்னேள்."

"இன்னிக்கும் சொல்றேன் துளசி ! விலாசினின்னு ஒருத்தி இருக்கா... இப்போதைக்குப் பன்னண்டு, பதிமூணு குழந்தைகள் இருக்கு. எல்லாம் ரெண்டு வயசும், மூணு வயசும்... விலாசினி தனியாப் பார்த்துக்கறா... கஷ்டப்பட வேண்ணாலும் இன்னொரு துணை கிடைச்சா அவளுக்கும் சரி, அந்தக் குழந்தைகளுக்கும் சரி, சௌகரியமா இருக்கும்."



துளசி யோசனை செய்தாள்.

கீர்த்தியிடம் திரும்பிப் போய்விட வேண்டும் என்ற எண்ணம் பிறக்கவில்லை. மஞ்சுவும் திலக்கும் திரும்பி வந்த பிறகு அவர்களுடன் அவளால் ஒட்டிக் கொள்ள முடியாது. அண்ணன் ராமனாதன் பிறருக்குக் கோபதேசம் செய்கிறவன். அம்மா பம்பாயில் ஜெயாவுடன் நல்ல வைத்திய உதவியுடன் சுகமாக இருக்கிறாள். இனியும் எத்தனை நாள்தான் பைத்தியம் பிடிக்காமல் அவளால் இந்த மாபெரும் வீட்டில் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து போய்க் கொண்டிருக்க முடியும் ?

கேஜி அவளுடைய பதிலுக்காகக் காத்திருந்தார்.

"நீங்க கூட்டிண்டு போறேளா ?" என்றாள் துளசி.

"அப்ப முடிவு செய்துட்டியா துளசி ?"

"வேறே என்னத்தைச் செயறது ? நீங்களே சொல்லுங்கோ ! ஒரோர்த்தர் எப்படி எப்படியெல்லாமோ இருக்கா ! என் தலை எழுத்து. நான் இப்படி இருக்கேன்."

கேஜி தமக்குள் வருத்தப்பட்டுக் கொள்ளவில்லை. மாறாக, சிரித்துக் கொண்டார். 'நீயாகத்தானே உன்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து வைச்சுண்டே' என்று எண்ணினார்.

"கார்த்தாலே ஏழு மணிக்கு ரெடியா இரு... விலாசினி மாசம் நூறு ரூபாய்தான் தருவாள்" என்றார்.

"நேக்கு எந்துக்கு மாமா ரூவாய் ? ஹானரரியா ஒரு வோலண்டியரா இருக்கேன். நேக்கு நேரம் போகணும், அம்படத்தான்."

"ஏழு மணிக்கு ரெடியா இரு !" என்று கேஜி மீண்டும் சொல்லிவிட்டு ஆதித்தியபுரம் கிருஷ்ணன் கோயிலுக்குப் பஜனை பாட்டுப் பாடச் சென்றார்.

மறுநாள் அவள் விலாசினியைச் சந்தித்தாள்.

இப்போது பழைய நினைவுகள் தலை தூக்கியபோது துளசிக்கு, தான் எவ்வளவு நல்ல முடிவை எடுத்து விட்டோம் என்ற திருப்தி உண்டாயிற்று.

ஆறரை மணிக்குச் சென்றால் உடனேயே வேலை துவங்கிவிடும். அவளைச் சுற்றிப் பல குழந்தைகள்—புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள். அப்பா பெயர் தெரியாமல் ஒதுக்கப்பட்ட குழந்தைகள். வஞ்சிக்கப்பட்ட பெண்கள், வஞ்சிக்கப்படுகிறோம் என்பதை உணராமலே பத்து மாதம் சுமந்து ஈன்ற சிசுக்கள்!

அவர்களுக்கெல்லாம் விலாசினி ஒரு தாயாக விளங்க, விலாசினிக்கு உறுதுணையாக நின்ற துளசி தன் வாழ்க்கையின் திசையையே மாற்றிக் கொண்டாள். ஆரம்ப நாட்களில் குழந்தைகள் ஒரு இம்சைக் கூட்டமாகப் பட்டது. அவை அழுதபோது எரிச்சல் வந்தது. அவற்றின் களங்கமற்ற சிரிப்பு துளசியின் மனத்தை ஈர்க்கவில்லை. பதிலாக, களங்கமுற்ற தாய்களின் முகங்கள்தான் கண்முன் தோன்றின. அவளுக்கு எப்படியோ பொழுது போக வேண்டும். இந்த இல்லம் அதற்கு உதவி செய்கிறது. அவ்வளவுதான்.

ஆனால், நாள செல்லச்செல்ல அவள் தன்னையுமறியாமல் மாறலானாள். மழலை, கீதமாக ஒலிக்கலாயிற்று. ஒரு குழந்தையின் ஜுரத்தில் அவள் துவண்டு போனாள். அவளுடைய கால்களைப் பிடித்துக் கொள்ளும் குழந்தை தன் இதயத்தையே தடவிக் கொடுப்பதாகத் தோன்றலாயிற்று.

அம்மாத முடிவிலேயே அவளும் பல குழந்தைகளுக்குத் தாயானாள்.

அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு டாக்டர் மஞ்சு வந்தாள். துளசி மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தாள்.



"வா மஞ்சு... வா வா! ஒன்னைப் பார்த்து இப்ப மூணு மாசமாச்சு. ஒக்காரு."

மஞ்சு சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"கொழந்தைகளெல்லாம் தூங்கிண்டிருக்கு. மூணு மணிக்கு அப்றம் ஒண்ணொண்ணா எழுந்திருக்கும். அப்றம் பால் குடிக்கும், நல்ல பசும்பால்" என்றாள் துளசி.

"மிஸ் விலாசினி எங்கே?"

"அவ அப்பா காரை எடுத்துண்டு வந்தார். போனா! அஞ்சு மணிக்கு மடங்குவா."

"நீ எப்படி இருக்கே துளசி? இளைச்சுப் போன மாதிரி இருக்கே?"

"நான் ஒந்நும் இளக்கலை... சுகமாத்தான் இருக்கேன்."

"இங்கே வேலை அதிகம் இல்லியா துளசி?"

"அதிகமோ கொஞ்சமோ, சுகமா இருக்கு. ஒமனைன்னு ஒரு மூணு வயசுப் பொண்ணு இருக்கா. எம்பேர்லே உசிரு. நான் இல்லைன்னா அவ பால் குடிக்கமாட்டா, சாப்பிட மாட்டா, தூங்கமாட்டா."

"ஏன் அவளைப் பத்தி இப்ப திடீர்னு பேச்சு எடுக்கறே துளசி?"

"நெனைச்சாக்கூட சங்கடமாயிருக்கு மஞ்சு!"

"ஏண்டி... ஏன்? அவளுக்கு உடம்பு சரியில்லையா?"

"ஒடம்பு கொழு கொழுன்னு இருக்கு. ஒரு சுகக்கேடும் இல்லை?"

"பின் ஏன்?"

"கொச்சிலேந்து ஒரு ஆம்படையான்—பொண்டாட்டி வந்தா. இருபது வருஷமா கொழந்தை இல்லை. இங்கேந்து

ஒரு கொழந்தையைத் தத்து எடுக்க வந்தா. ஓமனையை நாளைக்கு கார்லே கூட்டிண்டு போறா. இந்த மெர்ஸி ஹோமுக்கு முப்பதாயிரம் டொனேஷன் தர்றா."

"ஓமனை போனா நீ ஏண்டி மனசு சங்கடப்படணும்? பல அநாதைகளிலே அவளும் ஒருத்தி."

"நானே ஒரு அநாதை மஞ்சு!"

"சரி, நீ உன் கதையைச் சொல்லாதே! அதைக் கேக்க நான் வரலே, உன்னைப் பார்த்துப் பேசிட்டுப் போலாம்னு வந்தேன்."

"சாயை குடிக்கிறியா மஞ்சு?"

"வேண்டாம்டி."

"மேஜர் எப்படி இருக்கார்? உங்க கிளினிக்கை மினிஸ்டர் தொறந்து வைக்கப் போறாராமே?"

"யார் சொன்னா?"

"அப்பாதான். பின்னே சொல்றத்துக்கு நேக்கு வேறே இருக்கா?"

"எங்கே அவரைப் பார்த்தாய்?"

"இங்கேதான். ஆழ்ச்சைக்கு ஒருக்கா, வெள்ளிக்கிழமை சாயங்காலம் ஒரு மணிக்கூர் கொழந்தைகள் பாட்டெல்லாம் பாடறாரே நோக்குத் தெரியாதா?"

"நானும் மேஜரும்தான் தனியாப் போயிட்டோமே துளசி! அது சரி, நீ இங்கே சந்தோஷமா இருக்கியா?"

"நிம்மதியா இருக்கேன். திருப்தியா இருக்கேன். மதிராசியிலேந்து வர்ற முன்னூறு ரூபாய்லே நூறுகூடிச் செலவாறதில்லை. உச்சிக்கு நான் இங்கேயே விலாசினியோடு சாப்பிடறேன் இல்லியா!"



"பெரிய சேவை செய்யறே துளசி! உன்னை எப்படிப் பாராட்டறதுன்னு எனக்குத் தெரியலே."

"சும்மா இரு மஞ்சு. நான் என்ன செயறேன்? ஒண்ணும் செயலை. கொழந்தைகளைக் குளுப்பாட்டறேன். டிரஸ் பண்ணி விடறேன். பால் கொடுக்கறேன். சாதம் ஊட்டறேன், விலாசினி தாலாட்டுப் பாட்டு பாடுவா. —நான் கொழந்தைகளோட முதுகை லேசா தட்டறேன். அம்படத்தான்."

"இதெல்லாம் லேசான காரியமா துளசி? ஒரே ஒரு குழந்தையைப் பெத்த தாயாராலேகூட அலுத்துக்காம இதையெல்லாம் செய்ய முடியாது."

"என்னவோ மஞ்சு, நேக்கு அலுப்பு வரலை. அப்றம் என்ன வர்த்தமானம்? உன் மூஞ்சியைப் பார்த்தா நேக்குச் சந்தேகமா இருக்கு."

"என்னடீ?"

"நீ குளிக்கலை இல்லியா?"

"மூணு மாசம்."

"பெத்துட்டு கேஜி மாமாட்டே கொடுடீ!"

"துளசி!"

"என்ன மஞ்சு?"

"நீயாகப் போய் மற்றவர்களுக்கு உதவி செய்யறப்போ மனசுக்கு இன்பமும் சுகமும் ஏற்படறது இல்லே...? முன்னே நீயும் நானும் கிராமம் கிராமமா, ஊர் ஊராப் போனப்ப எனக்கு அப்படி ஒரு சுகமும் திருப்தியும் கிடைச்சுது."

"நேக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலை மஞ்சு... இந்தக் குழந்தைகள் என்னைக் கூப்பிடலை. நானாத்தான் வந்தேன். ஆனா, இப்ப இதுகளெல்லாம் போன்னு சொன்னாக்கூடி நேக்குப் போக மனசு வராதுடீ."

"நீ முன்னெல்லாம் என்னைப் பார்க்க வர்றப்ப, நான் சொல்லாமலே எனக்குத் தட்டு வைத்துச் சாதம் பரிமாறுவாய்... பப்படம் பொரிப்பாய்."

"ஆமாம்."

"அதிலே ஒரு சந்தோஷமும் இல்லே ?"

"உன் அப்பான்னா உனக்கு உசிர் இல்லே துளசி ?"

"பாவம், அவரும் போயிட்டார்."

"அவருக்கு சிசுரூஷை செய்யறதுன்னா உனக்குத் தனி ஆனந்தம். இல்லேன்னு சொல்லாதே துளசி, இதை நீயே சொல்லியிருக்காய் ?"

"இப்பவும் இல்லைன்னு சொல்லலையே மஞ்சு ! அப்பான்னா அப்பாதான் !"— துளசியின் கண்கள் கனத்தன

"எப்பவாவது நீ கீர்த்தியைப் பத்தி நினைக்கறது உண்டா துளசி ?"

"ஏன் கேக்கறாய் ?"

"ஒரு கல்யாணமான பெண்ணாலே, புருஷனை மறந்து இருக்க முடியுமான்னு தோணித்து, அதான் கேட்டேன்."

"அவர் நல்லவர்டீ மஞ்சு. இன்னும் என்னை மறக்காம மாசா மாசம் டாண் டாண்ணு முன்னூறு ரூபாய் அனுப்பிச்சுண்டிருக்கார்."

"நேரே வந்தாரே ஒரு தரம். அப்ப ஒரு லெட்டர் எழுதிட்டுப் போனார் இல்லியா ?"

"ஆமாம், ஆனா அதிலே பெரிசா ஒண்ணும் எழுதலை. 'ஒன்னைப் பார்க்க நான் கொடுத்து வைக்கலை'ன்னு எழுதியிருந்தார், அம்படத்தான்."

"உனக்கு அவரைப் பார்க்கணும்னு எப்பவுமே தோணலையா ?"



"ராத்திரி சிலப்போ அவர் வந்து நிக்கற மாதிரிப்படும். குரல் கேக்கற மாதிரிப்படும். சில சமயத்திலே சொப்பனத்திலே வருவார்.

"அவர் பாவமாகத் தோணலையா துளசி ?"

"என்ன பாவம் ?"

"உனக்காக ஏங்கிண்டு இருக்காரே, இல்லியா ?"

"வேறே வர்த்தமானம் பேசு மஞ்சு. எல்லாம் கழிஞ்சு போயாச்சு."

"எதுவும் நீ சொல்ற மாதிரி தீர்ந்து போகலை துளசி. முன்னே பின்னே பார்க்காத, தெரியாத குழந்தைகளை இப்படிச் சீராட்டிப் பார்த்துக்கறதிலே ஒரு நிம்மதியும் திருப்தியும் இருக்குன்னு நீயே சொல்றே... இதைவிட ஆயிரம் மடங்கு திருப்தியும் மகிழ்ச்சியும் இருக்கும் உன் புருஷனுக்கு நீ உதவி செய்ஞ்சா... நன்னா கேட்டுக்கோ ; நான் உதவின்னுதான் சொன்னேன். வேலைன்னு சொல்லவில்லை.

"நீ என்ன சொல்றாய் மஞ்சு ?"

"நீ இங்கே செய்யறதும் வேலைதான் துளசி. கார்த்தாலேந்து சாயங்காலம் வரை வேலைதான். அது ஒரு உதவியா, ஒரு சேவையாப்படறது உனக்கு. நீ ஏன் இதே உதவியை, இதே சேவையை உன் புருஷனுக்கு செய்யக் கூடாது ?"

துளசிக்கு உடனேயே பதில் சொல்லத் தெரியவில்லை. விழித்தாள். யோசனை செய்தாள். அவளுடைய யோசனை முடிந்தால் விபரீதமான பதில் வந்து விடுமோ என்று பயந்த மஞ்சு, "என் மேஜருக்கு நான் ஒரு நாள் இல்லாவிட்டால் போதும், கை ஒடிஞ்சவர் மாதிரி ஆய்விடுவார். நான் தான் டூத் பேஸ்ட்டை ஒட்டிக் கொடுக்கணும். ஷேவிங் ஸெட் எடுத்து வைக்கணும், டிரஸ்

செலக்ட் பண்ணணும், சமைக்கணும், பரிமாறணும். துளசி, மேஜரை மாதிரி ஒரு தியாகியை நீ பார்க்க முடியாது." என்றாள்.

"என்ன பெரிய தியாகம்? உன்னை மாதிரி ஒரு பெண் கிடைக்க அவர் குடுத்து வைச்சிருக்கண்டாமா?"

"நான்தான் கொடுத்து வைச்சிருக்கேன் துளசி. எனக்காக மேஜர் பெரிய வேலையையே விட்டார். ஷில்லாங் பங்களாவையும் நிலங்களையும் வித்தார். டெல்லியிலேயே பிறந்து வளர்ந்தவர். அந்த ஊரையே எனக்காகத் தியாகம் பண்ணிட்டு இந்தச் சாதாரண சின்ன ஊருக்கு வந்திருக்கார். 'மஞ்சு, எனக்கு உன் ரெண்டு கையும் வேணும், வெட்டிக் கொடு'ன்னு அவர் கேட்டா, நான் பதில் பேசமாட்டேன்! கொடுத்துடுவேன். அதிலே சந்தோஷப்படுவேன்."

துளசி பதில் சொல்லவில்லை. திடீரென மஞ்சுவின் இடத்தில் தன்னை வைத்துப் பார்த்தாள். திலக்குக்குப் பதிலாகக் கீர்த்தி வந்தான்.

இந்த ஒன்றரை ஆண்டுக்கும் மேலாக, கீர்த்தி எனும் ஒரு மனிதன், தன்னை விட்டுப் போன பெண் மீண்டும் வருவாள் என்று நம்பிக்கையுடன் காத்திருக்கிறானே, அவனும் ஒரு வகையில் தியாகிதானே என்ற எண்ணம் அவளுள் மின்னலாய்த் தோன்றியது.

"என்னடி, பதில் சொல்லமாட்டேன் என்கிறே?" என்று மஞ்சு கேட்க, துளசி விழித்துக் கொண்டாள்.

"உம்... உம்... என்ன கேட்டே?"

"நீ யோசிக்கிறே இல்லே துளசி? உன் யோசனை நல்ல முடிவாக முடியட்டும்" என்றாள் மஞ்சு."

# 23

அன்று என்றுமில்லாத குழப்பத்துடன் துளசி வீட்டை அடைந்தாள்.

வீட்டு வாசலைக் கடந்ததும் அவள் கண்ட காட்சி அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது!

முகமெல்லாம் புன்னகை பூக்க நின்ற அம்மணியைக் கண்டதும் ஆச்சரியத்தில் ஆழ்ந்த துளசி, அக்கணமே தன் மனக் குழப்பமெல்லாம் தீர்ந்து விட்டதாக எண்ணினாள். டாக்டர் மஞ்சு என்னதான் உயிர் சிநேகிதியாக இருந்த போதிலும் சில சமயங்களில் அவளுடைய யோசனைகளும் புத்திமதிகளும் அலுக்க வைத்தன. ஆனால், அம்மணி அப்படி இல்லை. துளசியின் உள்ளத்துக்கு இசைவாக, சுருதி சேர்த்துப் பேசுகிறவள். துளசிக்குத்தான் என்ன அதிர்ஷ்டம்! தக்க சமயத்தில் அவளுடைய பால்யத் தோழி அம்மணி சஞ்சீவிப் பர்வதமாக வந்து விட்டாள்!

"எப்போடி வந்தாய் அம்மணி?" என்று, என்றுமில்லாத ஆரவாரத்துடன் கேட்டாள் துளசி. பிறகு, "உள்ளே வாடி, ஒக்காந்து பேசுவோம்" என்றாள்.

உள்ளே சென்றதும், "துளசி, ஏன் ஆம் ஆமாகவே இல்லை? திவசம் பெருக்கித் தொடைச்சு மொழுகற தில்லையா?" என்று அம்மணி கேட்டாள்.

"ஒண்ணும் கேக்காதேடி அம்மணி. நீ அண்ணாக்கு ஹெல்ப் செயப் போறேன்னு போனாய். அங்கேயே ஒரு கல்யாணமும் கழிச்சுண்டு ஊரை எட்டிப் பாராம இருந்துட்டாய். நீயும் இல்லை. அந்த அம்முவுக்கும் என்னைப் பிடிக்கலை. சோறை வாயிலெடுத்தா... ஒஸ்பிடல்லே அட்மிட்டாச்சு. பின்னே மடங்கலை."

"அப்பா சொன்னா. அம்மு நிறைய பிளட் வாமிட் பண்ணினான்னு... வேறே ஆரையாவது வேலைக்கு வைச்சுக்கப் படாதா? சரி சரி, நான் ரெண்டு நாள் இருப்பேன். ஆத்தைச் சரியாக்கறேன்."

"இன்னமத்தாண்டீ சமைக்கணும்."

"நீ சமைக்கண்டாண்டீ துளசி... மாப்பிள்ளை வந்திருக்கார்னு எங்காத்திலே பருப்பும் பாயசமுமா சமைச்சிருக்கு. நானும் நீயும் ஒண்ணா ஒக்காந்து சாப்பிடலாம்."

"சுகமா இருக்கியாடீ அம்மணி? இப்ப நன்னா சதை போட்டிருக்காய்."

"பெரிசா காசு பணம் இல்லேன்னாலும் சுகமா இருக்கேண்டீ துளசி... நான் என்னெல்லாம் நினைச்சேன் தெரியுமா?"

"என்ன விசாரிச்சாய்?"

"நீ மதிராசிக்கு மடங்கிப் போயிருப்பாய்னு விசாரிச்சேன்."

"நோக்குத்தான் என்னைத் தெரியுமே அம்மணி?"

"அப்பா சொன்னார், நீ இப்ப டாக்டர் மஞ்சு ஆத்துக்குப் போறதில்லை, பூவல்லிக்காரா நடத்தற குழந்தைகள் ஆசிரமத்துக்குத் திவசம் போறாய்னு."

"ஆமாம்டீ... தேக்கு ஆத்திலே ஒக்காந்து ஒக்காந்து பேய் பிடிச்சுடுமோன்னு பயமா இருந்தது, கிட்டயா... கேஜி மாமா சேர்த்து விட்டா..."

"இப்போ அங்கே என்ன செயறாய்?"

துளசி சொன்னாள்.

கேட்டுவிட்டு அம்மணி சிரித்தாள்.

"எந்துக்கடீ சிரிக்கிறாய்?"



"ஒரோர்த்தர் ஆத்திலே ஒரு காரியமும் செயமாட்டா. ஆனா, பெரிசா மத்தவாளுக்கு ஹெல்ப் பண்ண ஓடுவா... நீயும் அப்படி ஆயிட்டாய் துளசி."

"நீ என்ன சொல்றாய்?"

"டீ, துளசி! நீ இத்தற குழந்தைகளைக் குளிப்பாட்டி, டிரஸ் பண்ணி, விளையாட்டுக் காட்டி, பாலூட்டித் தூங்கப் பண்றயே, இல்லியா?"

"ஆமாம்... அதுக்கென்ன?"

"இதிலே நோக்கு நேரம் போறது. மனசுக்குத் திருப்தி கிடைக்கிறது இல்லியா?"

"நீ என்னடீ அம்மணி சொல்ல வராய்?"

"நோக்கு லோகத்திலே ஆருமே இல்லைன்னா, இதெல்லாம் செய்து மனசுக்கு நிம்மதியையும், போற எடத்துக்குப் புண்ணியத்தையும் சம்பாதிச்சுக்கலாம்... ஆனா, நீ அநாதை இல்லைடீ... ரெண்டு கையாலேயும் சம்பாதிக்கிற, கண்ணுக்கு லட்சணமா, நெலவளிச்சுப் பேசக்கூடத் தெரியாத ஒரு ஆம்படையான் இருக்கார். எல்லார்க்கும் வயசு காலத்திலே அம்மா அப்பா இருக்க மாட்டாடீ... அதுக்கும் கொடுத்து வைக்கணும். கீர்த்தி கொடுத்து வைச்சிருக்கார். நீ அவரை விட்டு வந்தாய். ஒரு நா ஒன்னோடு மனசு மாறி, அலுப்புத் தீர்ந்து மதிராசிக்கு மடங்கிப் போவாய்னு நினைச்சேன். ஆனா, நீயே ஒரு ஜீவனாம்சத்தை வாங்கிண்டு, ஊர்லே எல்லாரும் சிரிக்கிற மாதிரி வாழறாய்."

துளசிக்குத் தலை சுற்றியது.

அன்று மத்தியானம் மஞ்சு ஒருவிதமாக அறிவுரை சொன்னாள். அவளுடைய மனம் குழம்பியது. அம்மணியைப் பார்த்ததும் குழப்பம் தீர்ந்தது என்று நினைத்தாள்.

ஆனால் திரவில்லை. அம்மணி வேறு ஒரு கோணத்தில் அறிவுரை கூற யத்தனிக்கிறாள்.

"என்னடீ துளசி, உன்னாலே உத்தரம் சொல்லக் கழியலை அல்லவா ?" என்றாள் அம்மணி.

துளசி மெதுவாக அம்மணியை ஏறிட்டுப் பார்த்தாள். முகத்தில் இதுவரை கண்டிராத ஒரு தேஜஸ் துளசியை ஈர்த்தது ! கழுத்தில் ஒரு மஞ்சள் சரடு. இந்தச் சரடுதான் அவளை இப்படியெல்லாம் பேச வைக்கிறதோ ?

"அம்மணி, உன் பேர்லே நேக்கு தேஷியம் வரணும். ஆனா, வரலை. ஏன்னா நான் அப்படி உங்கிட்டே பழகிட்டேன். நீ எப்படியடீ இப்படி மாறினாய் ?"

"என்ன மாறினேன்...?"

"நீ திருப்பூர் போற வரைக்கும் எங்கூடதானே இருந்தாய் ?"

"ஆமாம்."

"அப்ப ஒரு நாளைக்குக்கூடி நேக்கு நீ அட்வைஸ் சேதிட்டில்லை."

"அப்ப நோக்கு அட்வைஸ் பண்ணலை. காரணம், நீ அடுப்பிலேந்து எறக்கி வைச்ச தோசைக்கல்லாட்டம் இருந்தாய். அந்தச் சூட்டிலே உன்னைத் தொடப்படாதுன்னு நெனைச்சேன். உன் வழியிலேயே போனா நல்லதுன்னு தோணித்து. உன் அண்ணா, மன்னி, அம்மா, மாமியாரெல்லாம் அட்வைஸ் பண்ணினா. ஆனா அவா சமயம் தெரியாமப் பண்ணினா."

"இப்போ உனக்கு சமயம் தெரிஞ்சிருக்கோ...?"

"நீதான் என்ன செயறதுன்னு முழிச்சுண்டு, ஆர் ஆரோ பெத்துப் போட்ட கொழந்தைகளோடு முதுகைத் தேய்ச்சு விடறயே. இப்ப தோசைக்கல் ஆறித் தணிந்து போயிருக்கு. இன்னும் ஒண்ணு சொல்லட்டுமா ?"



"சொல்லு... கேட்டுக்கறேன்."

"இப்ப நான் கல்யாணமானவள். ஒரு ஆம்படையானோடு வாழறவள். உனக்கு அப்ப அட்வைஸ் பண்ண யோக்யதை இல்லைன்னே வைச்சுண்டாலும் இப்ப இருக்கு."

துளசி சிரித்தாள்.

"நேக்கு இதுவரையில் அட்வைஸ் பண்ணினவாளெல்லாம் கல்யாணமானவாள்தாண்டீ அம்மணி."

"ஆனா, அவாளெல்லாம் ஒனக்காக மாத்திரம் புத்தி சொல்லலை. அவாவா மானமும் கௌரவமும் ஊர் சிரிக்கப் படாதேன்னு புத்தி சொன்னா. இல்லாட்டா உன் அண்ணா ராமனாதன் பொண்டாட்டியோட வந்திருப்பானா ? ஆனா, நான் அப்படி இல்லை... உன்னை நினைச்சா என் நெஞ்சிலே சோரை துளைக்கிறது... துளசி, நீயும் என்னை மாதிரி, எல்லா பொண்களை மாதிரி வாழணும்டீ. கீர்த்தி மாதிரி ஒரு ஆம்படையான் கிடைக்க பார்வதி மாதிரி தவம் சேதிருக்கணும்டீ."

துளசி மௌனமானாள்.

"நீ இங்கே பத்தாயிரம் குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டலாம். ஆனா, அங்கே ஒன் ஆம்படையானை அழ வச்சுக்கிட்டிருக்கேங்கறதை மறந்துடாதே துளசி. பாவம், கீர்த்தி. அவர் வந்தப்ப நீ இல்லை. ரூவாயும் தந்து ஒரு எழுத்தும் எழுதினார்... வெளியே பேசறப்ப குரல் அதிகாரமா இருந்தது. ஆனா, மொகமெல்லாம் வீங்கினா மாதிரிபட்டது கிட்டயா...! நான் எதிர்க்க இல்லேன்னா அழுதிருப்பார்... பாவம்...! போடீ துளசி, நான் என் ஆம்படையானோடே இருக்கற மாதிரி நீ உன் ஆம்படையானோடே இருடி."

துளசி, "என்னாலே கழியும்னு தோணலை !" என்றாள்.

"ஏண்டி கழியாது ? மனசு இருந்தா மார்க்கம் உண்டுடி. நான் திருப்பூர்லே என்ன செயறேன்னு நோக்குத் தெரியுமாடீ...?"

"என்ன சேயறாய் ?"

"என் ஆம்படையான் மெஸ் நடத்தறார்டி... மெஸ்—திவசம் நூத்தம்பது பேர் சாப்பிடறா. கார்த்தாலே நாலு மணிக்கு நானும் அவரும் எழுந்திருப்போம். நான் அரிசியைக் களையறப்ப, அவர் பச்சக்கறி நறுக்குவார்... தேங்காயை ஒடைப்பார். நான் அரைப்பேன்... அரையிலே ஒரு தோர்த்த முண்டு உடுத்திண்டு அவர் எண்ணெய்ச் சட்டியிலே பப்படாத்தைப் போட்டு எடுக்கறப்ப உடம்பெல்லாம் வெசர்த்துக் கொட்டும், நான் என்னோடு புடவைத் தலைப்பாலே அவர் முதுகையும் தோளையும் மூஞ்சியையும் தொடைச்சு விடுவேண்டி... அப்ப் நேக்குக் கிடைக்கற திருப்தி, ராத்திரி ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் கட்டிண்டு பாய்லே படுத்துத் தூங்கறப்பக் கூட கிடைக்காதுடி."

"இப்ப என்னை என்ன செய்யச் சொல்றாய், அம்மணி...?

"மடங்கிப் போடி."

"எப்படியடி...?"

"எப்படி வந்தாய் ? அப்படி !"

"சிரிப்பாடி...!"

"ஆர் ஆரைப் பார்த்துச் சிரிப்பாடி தொளசி ! இப்பத் தான் எல்லாரும் சிரிக்கிறா. ஏதோ ஒரு அ[illegible]ப்பிலே வந்துட்டாய்... ஆனா, அங்கே சேத வேலையை விட இங்கே ஜாஸ்தி சேயறாய். இது உன் மனசிலே வேலை மாதிரித் தோணலை. மாமனாரையும் மாமியாரையும் குழந்தைகளா நினைச்சுக்கோடி. கீர்த்தியை நீ



வெறுக்கலைடீ துளசி. நேக்குத் தெரியும், அங்கே திவசம் சேய்ற வேலைதாண்டி நோக்கு கசப்பா இருந்தது... இப்பப் போ. உன் நிலைமையே மாறும்."

"பயமாயிருக்குடி."

"ஆரைக் கண்டு பயப்படறாய் ?"

"மடங்கியே வரமாட்டேன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்."

"ஒரு பேச்சுக்குச் சொல்றதெல்லாம் சத்தியம்னு நினைச்சுண்டா அப்றம் ஆரும் எதுவும் பேசவே முடியாது துளசி."

துளசி மௌனமானாள்.

கண் முன் சென்னை வந்தது.

கீர்த்தி வந்தான்.

அவன் எவ்வளோவோ சமாதானப் படுத்தியும் அவள் அவனை மீறிக் கொண்டு திரும்பியவள், இருப்பினும் இது நாள் வரை கீர்த்தி ஒரு தடவை கூட, ஓர் ஆணுக்கு நியாயமாக வரக்கூடிய கோபத்தையோ ஆத்திரத்தையோ வெளிப் படுத்தவில்லை. மாறாக, மௌனமாக அன்பையே காட்டி வருகிறான். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் துளசி திரும்பித் தன்னிடமே வருவாள் என்று நம்பிக்கையைத் தளரவிடாமல் காத்திருக்கிறான். இன்னொருவனாக இருந்தால் இத்தனை மாதங்களில் தன்னுடைய கட்டிலில் இன்னொரு பெண்ணை இழுத்துப் போட்டுக் கொண்டிருப்பான். கீர்த்தி அப்படியா ?

மாமியார் வந்தாள். என்றுமே அவள் வாய் வார்த்தையால் கடிந்து கொள்ளாதவள். குறைவான ரத்த அழுத்தம் பாதிக்க, அவளுக்குத் தனி உணவு அவசியமாயிற்று. இது அவளுடைய போதாத காலம்தான்.

மாமனார், என்றுமே தாழுண்டு தம் லா ஜர்னல் தொழில் உண்டு என்றிருக்கிறவர். அவளுடைய தகப்பனாரைப் போல அவருக்கும் இரண்டு மூன்று தடவை காபி குடிக்க வேண்டும். என்ன சிரமம் ?

பாபு- என்றுமே சிரித்துப் பேசி, கலகலப்பாக இருக்கும் மைத்துனன். இரவு வேளைகளில் தாமதித்து வரும் நாட்களில் துளசியைத் தொந்தரவு செய்யாமல் சமையலறையில் தானே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடும் நல்ல மனிதன்.

இவர்களையெல்லாம் ஏன் ஆசிரமத்துக் குழந்தைகளாகப் பாவிக்கக் கூடாது ?

எந்தப் பெண் எந்த வீட்டில் வேலை செய்யாமல் இருக்கிறாள் ? யாருக்கு யார் வேலை செய்வது ? கட்டிய கணவனுக்குச் செய்யும் பணிவிடை வேலையாகிவிடுமா ? அப்படிப் பார்த்தால் தனக்குத் தானே செய்து கொள்ளும் காரியங்களெல்லாம் வேலைகள் தான்.

அம்மணி துளசியையே பார்த்தவளாய் உட்கார்ந்திருந்தாள். சிநேகிதியின் நெஞ்சில் ஒரு மொட்டு மலர்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. துளசி சிந்திக்கட்டும். சிந்தனையின் முடிவில் ஒரு வண்ண மலர் பளிச்சிட்டால் அது அவளுடைய வாழ்க்கைக்கு ஏற்படும் புது மணம்தான்.

"வாடீ, அம்மணி ! உங்காத்துக்குச் சாப்பிடப் போலாம்" என்றாள் துளசி திடீரென்று.

"என்னடீ தீர்மானிச்சாய், துளசி ?"

"பயமாயிருக்குடீ....!"

"என்னடீ, ரெண்டாம் பிராவசியமா பயமாயிருக்குன்னு சொல்றாய் ? ஆரைக்கண்டு பயப்படறாய் ?"

"ஆரைக் கண்டும் இல்லைடீ ; என்னைக் கண்டுதான்."

"என்ன பயம்டி ?"



"எப்படியடி பின்னேயும் அந்தாத்து வாசப்படி ஏறுவேன் ?"

"ஏண்டி, ஏன் ?"

"எல்லாரும் நல்லவாதாண்டி அம்மணி. இருந்தாலும் ஏதாவது சொல்லி நிறுத்தியூட்டா ?"

"இப்பத்தான் நீ ஒரு அசடாட்டம் மண்டுகம் மாதிரிப் பேசறாய் துளசி... மகாலட்சுமி படியேறி வர்றப்போ, ஆரும் வாசக் கதவைச் சாத்தமாட்டாடி."

"அப்ப ஒரு காரணம் சொல்லிப் போனாயே ; இப்ப என்ன காரணத்துக்கு மடங்கி வந்தாய்'னு கேட்டா, நான் என்னடி சொல்லுவேன் அம்மணி ?"

"அந்நைக்கு ப்ராந்தா இருந்தேன். இந்நைச்கு புத்தி தெளிஞ்சதுன்னு சொல்லு."

"எப்படித் தெளிஞ்சுதுன்னு கேட்டா ?"

"கேக்கமாட்டாடி துளசி... ஆனா, கேட்டா உன்னோடு அனுபவத்தைச் சொல்லேன்."

"என்ன அனுபவம்டி !..."

"இப்ப நீ மெர்ஸி ஓமுக்குப் போறாய் இல்லையா ?"

"ஆமாம்."

"ஆராவது உன்னை சாட்டையாலே அடிச்சு அனுப்பறளா ?"

"இல்லைடி... மேலே சொல்லு."

"ஆராவது அதிகாரம் பண்ணி– அது வாய் வார்த்தையாலே கூடி இருக்கண்டாம். சிலவாள் மௌனமாகவே அதிகாரம் சேய்வா— வேலை செய்யறப்போ மனசிலே சுமை ஏர்றது. கோபமும் எரிச்சலும் வர்றது... ஆனா, நாமே ஒரு காரியத்தை எடுத்துச் சேயறப்போ, அதிலே மனசு லயிச்சுப் போறது... உண்டா, இல்லியா ?"

"உண்டுடி அம்மணி."

"இப்ப உன் வேலையிலே உன் மனசு வயிச்சுப் போறதுக்குக் காரணம், உன்னை ஆரும் இத்தைச் சேய், அத்தைச் சேய்னு அதிகாரம் பண்ணலை."

"ஆமாம்டி... நானாத்தான் சேய்றேன்."

"உன் புருஷன் வீடு உன் வீடு... அதை நீ உன் இஷ்டத்துக்கு வைச்சுககோ... அப்றம் எல்லாம் சரியா வரும்."

"என்ன சொல்றதுன்னே தெரியலைடி அம்மணி!" என்றாள் துளசி.

அப்படிச் சொல்லும் போதே, வைராக்கியமான ஒரு முடிவு அவளுள் எழுந்தது.

வாழ்வதா, வாடுவதா என்ற கேள்விக்கும் பதில் கிடைத்தது.

# 24

அவ்வளவு பெரிய வீட்டில் துளசியும் சிநேகிதி அம்மணியும் மட்டுமே இருந்த போதிலும், வீடு கல்யாண கலகலப்புடன் விளங்கியது! துளசி எடுத்துவிட்ட முடிவு ஓர் இன்பமான அதிர்ச்சியாகப்பட, அம்மணி சந்தோஷத்தில் அங்குமிங்குமாகக் குதித்தோடும் கன்றுக்குட்டி போலத் துள்ளினாள்.

"துளசி, நேக்கு என்ன சேயறது, என்ன சொல்றதுன்னு ஒந்நும் தெரியலைடீ. நீ நேத்தைக்கு கல்யாணம் கழிஞ்சு இந்நைக்கு ஆம்படையான் ஆத்துக்குப் போறது மாதிரி இருக்குடீ!" என்றாள்.



"நேக்கு ஒந்நும் தெரியலைடி, அம்மணி. எப்படி நான் இப்படித் தீர்மானிச்சேன். இத்ற நாள்வரைக்கும் மதிராசி வாசப்படியைச் சவுட்டப் படாதுன்னு இருந்தேன்."

"அந்த குருவாயூரப்பனோடு விளையாட்டுடி, துளசி. நாம எல்லோருமே, பிராந்துகள். திடீர்னு எதையோ விசாரிச்சுண்டு பிராந்தாட்டமா ஒரு காரியம் செயறோம்! அப்றம் பிராந்து தெளியறது. நீயும் அப்படித்தான் துளசி."

"அம்மணி!"

"என்னடி?"

"மஞ்சுவோடே ஊர் ஊராப் போனேன். அப்ப நேக்கு வேறே எதிலேயும் மனசு ஓடலை. அப்றம் மஞ்சு கல்யாணம் கழிஞ்சது நேக்கு அதிசயமா இருந்தது. அப்பவும் மதிராசி ஓறமை வல்லை. இந்த ஏழெட்டு மாசமா பூவல்லிமலை மெர்ஸி ஓம்லே குழந்தைகளோட இருந்தேனே, அது என் மனசை மாத்தியிருக்குமோடி?"

"எது மாத்தினா என்ன? நீ மாறியூட்டாய். பம்பாய்லே உன் அம்மாவும் அக்காவும் பால் பாயசம் வைச்சுச் சாப்பிடுவா, மணிக்குட்டியும் காவேரியும் கூடி ஆனந்தப்படுவா."

"அந்த ஓமனை இப்ப கொச்சியிலே இருப்பாள்."

"ஒரு அதிசயம் கண்டாயா துளசி?"

"என்னடி அம்மணி?"

"அந்தச் சின்னக் குழந்தை ஓமனை, உன் காலைக் கட்டிக்கும்னாய், நீ ஊட்டினால்தான் சாப்பிடும்னாய், உன் கிட்டே அது உசிரா இருந்திருக்கு, இப்ப உன்னைப் பிரிஞ்சு அது நல்ல நாதிகிட்டே போயிருக்கு. அதே முகூர்த்தத்திலே நீயும் உன் நாதன்கிட்டே போறாய்! ஓமனைதாண்டி காரணம். குருவாயூரப்பன் அவ ரூபத்திலே வந்திருக்கான்."

"எத்ற மணிக்குடி வண்டி?"

"மெயில்லேதானே போறாய்? சரியா ராத்திரி எட்டுக்கு வர்றது. எட்டே பத்துக்குப் போறது. நாளைக்கு இந்த நேரத்தில் நீயும் உன் மாமியாரும் இது போலிலாலென்னு பேசிண்டிருப்பேள்."

"இப்ப மணி பத்துடி!"

"நீ எந்துக்குடி விசாரப்படறாய்? பந்திரண்டு மணிக்குள்ளே எல்லாம் ரெடியாயிடும். நான் ஒண்ணரை பஸ்லே கோயமுத்தூர் போய் அங்கேந்து பஸ் மாறி திருப்பூர் போகணும். ஒரு நல்ல எவர்சில்வர் சம்படத்தில் நெய்யைத் தடவிக் கொண்டா."

துளசி ஓடினாள்.

கீர்த்திக்குப் பலாப்பழ ஜாம் பிடிக்கும். அதை வைத்து ஒருதடவை பாயசம் வைத்திருந்தாள். பாயசத்தில் முற்றின தேங்காய்க் கீற்றுகளை நெய்யில் வறுத்துப் போட்டிருந்தாள். கீர்த்தி எதையுமே அளவுக்கு மீறிச் சாப்பிட மாட்டான். அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. சாப்பாடு ஆன பிறகும் இரண்டு தம்ளர் பாயசம் குடித்தான்.

இப்போது 'சக்கை வரட்டி'யை அடைத்து வைக்க அவள் பாத்திரம் தேடினாள். அவனுக்குப் பிடித்த 'பலாச்சுளை உப்பேரி,' 'சக்கரை வரட்டு உப்பேரி,' 'நேந்திரங்காய் உப்பேரி' எல்லாம் தனித்தனி டப்பாக்களில் இருந்தன. திடீரென்று கீர்த்தி எல்லாவற்றையும் ருசித்துச் சாப்பிடும் காட்சி கண் முன் நின்றது. மாமியார் 'ஸ்வீட்' சாப்பிட மாட்டாள்.

அவள்கூட முந்தின நாள் இரவு பிடித்து வைத்த குஞ்சாலாடுவை விண்டு விண்டு தின்றாள். மைத்துனன் பாபு நேந்திரங்காய் வறுவலை அள்ளிக்கொண்டு சென்றான். மாமனார் பூனை மாதிரி நடந்து, டப்பா டப்பாவாகத் திறந்து தட்டு நிறையப் போட்டுக் கொண்டு வந்தது தெரியாமல் தம் அறைக்குத் திரும்பினார்.



துளசி மகிழ்ச்சிக்கிடையே அப்பாவை நினைத்துக் கொண்டாள். பாவம், அவர் இல்லையே! அவர் இப்போது அவளைப் பார்த்தால் மெய் சிலிர்த்துப் போவாரே! அவர் ஒருவர் தானே அவளுடைய மனத்தை நன்றாய் அறிந்து வைத்தவர்! 'பெண்ணே, பெண்ணே' என்று நிமிடத்துக்கொருதரம் வாயார அழைப்பாரே!

"ஏண்டீ துளசி, பாத்திரமும் கையுமா நின்று கன்னமெல்லாம் கண்ணீரா நிக்கறே? என்ன ஆச்சு? பின்னேயும் மனசு மாறியூட்டாயா?" என்று கேட்டுக் கொண்டே அம்மணி வந்தாள்.

"இல்லேடீ... அப்பா ஒறமை வந்தது கண் கலங்கியது."

"அவரோட போட்டோ ஒண்ணை எடுத்து வைச்சுக்கோ."

"எந்துக்குடி போட்டோ? என் நெஞ்சிலே பதிஞ்சிருக்கார்."—துளசி புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"சரி, சம்படத்தை இப்படித் தா. சக்கை வரட்டியை அடைச்சு வைக்கிறேன். நீ துணிமணி பண்டமெல்லாம் உன் பெட்டியிலே வைச்சுக்கோ."

"ராத்திரியே எல்லாம் பேக் பண்ணியாச்சுடி. இந்தத் திங்கற சாமானையெல்லாம் பெரிய பிளாஸ்டிக் கூடை இருக்கே, அதிலே வைச்சுக்கலாம்."

அம்மணி சரியாக பன்னிரண்டு மணிக்கு ஆனந்தக் கண்ணீருடன் விடை பெற்றுச் சென்றாள்.

"நீ மதிராசிக்கு ஒரு பிராவசியம் வரணும்டி, உன் மெஸ்ஸை ரெண்டு நாளைக்கு ஆர்ட்டையாவது ஏத்து நடத்த ஒப்படைச்சுட்டு வாடி அம்மணி."

"தீர்ச்சையா வரேண்டி. என் ஆம்படையானுக்கு மியூசிக் ஸீஸன்லே ஒரு பத்து நாள் மதிராசிக்குப் போகணும்னு ஆசை !"

"எங்காத்து வாசல்லேந்து நிறைய பஸ் இருக்குடீ அம்மணி ! நான் கூடி ஒருக்கா நம்ப கே. வி. நாரயணசாமி கச்சேரிக்கு அவரோட போகணும்னு ஆசைப்பட்டேன். நீ தீர்ச்சையா வா."

"வரேண்டீ தொளசி. நீ உன் உடம்பை பாத்துக்கோ. கிட்டயா ?"

"எழுத்துப் போடுடீ."

"உன்னோடு மேல் விலாசம் எங்கிட்டே இருக்கு. என்னோடு அட்ரெஸ்ஸும் தரேன்."— சொன்ன அம்மணி, காலண்டரிலிருந்து ஒரு தாளைக் கிழித்து எழுதினாள். துளசியிடம் கொடுத்தாள்.

"வரேண்டீ துளசி."

"ஒறமை வைச்சுக்கோ அம்மணி !"

"எப்படியடி நான் உன்னை மறப்பேன் துளசி ? துளசி... துளசி..."

"என்னடி ?"

"நீ ரெண்டு மாசம் கழிஞ்சு எழுத்துப் போடுடி !"

"ஏண்டி... வர்ற ஆழ்ச்சை போடலாம்னு இருந்தேன்."

"காரணமாத்தாண்டி ரெண்டு மாசம் கழிஞ்சு போடுன்னேன் ! அந்த எழுத்திலே நீ என்ன எழுதணும் தெரியுமா ? 'நான் குளிச்சு ஐம்பது நாள் ஆறது'ன்னு எழுதணும்."

"நீ போடி அசட்டு அம்மணி ! குளிக்கறதும் குளிக்காததும் நம்ப கையிலே இருக்கா... ஹங்... அம்மணி,



டாக்டர் கோஷி, நான் ஒண்ணு ரெண்டு மாத்திரையையும் மருந்தும் கழிக்கணும்னு மஞ்சுகிட்டே சொன்னா... ஒறமை இருக்கா ?"

"நீ எங்கே ரெகுலரா தின்னாய் ? லட்சியமே செய்யலை."

"இன்னமே திவசம் கோஷி சொன்ன பிரகாரம் திம்பேண்டீ."

"நான் வரேண்டி துளசி... பந்திரண்டாயாச்சு... அவர் காத்துண்டிருப்பார்."

அம்மணியின் தலை மறையும் வரை வாயிற்படியிலேயே நின்ற துளசி கூடத்துக்கு வந்தாள். ஊஞ்சல் மூளியாகக் கிடந்தது. அப்பாவின் அப்பா பலாமரத்தில், வீட்டில் ஆசாரியை வரவழைத்துச் செய்த ஊஞ்சல். சின்ன வயதில் அப்பா துளசியை மடிமீதும், ஜெயாவையும் சீதாவையும் அருகேயும் வைத்துக் கொண்டு, இரண்டு கால்களாலும் அழுத்தி ஆட்டுவார். இனிய நாதத்துடன் ஊஞ்சல் ஆடும். அம்மா சாரதாவுக்கு எரிச்சல் வரும். 'கோர்ட் கடலாஸைப் படிக்கண்ட நேரத்திலே ஊஞ்சல் என்ன வேண்டியிருக்கு ?' என்பாள். ஆனால், இப்படிக் கத்தின சாரதாவுக்கு ஊஞ்சல்தான் புகலிடமாயிற்று. 'டயாபடீஸ்' என்று டாக்டர் மூர்த்தி சொன்னதுமே, அவள் ஊஞ்சலை சரண் அடைந்து குகைக்குள் ஒளிந்து ஒடுங்குவது போல, ஊஞ்சலில் முடங்கி, நாளடைவில் அத்துடன் உறைந்து விட்டாள். அம்மாவுக்கு ஊஞ்சல் பிடிக்கும். ஆனால், அது ஆடக்கூடாது. லேசாக நகர்ந்தால் போதும் என்பாள்.

இப்போது ஊஞ்சலைப் பார்த்தபோது, அதன்மீது துளசிக்கு இரக்கமோ, பாசமோ ஏற்படவில்லை. மாறாக வெறுப்பும், அதை விட்டுப் போகப் போகிறோமே என்று திருப்தியும்தான் பிறந்தன. இந்த ஊஞ்சலில் வாழ்நாள் முழுவதும் உட்கார்ந்தே வாழ்ந்து விடலாம் என்று நினைத் தாளே, என்ன பேதமை !

இப்போது எதுவுமே சுமையாக, பாரமாகப் படவில்லை. மனத்தின் விசித்திரத்தில் அவளுக்கு எல்லாமே ஒளியிட்டுப் பிரகாசிப்பதாகப் பட்டது.

ஊஞ்சலில் உட்கார மனமில்லாமல் தரையில் உட்கார்ந்து கொண்டாள். கூடத்தின் ஓர் ஓரத்தில் சிறு மேடை போன்ற இடம். சென்னைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய இரு பெட்டிகளும் ஒரு தலையணையைப் பொதிந்த பெட்ஷீட்டும், பிளாஸ்டிக் பையும் அங்கே இருந்தன. வலது கையை பெட்டி மேல் வைத்து, தலையணையில் சாய்ந்து கால்களை நீட்டிய வண்ணம் அமர்ந்திருந்தாள். ஊஞ்சலைவிட சுகமாக இருந்தது!

திடீரென்று வாசலில் யாரோ வரும் சத்தம் கேட்டது.

"துளசி!" என்று அழைத்துக் கொண்டே அண்ணன் ராமநாதன் வந்தான். கூட மன்னி ராதையும் வருகிறாளோ என்று சங்கடத்துடன் பார்த்தாள். நல்ல வேளை இல்லை!

"நான் ஒருத்தன் இருக்கறதையே நீ லட்சியம் செயலை துளசி!"

"உம்...என்ன?

"நீ மெட்ராஸ் போறாய், இல்லையா?"

"ஆமாம்."

"எங்கிட்டே நீ சொல்லலை. அம்மணியோட தம்பி சொல்லித் தெரிஞ்சுது."

"தோணலை அண்ணா."

"நோக்குத் தோணாது. நீ எந்நைக்குமே என்னையும் என் பொண்டாட்டியையும் மதிச்சிட்டில்லை" என்றான் ராமநாதன்.

"எந்துக்கு வந்தாய் அண்ணா?"



"நானே உன்னைக் கூட்டிண்டு போய் கீர்த்திகிட்டே விடப் போறேன்."

"அவசியம் இல்லை."

"ஏன்...ஏன் அவசியம் இல்லை?"

"நீயா அண்ணா என்னை அங்கேந்து இங்கே கூட்டிண்டு வந்தாய்?"

"அதனாலே?"

"அதனாலே இங்கேந்தும் கூட்டிண்டு போகண்டாம்."

"நோக்கு எத்றை அழுத்தம் துளசி!"

"இதைச் சொல்றத்துக்கு நீ பாவம்! படி ஏறி வந்திருக்கண்டாம்."

"கீர்த்திக்கு போன் பண்றேன்... இல்லாட்டா தந்தி அடிக்கிறேன்."

"ஆவசியமில்லை. டெலிபோனும் வேண்டாம்... கம்பியும் அடிக்கண்டாம்."

"சென்ட்ரல்லேந்து எப்படி ஆத்துக்குப் போவாய்?"

"போய்க்கிறேன்... ஆட்டோ இருக்கு... டாக்ஸி இருக்கு. ஆத்து வாசல்ல நிக்கற பஸ் இருக்கு."

"நான் எது சொல்லி எந்நைக்கு நீ கேட்டிருக்காய்? இன்னமேயாவது சமத்தா இரு... ரெண்டு மாசம் கழிஞ்சு பின்னேயும் மடங்கி வந்து நிக்காதே. ஊர் எத்ற சிரிக்கணுமோ அத்றை சிரிச்சாச்சு."

துளசி பதில் பேசவில்லை. அவள் குரைக்கிற நாய்களை என்றுமே லட்சியம் செய்வது கிடையாது. அவனுடைய மனைவி ராதையை ஊர் முழுதும் 'ராங்கிக்காரி, அகங்காரம் பிடித்தவள், மாமியார் மாமனாரிடம் தூக்கி எறிந்து

பேசியவள்' என்றெல்லாம் முழக்கம் செய்கிறது. இவன் துளசியிடம் ஊர்ச் சிரிப்பைப் பற்றி பேசுகிறான்!

ராமனாதன் எப்போது வெளியேறினான் என்று துளசிக்குத் தெரியாது. அவள் தன் உலகத்திலேயே இருந்தாள். புதிதான ஒரு வாழ்க்கை மலரப் போகிறதா! எல்லோரும் கடந்த காலத்தை மறந்து துளசியை மனமாரப் பாராட்டி, வாயார வாழ்த்துவார்கள். கீர்த்தி, ஒரு இருபத்துநாலு காரட் என்று அப்பா சொல்லுவார். துளசிக்கு இன்னும் அதற்கும் மேலே என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால், தங்கம் இருபத்து நாலுக்கு மேல் இல்லையே? பாவம், கீர்த்தி! கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் அவள் இல்லாமலேயே நாட்களைக் கடத்தி விட்டான். முன்னூறு முன்னூறாக அனுப்பி அனுப்பி அவளை நினைவுபடுத்திக் கொண்டு வாழ்கிறான். இனிமேல் இந்தச் செலவு இல்லை. ஆனால், நினைவு மாறாது. அவள் அவனுடனேயே இருப்பாள்.

திடீரென்று அவன் அவளை இறுகக் கட்டி அணைத்துக் கொள்வதாகத் தோன்றியது. உடம்பெல்லாம் புல்லரித்து, மனம் பூரித்தது!

துளசி மெதுவாக எழுந்தாள். கால் தானாக நடந்தது. தொழுவத்தில் நின்றாள். வெறிச்சோடியது. அம்மு இல்லை. மாடுகள் இல்லை. துள்ளி ஓடும் கன்றுகள் இல்லை.

இனி அவளுக்கு இந்தத் தொழுவத்தைப் பார்க்க வேண்டாம். திரும்பி நடந்தாள். கிணற்றுக்கு வந்தாள். எட்டிப் பார்த்தாள். மேற்கு திசையில் சற்றே சாய்ந்த சூரியனுடைய கிரணங்களில் நீர் பளபளத்தது. பளபளப்பே குதூகலமாக இருந்தது.

சமையலறை, பூஜை அறை, மீண்டும் கூடம். மீண்டும் தரை மேல் தரை. கடிகாரத்தைப் பார்த்தாள் பன்னிரண்டரை.



எட்டு மணிக்கு வரப் போகிற ரயிலில் ஏற அவள் இப்போதே தயார்! ஏன் இன்று ஒரு நாள் மட்டும் ரயில் ஒரு மணிக்குப் புறப்படக்கூடாது?

மனம் அவசரப்பட்ட அளவுக்குக் கடிகாரம் அவசரப் படவில்லை.

முட்கள் அவளுடைய பொறுமையைச் சோதித்தன. இருக்கை கொள்ளவில்லை. ஊஞ்சல் கண்ணை உறுத்தியது.

கூடத்துக்கும் வாசலுக்குமாக நடந்தாள். வாசலுக்கும் கூடத்துக்குமாக நடந்தாள். வாசலில் நின்றாள். கண்ட காட்சிகளெல்லாம் இன்பமயமாகத் தோன்றின.

முன்னொரு நாள், தான் போகும் இடத்தில் எவ்வித சுமையோ, பாரமோ இராது என்ற நம்பிக்கையுடன் புறப் பட்டாள். போன பிறகுதான் தீச்சட்டியிலிருந்து தீயில் விழுந்துவிட்ட வலி தெரிந்தது. ஆனால், இப்போது தீயே தண்மையுடன் அழைக்கிறது. துளசிக்கு இனிமேல் எதுவுமே தகிக்காது! உடல் வேகாது!

ஓர் ஆனந்தமயமான சிலிர்ப்பு உடலெல்லாம் வியாபிக்க அவள் மீண்டும் தரைமேல் தரைக்கு வந்தாள். தன்னைச் சுற்றிக் கோடானுகோடி சூரியன்கள் நிலவைப் பொழிவதாகத் தோன்றியது. கீர்த்தி!

கீர்த்தி!

அவன் சிரித்தான்!

அவள் சிரித்தாள்!

இருவரும் சிரித்தார்கள்!

கடிகாரம் திடீரென்று அவளைச் சிரிக்க வைத்தது.

முட்கள் நகரவில்லையோ?

ஒன்று அடிக்க பத்து நிமிடங்கள்!

எட்டு மணி ரயிலுக்கு ஏன் துளசி இப்போதே தயாராகி விட்டாள்? அதனால்தானோ நேரமே சுமையாகி விட்டது?

# 25

துளசி டாக்ஸியிலிருந்து இறங்கினாள். மலர்ந்த முகத்துடன் பார்த்தாள். ஜரிகை வேட்டி கட்டிக் கொண்டு சில்க் ஜிப்பாவில் காட்சியளித்த கீர்த்தி, அவளைக் கண்டதும் அசைவற்றுப் போனான். அவனுடைய முகத்தில் ஆனந்தக் களிப்பை உணர்ந்து கொண்டே துளசி வீட்டை நோக்கி முன்னேறினாள். எந்த வீட்டை விட்டு அவள் சண்டை சச்சரவு இல்லாமல், வார்த்தையாடல் இல்லாமல் இறங்கி நடந்தாளோ அதே வீட்டுப்படி ஏறுகையில் அவளுக்கு வெட்கமோ, அவமானமோ ஏற்படவில்லை. அது அவளுடைய வீடு. அவளுடைய வாழ்க்கையின் மண்டபம். அவள் ஏதோ ஒரு சித்தப் பிரமையில் பலாபலன்களை உணர்ந்து அறியாமல், தான் செய்வதுதான் சரியான காரியம். எடுத்த முடிவு தான் எல்லாராலும் பாராட்டக் கூடிய முடிவு என்ற எண்ண மயக்கத்தில் வெளியேறினாள். இப்போது சித்தம் மனத்துக் கேற்ப இசைந்தது. மயக்கம் தெளிந்து கண்கள் திறந்தன.

கீர்த்தி படி இறங்கி அவளை வரவேற்க, அவள் படி ஏறி அவனைச் சந்தித்தாள்.

"து... துளசி... வந்துட்டியா! துளசி... நீ வந்துட்டியா! வா... வா... உனக்காகத் தினம் தினம் எப்படிக் காத்துக் கொண்டிருந்தேன் தெரியுமா?"

கீர்த்தியின் உணர்ச்சிகள் புதுமையாகப் பட்டன. எப்போதும் நிதானத்துடன் வார்த்தைகளை அளந்து பேசுகிறவன் அவளைக் கண்டதும் என்னமாய் நெக்குருகிப் போய் விட்டான்! அவனுடைய சிந்தனை முடிவதற்குள்



தான் அவனுடைய அணைப்பில் இருப்பதைத் துளசி உணர்ந்தாள்.

"என்னை விடுங்கோ. பகல் வேளை... அதுவும் ஆத்து வாசலில் டாக்ஸியில் பெட்டிகள் இருக்கு."

"ஐ டோண்ட் கேர். டேய் பாபு. துளசியோட பெட்டிகளை எடுத்துண்டு வா... டாக்ஸி சார்ஜையும் கொடு."

பாபு ஓடினான். மன்னி வந்துவிட்டதில்தான் அவனுக்கு என்ன சந்தோஷம்!

கீர்த்தி, துளசியைக் கை பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

"அம்மா... அப்பா... தாத்தா...!"

...கீர்த்திக்குத் தலைகால் புரியவில்லை. நடக்கப் பழகிவிட்ட குழந்தைபோல ஓட முயன்றான். தன் சந்தோஷத்தை எப்படிப் பகிர்ந்து கொள்ளுவது என்று தெரியாமல் ஆரவாரித்தான்.

முதலில் வாஞ்சி வந்தார்.

"துளசியா, வாம்மா...! ஒரு லெட்டர் போட்டிருக்கக் கூடாதா? கீர்த்தி ஸ்டேஷனுக்கு வந்திருப்பானே! போ கைகால் அலம்பிவிட்டு, காப்பி சாப்பிடு... கப்பு... கப்பு...!"

கற்பகம் வந்தாள்.

"வா... துளசி... வா...! நான் தெனமும் அம்பாளை வேண்டிண்டது வீண் போகலை. வா... இனிமே உன் மனசு அலுத்துக்காது. வேலை செய்து, வேலை செய்து உடம்பு வலிக்காது."

"மாமி, மாமா... ரெண்டு பேரும் சேந்து நில்லுங்கோ... மின்னாலே நமஸ்காரம் பண்றேன்."

"நீயும் நில்லுடா, கீர்த்தி..." என்றாள் கற்பகம்.

மூவரும் நின்றார்கள்.

"பாட்டாப்பா எங்கே? அவரையும் நமஸ்காரம் பண்ணணும்" என்றாள் துளசி.

"அவராலே நடக்க முடியறதில்லேம்மா, அதோ அந்த ரூம்லே கட்டிலோடு கட்டிலாக் கிடக்கிறார்!" என்றாள் கற்பகம்.

"அவரைத் தனியா நமஸ்காரம் பண்ணு."

"கொஞ்சம் இருங்கோ... ஆத்துக்கே பெரியவர்... பீஷ்மராட்டமா இருக்கார். மின்னாலே அவரை நமஸ்காரம் பண்ணியூடறேன்."

துளசி அவர் இருந்த அறைக்கு ஓடினாள். உடலெல்லாம் குதூகலம் வியாபிக்க அவள் அவர் அருகே போய் நின்றாள்.

அவருடைய பெயரும் சத்தியகீர்த்தி. தாத்தாவின் பெயரைப் பேரனுக்கும் வைத்திருந்தார்கள்.

"பாட்டாப்பா...!"

பெரிய சத்தியகீர்த்தி, அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தவர், பக்கவாட்டில் திரும்பினார். கண்களில் திடீரென மின்னல் போல ஒளி வீசியது.

"வாம்மா துளசி...! சௌக்கியமா இருக்கியா?"

"இருக்கேன் பாட்டாப்பா... அப்படியே இருங்கோ... நமஸ்காரம் பண்றேன்... ஆசீர்வாதம் செயுங்கோ!"

அவள் நமஸ்கரித்தாள்.

"சௌபாக்கியவதியா, தீர்க்க சுமங்கலியா இரும்மா. சீக்கிரம் உனக்குப் புள்ளை பொறக்கட்டும்."

கண்களில் நீர்மல்க அவர் இருக்கும் கோலம் துளசியைச் சிலிர்க்க வைத்தது.



"பாட்டாப்பா, நான் வந்தூட்டேன். இன்னமே ஒங்களுக்கு எப்பப்ப என்னென்ன அவசியமோ அதை எல்லாம் நான் சேவேன், கிட்டேளா? விசாரப் படாதீங்கோ."

பெரியவர் முறுவலித்தார்.

"அவ போயிட்டாம்மா துளசி."

"பாட்டிம்மா எங்கேயும் போகலை பாட்டாப்பா...! தெய்வமாயிட்டா... அவளை நெலைச்சு நெனைச்சு அழாதேயுங்கோ!"

"பாலக்காட்டிலே மழை பேயறதா...?"

"ஹேய்...இந்த மாசத்திலே மழை பேயாது பாட்டா! நான் உள்ளே போறேன். காரியம் நிறைய இருக்கு."

அவள் மீண்டும் ஹாலுக்கு வந்த போது, பாபு டபரா தம்ளரை நீட்டினான். முறுவலித்தாள்.

"பாபு நீ எந்துக்கு நேக்கு காபி கொண்டு வராய்? நானல்லவா நோக்குக் கலந்து தரணும்?"

"எத்தனை மாசத்துக்கு அப்புறம் நீ திரும்பி வந்திருக்கே மன்னி...! தந்தா என்ன தப்பு...? ராத்திரி மிளகூட்டல் வைக்கிறியா...? எனக்கு ரொம்பப் பிடிக்கும்!"

"என்ன கஷ்ணம் பிடிக்கும் நோக்கு...? சேனையா, எளவனா, மத்தனா, இல்லை, முருங்கைக்காயா?"

"எந்தத் தான் போட்டாலும் பிடிக்கும். அப்படியே மிளகாய்ப் பச்சடியும் வை."

"மைதிலி எப்படி இருக்கா...?" என்றாள் கற்பகம்.

"சுகமா இருக்கா... மாமி, நான் குஞ்சாலாடு பிடிச்சுண்டு வந்திருக்கேன். சக்கை வரட்டி கொண்டு வந்திருக்கேன். நீங்க ஒந்நும் திந்நமாட்டேன்னு நேக்குத்

தெரியும்... கொஞ்சம் நாக்கு நுனியில் வைச்சு ருசியாவது பாருங்கோ."

"வறுவல் கொண்டு வந்திருக்கியா துளசி ?" என்று வாஞ்சி கேட்டார்.

"எல்லா உப்பேரியும் கொண்டு வந்திருக்கேன்... ஒங்களுக்கு சொளை உப்பேரின்னா உசிர்னு தேக்குத் தெரியும். நல்ல சக்கை உப்பேரி கிலோ பதினெட்டு ருவாய்தான்."

கீர்த்தி, "முதல்லே குளிச்சுட்டுப் பட்டுப்புடவை கட்டிண்டு வா துளசி !" என்றாள்.

"உம்...என்ன விசேஷம் ?"

"நீ வந்தூட்டியே, அதான் விசேஷம் !" என்றாள் கற்பகம்.

"நாம ரெண்டு பேரும் கோவிலுக்குப் போகிறோம். கற்பகாம்பாளுக்கு அர்ச்சனை செய்கிறோம்."

"ஆபீஸ் இல்லியா ?"

"உனக்காக ஒரு நாள் லீவு போடறேன்."

"மணி எத்தனை ?"

"ஏழேமுக்கால்..."

"குளிச்சுட்டு சமைக்கறேன். சாயங்காலம் போகலாம். மாமி, இந்நைலேந்து ஒங்களுக்கும் சமையலறைக்கும் சம்பந்தம் இல்லை, கிட்டேளா ?"

"ரெயில்லே வந்திருக்கே... ஓய்வு எடுத்துக் கொள் துளசி" என்றாள் கற்பகம்.

"ஹேய்...! நீ வண்டியிலே சுகமா தூங்கினேன்... தொக்கே இல்லை...தெரக்குன்னா என்ன தெரியுமோ மாமி?



"கூட்டம் !" என்றான் பாபு.

"பாபு, நான் ஒன்னைக் கேக்கலை !" —சொல்லிவிட்டு துளசி சிரித்தாள். பிறகு டப்பாக்களையெல்லாம் திறந்தாள்.

"இந்தாங்கோ மாமா உப்பேரி !"

வாஞ்சி வாங்கிக் கொண்டு போனார். பாபு வெளியேறினான். கற்பகம் உள்ளே சென்றாள்.

"துளசி, வா என் கூட..." என்றாள் கீர்த்தி.

"எங்கே கூப்பிடறேள்... தேக்கு குளிக்கண்டாமா ?"

"அப்புறம் குளிச்சுக்கலாம்... வா, மாடிக்குப் போவோம்" என்றாள் தாழ்ந்த குரலில்.

"எந்துக்கு இப்ப மச்சு மேலுக்குப் போணம் ? ஒங்களுக்கு என்ன பிராந்தா ?"

"வாயேன்... எனக்குப் பைத்தியம் பிடிக்கலை... வா..."

துளசி கீர்த்தியுடன் மாடிக்குச் சென்றாள்.

படுக்கை அறையைக் கண்டதும் அயர்ந்து போனாள்.

அறை புது மெருகுடன் திகழ்ந்தது. கண்ணுக்கு ரம்யமான நிறத்தில் சுவர்கள் தண்மை அளித்தன. நட்ட நடுவே கட்டில்.

இரு படுக்கைகள்.

ஒன்று அலுங்காமல் புது விரிப்புடன், புதுத் தலையணை உறையுடன் இருந்தது.

"துளசி, அதோ பார் !"

துளசி பார்த்தாள்.

அவளுடைய போட்டோ ! பெரிய போட்டோ !

போட்டோவில் அவளுடைய முகம் ஓவியம் போலக் காட்சியளித்தது. கீழ் உதடும் மேல் உதடும் பிரிந்திருக்க, பற்கள் முல்லைப்பூக்களாக மின்னின !

"துளசி, நீ நம்பினா நம்பு, விட்டா விடு... தினமும் ராத்திரி ரொம்ப நேரம் தூங்காம நான் உன்னையே பார்த்துக் கொண்டிருப்பேன். தூங்கறப்பவும் திடீர் திடீர்னு முழிச்சுப்பேன்... நீ... நீ எங்கிட்டேயே, என்னைத் தொட்டுண்டே தூங்கிண்டிருக்கிற மாதிரி பிரமை உண்டாகும். என்னை விட்டு நீ போயிட்டாலும் உன்னை விட்டு நான் போகவே இல்லைங்கறதை நான் எனக்கே நினைவூட்டிக்கத்தான் உன் படுக்கை இன்னும் அப்படியே இருக்கு. வாரத்துக்கு ஒரு தடவை பெட்ஷீட், பில்லோ கவர் எல்லாம் மாத்தறேன்."

—கீர்த்தியின் தொண்டை அடைத்துக் கொண்டது.

துளசியின் கண்கள் கனத்தன. தொண்டை அடைத்துக் கொண்டது.

"நான் மாப்பு கேக்கறேன்... நான் மாப்பு கேக்கறேன். ஒங்க மனசு நொங்கு மாதிரி... அதை நான் நசுக்கியூட்டேன். நேக்கு மாப்பு தாருங்கோ... இன்னமே நான் ஒங்களை விட்டுட்டு எங்கேயும் எதுக்கும் போகமாட்டேன், கிட்டேளா ? இது சத்தியம்."

"வா, கீழே போலாம்."

அவன் அவளைத் தன்பால் இழுத்துக் கொண்டான்.

"ஹேய், இப்ப வேண்டாம்... உடம்பெல்லாம் தீ வண்டி அழுக்கு... குளிச்சுட்டு, சமைச்சுட்டு, சாப்பிட்டு, உச்சியார்ந்த வரேன்... அப்ப நீங்க என்னோடு எலும்பை வேணம்னாலும் முறிச்சுக்குங்கோ...

சொல்லிவிட்டு, துளசி மாடி இறங்கி ஓடினாள்.



கற்பகம் அன்று பாயசம் பரிமாறினாள்.

கீர்த்தி ஆபீஸ் செல்லவில்லை. பாபு தாமதமாகப் போனான். வீடு கல்யாண வீடாகக் கலகலத்தது.

"துளசி !"

"உம்..."

"இன்னிக்கு சாயங்கலாம் என்ன புரோகிராம் தெரியுமா ?" என்றான் கீர்த்தி.

"நேக்கு எப்படித் தெரியும்? கோவில்லே அர்ச்சனை பண்ணணும்னு சொன்னேள்."

"அம்மா கோவிலுக்குப் போவா... அர்ச்சனை பண்ணிப்பா... நாம எட்டு மணிக்குப் போனால் போதும்."

"ஒங்க பிளான் என்ன ?"

"மின்ன ஒருக்கா உங்க ஊர் கே. வி. நாராயணசாமி பாட்டு கேக்கணும்னு சொன்னே இல்லே."

"ஆமாம். ஆனா, கழியலை."

"இந்தைக்கு அவர் கச்சேரி. வால்குடியும் ராமபத்ரனும்."

"ராத்திரி மொளகூட்டல் வைக்கணும்னு பாபு சொன்னானே ?"

"அதை நாளைக்கு வெச்சுக்கலாம்."

துளசி பதில் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. அவள் இந்த உலகத்தில் இருந்தால்தானே ?

இரவு.

தலை நிறைய மல்லிகைப் பூவும், நெற்றி நிறைய குங்குமமுமாய் வெற்றிலைச் சிவப்பு உதடுகளில் மின்ன, புதுப் பெண்ணாகத் துளசி படுக்கை அறையினுள் பிரவேசித்தாள். அவளுடைய வலது கையில் வெள்ளிச் சொம்பும், இடது கையில் வெள்ளித் தம்ளரும் இருந்தன.

"பால்லே குங்குமப்பூ போட்டிருக்கேன்!"

"அதை டீப்பாய் மேலே வைச்சுட்டு வா!"

கீர்த்தி சொன்னானே தவிர, அவனுக்குப் பொறுமை இல்லை.

அவள் பால் சொம்பை டீப்பாயின் மேல் வைப்பதற்குள் அவளுடைய இடையைப் பற்றித் தன்பால் இழுத்தான். டீப்பாயின் முனையில் பட்ட சொம்பு கீழே விழ, பால் அறையெல்லாம் ஓடியது.

திடீரென்று சம்பந்தமே இல்லாத குரல் ஒன்று கேட்க, துளசி திடுக்கிட்டுப் பார்த்தாள்.

குரல், வாசலிலிருந்து வந்தது.

அவள் இன்னும் பாலக்காட்டில், பழைய கல்பாத்தியில், அவளுடைய வீட்டில், கூடத்தில், தரைமேல் தரையில் பெட்டிக்குப் பக்கத்திலேதானா இருக்கிறாள்?

ஆஹா எவ்வளவு இன்பகரமான ஆரவாரமான கனவு!

வாசலில் நிற்கும் தபால்காரனை நோக்கி நடந்தாள்.

பகற்கனவு பலிக்கும் என்று சொல்லுவார்கள்! அவள் இன்று கண்ட கனவு நாளைக்கே சென்னையில் கீர்த்தியின் வீட்டில் பலிக்கப் போகிறது! அவளுடைய சொப்பனத்தில் எப்படி மெய்மறந்து போனாள் அவள்! சே, அம்மணி இல்லையே, தன்னுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள!

திடீரென்று மாதா மாதம் வரும் முன்னூறு ரூபாய் நினைவுக்கு வந்தது. கடைசியாகப் பத்து நாள் முன்பு தானே அது வந்தது.

"எந்தா சிவசங்கரா, சுகம் தந்நயோ?"

"அதே... துளசி அம்மே, இதிலே கையொப்பம் இடணும்."



துளசி கையெழுத்துப் போட்டாள்.

"ஞான் இந்நு மதிராசிக்குப் பூவுந்நு. இனி என்னை இவ்விடத்து நீ காணில்லா சிவசங்கரா."

"துளசியம்மை, எவ்விட வேணங்கிலும் இருக்கட்டே, சொகமாய் இருக்கணும்."

பதிவுத் தபாலை உடைத்துக் கொண்டே கூடத்துக்கு வந்தாள். கடிதத்தை எடுத்தாள்.

ஆங்கிலத்தில் டைப் அடிக்கப்பட்டிருந்தது.

யார்?

ஒரு வக்கீலின் பெயர் கண்ணை உறுத்தியது.

படித்தாள்.

மீண்டும் படித்தாள்.

வக்கீல், கீர்த்தியின் சார்பாக விவாகரத்து கோரும் எண்ணத்துடன் அனுப்பியிருக்கும் நோட்டீஸ்.

'...எமது கட்சிக்காரர் திரு. வி. எஸ். கீர்த்தி பல தடவை முயன்றும், பல மாதங்கள் காத்திருந்தும் தாங்கள் அவருடன் இல்லற வாழ்க்கையைத் தொடர சம்மதிக்க வில்லை. இனிமேலும் தங்களுக்காக் காத்திருப்பதில் பயனில்லை என்று கருதும் எமது கட்சிக்காரர் மேற்சொன்ன திரு. வி. எஸ். கீர்த்தி விவாகரத்து ஒன்றுதான் வழி என்ற முடிவுக்கு வந்து விட்டார். எனவே..."

துளசி நின்றாள். உடைத்த உறை கீழே கிடக்க, வக்கீல் அனுப்பிய எச்சரிக்கை வலது கை விரலில் ஊசலாடியது.

கண்களை மூடிக் கொண்டாள். கண் இதழ்களுக்குள் இருள் கவ்வியது. இருள் பயத்தை அள்ளிக் கொட்டியது.

துளசிக்கு இப்போது வந்திருப்பது ஒரு சாதாரண வக்கீல் நோட்டீஸ்— அவ்வளவுதான்! விவாகம் இன்னும் சட்டப்படி ரத்தாகவில்லை. துளசி இப்போது கூட எடுத்த முடிவின்படி கீர்த்தியை நோக்கிச் செல்லலாம். மனம் அலுத்துப் போய்த்தான் கீர்த்தி வக்கீலை நாடியிருக்கிறான். அவன் இப்பவும் எல்லாவற்றையும் மறந்து அவளை முழு மனத்துடன் ஏற்றுக்கொள்ள காத்திருக்கிறான்.

அவள் தன் வாழ்க்கையை முடமாக்கி ஆடாத ஒரு ஊஞ்சலாக்கிக் கொள்ளப் போகிறாளா?

அல்லது—

வாழ்க்கை எனும் ஊசஞ்லை இன்பமாய் ஆட்டிக் கொண்டு, வாழ்நாளெல்லாம் மகிழப் போகிறாளா?

துளசிதான் தீர்மானிக்க வேண்டும்.

□ ○ □

18600
3514268